# நாவலன்

சைவாசிரிய கலாசாலை மாணவர் சங்கம்

1957

University of Jaffna
370.73
CAI
50046(AR; MAIN)

அமரசிங்க

# நாவலன்

UNIVERSITY OF JAFFNA LIBRARY

28/9/

யாழ்ப்பாணம், திருநெல்வேலி
சைவாசிரிய கலாசாலை
மாணவர்சங்க வெளியீடு.
[illegible] - 1957.

370.73
CAI

# YAPPAN DIAMOND & GOLD PALACE

**163, New Chetty Street, COLOMBO.**

**PLEASE CONTACT COLOMBO OFFICE.**

***Or Phone* 5489**

# யப்பான் வைர தங்க நகை மாளிகை

கிளை: 163, புதுச் செட்டி தெரு, கொழும்பு.

***Head Office*:**

**64, கன்னாதிட்டி தெரு, யாழ்ப்பாணம்.**

***Phone*: 518. JAFFNA.**

**Where Dignity and Distinction, in Jewellery are Desired People Naturally Prefer Nature of Ceylon.**

# YAPPAN

*75, Years old of it's kind in the North Ceylon.*

My Article on Jaffna History

உயர்ந்த ரகம்! உத்தரவாதம்!

நேர்மை! நிதான விலை!

இவையே எமது உயர்ந்த இலட்சியம்.
நவ நாகரீகமான பெனுரிஸ், சேலம், பெங்களூர், மைசூர்
மணிப்புரிசேலை, பட்டு வேஷ்டி, சால்வைகளுக்கும்,
மற்றும் உயர்ரக ஜவுளிகளுக்கும்,
நிதானமான இடம்.

2007

# முனீர்ஸ்

79–81, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

கிளை:

36–1, பெரியகடை, : யாழ்ப்பாணம்.

Telephone: 404 Telegrams: "INSAF"

# MUNEER'S

The World Wide Importers of
Silk & Quality Textiles.

79-81, K. K. S. Road, JAFFNA.

Branch:

36-1, Grand Bazaar, JAFFNA.

ARCHIVES

N.A

Telegrams: **SANGARBROS** Phone: 308

# A. S. Sangarappillai & Bro.

## Direct Importers & Exporters

**GENERAL MERCHANTS, COMMISSION AGENTS & GOVT. CONTRACTORS.**

Head Office:

4 & 6, ADAMALLY BUILDINGS

B. O. BOX 802. COLOMBO.

Branches:

| | |
|---|---|
| KARAINAGAR | Palavodai. |
| COLOMBO | 35, Kachcheri Rd. |
| GALAHA | 16, Bazaar St. |
| KANDY | 120, Colombo St. |
| DAMBULLA | Kandy Rd. |
| KILINOCHCHI | Kandy Rd. |

**ELEPHANT BRAND AERATED WATER**

AVAILABLE

**யானைமார்க் குளிர்ந்த பானங்கள்**

எங்களிடம் பெற்றுக் கொள்ளலாம்.

STOCKISTS

SUN FLAME COOKER. OVEN AND REFORM FOUNTAIN PENS

Wholesale & Retail Dealers in Oilmans & Provisions.

**162, 164 & 166, Hospital Road, Grand Bazaar,**

**JAFFNA.**

370.73
CAI AR

## புகழ்!

அது தானுக வருவதில்லை;
ஒரு தாபனத்தின் உண்மையான திறமையும்
திருப்திகரமான சேவையும்
அதற்குப் புகழைத் தருகின்றன.

# "ஆனந்தா"

**அச்சகமும் புத்தகசாலையும்.**
226, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

**......... பொது மக்களால் புகழப்படும் ஒரு சிறந்த தாபனம். .........**

ARCHIVES

T. Phone: 378.    Estd: 1905.    T. grams. TAYOOB

# H. S. T.'S

# SAREE HOUSE

FOR

**BANARAS, MANIPURI,**
**BANGALORE, MYSORE**

**Etc.**

SILK & COTTON Etc.

*For You & Your Family's Clothing.*

## Haji Sulaiman Tayoob & Co.

**4 & 6, Grand Bazaar, JAFFNA.**

நவீன பெனாரிஸ், பெங்களூர், மைசூர், சிலோன்
பட்டுச் சேலைகள் பல தினிசுகளில்


மலிவான விற்பனைக்குப் பெயர்பெற்ற இடம்.

For

# ECONOMY YET DEPENDABILITY

Own an

# "AUSTIN"



THE

## POPULAR VEHICLE

FOR YEARS

## Morris Commercial Vehicles

INDISPUTABLE FOR SERVICE.

## MOTOR SERVICE STATION

WITH

MODERNISED EQUIPMENT and EXPERT MECHANICS.

## R. CHELLIAH & CO.

8, Clock Tower Road, JAFFNA.

# இறைக்கும் யந்திரமா? மின்சாரக் கருவிகளா?

மண்ணெய் அடுப்புகளா? றேடியோ வகைகளா?

## எதுவானலும் வாருங்கள்!

★

உங்களுடைய சகலவிதமான எலக்றிக் வேலைகளுக்கும் எங்களைக் கலந்து ஆலோசியுங்கள்

★ ★ ★

# சிலோன் எலக்றிக்கல்ஸ்

(முன்பு அரசரத்தினம் கொம்பனி)

*180,* ஆஸ்பத்திரி றேட்,

யாழ்ப்பாணம்.

**SOLE DISTRIBUTORS FOR:**

**Royal Wall Clocks**

And

**Royal Brand Hair Wigs.**

Visit

# FANCY PALACE

**The Leading House For:**

Sheafer Parker And Other Fountain Pens
Gents, Ladies, And Children's Shoes,
Wrist Watches
Groceries
Fancy Goods
Sundries
Cutlery
Toys
Suit Cases
Umbrellas
Dinner Sets
Tea Sets
Lemonade Sets
Racks & Butter Fly
Kerosene Cookers

**Ladies' and Gents' Presentation Articles**

And

**Imitation Jwelleries**

பென்சி பெலஸ், 27, மெயின்ஸ்ரீட் யாழ்ப்பாணம்

27, Main Street, : : JAFFNA.

*Tel*: No. 239.

*Telegrams*: "FANCY WARE"



அதிபர், விரிவுரையாளர்களுடன் விடுகை வகுப்பு மாணவர்கள் 1957

# A.K.S. & SONS.

BIGGEST MANUFACTURING

*Jewellers & Diamond Merchants*

IN NORTH CEYLON.

## "JEWEL HOUSE"

JAFFNA.

# ஏ. கே. எஸ். & சன்ஸ்.

வட-இலங்கையின் மிகப் பெரிய

நகைகள், வைர வியாபாரிகள்.

## " நகை மாளிகை "

யாழ்ப்பாணம்.

போன்: 519 : : : : ஆரம்பம்: 1914

உ

சிவமயம்

''மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்''

# நாவலன்

250046

250046

University of Jaffna
250046
Library

யாழ்ப்பாணம்,

திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலை

மாணவர்சங்க வெளியீடு

ஏவிளம்பி 1957.

## கடவுள் வணக்கம்

திருச்சிற்றம்பலம்

ஊற் றெடுத்துவண் டோலிடு மும்மதத்
தாற் றொழுக்கின் அருவியஞ் சாரல்வாய்
ஏற்று கைக்கு மிறைவர்க்கு முந்திய
மாற்றி லாக்களி யானையை வாழ்த்துவாம்.

—திருச்செந்தூர்ப் புராணம்


இதழாசிரியர் : திரு. சி. இராமலிங்கம்
உப இதழாசிரியர்: ,, க. செல்லராசா
இதழாசிரியர் குழூஉ: ,, அ. சிவசுப்பிரமணியம்
,, சி. நல்லையா
செல்வி செ. தர்மசரோஜினி
,, பா. சரஸ்வதி

# கலா[redacted]சாலை விரிவுரையாளர் குழு

*அதிபர்:*

**திரு. க. கந்தையா** B. A. (Lond.)

அரசினர் ஆங்கில கலாசாலையிற் பட்டதாரிகளின் பயிற்சி பெற்றவர்.

*உப அதிபர்:*

**திரு. பொ. கைலாசபதி** B. Sc. (Lond) **22-10-57 வரை**

**செல்வி சு. இராசா** B. A.

*விரிவுரையாளர்கள்:*

**பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை**

பயிற்றப்பட்ட முதலாம் வகுப்புத் தராதரம், பண்டிதர் (மதுரை)

**திரு. க. சோ. நடராசா**

பயிற்றப்பட்ட ஆங்கில முதலாம் வகுப்புத் தராதரமும், பயிற்றப்பட்ட தமிழ் முதலாம் வகுப்புத் தராதரமும்.

**திரு. பொ. ஆறுமுகம்**

பயிற்றப்பட்ட ஆங்கில இரண்டாம் வகுப்புத் தராதரமும், பயிற்றப்பட்ட தமிழ் முதலாம் வகுப்புத்தராதரமும்.

**செல்வி சொ. தனபாலசிங்கம்** B. A.

*சித்திர ஆசிரியர்:*

**திரு. பொ. சின்னத்துரை**

தொழில் நுட்பக் கல்லூரியில் பயிற்றப்பட்டவர். சித்திர ஆசிரிய தராதரப்பத்திரம்.

*சங்கீத ஆசிரியர்:*

**திரு. க பொன்னையா**

சங்கீத பூஷணம் (அண்ணாமலைப் பல்கலைக் கழகம்)

# கலாசாலைக் கீதம்.

சுப ஜெய மங்கள முற வாழிய சைவாசிரிய கலாசாலை
சைவாசிரிய கலாசாலை (சுப)

நிந்தியானந்த சைவ வித்தியா விருத்திச்சங்கம்
பொலிந்து விளங்க
கலைமகள் திருவொடு குலவி மகிழ்ந்திடும்
திருநெல்வேலி விளங்க (சுப)

செந்தமிழ் ஆங்கில நுண்கலை பயிலும்
போதகாசிரியரை அருளும்
கலைவளம் அருள்வாய் நீ
புது விதிமுறை யறிந்தே
தெளிதமிழ் அமிழ் தூற
கணிதமும் கலைகளும் இளைஞருக் குணர்த்தும்
பேறெமக் கருளினை நீயே
புவிமேல் புகழே பொலிவாய்
ஜெய ஜெய ஜெய ஜெய வேறி
சைவாசிரிய கலாசாலை (சுப)

# உள்ளுறை.


1. நாவலன் 1
2. வாழ்க நாவல! 3

பண்டிதர் சைவப்புலவர் இ. நவரத்தினம்

3. ஓய்வு பெற்ற எங்கள் உப அதிபர் 4
4. திரு. வே. கணபதிப்பிள்ளை அவர்கள் 5
5. எங்கள் உபஅதிபரின் பிரிவுபசாரக் கூட்டம் 6
6. சமயமும் சமுதாயமும் 8
7. ஐவராலேற்படும் அனர்த்தம் 12
8. மெய்வாக்கின் மன்னர் 15
9. கற்பகக் கனி 18
10. "தலைப்பட்டாள் நங்கை தலைவன்றாளே" 20

—இணுவில் ரமணி

11. அசோகவனத்தில் சீதை 23
12. பாரதி கண்ட தமிழ் மணி முத்து 27
13 இலங்கைப் பண்டைத் தமிழர் வரலாறு 29

—ஆசிரியர் திரு. வை. முத்துக்குமாரசுவாமி

14. அயல் நாட்டார் கண்ட ஆரியச் சக்கரவர்த்தி 26

—முதலியார் குல. சபாநாதன்

15. அரசாங்கமும் மக்களும் 43

--திரு. கே. நேசையா M. A. Dip in (Ed.)

16. சரித்திரம் என்றால் என்ன? 46
17. இலங்கையின் பொருளாதாரம் 49
18. தொழிற் சங்கமும் ஆசிரியரும் 52
19. பாலரும் கல்விப் பயிற்சியும் 54

—பண்டிதை ச. அமிர்தாம்பிகை B. A.

20. பாலர்களின் முக்கியமான ஊக்கங்களும், அவற்றை ஆசிரியர் பயன் படுத்தலும் 57
21. பாடசாலைகளின் முயற்சிக் கல்வி 59
22. கவர்ச்சி கவனம் 61
23. கல்வி 63
24. கதிரியக்கம் 66

—திரு. அ க. சர்மா பி. எஸ்ஸி (லண்டன்)

25. நான்கு கணித விதிகள் 69

திரு. வ. பொன்னையா B. A. (Hons.) Ph. D.

26. பாலர் வகுப்புகளில் உடற் பயிற்சிக் கல்வி 72

—திரு. வ. சண்முகராசா, உடற்பயிற்சி ஆசிரியர்

| | | |
|---|---|---|
| 27. | கண்டிப் பிரயாணத்திலே ........ | 76 |
| 28. | ஒற்றுமையே பலம் | 78 |
| 29 | நாவலர் துதி | 79 |
| 30. | புயல் அடங்கியது | 80 |
| 31. | விடுகை வகுப்பு மாணவர் அட்டவணை | 86 |
| 32. | முதலாம் வருட மாணவர் அட்டவணை | 87 |
| 33. | மாணவர் சங்க அறிக்கை | 88 |
| 34. | இதழாசிரியர் குறிப்பு | 92 |


படங்கள்:

1. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள்
2. திரு. சி. உ. சோமசேகரம் அவர்கள் (வடமாகாண வித்தியாதிகாரி)
3. திரு. ச. சுப்பிரமணியம் அவர்கள் (சை. வி. வி. ச. முகாமைக்காரர்)
4. திரு. க. கந்தையா B. A. (Lond.) அவர்கள் (எங்கள் அதிபர்)
5. இளைப்பாறிய எங்கள் உப அதிபர், திரு. பொ. கைலாசபதி B. Sc. (Lond.)
6. இளைப்பாறிய உப அதிபருக்கு அளித்த பிரியாவிடையின் போது எடுத்த படம்
7. கரபந்தாட்டக் கோஷ்டியினர்
8. வலைப்பந்தாட்டக் கோஷ்டியினர்
9. விளையாட்டு வீர ரமணி செல்வி நா. பாக்கியம்
10. விடுகை வகுப்பு மாணவர்கள்
11. விளையாட்டுப் போட்டியில் முதல் இடம் பெற்ற கிருஷ்ணபிள்ளை இல்லம்
12. இரசஞானப் போட்டியில் முதல் இடம் பெற்ற இராமநாதன் இல்லம்
13. விளையாட்டு வீரரும் வீர ரமணிகளும்
14. இலங்கை வானொலி கலைவிழாவில் எங்கள் கலாசாலை மாணவிகள் நடனத்தில் சில காட்சிகள்

சைவத்தையுந் தமிழையுங் காத்த பெரியார்

# ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள்



''ஆரூர னில்லை புகலியர் கோனில்லை யப்பனில்லை
சீரூரு மாணிக்க வாசக னில்லை திசையளந்த
பேரூரு மாறு முகநா வலனில்லை பின்னிங்கியார்
நீரூரும் வேணியன் மார்க்கத்தைப் போதிக்கு நீர்மையரே''

—சிவசம்புப் புலவர்,



வடமாகாண வித்தியாதிகாரி

**கனம் சி. உ. சோமசேகரம்**, M. A., Ed., (Lond)

அவர்களின்

# ஆசிச் செய்தி

அன்பர்களே !

ஈழநாட்டிலே ஒரே ஒரு சைவாசிரிய கலாசாலையை நீங்கள் வைத்து நடாத்துவதைக் குறித்துப் பெருமை அடைகின்றீர்கள். அதேகாரணத்தால் நீங்கள் அதிக பெரிய பொறுப்பையும் தாங்கி இருக்கிறீர்கள். ஒரு சமுகத்தின் பண்பும் கலாசாரமும் கல்வியிலேயே தங்கி இருக்கின்றது அக் கல்வி ஆசிரியர்களிலும், ஆசிரியர்கள் அவர்கள் பெறும் பயிற்சிகளிலும், பெரிதுந் தங்கி இருக்கின்றன. ஆகையால் உங்கள் கலாசாலை சைவப்பண்பிற்கும் கலாசாரத்திற்கும் ஓரு பொக்கிஷசாலையாகும். நீங்கள் இந் நிலைக்கு அருகதையுடையவர்களாக இருக்க முயற்சிப்பீர்களாக.

தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனுரும் "அன்பு மறனுமுடைத்தாயினில் வாழ்க்கை பண்பும் பயனுமது" எனக் கூறியுள்ளார். எமது சமுகத்தின் பண்பு ஏறத்தாழ ஐந்நூறு ஆண்டுகளாக மேலைத் தேசத்தவரின் செல்வாக்கில் மறைந்து அடிமைப் பட்டிருந்தது. அக்காலந்தொட்டு நம் நாட்டில் நவநாகரீகப் பேய்கள் தலை விரித்தாடுகின்றன. ஆனபடியால் சைவர்களது பண்பையும் கலாசாரத்தையும் மறுமலர்ச்சிக்குக் கொண்டுவரும் பொறுப்பு உங்களிலேயே பெரிதும் தங்கி இருக்கின்றது. இதை நிறைவேற்றுவதானல் விடா முயற்சியும் அதிக உழைப்புந் தேவைப்படும்.

"ஆசிரிய ராதலா லாயபயன் சைவத்தைந்
தேசமநி லோங்கச் செயல்"

இதுவே உங்கள் ஒவ்வொருவரதும் இலட்சியம் ஆகுக.

**சி. உ. சோமசேகரம்,**
வட மாகாண வித்தியாதிகாரி.



மேன்மைகொள் சைவநீதி ஓங்குக!


# ஆசிரிய பயிற்சியாளர்களுக்கு எனது அன்பின் செய்தி

அன்பே தெய்வம், தெய்வமே கதி—தினமே துதி.

தீது பொறுத்தல் தெய்வ குலதர்மமே தீய
செய்கைகளே மனுஷ்குல கர்மமே — தீதை
விலகச் செய்வது பகுத்தறிவாமே — அதை
யூட்டி உணர்ச்சியை வளர்ப்பது கல்வியே · அதை
நன்முறையில் பயிலப் பண்ணுவது ஆசிரியரே
விழிப்பும் உறக்கமும் போலவே பிறப்பு இறப்பு - அது
ஒரு சுழல் சக்கரமே
பிறப்புடன் வந்தது உத்தியோகமன்று, பசிப்பிணி - அதிகரிக்க
பசிப்பிணி மண்ணன்னம் விளைவித்து - வயிறுர
ஊட்டச் செய்வதே - யன்றி
கப்பல் வாய்க்கரிசியால் தீராதே - ஓம்
ஊண் உடை - உழவு நெசவு முக்கியம் - ஆனல்
சற்குரு வேண்டும் பேதமையகற்றி நல்வழிசேர
உடம்பில் உயிர் பறிந்ததே இறப்பு - அத்துடன்
பின்தொடர்ந்து செல்வது பாவபுண்ணியம் - அதில்
அருணன் சந்திரன் நிலை நீங்கினும் தரைமேல், கீழ் ஆயினும்
தானம் பொறை அருள் மானம் • இதராபிமானம்
நிதானமும் மோனமும் தியானமுங் கொண்டு
ஒழுகி, அறவினைசெய்து கடமை காதலாய்ப்புரி
வீரேல், புண்ணிய சீல ஆசிரியரே ஆகுவீர்.
உண்மைக்கு அழிவில்லையே.

**ச. சுப்பிரமணியம்.**

சை. வி. வி. ச. முகாமைக்காரர்.



எங்கள் அதிபர் **திரு. க. கந்தையா** B. A. (Lond.) அவர்களின்

## நல்லுரை.

இக்காலத்தில் மக்களிற் பலர் எந்த முயற்சியிலும் முழுமனத்துடன் ஈடுபடுவது இல்லை. எதையும் சம்பிரதாயமாக்கிக்கொள்கிருர்கள். உதாரணமாக விருந்தினரை உபசரித்தல், ஆண்டுதோறும் திருநாள்களைக் கொண்டாடுதல், பாடசாலைப் போட்டிகளை நடாத்துதல் முதலியன எல்லாம் ஊன்றி நோக்குவோருக்கு வெறும் சம்பிரதாயங்களாகவே காட்சியளிக்கின்றன. பாடசாலை ஆண்டுமடல் போன்றவையும் இக்கூற்றுக்குப் புறநடையாக இல்லை. இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் ஒரு கலாசாலை ஆண்டுமடல் — அதுவும் ஆசிரிய மாணவர்கள் ஆக்கி அளிக்கும் ஆண்டுமடல் வெறும் சம்பிரதாயமாகாது ஓரளவுக்காயினும் பயன் பெறுவதாக இருக்கவேண்டும் என்பதே என் விருப்பம். ஆண்டு மடல்கள் சொற்சுவை, பொருட்சுவை இரண்டும் ஒருங்கே பொருந்தியனவாயும், புதிய கருத்துக்கள், கற்பனைகள் நிறைந்தனவாயும், பழையனவற்றை எடுத்துச் சொல்லும்போதும் புதிய பாணியில் சொல்லுபவையாயும் இருந்தால் அவற்றை எவரும் விரும்பி வாசிப்பர். அல்லாவிடில் இம்மலர்கள் வீடுகளிலும் பள்ளிக்கூட வாசிகசாலைகளிலும் மற்றும் அவை செல்லுமிடங்களிலும் வெறும் கடதாசிக்கோவைகளாக - சோம்பியிருக்கும் வேளைகளில் படம் பார்க்க உதவும் பத்திரங்களாகவே பிரயோசனப்படும்.

உங்களுடைய 'நாவலன்' இவ்வருடம் சில பெரியார்களின் விடயங்களைத் தாங்கி வெளிவருகின்றது. ஆசிரிய மாணவர்களும் சில உயர்தர விஷயங்கள் கொடுத்திருக்கிருர்கள். எனவே உங்களுடைய முயற்சி உரிய பயனை அளிக்கும் என்பது என் துணிபு.

**க. கந்தையா,**
அதிபர்.

# நாவலன்.

எங்கள் கலாசாலையின் இருபத்தெட்டாவது வருடாந்த இதழான 'நாவல'னை வெளியிடுவதில் பெருமையும் பெருமகிழ்ச்சியும் அடைகிறோம். ஈழத்தாயின் திருமுகமென விளங்கும் யாழ்ப்பாணத்தில் அவள் மங்கலத் திலகமென இலங்குப் நல்லூரிலே தோன்றிய சைவப்பெரியார் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் சைவமும், தமிழும் தன்னிரு கண்களெனப் பேணிக் காத்து வாழ்ந்த தியாகி. சைவ சமயமின்றேல் தமிழ் இல்லை; தமிழ் இன்றேல் சைவ சமயமில்லை என்று சைவத்தையும் தமிழையும் அரும்பாடுபட்டு வளர்த்த கர்மவீரர், கலாயோகி, நித்திய பிரம்மச்சாரி. அன்று சைவத்தையும் தமிழையும் வேரறுக்க முயன்ற சில பிறநாட்டவரின் எதிர்ப்பைத் துச்சமெனக் கருதி, தன் உயிரைக்கூடத் திரணமெனமதித்து அஞ்சா நெஞ்சுடன் செயலாற்றிய செம்மல். இன்று ஈழத்திலே சைவமணமும், தமிழ்த் தென்றலும் இனிது வீச வழிவகை செய்த காரண கருத்தா. ஈழத்தில் மட்டுமின்றி பாரத நாட்டிற் கூடத் தன் செயற்றிறனைக்காட்டிப் புகழ்பெற்ற ஈழத்தாயின் இனிய தவப்புதல்வர்.

இத்தகைய பெருமை வாய்ந்த அன்னாரின் திருநாமத்தையே எங்கள் மடல் தன்பெயராய்க் கொண்டிருப்பது எங்கட்கு மட்டுமன்றித்தமிழ் கூறும் நல்லுலகுக்கே ஒரு தனிப்பெருமை. எனவே, அன்னாரின் திருநாமத்தையும் சீரிய தொண்டையும் மனத்திருத்தி, எதிர்காலச் சமுதாயச் சிற்பிகளான - ஆசிரியர்களாகிய நாம் எமக்குள்ள பொறுப்பினை ஓரளவு எண்ணிப் பார்த்தல் அவசியமே.

தமிழாசிரியர்களாகிய எமக்குள்ள மகத்தான பொறுப்புகளில் ஒன்று தமிழ்ப்பணி. நம் நாட்டில் இன்று ஒரு சிலரின் அராசகக் கட்டுப்பாடுகள் தமிழ் அன்னையை வருத்துகின்றன. முந்திவந்த செவியைப் பிந்தி வந்த கொம்பு மறைப்பது போன்ற ஒரு நிலை இன்று நம் நாட்டில் ஏற்படுகிறது. நியாயமான அளவுதான் தமிழன்னை வெளியில் உலவலாம் என்பது சில விதண்டாவாதிகளின் குதர்க்கவாதம். இத்தகைய அராசக அநியாயச் செயல்கள் தலை தூக்காதபடி பார்க்கவேண்டிய பொறுப்பு தமிழபிமானிகளை மட்டுமன்றி தமிழ் ஆசிரியர்களையும் சாரும். பண்டைத்தமிழனின் பழம் புகழைப் போதனையோடு மாத்திரம் நிறுத்தாமல் சாதனையிலும் சாதித்துக் காட்டவேண்டும். தமிழ் ஆர்வங்கொண்ட ஒரு தனித்தமிழ்ச் சமுதாயத்தை உருவாக்கவேண்டும். தமிழ் அன்னையின் பாதங்களில் உறுத்தும் தூசி, தம் இதயத்தைத் துளைக்கும் ஊசி என்று கொள்ளவேண்டும். தாயைப் பழித்தவனை விட்டாலும் தமிழைப் பழித்தவனை விடோம் என்ற உணர்ச்சி பெறவேண்டும். தமிழன்னையை சரிசமானமான அரியாசனத்திலிருந்து சரியவிடாமற் பாதுகாத்தல் வேண்டும். எனவே ஒவ்வொரு தமிழாசிரியரும் தன் செயலில் நாவலர் பெருமானாக மாற வேண்டும். இதற்கு அகில இலங்கை சைவத் தமிழ் ஆசிரிய சங்கம் ஒன்று நிறுவவேண்டும். அன்று சில அந்நியரின் எதிர்ப்பை நாவலர் பெருமான் எவ்வாறு தகர்த்தெறிந்து, சைவத்தையும் தமிழையும் பாதுகாத்தனரோ அதேபோல் எம் ஆசிரிய சமூகமும் செவ்விய முறையில் செயலாற்ற வேண்டும் என்று எங்கள் நாவலன் கேட்டுக் கொள்ளுகிறான்.

## ஓய்வுபெற்ற மூலகுருவுக்கு அஞ்சலி.

எங்கள் நாவலன் பிறந்த நாள் தொட்டு, அவனைச் சீராட்டிப் பாராட்டிப் பாலூட்டி, வளர்த்து, மழலை மொழி பேசி, மருங்கமர்த்தி, மன்னிய ஞானோபதேசங்கள் பல புகட்டி, ஆளாக்கிய பெருமை எங்கள் போதனாசிரியச் செம்மல்கட்கே உரியது. நாவலனின் அத்தகைய அன்புத்தாதையருள் - குலகுருக்களுள் ஒருவர்

எங்கள் உப அதிபர் ஸ்ரீமான். பொ. கைலாசபதி பீ எஸ்ஸி (லண்டன்) அவர்களாவர். அன்னர் உப அதிபராகத் தமது இருபத்தேழு வருடச் சேவையின் பின் 22-10-57ல் ஒய்வு பெற்றமை நாவலனைப் பிரிவாற்ருப் பெருந்துயருள் ஆழ்த்தியது. எனினும் கடமை என்னும் ஒரு பெரும் பாரத்தினின்றும் தன் அன்புத்தந்தை விடுதலை பெற்று ஓய்வுபெறுதல் அவர் உடல் நலத்துக்கு இன்றியமையாதது என்பதை எண்ணி ஓரளவு ஆறுதலடைகிருன். அவர் பல்லாண்டு வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்ருன்.

## நேயர்கட்கு வேண்டுகோள்.

இன்று இருபத்தெட்டு வயதை அடைந்த எங்கள் 'நாவலன்' அறிவிலும், ஆற்றலிலும், அநுபவத்திலும் நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர்ந்து வருகிருன். இம்முறை ஈழத்துத் தமிழ்ப்பெரியார் சிலரின் தூய சிந்தனைக் கடலிலே நீந்தி, அவர்கள் திருக்கரங்களிலே தவழ்ந்து, அன்னரின் பழுத்த அநுபவங்கள் என்னும் நன்முத்துக்களை உங்கட்கு வாரி வழங்க வருகிருன். வரவேற்று, உரையாடி, முகத்திருத்தி, விஷயமறிந்து வாழ வைக்கும் பொறுப்பு உங்களுடையது.

வணக்கம்.

இதழாசிரியன்.

# "தன்னைத் தான் காதலன்"

ஒருவன் 'தன்னைத்தான் காதலன்' ஆயிருக்க வேண்டும்; தன்னிலே தான் பற்றுள்ளவனுயிருக்க வேண்டும். அஃதாவது சுயநலமுள்ளவனுயிருக்க வேண்டும். சுயநலமாவது தன் கருமத்திற் கண்ணுங் கருத்துமாயிருத்தல். 'தவஞ்செய்வார் தங்கருமம் செய்வார்."- எவன் தன்கருமத்திற் கண்ணுங் கருத்துமாயிருக்கின்ருனே, அவனே தவம் செய்பவன்; தவத்தி. 'மற்றல்லார் அவஞ்செய்வார் ஆசையுட் பட்டு.'—தன் கருமம் செய்யாது, சுயநலமின்றிப் பிறகருமம் செய்கிறவர்கள் எல்லாம் அவஞ்செய்கிறவர்கள்; மகா ஆசைக்காரர்கள்.

'தன்னைத்தான் காதலன்' சுயநலக்காரன். அவன் உண்மையிலே சுயநலக்காரன். ஆனல் 'எனைத்தொன்றும் துன்னற்க தீவினைப்பால்'- எத்துணைச் சிறியதொரு தீமையையும் பிறருக்குச் செய்யமாட்டான். பிறருக்கு ஒருவன் தீமை செய்தால் அது தனக்கு நட்டம். பிறருக்கு ஒருவன் நன்மை செய்வது தனது நயத்துக்காகவே. அயல் வீட்டுப் பிள்ளைக்கு ஒருபிடி அன்னம் கொடுத்தால், தன்பிள்ளைக்கு ஒருபிடி தசை வளருமென்று, காரியந்தெரிந்த நல்ல தாய் சொல்லுவாள்.

— பண்டிதமணி சி. க.

# வாழ்க நாவல!

பண்டிதர், சைவப்புலவர் இ. நவரத்தினம்.

---

பூவெனப் படுவது பொறிவாழ் பூவே
தேவெனப் படுபவன் தேந்துழாய் மாதவன்
நாவலன் ருனும் நல்லேநா வலனே
பாவலர் யாரும் பகருவ ரிதையே .
சென்றநூற் ருண்டு சீர்பெறச் சைவம்
நின்றசெந் தமிழே நீர்மையுற் ருேங்க
ஊன்றுநற் ருெண்டு உஞற்றுமவ் வாறு
முகநா வலன்போல் முகிவிரி வானந்
தண்ணிலாப் பரப்புந் தாவில்சந் திரனே
நண்ணிட முயன்று நாடுமிந் நூற்ருண்
டோவில் பல்வளம் ஓங்கு திருநெல்
வேலி நகரிடை விளங்கு சைவ
ஆசிரிய கலாசாலே ஆசார் தமது
மனனின் றெழுந்து மாண்புடைக் கலேகள்
வனப்புடை மகளிர் மைந்தர் வளர்க்க
மும்மதிக் கோரிதழ் முந்துறப் பெற்று
எம்மதி வல்லரும் ஏத்த யாண்டொரு
மலரா வலர்ந்து மாநிலந் தன்னிற்
பலரது கரத்திலும் பண்புறப் பொலிந்து
குழவி பிள்ளே குமரப் பருவம்
வழமையாய்க் கடந்து வருமுதிர் குமரனுய்
மட்டிலாக் காளேபோல் வருமெம் மலரே!
நாலே ழாண்டின் நாவல!! வருக!
அறமுரை குறுமுனி அருள்பெறு சீடனுந்
தொல்காப் பியன்போல் ஒல்காப் புகழுடை
நாவலன் வருக! நானில மோங்குக!
மேன்மைகொள் சைவநீதி விளங்கிட வுலகெலாம்
பான்மதி புனேவோன் போலநற்
பான்மையாய் வாழ்க! பல்லாண்டு வாழியவே!!

# ஓய்வு பெற்ற எங்கள் உப அதிபர்.

கடந்த கால்நூற்ருண்டுகட்கும் மேலதிக மான காலம் எங்கள் கலாசாலையிலே உப அதி பராகச் சேவை செய்து இளைப்பாறிய பெருமை, ஓய்வுபெற்ற எங்கள் உப அதிபர் **ஸ்ரீமான் பொ. கைலாசபதி** பீ. எஸ்ஸி. (லண்டன்) அவர் களையே சாரும். அன்னரே எங்கள் கலாசாலை யில் ஓய்வுபெற்ற முதலாவது உபஅதிபர்.

தமிழ், ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம், சைவசித்தாந்த சாஸ்திரங்கள் முதலியவற்றில் புலமை மிக்கவர் எங்கள் உப அதிபர் என்று கூறுவதில் பெருமையடைகிருேம். எந்தப்பாட மானுலுஞ்சரி, தித்திக்குந் தீந்தமிழில் எவருக்கும் விளங்கும் வண்ணம் எடுத்தியம்பும் ஆற்றல் மிக்கவர். படிப்பித்தல் முறைகளைத் திட்டவட்ட மாகத் தெளிவுபடுத்துந் திறமையாளர். சுருங் கக் கூறி விளங்கவைக்கும் அநுபவஸ்தர்.

யாழ்நகரில் அளவையம்பதியைப் பிறந்தக மாய்க் கொண்ட எங்கள் உப அதிபர், தெல்லிப் பழை சிவானந்த ஐயரவர்களின் உத்தம சீட ரும், சித்தாந்த தருக்க சாஸ்திர ஆங்கில மேதா வியான திரு. சிவபாதசுந்தரனுரது புகழுரை பெற்ற புலமையாளருமாவர்.

இத்தகைய சிறப்பியல்புகள் வாய்ந்த எங் கள் உப அதிபர் ஓய்வு பெறுதற் பொருட்டுத் தம் சேவையினின்றும் விலகியது எங்கட்குப் பெரிதும் துன்பமே. ஆனுல், 1930 ம் ஆண்டு தொட்டே எங்கள் கலாசாலையிலிருந்து இது வரையும் ஆயிரக்கணக்கான சைவத்தமிழாசிரி யர்களை உருவாக்கிய எங்கள் குரு சிரேஷ்டர், இவ்வளவு நீண்டகாலச் சேவைக்குப் பின்பா வது ஓய்வு பெறுதல் ஆவசியமே என்பதை யும் நாங்கள் உணராமலில்லை. எனவே நாங்கள் இருவேறு திசைநோக்கிச் செல்லும் இருகன் றுக்கிரங்கும் ஓர் ஆவின் நிலையில் தவிக்கிருேம் என்ருல் அது மிகையாகாது. எனினும் கடந்த காலங்களிற் போல் அன்னர் எங்கள் மத்தியில் சேவையிலீடுபட்டிராவிட்டாலும் உடல் நலத் தோடு ஓய்வாக இவ்வுலகில் பல்லாண்டு காலம் வளமான வாழ்வு பெற்றிலங்க வேண்டும் என் பதே எங்கள் பேரவா. இத்தகைய ஒரே நன் னேக்கத்துடன் அன்னர் ஓய்வு பெறுதற் பொருட்டு எங்களைப் பிரிவதனுல் ஏற்படும் பிரி வுத்துன்பத்தைத் தாங்கிக் கொள்ளுகிருேம்.

அவர் கலாசாலைக்கு வெளியிலிருந்தாலும் எங்கட்கு வேண்டும் போது வேண்டிய அறிவு ரைகள் தந்து எங்களை வழிநடத்துவார் என்று ஆறுதலடைகிருேம். அன்னருக்கு நீடிய ஆயு ளையும், நிறைந்த செல்வங்களையும், அருள இறைவனைப் பிரார்த்திப்போமாக.

வாழ்க எங்கள் உப அதிபர்.

## சுதேசிக் கத்தி!

ஆடு வெட்டுவதற்கு, முன்னளில், 'ஷெப்பீல்ட்' (வெளி நாட்டுக்) கத்தியை உபயோகித்தோம். இப்போது "ஷெப்பீல்ட்" கத்திக்குப் பதி லாக (உள்நாட்டு) 'அலிகார்' கத்தியினல் உன்னை வெட்டுகிருேம்" என்று ஆட்டிடம் கூறுகிருேம். தான் விதேசிக் கத்தியினலன்றிச், சுதே சிக் கத்தியினல் வெட்டப்படுவதைக் குறித்து ஆட்டிற்கு மகிழ்ச்சி உண் டாகுமா?

நமது கிராமங்களின் நிலையும் இத்தகையதே. கிராமராஜ்யம் ஏற் படாத வரையில் சுயராஜ்யத்தினல் அவற்றுக்கு நன்மை எதுவுமில்லை.

— **வினேபாஜீ**

யாழ்ப்பாணம், திருநெல்வேலி,
சைவாசிரிய கலாசாலையில், கடந்த 27 வருடமாக
உப அதிபராகத் தொடர்ந்து கடமையாற்றித்
தற்போது இளைப்பாறுதல் காரணமாகப் பிரிந்து செல்லும்

**உயர்திரு. பொ. கைலாசபதி B. Sc. (Lond)**

அவர்கட்கு

அதிபர், விரிவுரையாளர்கள், ஆசிரிய மாணவர்கள்
உவந்து அளிக்கும்

# பிரிவுபசாரப் பத்திரம்.

"திருமகளுங் கலைமகளுந் தாமிருக்கும் பூப்போல்
சிறப்புடனே வாழுமுய ரளவையெனும் பதியில்
பெருமையுட னுதிபொன்னம் பலப்பெயர்கொள் புனிதன்
பேணுதவந் தனிற்றோன்றி யுற்றதொரு புதல்வா!
அருமைபெறு குணம்பலவு மமைந்ததொரு செல்வா!
அரனடிகள் மறவாத அகமுடைய பெரியோய்!
கருவதனி லமைந்ததொரு நுண்மதியு முடையோய்!
கலைகள்பல கற்றுயரு மறிவுமிக வுடையோய்!"

"ஆங்கிலத்தி லுயர்வுபெறு கலைபலவு முணர்ந்தோய்
அமைவுபெறு பிஎஸ்சீ யாகிவிளங் குற்றோய்!
தேம்பொழில்சூழ் புலோலிநகர் தனிலுறுதல் பெற்ற
சிவபாத சுந்தரமென் றுரைக்குபெய ரோன்பால்
மேம்படுசித் தாந்தகலை பலவிரும்பிக் கற்றோய்!
மேவுதிரு நெல்வேலி யெனும்பதியி லுற்றே
ஆம்பெரிய அறிவுதரும் ஆசிரியப் பயிற்சிக்(கு)
ஆயகலா சாலைதனி லுபஅதிப ரானோய்!"

"கற்றவர்க ளேத்துகயி லாயபதி யென்னும்
கவின்பெயர்கொண் டுற்றதொரு கண்ணியநற் புலவா!
உற்றதொரு மாணவர்க ளாகுமெமைப் பிரிந்தே
உறுமியல்பை அடைந்துகலா சாலைதனை விடுத்தாய்
மற்றினிமீ உலகுதனிற் கயிலைமலை யுற்ற
மாதுமையாள் பங்கனடி நின்மனத்திற் கொண்டு
நற்றவத் தோடிருந்திந்தக் கலாசாலை தனக்கும்
நாடுதவி செய்தூழி வாழ்ந்திடுக மாதோ."

திருநெல்வேலி,
2-11-57.

— சைவாசிரிய கலாசாலையினர்.

[illegible]

[illegible]

[illegible] B. Sc. (Lond)

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

— [illegible] 2-11-67

இளைப்பாறிய எங்கள் உப அதிபர்.



ஸ்ரீமான் பொ. கைலாசபதி B. Sc. (Lond) அவர்கள்.

## இடைக்காடு,
## ஆங்கில வித்தியாசாலை அதிபராக இடமாற்றலாகிச் சென்ற
## எங்கள் விரிவுரையாளர்,

# திரு. வே. கணபதிப்பிள்ளை அவர்கள்.

---

எங்கள் விரிவுரையாளர் குழுவில் ஒருவராக 1951-ம் ஆண்டு தொடக்கம் 1956-ம் ஆண்டு வரை சேவை செய்த திரு. வே. கணபதிப்பிள்ளை அவர்களை நினைவுகூர்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

இவர் எங்கள் ஆசிரிய கலாசாலையிலே பயிற்சி பெற்ற பழைய மாணவர் என்பதைக் குறிப்பிடுவதில் பெருமையடைகிறோம். இவர் தமிழில் பாண்டித்தியம் பெற்றது போலவே, ஆங்கிலத்திலும் பயிற்றப்பட்ட முதலாந்தரா தரப் பத்திரம் உடைய ஓர் உத்தம ஆசிரியராவர். எங்கள் கலாசாலையில் பயிற்றப்பட்டு பல ஆண்டுகட்குப் பின்னர், எங்கள் கலாசாலையிலேயே விரிவுரையாளராகக் கடமையேற்கும் பொறுப்பு இவரை வந்தடைந்தது. எனவே கலாசாலைப் பற்றும், மாணவர்களில் இணையற்ற அன்பும் இயல்பாகவே இவர் உள்ளத்தில் இடம் பெற்றுவிட்டன.

இவர் தனது சேவைக்காலந்தில் கணிதம், விஞ்ஞானம் முதலிய பாடங்களிற் சிறந்த பணியாற்றினர். விசேடமாக இவ்விருபாடங்களிலும் ஆழ்ந்த அறிவும், பரந்த அனுபவமும் உடையவர். இவருடைய உபந்நியாசங்களில் சொற்சுவை, பொருட்சுவை, ஹாஸ்யச்சுவை என்பன ததும்பி வழியும். இதனால், இவரால் நிகழ்த்தப்படும் விரிவுரைகளைக் கேட்பதைவிட எங்கட்கு ஆனந்தந் தரக்கூடியது வேறொன்றுமில்லை.

ஆனால், ஏனோ இவ்வுத்தம ஆசிரியரின் செந்தமிழ்த் தேனூற்றில் நாங்கள் மிதப்பது காலதேவனுக்குப் பிடிக்கவில்லை. எங்கள் துரதிர்ஷ்டம் என்றே சொல்ல வேண்டும். நாங்கள் மாத்திரமே இவரால் பயனடைந்தால் போதாது, வேறு மாணவர்களும் பயன் பெறவேண்டும் என்பது இறைவனின் திருச்சித்தம் போலும். எனவே இவர் 1957-ம் ஆண்டுத் தொடக்கத்தில் இடைக்காடு ஆங்கில வித்தியாசாலை அதிபராக நியமிக்கப்பட்டார்.

இத்தகைய ஒரு நல்லாசிரியர் எங்களை விட்டுப் பிரிந்து, இடமாற்றலாகிச் சென்றது பெருந்துன்பமேயெனினும், அன்னார் பதவி உயர்ச்சி பெற்றமை பற்றி மகிழ்கின்றோம். இன்னும் உயர்ந்த பதவியும், நீடிய சுகவாழ்வும், சகல செல்வங்களும் பெற்று, அவர் இனிது வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

## எண்ணம்.

எண்ணமே வாழ்வு. பலர் எண்ணிய எண்ணங்களே இன்று கலையாகவும் சமயமாகவும் அரசியலாகவும் அமைந்துள்ள எல்லாவற்றிற்கும் காரணம். ஆகவே எதிர்காலத்தில் அமையும் கலை, சமயம், அரசியல் எல்லாம் இன்று எண்ணும் எண்ணங்களைப் பொறுத்து அமையும். எண்ணங்களே உலகவாழ்க்கையின் வித்துக்கள். இந்த எண்ணங்கள் வளரவும் வெளிப்படவும் தரும் உரிமையே உலக வாழ்க்கைக்கு அடிப்படையாக விளங்கும் உரிமை.

— டாக்டர், மு. வ.

# எங்கள் உப அதிபரின் பிரிவுபசாரக் கூட்டம்.

அன்று 1957 ம் ஆண்டு ஐப்பசித் திங்கள் 22 ம்நாள். பிற்பகல் 3 மணி இருக்கும். ஆகாயம் மப்பும் மந்தாரமுமாய் சோபையிழந்து காணப்பட்டது.

இவ்வமயம் எங்கள் கலாசாலைப் பிரதான மண்டபத்திலே ஒரு கூட்டம் ஆரம்பிக்கச் சில நிமிடங்கள் இருந்தன. அங்கத்தவர்களெல்லோரும் அவரவர் ஆசனங்களில் இருந்தனர். எங்கள் கலாசாலைப் பிரதான மண்டபத்திலே, வழக்கமாகக் கூடும் கூட்டங்களிலே ஆனந்த வெள்ளம் கரைபுரண்டோடிக் கொண்டிருக்கும். ஆனல், இக்கூட்டமோ இயற்கைக்கு மாருகக் காட்சியளித்தது. வெய்யோனின் வெள்ளொளி கூட மங்கி, இயற்கை அன்னையின் இன்முகம் சோபையிழந்து காணப்பட்டது போலவே, குழுமியிருந்த எல்லோர் வதனங்களும் ஆதவனைக் காணுத தாமரையன்ன கூம்பிக்கிடந்தன. ஏதோ ஒரு பிரிவுத்துன்பம் எல்லோர் உள்ளத்தையும் வாட்டிக் கொண்டிருந்தது.

“பூம் ....” என்று ஒரு மோட்டாரிரத ஓசை கேட்டதுதான் தாமதம், நிசப்தமாயிருந்த மண்டபம் கலகலத்தது; கூம்பிக்கிடந்த வதனங்கள் மலர்ந்தன; தாயைக்கண்ட சேய்களைப் போல் குதூகலித்தனர். கலாசாலை வாயிலில் நிறுத்தப்பட்ட அந்த மோட்டாரிரதத்தை அதிபர், விரிவுரையாளர்கள், ஆசிரிய மாணவர்கள் பலர் சூழ்ந்து ஓர் உத்தம குரு சிரேஷ்டரை, அவர் குடும்பத்தோடு வரவேற்றுப் பெருமையடைந்தனர்.

ஆம், அவர் வேறுயாருமல்ல. கடந்த கால் நூற்றுண்டுகட்கு மேலதிகமான காலம் எங்கள் கலாசாலையிலே உப அதிபராக இருந்த சற்குரு **ஸ்ரீமான் பொ. கைலாசபதி** பீ. எஸ்ஸி. (லண்டன்) அவர்கள்தாம். சாந்தம் தவழுகின்ற, அமைதி விளங்குகின்ற, அரும்பு புன்னகை பொலிகின்ற முகத்துடன் எல்லோரையும் ஒருமுறை பார்த்த வண்ணம் மண்டபத்துக்குள் வந்து தமது ஆசனத்தமர்ந்தார் அந்த அநுபவம் மிக்க ஆசிரியச் செம்மல். சபையோர் கரகோஷம் வானைப்பிளந்தது; அடைமழை பொழிந்து ஓய்ந்தது போல் மீண்டும் நிசப்தம் நிலவியது.

கூட்ட நிகழ்ச்சிகள் ஆரம்பமாயின. தேனீர் விருந்தும், தீந்தமிழ்க்கீத விருந்தும் ஏககாலத்தில் இடம் பெற்றன. இதன்பின், கூட்டத்துக்குத் தலைமை தாங்கிய எங்கள் அதிபர் அவர்கள் தலைமையுரையைத் தொடங்க எழுந்தார். எல்லோர் உள்ளமும் முகமும் அவரை நோக்கின.

அவர் தமது தலைமையுரையில், “கடந்த இருபத்தேழு வருடங்களாக இக்கலாசாலையிலே உப அதிபராகக் கடமையாற்றி இப்போது ஓய்வு பெறும் ஸ்ரீமான் பொ. கைலாசபதி பீ. எஸ்ஸி. அவர்களின் இப்பிரிவுபசாரக் கூட்டத்துக்கு என்னைத் தலைமை தாங்கும்படி கேட்ட உங்கட்கு என் நன்றி. இத்தகைய பெரியார் ஒருவருக்கு அளிக்கப்படும் உபசாரக் கூட்டத்துக்குத் தலைமை தாங்குவதில் பெருமையடைகிறேன்.

இக்காலத்தில் ஆசிரியர்களை அவர்கள் செயற்றிறன் நோக்கி இருபிரதான பிரிவுகளில் வகுக்கலாம். ஒருபிரிவினர் வெறும் போதனை ஒன்றே தமது கடமையென்று செயலாற்றுவோர். இவர்களைச் சிறந்த ஆசிரியர்கள் என்று கூற முடியாது. மற்றப் பிரிவினர், தாம் போதிக்கும் போதனையைச் சாதனையில் சாதித்துக் காட்டுவோர். இவர்களே உத்தம ஆசிரியர்கள்-ஆசிரிய ரத்தினங்கள். இத்தகைய உத்தம ஆசிரியர்களின் முன்வரிசையிலே வைத்தெண்ணத் தக்கவர்தான் எங்கள் உப அதிபராகவிருந்த ஸ்ரீமான் பொ. கைலாசபதி அவர்களாவர்.

இவர் சமய பக்தியிலும், அறிவிலும், அநுபவத்திலும் பழுத்த ஓர் உள்ளத்துறவி. இறைவனை நாம் வணங்குவது நமது ஈடேற்றத்துக்காகவன்றி இறைவனின் ஈடேற்றத்துக்காக அல்ல. அதேபோல் இத்தகைய சன்மார்க்கசீலர்களை நாம் கௌரவிப்பதனுல் எங்களை நாங்களே கௌரவித்துக் கொள்ளுகிறேம். இவ்வளவு சிறந்த ஓர் அநுபவஸ்தரை நாங்கள் பிரி

வது ஒரு பெரும் நஷ்டமேயாயினும், தம்மாலி யன்ற உதவிகளை அவர் எங்கள் கலாசாலைக்கு வெளியிலிருந்தும் செய்வார் என்ற நம்பிக்கை யோடு ஆறுதலடைகிறோம்'' என்று கூறினர். இதையடுத்து உப அதிபரவர்களுக்கு ஒரு பிரிவு பசாரப் பத்திரம் வாசித்தளிக்கப்பட்டதுடன், பொற்கிழியும் வழங்கப்பட்டது.

அடுத்ததாகப் பேசிய விரிவுரையாளர் திரு. சோ. நடராஜா அவர்கள் "எங்களைப் பிரிந்து செல்லவிருக்கும் எங்கள் உப அதிபரின் பழைய மாணவனும், தற்போதைய சக ஆசிரிய னுமாகிய நான், அனுவசியமாக அவர் பக்கத் தில் செல்வதற்குக்கூட இன்னும் பயப்படுகி றேன் மனித சக்திக்கே அப்பாற்பட்ட ஒரு சக்தி அவரிடம் உண்டு என்று நான் அவர் வாழ்க்கையிலிருந்து நம்புகிறேன். இத்தகைய சிறப்பு வாய்ந்த ஒரு சற்குருவை நாங்கள் பிரி வது துன்பமே'' என்று கூறினர்.

தொடர்ந்து பேசிய விரிவுரையாளர் திரு. பொ. ஆறுமுகம் அவர்கள் "தீண்டாதே தீண்டப்படாதே'' என்பதே எங்கள் உப அதி பரின் தாரகமந்திரம். அதாவது பிறர் விஷயத்தில் அனுவசியமாகத் தலையிடாதே, பிறரை உன் விஷயத்திலும் அனுவசியமாகத் தலையிடப் பண் ணுதே என்பதே அவர் இலட்சியமாகும். இத் தகைய உயர் இலட்சியமுடைய ஒரு கனவானை நாங்கள் பிரிவது பெருங்கவலையே'' என்றார்.

இதற்கடுத்து ஆசிரிய மாணவ மாணவியர் பலரும் அன்னாரின் அருங்குணங்களை எடுத்தியம் பினர்.

இவை யாவற்றிற்கும் இறுதியில் பிரதியுத் தாரமாகப் பேசிய எங்கள் உப அதிபர் பின் வருமாறு கூறினர்;-

"இங்கே 27 வருடங்களாக நான் கடமை யாற்றியதாகச் சொன்னீர்கள்'' அப்படிப் படிப் பிக்கிற பாக்கிய அமைவு பெற்றிருக்கிறேன். ஆனால் இந்தத் திருநெல்வேலியோடு 1921-ம் ஆண்டு தொடங்கியே எங்களுக்குத் தொடர் புண்டு. அந்தக்காலத்தில், இவ்விடத்தில் இப்படி யான ஒரு கலாசாலை ஏற்படும் என்று எவரும் எதிர்பார்க்கவில்லை. அவ்வளவுக்கு அதிகமான செடி, கொடி, புதர், திடர் நிறைந்த இடமாக இது இருந்தது. அப்படியான இடங்களில், இவ் வித கலாசாலைகள், மாளிகைகள் தோன்ற வேண்டும் என்பதுதான் பெரியோர் நோக்கு. அத்துடன் இன்னும் ஒரு விஷயத்தை யோசிக்க வேண்டும். பற்றைகள் நிறைந்த இடம் கலாசா லைகளாக மாறலாம். ஆனால் அவைகள் மீண் டும் பற்றைகளாக மாறிவிடாமல் அவற்றைக் கட்டிக்காப்பதே பெருங்காரியம்.

இப்போது நீங்கள் செய்தது ஓர் உபசாரம். இப்படியான உபசாரங்கள், கொண்டாட்டங் கள் இனமுறைக்குக் கொண்டாடப்படும் ஞாப கங்கள். நீங்கள் உபசாரப் பத்திரம் வாசித்த போது எனக்கு ஓர் எண்ணம் தோன்றியது. அதாவது என்முன்னிலையில் பிள்ளைகளாகிய நீங்கள் இருக்கிறீர்கள். அதோடு உங்கள் மத்தி யில் பேரப்பிள்ளைகளும் இருக்கிறார்களோ என் பதேயாகும். ஏனெனில் 1930-ம் ஆண்டு தொடங்கியே இங்கிருந்து ஆசிரியர்கள் பயிற்சி பெற்று வெளியேறியிருக்கிறார்கள். அவர்களின் குழந்தைகளும் உங்கள் மத்தியில் இருந்து பயிற்சிபெற இடமுண்டு. எனவே அவர்களும் இருக்கிறார்களா? அறிய ஆசைப்படுகிறேன். அப்படியிருந்தால் எனக்கு அது பெரிதும் ஆனந்தமே.

சரி, நீங்கள் செய்த உபசாரத்துக்கு நான் பதில் உபசாரம் சொல்வதோடு என் சொல்லை முடிக்கலாம்'' என்று குறிப்பிட்டார்.

இவ்வளவில், காரியதரிசியின் நன்றியுரையு டன் கூட்டம் இனிது நிறைவெய்த, ஓய்வு பெறும் எங்கள் உப அதிபரின் ஞாபகார்த்த நிழற்படமொன்றும் எடுக்கப்பட்டது.

*— கலாசாலை நிருபர்.*

# சமயமும் சமுதாயமும்

நாளுக்கு நாள் சமுதாயத்தில் மக்கள் தொகை பெருகிக் கொண்டே போகின்றது. அதன் உலகியல் அறிவும் அகன்று கொண்டே செல்கின்றது. மக்களால் கண்டு பிடிக்கப்படும் பல நவீனப் பொருள்களும் பெயர்ப்பட்டியலைப் பெருப்பித்துக் கொண்டுதான் இருக்கின்றன. இந்தச் சந்தர்ப்பத்தில், சமுதாயம், சமயத்தைப் பற்றிப் பலவிதமான வினாக்களை எழுப்புகின்றது. சமயம் ஏன்? எதற்கு? என்ற கேள்விகள் சதாஎழுகின்றன. இதற்கான சரியான பதிலை இறுப்பது கடினமாகத்தான் இருக்கின்றது. ஏனெனில் சமுதாயத்தில் உலகியல் அறிவு விரிவுக்கு ஏற்ப, அதன் சமய அறிவு விரிவுபடாமல் இருப்பதே காரணமாகும்.

சமுதாயத்தில் புதுமை கலந்திருப்பது போல் சமயத்திலும் புதுமை கலக்கலாமா? கூடாதா? அது எப்படிப்பட்டதாக அமைய வேண்டும்? என்றின்னோரன்ன வினாக்கள் எழுகின்றன. இதை ஆராயாமல் பதில் அளிப்பது கடினமானதும், ஆபத்தை விளைவிப்பதுமாகும். இவ்விஷயத்தை நிர்ணயிக்க ஒரு சமய ஆய்வு கூடம் வேண்டும் என்பது ஒரு சில பெரியோர் கருத்து. இந்த ஆய்வு கூடத்தில் சமய தத்துவப் பேராசிரியர்களே இடம் பெற வேண்டும் என்பது அவர்கள் கருத்தாகும்.

இன்று, உலகிலே சமுதாயத்தின் உலக அறிவியல் விருத்தி ஆயிரம் மைல் வேகத்தில் செல்கின்றது. ஆனால் சமய அறிவியல் விருத்தியோ, ஒரு மைல் வேகத்திலேதான் செல்கின்றது. சமுதாயம் என்பது ஒரு வண்டியை நிகர்த்தது. இது வாழ்க்கைப்பாதையில் ஆயிரம் மைல் வேகத்தில் ஓடுகிறது. இந்த வண்டிக்குள் ஒரு பொருள் இருக்கின்றது. அதுதான் சமயம். இந்தப் பொருள், சமுதாய வண்டி ஓடும் வேகத்தினால் ஏற்படும் அதிர்ச்சியைத் தாங்காமல் சிதைந்து விடுமோ என்ற அச்சமும் பீதியும் ஏற்படுகின்றன. சிதைவுபட்டு அழிந்து விடுமோ என்றும்எண்ணத் தோன்றுகின்றது. இத்தகைய அச்சமும் பீதியும் ஏற்படக்காரணம், சமுதாய வண்டிக்குள் உள்ளதாகிய சமயம் எனப்பட்ட அப்பொருள், காலத்துக்கேற்ப மாறுபட்டு, உறுதியிழந்து, உருக்குலைந்து இருப்பதனாலேயே என்க. எனவே இதை உறுதிப்படுத்த ஒரு சமய ஆய்வு கூடம் இன்றியமையாததன்றோ?

உலகிலே இன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ள ஜலக்குண்டு, அணுக்குண்டு, தூரதரிசினி (Television) போன்ற கருவிகள் அதிசயமானவை, அற்புதமானவை, என்றெல்லாம் சொல்லப்படுகின்றன. இக்கருவிகளின் தீவிரச் செயல்களைப் பலர் சமயத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கின்றனர். இக்கருவிகளின் கருத்தாக்களையும், சமயக் கருத்தாக்களோடு ஒப்பிட்டுப் பார்க்கின்றனர். இப்படி ஒப்பிடும் போது சாதாரண ஊனக்கண்ணோடும் உலகியல் அறிவோடுந்தான் நோக்குகின்றனர். எனவே அவர்களது, வெற்றுக்கண்ணுக்குச் சமயம்,உலகியல் அறிவிற்குக் கீழ்ப்பட்டதாகத் தோன்றுகின்றது. இதனால் சமயச் சார்பு கெடுகின்றது. எனவே மேற்குறிப்பிட்ட கருவிகளை அபாரமானவை, அற்புதமானவை என்றெல்லாம் புகழ்கின்றனர். ஆனால் இதைப் பற்றிச் சிறிது சிந்தித்துப்பார்த்தால் இதில் அபாரமோ, அற்புதமோ எதுவுமில்லை என்பது தெளிவாகத் தெரியும். சமயத்தை எவ்வகையிலும் இந்நவீனக் கருவிகள் வென்று விடவில்லை என்பது தெளிவாகும். ஏனெனில் இத்தகைய கருவிகள் கண்டுபிடித்தற்காய மூலப்பொருள்களை ஆக்கி வைத்தவன் இறைவனே என்று நிரூபிக்கின்றது சமயம் இறைவனால் ஆக்கப்பட்ட அந்த மூலப்பொருள்களைக் கொண்டு ஒன்று கூட்டிச் சேர்க்கப்பட்ட கலவைப் பொருள்கள் தான் மேற்குறிப்பிட்ட கருவிகள். இந்த மூலப் பொருள்களை அளவாகச்சேர்க்கும் விஷயத்திலே தான் விஞ்ஞானிகளின் புத்தி நுட்பம் தொழிற்பட்டதேயொழிய அவற்றை ஒரு துணையுமின்றி ஆக்கும் விஷயத்தில் அல்லவே! எனவே மூலப் பொருள்களை இயற்கையாய் ஆக்கி வைத்த பெருமை இறைவனுக்கன்றோ உரியது?

இந்த உண்மையை அறிய மனிதனின் உலகியல் அறிவு போதாது; உண்மைச் சமய அறிவு வேண்டும்.

இந்த உண்மையை மக்கள் இலகுவில் உணர முடியாமல் இருப்பதற்குக் காரணம், இன்றைய சமயநிலையேயாகும். சமயம் விரிந்து, பரந்து கிடக்கின்றது. அதன் வரம்புகள் திட்டம் தெளிவானதாக இல்லை. சாதாரண மக்களுக்கு அது புரிவதாய் இல்லை. அதைத் தெளிவு படுத்தவே ஒரு சமய ஆய்வு கூடம் வேண்டும் என்கின்றனர்.

இப்படியாக இந்தச் சமய வரம்பு தெளிவாகவும், திட்டமானதாகவும் இல்லாதபடியால் தான் நம்மில் நாஸ்திகம் பேசும் ஒரு கூட்டம் தோன்றியிருக்கின்றது. இது இன்று நேற்று ஏற்பட்ட ஒரு கூட்டமல்ல. மாணிக்கவாசக சுவாமிகள் காலத்தில் கூட இது இருந்திருக்கிறது என்று தெரிகின்றது. நிழலின் அருமை தெரிய ஓரளவு வெய்யிலின் வெம்மையும் இருக்க வேண்டியது அவசியமே போல், ஆஸ்திகத்தின் அருமை தெரிய நாஸ்திகரும் ஓரளவு தேவைதான். இவர்கள் நீதி, நேர்மை, சத்தியம் மாத்திரம் இருந்தால் வாழ்க்கைக்குப் போதும் என்கிறார்கள். இத்தத்துவம் நல்லதே. ஆனால் சமயப் பற்றில்லாவிட்டால் இவையாவும் முற்றுப்பெறு எப்படியெனில் இந்நாஸ்திகத்தத்துவம், செலவுத்திட்டத்தை வைத்துக் கொண்டு வரவைக் கணக்கிடுவது போன்ற பேதைமைத்தது. எப்போதும் சரியான வரவை அறிந்து அதற்கியையச் செலவை மதிப்பிடுவதே உண்மையான திட்டம். இன்றேல் வாழ்க்கை வண்டி நகர முடியாது ஸ்தம்பித்து விடும். இதனால் ஒழுக்கம் கெடும். எனவே இத்தன்மை எவ்வளவு ஸ்திரமற்றதோ, இதே போன்று தான் நாஸ்திகத் தத்துவமும் உறுதியற்றது.

இந்த நாஸ்திகக் குழுவில் மூன்று பிரிவினர் உளர். இவர்கள் அரசியல் வாதிகள், சீர்திருத்த வாதிகள், நியாயதுரந்தரர் என்போராவர். சில அரசியல்வாதிகள் சமுதாயத்தைச் சீர்திருத்துவதே தமது நோக்கமென்கின்றனர். சில நியாயதுரந்தரர் அநீதியை ஒழித்துக் கட்டி, நீதியை நிலைநாட்டுவதே தமது குறிக்கோள் என்கின்றனர். இவர்கள் சமயம் என்னும் விஷயமாக எதையும் எண்ணுவதில்லை. வாழ்க்கை என்பது ஒரு வரையறைக்குட்பட்டது. என்பதை இவர்கள் உணர்வதில்லை. இவர்கள் கொலை செய்வது தவறு, கொலை செய்யத் தூண்டுவது தவறு, கொலை செய்வதற்கு உடந்தையாக இருப்பது தவறு, என்று சட்டரீதியாக ஒப்புக் கொள்ளுகின்றார்கள். ஆனால் கொலை செய்ய நினைப்பதுந் தவறு என்பதை உணர்வதில்லை. கொலைசெய்ய நினைப்பதுந் தவறு என்று உணர்த்துவது தான் சமயம். எனவே. நாஸ்திகர்களால் குற்றவாளி என்று தீர்மானிக்கப்பட்டவன் சமயத்தின் முன்னிலையில் சுத்தவாளியாகக் காணப்படுவான். அவர்களால் சுத்தவாளி என்று தீர்மானிக்கப்பட்டவன் சமயத்தின் முன்னிலையில் குற்றவாளியாகவும் கணிக்கப்படுவான். எனவே நாஸ்திகர்கள் புறக்கிருத்தியங்களைக் கொண்டு தான், நீதி, அநீதி என்பவற்றைத் தீர்மானிக்கின்றார்கள். ஆஸ்திகர்கள் அகக்கிருத்தியங்களைக் கொண்டு நிர்ணயிக்கின்றனர். எனவே நாஸ்திகர்களுடைய வாதப்பிரதிவாதங்களால் இறைவனை அடையவோ, அன்றேல் அறியவோ முடியாது என்பது வெள்ளிடைமலை. இந்த நாஸ்திகக் குழுவினரின் வாதப்பிரதிவாதங்கள் அறிவின் சின்னமாகிய பிரமனும், செல்வத்தின் சின்னமாகிய திருமாலும், சிவத்தின் அடிமுடி தேடிப் போய் தாங்கள் அதைக் கண்டதாகச் சாட்சி வைத்து நிரூபிக்க முயன்றதைப் போலிருக்கும்.

நீதி என்றும் மாறுபடாதது ஆனால் சட்டம் மாறுபடும். இறைவன் மன்றத்தில் நியதி நியதியேதான் அரசியல் சட்டங்கள் புறக்கிருத்தியங்களைத் திருத்தும் ஓர் இயக்கமாகும். ஆனால் அகக் கிருத்தியங்களைத் திருத்த வலியற்றது. உள்ளேவலைத் தூய்மைப் படுத்த சக்தியற்றது. எனவே இக்கிருத்தியங்கள் தூய சிந்தையினின்றும் தோன்றாது, வெளிக்குப் போலித்தாய்

மையைக் காட்டி நிற்கும். இதையே நாஸ்திகக் குழு மேலானதாக ஏற்றுக் கொள்ளும். ஆனால் இதை ஆஸ்திகக் குழு ஏற்றுக் கொள்ளாது. ஏனெனில் அவர்கள் சமய அடிப் படையில் செயலின் உற்பத்தித்தானத்தின் தூய் மையை நோக்குவார்கள். எனவே சமயம் சிந் தையைத் திருத்தும் ஓர் இயக்கம். எனவே சமயவாதிகளின் வாதம் சிந்தையுடன் தொடர் புள்ளதாய் சிவத்தை மையமாகக் கொண்ட தாய் இருக்கும். உண்மையான தூய சிந்தை யின் உள்ளேவலினால் நடைபெறும் செயலே உத்தமமானது. செயலின் உற்பத்தித்தானத்தின் பரிசுத்தத் தன்மையைக் கொண்டே இது நல் லது; இது கெட்டது; இது நீதி; இது அநீதி என்று முடிவு கட்டவேண்டும் என்கிறது ஆஸ்திகக் குழு. சிந்தை திருந்தி விட்டால் செயல் தானே திருந்தும். ஆனால் சிந்தை வேறு செயல் வேறாகும் போதுதான் பிணக்கு ஏற் படும்.

நாஸ்திகர் வாழ்வு சமயச் சார்பு அற்றது என்பது பகிரங்க இரகசியம். சமயச் சார்பற்ற வாழ்வு ஊற்றுக் கசிவற்ற ஓடையை நிகர்த்தது, ஆணி வேரற்ற மரத்தைப் போன்றது. மணற் பரப்பிற் கட்டப்பட்ட மனையை ஒத்தது என்று சமயவாதிகள் கருதுகின்றனர். "சமய அடிப் படையில் நின்றவர்களே தீமையைச் செய்யப் பயப்படுகின்றனர்" என்ற கிழக்கு நாட்டுச் சமயவாதிகளின் கூற்றை மேற்கு நாட்டுச் சம யவாதிகளும் ஆமோதிக்கின்றனர். எனவே சமயச் சார்புடைய வாழ்வே பயன்தரும் பண் புடைய வாழ்க்கை. சைவசமயிகளை அவர் களின் கருத்துக்கிசைய ஐந்து பிரிவாகப் பிரிக்க லாம்.

1. தீண்டாமையை வரவேற்பவர்கள்.
2. திருநீறணிந்து தீண்டாமையை வர வேற்போர்.
3. சமஸ்கிருதத்தில் வழிபட வேண்டு மென்போர்.
4. கோயிற்றிருப்பணியில் மாத்திரம் ஈடு பட்டிருந்தால் போதியது என்போர்.
5. கோயில் திருப்பணியோடு சமூக சேவையும் செய்து தீண்டாமையை வெறுக்க வேண்டுமென்போர் ஆவர்.

இவர்கள் ஒவ்வொரு பிரிவினரும் தத் தமது கருத்துக்கேற்ப சமய வியாக்கியானம் செய்கின்றனர். இதனால் நமது சைவம் ஒழுங் கற்ற கோணங்களிலே சென்று கொண்டிருக் கின்றது. எனவே எல்லாருக்கும் பொதுவான ஒரு கட்டுப்பாடும் ஒழுங்கும் வேண்டும்.

பழங்காலத்திலோவெனில் மக்களிடை அறிவு குறைந்திருந்தது. எனவே சமய எல்லை யும் குறுகிக் காணப்பட்டது. இப்போது மக்கள் உலகியல் அறிவில் மலர்ச்சி அதிகம் பெற்று விட்டனர். அதற்கு இசைய சமய எல்லையும் விஸ்தரிக்கப்படல் வேண்டும். அதன் வரம்பு கள் தெளிவு படுத்தப்படல் வேண்டும்.

சைவ நெறி மிகத் தொன்மை வாய்ந்தது அதன் தூய்மை எல்லோராலும் விரும்பப்படத் தக்கது. ஆனால் இன்று பாடசாலைகளில் சம யத்தைப் போதிப்போர் அதை ஒரு சாஸ்திரப் படிப்பாக மாற்றினமையால் நாட்டில் பல சார மற்ற சமயக் கொள்கைகள் நிலவுகின்றன. இத னால் அதன் எல்லைகள் தெளிவற்றதாகக் காணப்படுகின்றன. பண்டைய சரித்திரங்களை யும், இலக்கியங்களையும் நோக்கின் அது பரந்து, விரிந்து, எல்லை கடந்து, எங்கும் வேர் விட்டு, ஒளி வீசியதைக் காணலாம். எனவே இன்று சிவ நெறியின் உண்மைத் தத்துவங்கள் அதை வழிபடுவோரின் அறியாமையால் சிதைந்து காணப்படுகின்றன.

'கார்ல் மாக்ஸின்' சமதர்ம தத்துவத்தில் கூடக் காணமுடியாத சமதர்மத்தத்துவம் நமது சிவ நெறியில் புதைந்து கிடக்கின்றது. 'கார்ல் மாக்ஸ்', "உள்ளவன் இல்லாதவனுக்குக் கொடாவிடில் பறித்துக் கொள்" என்கிறான். ஆனால் சிவநெறியோவெனில் ஈயாதவனுக்கு நரகம் உண்டென்று கூறி அவன் சிந்தையைத் திருத்தி, ஈயப்பண்ணுகின்றது. இதனாலேயே அப்பரும், "இரப்பவருக்கு ஈயவைத்தான்......." என்று பாடியுள்ளார். எனவே சர்வம் சமத்து வம் என்னும் உண்மையைக் குறிப்பாகப்

போதிப்பது சிவநெறி. தனக்குவமை இல்லாத தலைவனால் தான் சமுதாயத்தை ஒருமைப் படுத்தலாம் என்னும் உண்மையைப் போதிப்பது சிவநெறி.

ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்பது ஆன்றவிந்து அடங்கிய சான்றோர் கொள்கை தமிழ் மறையென்று அறிஞர்கள் அனைவராலும் போற்றிப் புகழப்படும். பெருமை சால் திருக்குறள் ஒரு சமயப் பொதுநூல் அறுவகைச் சமயத்தாராலும், தம்முள் முரண்பாடின்றி ஏற்றுக் கொள்ளப்படும் பொதுநூல். அறுவகைச் சமயத்தார்க்கும் அவ்வவர் பொருளாய் நின்று அருள் செய்பவன் இறைவன் என்னும் ஆன்றோர் திருவாக்குக்கு நிலைக்களனாய் இருப்பது திருக்குறள். இப்பெருமை கொண்டு தான் கல்லாடர் என்னும் கடைச் சங்கப்புலவர்,

"ஒன்றே பொருளெனின் வேறென்ப வேறெனின்
அன்றென்ப ஆறு சமயத்தார்—நன்றென
எப்பாலவரும் இயைபவே வள்ளுவனார்
முப்பால் மொழிந்த மொழி"

என்று திருகுறளின் சிறப்பை வருணித்திருக்கின்றார். எனவே பல மதங்களும் திருக்குறளை ஒரு உயரிய நூலாகக் கருதுவதினால் பெருகி வரும் நாஸ்திகத்தை அகற்றி ஆஸ்திகத்தைச் சமுதாயத்தில் வளர்க்க வழியுண்டு.

திருக்குறள் ஒப்பரிய நூலாயிருந்தாலும். நாம் கடவுளைப்பற்றி ஏட்டிலும், எழுத்திலும். மாத்திரம் பார்த்தால் போதாது. அவரை வாழ்த்துப் பொருளாகக் கருதுவதுடன், வாழ்க்கைப் பொருளாகவும் கருதுதல் வேண்டும். நமக்கும் இறைவனுக்கும் இடையில் ஈடுபாடுள்ள நட்பு வேண்டும் இதற்குக் கண்ணப்பநாயனார் போன்ற சிவனடியாரின் அடிச்சுவட்டைப் பின்பற்ற வேண்டும். எதைப் பெரியார்கள் செய்தார்களோ அதை நாம் வாழ்க்கையில் பிரயோகிக்க வேண்டும். எந்தப் பெருமானிடத்தில் அன்பு செலுத்துகிறோமோ அவரை ஒருமைப் பொருளாகக் கருதுதல் வேண்டும். உருவ வழிபாடு உயிர்ப்புப் பெற்றுக் கடவுள் வழிபாடாக மாறவேண்டும். அதாவது உருவம் என்ற நினைப்பு நீங்கி, அந்த எண்ணம் உயிர்ப்பு அடைந்து இறைவனிடம் இரண்டறக்கலத்தல் வேண்டும். இத்தகைய சில முன்னேற்றமான எண்ணங்கள் சமுதாயத்தில் தோன்ற வேண்டும். சமுதாயத்தை ஒருமைப் படுத்த, அவர்கள் அறியாமையை அகற்ற, வழிபாடு செயலிலே நடைபெறவேண்டும். மாநிலம் காப்பதற்கு மாதேவன் மண் சுமந்தார். இதை நாம் மார்கழி மாதத்தில் கொண்டாடி மக்கள் மனத்தில் கடவுட் பக்தியை வளர்க்க வேண்டும். தூண்டா மணி விளக்காயினும் சுடர்விட்டுப் பிரகாசிக்க ஒரு தூண்டு கோல் வேண்டும். அதுபோல எமது செந்நெறியாம் சமயநெறி இத்தகைய முன்னேற்றமான தத்துவங்களைக் கொண்டிருந்த போதிலும் அதைத் தூண்டித்துலக்கி விடுவாரின்றி மங்கிக் கொண்டே போகின்றது. எனவே அதைக் குன்றின் மேற்றீபமாக சமுதாயத்தில் ஒளி பெறச் செய்ய வேண்டுமானால் ஒரு சமய ஆய்வு கூடம் வேண்டும். இக்கூடத்தை உண்மைச் சைவ நெறி நின்ற பெரியார்கள் நிரப்ப வேண்டும்.

வாழ்க சமயம்! வளம் பெறுக சமுதாயம்!!

**மு. கமலாதேவி,**
முதலாம் வருடம்.

(இக்கட்டுரை எங்கள் கலாசாலையில் குன்றக்குடியடிகளார் நிகழ்த்திய பிரசங்கத்தைத்தழுவி எழுதப்பட்டது)

# ஐவராலேற்படும் அனர்த்தம்.

ஐவரென்றவுடன், பாலர் கீழ்ப்பிரிவில் 'ஐ' கார முதற் சொல்லுக்குதாரணமாகக் காட்டிப் படிப்பிக்கப்படும் ஐந்தென்ற இலக்கத் தொகையுள்ள பஞ்சபாண்டவரைக் குறிக்கும் 'ஐவரை' நினைக்கவேண்டியதில்லை. ஏனெனில், அவ்வைவரால் அனர்த்தம் ஏற்படாது நன்மையே ஏற்பட்டது. அந்த நன்மை துரியோதனனுக்கு அனர்த்தமாகியிருக்கலாம். உண்மையில் தெய்வ இரகசியத்தை ஓரின் நன்மையாகவே முடிந்ததென்பது புலனாகும். இது இதிகாச சம்பந்தமானது. இனிச் சாஸ்திர சம்பந்தமான 'ஐவர்' யாரென்பதை ஆராய்வாம்.

"சத்தத்தா லசுண மாயும் பரிசத்தாற் றந்தி மாயும்
வெற்றிசே ருருவத்தாலே விட்டிலம் பறவை மாயும்
பற்றியா ரிரதத்தாலே பாணிமீ னங்கள் மாயும்
மொய்த்த கந்தத்தி னாலே மூசுவண் டினங்கள் மாயும்"

என்ற ஆன்றோர் வாக்கின்படியும்,

"சிறக்கும்பதந்தரு வார்திரு வேங்கடச் செல்வர்செய்ய
திறக்கும் பதந்தொழு துய்யவெண்ணீர் நெறியிற் பிழைத்து
மறக்கும் பதந்தியும் சேலு மசுணமும் வண்டினமும்
பறக்கும் பதங்கமும் போலைவ ராற்கெடும் பாதகரே"

எனத் திருவேங்கடத் தந்தாதியில் அழகிய மணவாளதாசரென்கின்ற திவ்விய கவி - பிள்ளைப் பெருமாளையங்கார் கூறியபடியும் ஐவரென்பவர் யாரென்பதும், அவர்களாற் கெடும் பாதகர் யாரென்பதும் போதரும். அவற்றைச் சிறிது விரித்து விளக்குவாம்.

சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம் என்னும் பஞ்சப் புலன்களே அனர்த்தங்கட்கெல்லாங் கருவிகள். அவ்வைந்துமே 'ஐவர்' என உபசரிக்கப்பட்டன. இவ்வைவராலும் தனித்தனி அழிவன முறையே, அசுணப் பறவை, தந்தி (யானை), பதங்கம் (விட்டிற் பறவை), சேல் (மீன்), வண்டு என்பன. அஃதாவது: பரிசத்தால் யானையும் சுவையால் மீனும், ரூபத்தால் (ஒளியால்) விட்டிலும் மணத்தால் வண்டும், சத்தத்தால் அசுணப்பறவையும் கெடுகின்றன.

வனவிலங்குகளைப் பற்றிப் பிடிப்போர் பழக்கப்பட்ட பார்வை மிருகமூலம் அகப்படுத்துவதுபோல, கான்வாழ் யானையைக் கையகப்படுத்த விரும்புவோர் தம் பார்வையானையொன்றைக் காட்டில் ஓரிடத்திற் கட்டி, அதனெதிரில் ஆழமான கிடங்கொன்று வெட்டி, அது தெரியாதபடி இலை குழை மூங்கிற்றடிகளால் மூடிவிடுவர். காட்டியானை அப்புதிய யானையைக் கண்டதுங் காதல்கொண்டு அதனருகிற் செல்லும். அப்பொழுது பள்ளத்தில் வீழ்ந்தேறமுடியாமற் கிடக்கையில் வேட்டையாடுவோர் அதனைச் சில நாட்கள்வரை பட்டினியால் வாட்டிக் கொட்டமடங்கியபின் வேறு யானைகளினுதவியாற் பக்குவமாய்ப் பிடிப்பர். இவ்வாறு யானை பிறிதொன்றின் சேர்க்கையாலுண்டாம் உடற்பரிசவின்பத்தைப் பெரிதும் விரும்பி, அதனையடக்க முடியாமற் சென்று தனக்குத்தானே அழிவைத் தேடிக் கொள்ளும்.

மீன் வேட்டையாடும் பரதவர், தூண்டிலெனப்படுங் கூரிதாய் வளைந்திருக்கும் இரும்பு முள்ளினுனியில் ஏதாவதிரையைச் சொருகிக் கயிற்றிற் கட்டி நீரிற் போடுவர். அந்நீர்வாழ் மீன்கள் அத்தூண்டிலிலுள்ள ஆகாரத்தைப் பார்த்து, அது மிக ருசியாயிருக்குமென்றெண்ணித் தின்னும்போது, அத்தூண்டின் முள் அதன்றொண்டையில் மாட்டிக்கொள்ள, தூண்டிற்காரன் அதையெடுத்துப் பிடித்துக் கொள்வான். இவ்வாறு மீனானது சுவையின் மேற்கொண்ட நசையாலுயிரை விடுகின்றது.

அசுணப்பறவை, இனிய கீதத்தை மிகவும் பிரியத்துடன் கேட்பது. இனிமையற்ற பறை முதலியவற்றின் ஓசையைக் கேட்கச் சகியாமல் உயிரைவிடும் இயல்புடையது. அதனைப் பிடிக்க விரும்புவோர் அது வசிக்குமிடத்தையறிந்து சென்று, குழன் முதலிய இன்னிசைக் கருவிகளை இசைப்பர். அது அவ்விசையைக் கர்ணாமிர்தமாகக் கேட்டுக்கொண்டிருக்கையில் அவர்கள் இன்னிசைக் கருவிகளை நீத்துப் பறையடிப்பார்கள். அது அவ்வோசையைச் செவியேற்க விசையாமல் வீழ்ந்துயிர்விடும். இவ்வாறு அசுணப்பறவை சத்தத்தாலழியும்.

வண்டுகள் வாசனையின் மேற்கொண்டுள்ள பாசத்தால் காலச்செவ்வியு மறியாமல், தாமரை மலரிற் சென்று, அமர்ந்தவ் வின்பத்தை யனுபவித்துக் கொண்டிருக்கும். மாலைக்கால மானவுடன் இயற்கையின்படி அம் மலர்கள் மூடிக்கொள்ள வண்டுகள் அவற்றுட் சிக்கி வெளியேறமுடியாது, இரவெல்லாம் ஏங்கி இன்னலுறும்.

விட்டிற் பூச்சிகள் இராக் காலங்களில் விளக்கொளியைக் கண்டு, கனியென மனத்துட்கொண்டு, அவ்விளக்கின் மேல் வந்து விழுந்து வெப்பத்தாலழிவுறும்.

இவ்வாறைம்புல நுகர்வுள் தனித்தனி ஒவ்வொன்றையே பெரிதும் விரும்பி அழிவடையும் இவைகளைப் போலன்றி, மனிதன் கூடியளவு அவ்வைந்தனையும் ஒருங்கே ஏககாலத்திற் பிரயோகித்தும், தனித்தனியும் நுகரவேண்டுமென்று நோக்கமுடைய னென்றால் அவனடையுந் துன்பங்கட்கெல்லையுமுண்டோ !

கண்ணானது வண்ணமென் வனப்புடைப் பொருள்களை விரும்புகிறது. மேன்மேலும் அவற்றையே பார்த்துக் கொண்டிருப்பதிலும் பிரியம். மனிதன் அதன் வசப்பட்டு. அப்பொருள்கள் தன் வாழ்க்கைக்கு அவசியமற்றன வாயினும் கண்ணைத் திருப்திப்படுத்த வேண்டிப் பணத்தைப் பாழுக்கிறைத்து அல்லலுறுகின்றான். கடைவீதிகளிற் பார்ப்போர் கண்களைச் கவரச்செய்யும் முகமாய் வியாபார தந்திரிகள் செய்து வைத்திருக்குங்காட்சிகளோ, சினிமாக்களோ, பல்வகை யலங்காரங்களோ எல்லாங் கண்ணைப் புண்ணாக்கவேயாம். இவற்றைக்காணச் சிலர் பின்னிற்பின் பிறர் ''காணாத கண்ணென்ன கண்ணே'' என்று பாடவுந் தொடங்கிவிடுவர்.

நாச் சுவையாலுண்டாம் அனர்த்தமோ அனந்தம். உயிர்களை உடலினின்று பிரிப்பதும், கள், சாராயமருந்துவதும், பக்ஷணக்கடைகளிற் குக்ஷியை நிரப்புவதும் எல்லாம் இதன் பொருட்டே. நேரந்தவறி, வயிற்றிற் பசியின்றியிருக்கவும் லட்டு, ஜிலேபி, போண்டா என்று பலவகைப் பக்ஷணங்களை உள்ளே தள்ளி அஜீரணத்தால் வருந்துவது மாத்திரமன்றி. பணமும் விரயமாகிறதே! உடம்பு நோய் வாய்ப்படுகிறதே! உலகில் எத்தனை ஆடு, கோழி வெட்டப்படுகின்றன; கசாப்புக் கடைக்காரன் காலை தொட்டு மாலை வரை அறுத்துக் குவிக்கிறானே! எத்தனை குடும்பங்கள் இடும்பையுளாழ்கின்றன! எத்தனைபேர் வழியிலுந் தெருவிலும் மதிகெட்டு, மானமிழந்து கதிதவறிக் கால் தள்ளாடி விழுகின்றனர். அந்தோ பரிதாபம்! எல்லாம் இந்த நாச்சுவையை அடக்க முடியாமையினாலேயே. மகாத்மா காந்தியடிகள் சொன்னார்: ''ஒருவன் நாச்சுவையை யடக்கப் பழகிவிட்டால் மற்றப் புலன்களையும் எளிதில் வென்றுவிடலா''மென்று. அப்படியே அவர் அடக்கி உலகையே வென்றது கண்கூடு. இச்சந்தர்ப்பத்தில் அவர் கண்ணைப்பற்றிக் கூறியதையும் ஓர்க. ''உன்கண், ஒன்றை (ஒரு மாதைக்) கண்டு காதல் கொள்ளுமாயின், உடனே ஈசுவர நாமத்தை உச்சரி; அவ்வாசையை அடக்கிவிட அது ஓர் மருந்தாகும்.''

பரிச வின்பம் பெரும்பாலுங் காமங்காரணமாகக் கிடைப்பது. இதனைத் தூய நல்லோர் வகுத்த இல்லற நெறிநின்று மட்டாகத் துய்ப்பின் மகிழ்ச்சிகரமானது. தவறி, பொருட் பெண்டிரிடத்தும், அயன் மாதரிலும், பொருட்களிலும் உற விரும்பினாலோ குஷ்டமுங் கொலையும், பொறாமையும், போட்டியும் பூசலு மேற்பட்டுப் பல்வகை இன்னல்கட்காளாக வேண்டி வரும். இதனாற் செல்வமிழந்தோர் எத்தனை பேர்! தேகமிழந்தோர் எத்தனை பேர்!! இதனையடக்கப் பெரும் முனிபுங்கவராலும் முடியாது. தவறினரெனில் எம்போலியர் எம்மாத்திரம். தான் மாத்திரமன்றி மற்றையவற்றையுந் தன்னோடொருங்குறச் செய்வது. இதனையடக்குவோரே உண்மை வீரராவர்.

''உரனென்னுந் தோட்டியா னோரைந்துங் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து.''

''அடல்வேண்டு மைந்தன் புலத்தை விடல்வேண்
வேண்டிய வெல்லா மொருங்கு'' [டும்

என வள்ளுவப் பெருந்தகை கூறிய வானமுத வாக்குகளை ஓர்க.

"ஓதிய அசுணமாதி ஒன்றொன்ரு வழியா நிற்கும்
காதினல் தொக்கால் மூக்காற் கண்ணினு னுவா விந்தச்
சாதிமானுடர்களெல்லாம் அஞ்சினுற் சாகாநிற்பர்
போதமே விட்டகாலம் புலன் வழிப் போகா ரன்றே"

என ஆன்ருேர் கூறியாங்கு இவ்வைம்புலன் களும் எம்மை இவ்வுலக இன்பங்களுள் இழுத்துச் செல்லுமேயன்றி, ஆண்டவனை அடையு நெறிக் குதவுவதுமில்லை; அவகாச மளிப்பது மில்லை; தடையே புரிவனவாம். இவ்விடத்து, 'அடல் வேண்டும் .......' எனுந் திருக்குறளுக் குப் பரிமேலழகியார் எழுதிய, 'அது மனத்தைத் துன்பத்தானும் பாவத்தானுமன்றி வாராத பொருள்கண்மேலல்லது வீட்டு நெறியாகிய யோக ஞானங்களிற் செலுத்தாமையின், அதனை யடல்வேண்டுமென்றும், அஃது அப்பொருள் கண்மேற் செல்லின் அந்நுகர்ச்சி விறகு பெற்ற தழல்போல் முறுகுவதல்லது அடப்படாமை யின் வேண்டிய வெல்லா மொருங்கு விடல் வேண்டுமென்றுங் கூறினர் ' என்னும் உரைப் பகுதியை ஆராய்ந்து தெளிக.

இவ்விதம் சொல்லியவாற்ருன், அப் பஞ்சப் புலன்களால் ஒன்றையுமே செய்யக்கூடா தோ என்னும் வினு எழும். அப்படிச் செய்யக்கூடாதென்பதல்ல; செய்வனவற்றைத் தூய நன் முறையில் நிஷ்காம்ய கர்மமாய்—அவா வுறுத்துச் செய்யவேண்டுமென்பதே. உதாரணமாக: நாச்சுவையையடக்க ஒன்றை இரந்தேனும், திருடியேனும் உண்ணுது விடல், இப்படியே பிறவும், ஆகவே பஞ்சப் புலன்களைத் தீய நெறிகளிற் செல்லவிடாது அடக்கி, நன்நெறிக்கட் செலுத்தவேண்டும்.

"சென்ற விடத்தாற் செலவிடா தீதொரீஇ
நன்றின்பா லுய்ப்ப தறிவு."

இவ்வைந்தனையும் அடக்கியானுற்றலுக்கு தாரணமாக எதிர்மறை முகத்தான்,

"ஐந்தவித்தானுற்ற லகல்விசும்பு ளார்கோமா
னிந்திரனே சாலுங் கரி."

எனுந் திருக்குறள் விளங்கும். அவற்றை யடக்கியான் வழிப்பட்டதே உலகம், என் பதற்கு;

"சுவை யொளியூருேசை நாற்றமென் றைந்தின்
வகை தெரிவான் கட்டே யுலகு."

எனுந் திருக்குறளும், அதற்குப் பரிமேலழகியாரெழுதிய உரையும் பிரசித்தமானவை.

மன்னவன்றன் மகன்வேட ரிடத்தே தங்கி
வளர்ந்தவனை யறியாது மயங்கி நிற்பப்
பின்னவனு மென்மகனீ யென்றவரிற் பிரித்துப்
பெருமையொடுந் தானுக்கிப் பேணுமா போற்
துன்னிய வைம், புலவேடர் சுழலிற் பட்டுத்
துணைவனையுமறியாது துயருறுந் தொல்லுயிரை
மன்னுமருட் குருவாகி வந்தவரி னீக்கி
மலமகற்றித் தானுக்கி மலரடிக்கீழ் வைப்பன்"

எனும் சிவஞான சித்தியாரும்,

"ஐம்புலவேடரி னயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதற் குருவுமாய்த் தவத்தினி லுணர்த்தவிட்
டந்நிய மின்மையின் அரன்கழல் செலுமே"

எனும் சிவஞான போதமும்,

"மெய் வாய் கண் மூக்குச் செவியெனப் பேர்பெற்ற
ஐவாய வேட்கை யவாவினை — கைவாய்
கலங்காமற் காத்துய்க்கு மாற்றலுடையான்
விலகாமல் வீடு பெறும்"

எனும் சமண முனிவர் கூற்று ஒன்றும் தலை ஓர்க!

பண்டிதர் இ. நவரத்தினம்,
இரண்டாம் வருடம்.

# சைவாசிரிய கலாசாலை, யாழ்ப்பாணம்.



இளைப்பாறிய எங்கள் உப அதிபர் ஸ்ரீமான் பொ. கைலாசபதி B. Sc. (Lond.) அவர்கட்கு அளித்த பிரிவுபசாரத்தின் போது எடுக்கப்பட்ட படம்.

# மெய்வாக்கின் மன்னர்.

"இறைவன் பொருள்சேர் புகழ்" என்பது, பொய்யில் புலவன் பொருளுரையாகும். இறைமைக் குணங்களிலராயினுரை உடைய ரெனக் கருதி அறிவிலார் கூறுகின்ற புகழுரைகள் பொருள்சேரா வாகலின், அவை முற்றவும் உடைய இறைவன் புகழே பொருள்சேர் புகழெனப் பரிமேலழகர் விரித்துக் கூறும் உரையினுல் இறைவன் புகழ்பேசும் வாக்கே மெய் வாக்கென்பது உணரப்படும். ஒருவாத பிறவியிற் சென்றொரு நாமம் உருத திருவாதவூரடிகள் மெய்வாக்கின் மன்னராக விளங்கிய காரணத்தினுலே, 'மாணிக்க வாசகர்' என்னுந் திருநாமத்தினுல் அழைக்கப்பட்டார். அடிகளே திருவாசகத்தில் வரும் பண்டாய நான்மறையின் ஏழாவது திருப்பாட்டில், 'மாசில் மணியின் மணிவார்த்தை பேசிப் பிறப்பறுத்தேன்" என்ற அடிகளில் தமது வாக்கு இறைவனைப் பற்றிய புகழ்மொழி யாதலின் சிறந்த மாணிக்கத்தைப் போலப் பொருளொளி மிக்கதென்றும், ஆதலின் அது மணிவார்த்தை யாகுமென்றும் குறிப்பிட்டிருக்கின்ருர். அடிகள் திருவாக்கினின்று வாசக வடிவமாக வெளிப்பட்ட செய்யுள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு மாணிக்க மணியைப் போன்று பொருளொளியைக் கான்று கொண்டே இருக்கின்றது. சிற்றறிவென்ற சாம்பருள் மாணிக்கமணியைக் கைநெகிழவிட்டு அதன் ஒளியைக் காணுது மயங்கும் யான், "சிந்தனை நின்தனக்காக்கி" என்ற முதலையுடைய திருவாசகத்தின் பொருளொளியை யான் கண்டவாறு காட்டுகின்றேன். அறிஞர் பிழைபொறுப்பாராக.

"சிந்தனை நின் தனக்காக்கி நாயினேன்றன்
கண்ணிணை நின் திருப்பாதப் போதுக் காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கியைம் புலன்கள் ஆர
வந்தனையாட் கொண்டுள்ளே புகுந்த விச்சை
மால்அமுதப் பெருங்கடலே மலையே யுன்னைத்
தந்தனைசெந் தாமரைக்கா டனைய மேனித்
தனிச்சுடரே யிரண்டுமிலித் தனிய னேற்கே."

என்ற இத்திருவாசகக் கருத்து, சேக்கிழாரை அப்படியே ஆட்கொண்டு விட்டதாகலின் அவர் தாம் பாடிய திருத்தொண்டர் புராணத்துள் வரும் நேசநாயனர் புராணத்துச் செய்யுள் ஒன்றில்,

'ஆங்கவர் மனத்தின் செய்கை யரனடிப் போதுக் காக்கி
யோங்கிய வாக்கின் செய்கை யுயர்ந்தவஞ் செழுத் துக் காக்கித்
தாங்குகைத் தொழிலின் செய்கை தம்பிரா னடியார்க் காகப்
பரங்குடை யுடையுங் கீளும் பழுதில்கோ வணமு நெய்வார்"

என அழகு பொருந்தக் கூறியிருப்பது அறிந்து இன்புறத்தக்கது. வந்தனை – வலியவந்து அடியேனை அடிமை கொண்டாய், இறைவன் அடிகளது பந்தமறும் எல்லையது பார்த்தினிதிருந்தவர் ஆதலானும், அடிகள் "வானே, நிலனே, பிறவே யறிவரியான் தானே வந்தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்" எனத் திருவெம்பாவையிற் கூறியிருத்தலினுலும், பக்குவ ஆன்மாக்களை வலியவந்து ஆட்கொண்டருளுபவர் என்பது புலனுகின்றது. கருணையாகிய நீர்ப்பெருக்குக்கிடனுதல் பற்றி இறைவன் அமுதப் பெருங்கடல் எனப்பட்டான். 'பரங்கருணைத் தடங்கடல்' என்பதும் இக்கருத்துப்பற்றி இறைவனுக்காய் வரும் பெயர் அல்லவோ? "பயன்றூக்கார் செய்தவுதவி நயன்றூக்கின் நன்மை கடலிற் பெரிது" என்ற குறளில், திருவள்ளுவர் உலகில் உள்ள பரந்த பெரிய பொருள்களுள் கடலே மிகப்பெரியது என்னுங் கருத்துக் கொண்டிருத்தலுங் காண்க. இறைவன் சலிப்பறியாத் தன்மையன் ஆதலால் அத்தகு இயல்பை விளக்குதற்கு 'மலையே' எனக் கூறினர். "நிலையிற் பிரியாது அடங்கியான் தோற்றம் மலையினும் மாணப்பெரிது" என்ற குறளிலும் இக்கருத்து ஊடுருவி நிற்றல் உள்ளுதோறு உள்ளம் உருக்குவதாய் இருக்கின்றது. இறைவனுடைய திருமுகம், வாய், கை,

கால் முதலிய உறுப்புக்களுக்கெல்லாம் செந்தாமரை மலர் உவமையாகக் கூறப்படுவதாதலின், "செந்தாமரைக் காடனைய மேனி" என்றார். "எல்லியங் குவளைக் கானத் திடையிடை மலர்ந்து நின்ற அல்லியங் கமலங் கண்டாள் அண்ணல் தன் வடிவு கண்டாள்" என்று கம்பர், சீதாபிராட்டி தனது ஆத்மநாயகனுகிய ஸ்ரீ இராமச்சந்திரனது திருமேனியழகை, குவளைக் காட்டினிடையே திருமாலினது முகம், கண், வாய், நாபி, கை, கால் முதலிய அவயவங்களைப் போன்று இடையிடை மலர்ந்து நின்ற செந்தாமரை மலர்களினூடாகக் கண்டனுபவித்ததைக் காட்டுகின்ற தன்மைபோன்று மணிவாசகப் பெருமானும், தமது ஆத்ம நாதராகிய சிவ பெருமானது அவயவங்கள் மாத்திரமன்றித் திருமேனி முழுவதும் செந்தாமரையினது செம்மையைப் போன்றிலங்குவதைக் கண்டு "செந்தாமரைக் காடனைய மேனி" எனத் தமது அனுபவ உணர்வை வெளிப்படுத்திக் கூறியிருப்பதை நாம் உள்ளுந்தோறும் உலப்பிலா ஆனந்தமாய தேன் சொரிகின்றது. கடல், செப்தனிலத்தையும், மலை, குறிஞ்சி நிலத்தையும், தாமரை (மருத நிலத்திற்குரிய கருப்பொருளாதலின்) மருத நிலத்தையும், காடு, முல்லை நிலத்தையும் குறிப்பாக உணர்த்துவதினுல் இவ்வுலகத்துக் காணப்படும் நானிலவடிவமும் இறைவன் திருமேனியையே நினைவுறுத்துகின்றன என்பது தோன்ற அருளிச் செய்தார். இவ்வுலகத்து ஐவகை நிலங்கள் காணப்படவும், நான்கு நிலங்களை மட்டும் கூறியது எதனுலெனின்: பாலை யென்றொரு தனிநிலங்கிடையாது. முல்லை நிலமும் குறிஞ்சி நிலமும் தத்தமதியல்பு மாறுபாடடைவதினுல் பாலை நிலமாந்தன்மை பெறும். "முல்லையுங் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து பாலையென்பதோர் படிவங்கொள்ளும்" என்பது இதனை வலியுறுத்தும். முதல், கரு, உரி யென்னும் மூவகைப் பொருள்களுள் முதற்பொருள், நிலமும் பொழுதும் ஆகும். ஆகவே நானிலவடிவமாக அடிகளும், காலை, நண்பகல், மாலை, இரவு என்னும் நான்கு காலங்களின் வடிவமாகக் காரைக்கால் அம்மையாரும் கூறியமை ஈண்டு அனுபவிக்கத்தக்கதே. அம்மையார் தமது அற்புதத் திருவந்தாதியில்,

"காலையே போன்றிலங்கும் மேனி கடும்பகலின்
வேலையே போன்றிலங்கும் வெண்ணீறு-மாலையின்
தாங்குருவே போலுஞ் சடைக்கற்றை மற்றவர்க்கு
வீங்கிருளே போலு மிடறு"

என்று கூறுகின்றார்.

தனிச்சுடர்—ஒப்பற்ற ஒளி விளக்கு—அருவும் உருவுமாகியனுதியாய்ப் பலவாய் ஒன்றாய் பிரமமாய் நிற்கும் சோதி-ஆதியுமந்தமுமில்லா அரும் பெருஞ் சோதியும் இதுவே. சூரியன் முதலிய மண்டிலங்களுக் கெல்லாம் ஒளி உதவும் மூல ஒளியாக உள்ளான் இறைவன் என்று வேதசிவாகமங்கள் கூறுகின்றன. "காளத்தியுள்ளிருந்த ஒளியிலே" என்கின்றது சுந்தரர் தேவாரம் "ஓவற இமைக்கும் சேண் விளங்க விரொளி" என நக்கீரர் திருமுருகாற்றுப்படையிற் கூறுகின்றார். இறைவன் தூய ஞானப் பிளம்பு வடிவமாகவுள்ளான் என்பதே தோன்றச் 'சுடரே' யென்றும், அச்சுடரொளி ஒப்பிலாததும், உவமனிலிறந்ததும் ஆதலின் 'தனிச் சுடரே' என்றும் அருளிச் செய்தார். இரண்டு மிலி என்பதில் உள்ள இரண்டு நல்வினை, தீவினை யென்ற இரண்டென்றும், வேண்டுதல், வேண்டாமையென்ற இரண்டென்றுங் கொள்ளின் இவை யிரண்டும் அற்றாலே வீடுபேறடையும் தகுதியுடையார்க்கே பெறப்படுமாகலின், அடிகள் தம்மைத்தாமே வீடுபேறடையும் தகுதியுடையவர் எனநினைத்தவர் என்னும் பிழையான கருத்துப் போதரும். அடிகள் வீடுபேறடையும் தகுதிபெற்றவராயினும் பல விடங்களில் "நாய்க்குத் தவிசிட்டு" என்பது போன்ற தொடர்களில் தாம் அத்தகுதி பெறுதவரெனத் தம்மையிழித்துக் கூறுதல் காணப்படக்கூடிய தொன்ருகலின். அக்கருத்துப் பொருத்தமுடையதன்றென்க. இதனுல் இரண்டு மிலி என்பதற்கு நூலறிவும், அனுபவ உணர்வும் இல்லாதவன் எனக்கோடலே பொருத்தமுடைத்து. இதற்கு அடிகள் திருவேசறவின்கண் "கற்றறியேன் கலைஞானங் கசிந்துருகே னுயிடினும்" என்று நூலறிவும், அனுபவ உணர்வும் இல்லாதவன் எனத் தம்மைத் தாழ்த்திக் கூறியிருப்பது சான்

ருகும். அடிகள் தமது ஈரெட்டாண்டெல்லையி னுள் ஒக்கலையும் பிறக்கலையுமொழித்திடுமாகமக் கலையும், எக்கலையும் கற்றுணர்ந்தவராயினும் நூலறிவற்றவன் என்றும், பதினறு பிராய முதல் தெய்வீகமடைந்த முப்பத்திரண்டாவது பிராயம் வரையுள்ள பதினருண்டுகளிலும் அநுபூதியிற்றிளைத்தல் என்றும் அநுபவ உணர்வைப் பெற்றவராயினும் அநுபவ உணர் வற்றவன் என்றும் உலகியலை நோக்கிக் கூறி ஞர் என்ப.

செந்திரு மருவுந் தொல்லைத் தில்லை நன் னகரிலுள்ளாரெல்லோரும் இத்தன்மையவான பொருளொளி மிக்க திருவாசகத் திருப்பாடலைக் கேட்டு கிளர்புளகங் குறுவேர்வு காட்டிட ஒண்கண்ணீருங் கசிந்துருகு சிந்தையுமாய் ''ஈட்டிய மெய்த் தவமுடையோன் இயம்பிய இத்தமிழன்றி வீட்டுநெறிக் கினிச் சிவநூல் வேறுளதோ?'' என்ருர்கள் என்று கடவுண் மாமுனிவரே கூறியிருக்கின்றமையின் இதனி லும் சிறந்த பேரின்பநூல் பிறிதின்றென்பது தெளிவாகின்றது. இத்தகைய பேரின்ப நூலைத் திருவாய் மலர்ந்தருளியவர் மெய்வாக்கின் மன் னரன்ருே? ஆதலின் அவர் திருவாதவூரரென்ற இயற்பெயரால் அழைக்கப்படாது மணிவாசகப் பெருமான் என்றும் மாணிக்கவாசக சுவாமிகள் என்றும் எல்லோராலும் வணங்கப்படுகின்ருர்.

**வை. இராமகிருஷ்ணஐயர்,**
இரண்டாம் வருடம்.

## சிந்தனையாளன்

சிந்தனையாளனின் உடலில் நல்ல வளர்ச்சியை எதிர்பார்க்க் முடியாது; ஆனல். அவனுடைய உள்ளமோ, ஒரு மாபெரும் கடலைப் போல் பரந்து விரிந்து கிடக்கும். அந்தக் கடல், விலை மதிப்பில்லா முத் துக்களின் பிறப்பிடம்: அந்தக் கடலில் அலைகள் குமுறி எழுவதில்லை; அந்தக் கடல் அமைதி தவழும் இடம். சாமானியர்களுக்குப் புலப் படாத பேருண்மைகளின் உற்பத்தி ஸ்தானம். அந்தக் கடலில் திமிங்கிலம் போன்ற கொடிய உயிரினங்கள் இலலை; ஆனல், நேர்த்தி யான மீன்களோ ஏராளம். பேரறிஞர்கள் எழுதிய புத்தகங்கள்தான், அந்த மீன்கள்!

— ''திங்கள்''

# கற்பகக் கனி.

கனிகள் பலவற்றைக் காண்கின்றோம். எடுத்து வாயில் போடுகின்றோம். வயிற்றுள் தள்ளுகின்றோம். எல்லாக்கனிகளைப் போலவும் வாயிற் போட்டு வயிற்றுள் தள்ளும் ஒரு கனி இருப்பதாகத் தெரியவில்லை நமது மூதாதையர், அருளாளர்கள் அகக்கண்ணால் கண்டு அனுபவித்து நமக்குச் சொல்லிவைத்த பொருள்களுள் ஒன்றுதான் இந்த ஒப்பற்ற கனி. கற்பகக் கனி. கற்பகம் என்பதும் அமிர்தம் என்பதுபோல ஒன்றுதான். மிக உயர்ந்த பண்டத்துக்கு உவமை சொல்லுவதற்கு அமிர்தம் ஒரு வாய்ப்பாடாக வழங்கி வருகிறது கற்பகம் என்பது இந்திர லோகத்தில் இருப்பதாகவும் கேட்டதை எல்லாம் கொடுக்கும் என்றும் அறிகின்றோம். சிறந்த கொடையாளரையெல்லாம் காமதேனுவே! கற்பக தருவே! என்று கூறும் உவமானம் அதன் பெருமையை எமக்கு உணர்த்துகின்ற தன்றோ!

கற்பகம் ஒரு விருட்சம் ஆயினும் அது வெறும் மலர், காய், கனிகளை மாத்திரம் தந்து நிற்கும் ஒன்றல்ல; அது எல்லாப் பொருள்களையும் தரும். அத்துடன் அதன் கனி மற்ற மரங்களின் கனிகளைப் போலவா இருக்கும். மிகவும் இனிமையாகவல்லவா இருக்கும். உண்டவர் உடம்பை உரம் செய்வதோடு பொன்னிறமாக்கக்கூடியதாகவும், அன்னருக்கு ஞானசக்தியைக் கொடுக்கக்கூடியதாகவும் அல்லவா இருக்கும். கேட்டதை எல்லாம் கொடுக்கக் கூடியது கற்பக விருட்சம். ஆதலால் மரங்களுள் சிறந்ததும் அது ஒன்றுதானே. எனவே கனிகளிற் சிறந்தது கற்பகக் கனி என்று கூறுவதில் என்ன ஐயம்.

கனிகளுக்குள்ளே சிறந்ததான இந்தக் கற்பகக் கனியைத்தானே இனியனாய நம் இறைவனுக்கு உவமையாகக் கூறவேண்டும். "உயர்ந்ததன் மேற்றே உள்ளுங்காலை" என்பது தொல்காப்பியம். இறைவன் நம்முள் உயிருக்குயிராக நிற்கின்றான். நமக்கு இனிமை ஊட்டுகின்றான், நம்மை உயர்ந்த நிலையை அடையச் செய்யவேண்டும் என்ற கருத்துடன் இருக்கின்றான். இப்படிப்பட்ட கருணாமூர்த்திக்கு உவமை சொல்லும்பொழுது, கேவலம் தின்று துப்புகின்ற கனியையா உவமை சொல்லுவது. இதனை உணர்ந்தன்றோ சேந்தனார் என்னும் அடியாரும் திருவீழிமிழலையில் இருக்கும் சிவபெருமானைக் கற்பகக் கனி என்றே பாடியுள்ளார்.

> கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
> கரையிலாக் கருணைமா கடலை
> மற்றவர் அறியா மாணிக்க மலையை
> மதிப்பவர் மன மணி விளக்கைச்
> செற்றவர் புரங்கள் செற்றஎம் சிவனைத்
> திருவீழி மிழலை வீற்றிருந்த
> கொற்றவன் தன்னைக் கண்டு கண்டுள்ளங்
> குளிர என் கண் குளிர்ந்தனவே"

என்பது அவர் திருவாய் மொழி.

சரி, நாமும் இந்தக் கனியைப்பற்றிச் சிறிது நுணுகி ஆராயத்தான் வேண்டும், இந்தக் கனியின் சுவையை அறிந்தவர் யாராவது இருக்கிறார்களா? ஆம் இருக்கின்றார்கள். இந்தக் கனியை வாயினால் தின்ன முடியாது சாதாரண மரங்களில் உள்ள கனியை அல்லவா பறித்துக் கடித்து உண்ணுவது? இந்தக் கனியை அறிவினால் உண்ணவேண்டும். கற்கக் கற்க மனத்தின்கண்ணுள்ள கசடுகள் நீங்கிப் பரிசுத்தமடைதல் தான் அறிவு. இப்படியாக அறிவைப் பெருக்கிக் கொண்ட அன்பர்கள் உண்ணும் கனிதான் இது. அதுதான் இறைவன் என்கின்ற கனி.

இறைவனது திருவடிகளை இடையறா அன்புடன் வணங்கி வருபவர்கள் அந்தக் கற்பகக் கனியாய இறைவனின் அனுபவத்தைப் பெறுவார்கள். அவர்கள் இறைவன் மாட்டு வைத்திருக்கும் காதல் தடுப்பதற்கரியது. அதனாலன்றோ இறைவனாகிய அந்தக் கனியை அவர்கள் கடித்து, மென்று உண்ணக்கூடப் பொறுமையில்லாமல் அப்படியே விழுங்கிவிடுகிறார்கள். இதையன்றோ சேந்தனாரும் தான் பாடிய பாடலை "கற்றவர் விழுங்கும் கற்பகக்

கனியை'' என்று அடியெடுத்துப் பாடினுர். அப்படிப்பட்ட கற்பகக் கனியாகிய இறைவனின் மகிமை இருந்தபடி என்னே!

எமக்கெல்லாம் இறைவன் கனிபோலத் தோன்றவில்லையே. அவர்களுக்கு எப்படி அவன் கனியாகத் தோன்றினன்? எப்படிப்பட்ட நிலை எமக்கு வந்தடைந்தால் அவன் கனியாகத் தோன்றுவான்? ஆமாம்,

"ஐந்துபேரறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையேயாகக் குணமொரு மூன்றும்
திருந்து சாத்து விகமேயாக
இந்து வாழ் சடையான் ஆடும் ஆனந்த
எல்லையில் தனிப் பெருங் கூத்தின்
வந்த பேரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்."

ஆகிய நிலையை நாம் எய்தினல் எமக்கும் அவன் கனியாகவே காட்சி அளிப்பான், இனிப்பான். இந்த நிலை எய்தினல், தான் கொடுக்கும் கனி இனிக்கும் என்கிறுர் நாவரசரும்.

"மனிதர்காள் இங்கேவம் ஒன்று சொல்வேன்
கனிதந்தால் கனி உண்ணவும் வல்லீரே
புனிதன் பொற்கழல் ஈசன் எனும் கனி
இனிது சாலவும் ஏசற்றவர்கட்கே"

இதுதான் அவர் எமக்குக் கூறும் நல்லுபதேசம். "ஈசன் எனும் கனி இனிது சாலவும் ஏசற்றவர்கட்கே" என்று அவர் கூறுமாற்றல், மாசு, மறு இல்லாத தூய உள்ளம் படைத்தவர்க்குத்தான் இறைவன் கனி இனிக்கும் என்பது தெளிவாகின்றதன்றே!

இறைவன் சேந்தனுருக்கு மாத்திரம் கனியாகத் தோன்றவில்லை. நமது சமய குரவர் நால்வரில் ஒருவராகிய நாவுக்கரசு சுவாமிகளும் அவரைக் கனியாகக் கண்டார். பூவாகி, பிஞ்சாகி, புளியான காயாகி, அதன்பின் அல்லவா நாலூறும் கனி காட்சி தருகின்றது. காயாக இருந்தால் கல்லுப் போலக்கடினமாக அல்லவா இருக்கும் கனியானது கனிந்திருக்கும். இந்தக் கனியை உண்டால் மனிதனுக்கு மலம் அறும். இந்தக் கனியை உணரவேண்டின் எமது உள்ளமும் கடினமொழிந்து கனிய வேண்டும். இதன் உண்மை "காய் கனியாக வேண்டும்" என்ற கூற்றினல் இனிது விளங்கும்.

எமது திரிகரணங்களும் கனிந்தால் தான் எமது உள்ளமும் மாயையினின்றும் விடுதலையடையும். அப்போதுதான் இறைவனைக் கனியாகக் காணமுடியும்.

"மெய் தான் அரும்பி விதிர் விதிர்த்துன்
விரையார் கழற் கென்
கை தான் தலை வைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பி உள்ளம்
பொய் தான் தவிர்ந்து......" நிற்கும் நிலையில்

தான் எமது உள்ளம் கனிந்து நிற்கும். அப்போதுதான் கற்பகக் கனியாக இறைவன் காட்சி தருவான். இறைவன் உலகுக்கொருவன் ஆரா அமுது; இன்பவடிவினன். இத்தகைய குறைவிலா நிறைவை, கோதிலா அமுதாய கற்பகக் கனியாம் நம் இறைவனின் மகிமையை உணர்ந்து அவனை நாமும் கனியாகவே கண்டு மகிழ்வோமாக; மற்றையோருக்கும் உணர்த்துவோமாக.

சி. யோகம்மா,
முதலாம் வருடம்.

## நாட்டின் ஒருமைப்பாடு.

ஒரு நாட்டில் வேறுபட்ட இயல்புடைய மக்கள் வசிக்கிருர்கள். இவர்கள் அனைவரையும் ஒருமைப்படுத்துவதற்குக் கல்விமுறைதான் ஏற்ற சாதனம் இதை விடுத்துச் சட்டத்தின் மூலமோ பழக்கவழக்கங்களின் மூலமோ ஒருமைப் பாட்டைச் சாதித்துவிடலாமென்று நினைப்பது அறிவீனம்.

— அரிஸ்டாடில்.

# "தலைப்பட்டாள் நங்கை தலைவன்றானே"

— இணுவில் ரமணி —

அவர்...............யாரடி!

அவளது அந்த வார்த்தைகளில் அன்பு குழைந்து குழைந்து மிளிர்ந்தது. நாணம் நெளிந்து நெளிந்து தவழ்ந்தது. ஆவல் பொங்கிப் பொங்கிப் பெருகியது.

அவளோ பருவம் நிறைந்த இளம்பாவை. பெண்மையே இவ்வுருக் கொண்டதுவோ, தெய்வப் பேரழகின் வடிவோ, இந்த மண்மகள் செய்த நல் மாதவமே இங்கு மங்கையாய் வந்ததுவோ என ஐயுறும்படி அமைந்திருந்தது அவள் கட்டழகு. வழக்கம் போல் தனது சகியருடன் அன்றும் அவள் பூம்பந்தாடினாள். ஆனால் ஆட்டத்தில் அவளுக்கு சுவாரஸ்யம் ஏற்படவில்லை. அன்று அவள் தோழியருடன் அம்மானை ஆடும்போது நடந்த - என்றுமே மறந்திருக்க முடியாத அந்தச் சம்பவத்திலேயே அவள் மனம் லயித்திருந்தது. ஆகவே பூம்பந்தாடலை நிறுத்திவிட்டுத் தோழியிடம் "தோழீ! விடையிலேறி இந்த வீதிவலம் வந்தாரே...! அந்த வித்தகர் யாரடி?" என்றாள்.

அவள் வார்த்தைகளில் பேராவல் ததும்பியது. அவளது முகம் செக்கச் செவேலென்று சிவந்திருந்தது. செவ்விதழ்கள் மலர்ந்து குறுநகை பூத்தன. அவளது எழிலோங்கும் கோமள வதனத்தில், உணர்ச்சி மேலீட்டினால் சிறிது வியர்வை அரும்பியிருந்தது. கண்களோ கருவண்டுகள் போல் ஒரு நிலையில்லாமல் சுழன்று கொண்டிருந்தன. இத்தனையும் புத்தம் புதியதொரு செந்தாமரை மலரை நினைவுபடுத்தியது அந்தத் தோழிக்கு.

தோழியோ வெகு சாமர்த்தியசாலி. தலைவியின் உளப்பான்மையை நன்கு அறிந்திருந்தாளாகையால் அவள் ஒன்றுமே பேசவில்லை.

தலைவி மேலும் தொடர்ந்தாள்.

"சடையில் கங்கையையும், பிறைச்சந்திரனையும் ஏந்திப் பல பூதங்கள் புடைசூழப் புலிமீதில் புலியாடை உடை உடுத்து இந்த வீதிவலம் வந்தாரே....! அந்த... சுந்தர புருஷர்...! அவர்...... யாரடி?".

தோழியோ மீண்டும் மௌனமானாள். தோழியின் மௌனத்தைக் கவனிக்காமலே தலைவி மேலும் சொல்லுகின்றாள்.

"தோழீ! அவர் செய்ததை என்ன சொல்வேன்".

தலைவியின் குரல் தழதழத்தது. அதில் ஒரு தனி இனிமையும் கனிவும் கலந்திருந்தன.

"மெல்ல என்னையே பார்த்தார். மெது வாய் இதழ் மலர்ந்தார். கள்ளத்தனமாய் மலர்க் கண்களால் பேசினாரடி. அதிகம் வளர்த்துவானேன். என் உள்ளம் கவர்ந்தாரடி இந்த உலகை மறந்தேனடி. தோழீ! கள்ளமில்லாத இன்பக் காதல் இது தானேடி?"

கொழு கொம்பற்ற பூங்கொடி போல் நாணிக் கோணித் தரையை நோக்கி நின்ற தலைவியின் மனம் தலைவன்பால் சென்று விட்டது அவளது வலதுகாற் பெருவிரல் தரையில் ஏதோ ஓவியம் வரைந்து கொண்டிருந்தது. தோழியோ இனி மௌனம் தகாது என்று அறிந்து கொண்டாள். எனவே தலைவியின் முகத்தைக் கூர்ந்து பார்த்து "தேவி!" என்றாள்.

இந்த வார்த்தை தலைவிக்குத் தூக்கிக் குலுக்கிப் போட்டது. தன்னை மறந்து தலைவனிடம் சென்று விட்ட உள்ளம், இந்த உலகத்திற்கு வர சில விநாடிகள் சென்றுதான் விட்டன. தலைவி நாணிச் சிவந்த முகத்தைத் தோழிபக்கம் திருப்பினாள்.

தோழி தொடர்ந்தாள்.

"தேவி! உன் உள்ளம் கவர் கள்வனுகிய அவரை நான் நன்கு அறிவேனம்மா. அவர் செவியில் தோடு அணிந்திருப்பார். விடையிலேறிப் பவனி வருவார். தூவெண் மதியும் சூடியிருப்பார் காடுடைய சுடலைப் பொடியை அள்ளி அள்ளிப் பூசியிருப்பார் அவர் தாமே தேவி! உன் உள்ளம் கவர் கள்வன்?"

"ஆமாம் தோழீ. அவரே தானடி. மானும், மழுவும், இளம் மதியும், டமருகமும், வானும் நடுங்கும் பாம்பும், வளரும் அனலுமேந்தித் தானும் கங்கையைத் தூக்கித் தஞ்சம் என்றவர்க்கருள் ஈனும் கரங்கள் பற்றி இருடிகளும் மறையவரும் இருமருங்கில் புடைசூழ வீதி வலம் வந்தாரே அந்த யௌவன புருஷர்! அவரே தானடி தோழி. அவரே தான். தோழீ!! அவரது திருநாமம் என்னவோ?"

தனது உள்ளம் கவர்ந்த கள்வரின் திருநாமத்தை அறியத் தலைவிக்குத் தான் எவ்வளவு ஆனந்தம்! எவ்வளவு ஆவல்! பேரானந்தமும் பேராவலும் பொங்கி எழ, நாணத்தையும் ஒருவாறு அடக்கிக் கொண்டு தோழிபால், "ஏரார் பசுங்கிளியே! என்றன் பெருந்துறைக்கோன் சீரார் திருநாமம் தேர்ந்துரையாய்" என்ருள் தலைவி.

அவ் வார்த்தைகள் அவளையுமறியாமல், இதயத்துள் இருந்து வெளி வந்தன.

"தேவி! எல்லாவற்றிற்கும் முன்னம் உனது உள்ளம் கவர்ந்த கள்வனுகிய அவனுடைய நாமம் கேட்கின்ருயா? சொல்லுகிறேனம்மா. தஞ்சம் என்று கெஞ்சும் அன்பர் தவத்தினுல் தரணி மீதில் அஞ்சல் என்று அபயமீந்து அம்பு, அரவு, கங்கை செஞ்சடையதனிலேந்திய அந்த நஞ்சணி கண்டனின் திருநாமம் கபாலி அம்மா கபாலி."

'கபாலி" என்ற திருநாமத்தைக் கேட்ட மாத்திரமே தலைவி தன்னிலை அழிந்தாள். அந்த நாமத்தின் இனிமையில் சொக்கிப் போய் நின்று விட்டாள். சில விநாடிகள் கழிந்தன. தலைவியின் வாயினின்றும் சில வார்த்தைகள் வெளி வருகின்றன.

"தோழீ! தேமதுர மென்பேனே? தெள்ளமுத மென்பேனே? நாம மகிமை என்றன் நாவிலினிக்குதடி. ஆஹா! தோழீ! நாமம் இவ்வண்ணம் ஆனுல், மூர்த்தி எவ் வண்ணம் இருப்பாரடி?"

"தேவீ! மூர்த்தி அவன் இருக்கும் வண்ணம் கேட்கிருயா? புரிநூலின் மார்பழகும் புருவம் அதன் அழகும் திரிசூலம் ஏந்திவரும் தீரர் அவர் அழகும் கரியுரி போர்த்து இளம் காளை மேலேறிவந்து அரிய நற்காட்சி தந்த அழகும் நீயே பார்த்தாய். நீயே நுகர்ந்தாய். உன் மனத்தையும் பறி கொடுத்தாய். சொக்கி மயங்கினுய். இவ் வண்ணம் ஆன நீ அவர் எவ் வண்ணம் இருப்பாரென்று என்னைக் கேட்கின்ருய்? நல்லது! நல்லது!!... வேடிக்கையா செய்கின்ருய் தேவீ? அவர் எவ்வண்ணம் இருப்பாரென்று நீ கேட்பாயாகில், நீ கண்ட அவ் வண்ணமேதான் இருப்பாரென்று சொல்லுவேனம்மா. நான் சொல்ல என்ன இருக்கிறது. அவர் நெற்றியில் நீறணிவார். நெடுங்கரித் தோலுரிவைப் சுற்றியுடுத்திருப்பார். சூலமும் ஏந்திடுவார். இன்னும் சொல்லவா தேவீ?"

"அருமைத் தோழீ! அது இருக்க அவருடைய ஆரூர் எதுவென்று சொல்வாயா?"

"முன்னம் அவனுடைய நாமம் கேட்டாய். மூர்த்தி அவனிருக்கும்வண்ணம் கேட்டாய். பின்னை அவனுடைய ஆரூர் கேட்கிருய். அவன் நற்றிரு மயிலையின் நாதனம்மா. அவன் வாழும் ஆரூர் திருமயிலை என்ப் புகழ் கொண்ட மயிலாபுரி."

"அழகான பெயர். திருமயிலை மயிலாபுரி. திருமயிலைக் கபாலி. ஆஹா அந்த நாமம் என்னை எங்கோ ஒரு இன்ப உலகத்திற்கு இழுத்துச் செல்லுகிறதடி. கபாலி! அவரைப் பிரிய மாட்டேனடி. அவரைப் பிரிந்து ஒரு கணம் தரியேன். அவரும் என்னைப் பிரியார்.

ஒரு கணமும் பிரியார். திருமயிலைக் கபாலி வருவாரோ சொல்லடி. என்னை யணைத்தே மருவாரோ சொல்லடி." "தேவீ! தேவீ! என்னம்மா விபரீதமாக இருக்கிறதே! ஐயையோ! பைத்தியமா? இது என்னம்மா இது?"

"ஆமாம் தோழீ! பைத்தியமேதான். பித்துப் பிடித்திருக்கிறதடியம்மா பித்து. கபாலிப் பித்து. அவன் பித்தன். நான் பிச்சி. அவனது பிச்சி அவனுக்கே பிச்சியாகிவிட்டேனடி."

"முன்னம் அவனுடைய நாமம் கேட்டாய். மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாய் பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாய். "பெயர்த்தும் அவனுக்கே பிச்சியானாய்" பெற்றுவளர்த்து உன்னை ஆளாக்கி வைத்த உன் அன்னையும் அத்தனும் நீ பிச்சியான நிலையைக் கண்டால் என்ன நினைப்பார்கள்? பெற்ற மனம் வருந்தச் செய்யாதேயம்மா."

"என்னைச் சோதிக்காதே தோழீ! எனது மாதா, பிதா, தெய்வம் யாவும் என் அன்பரான கபாலி தானடி. என்று நான் அவரைக்கண்டு என் உள்ளமும் பறிகொடுத்து அவருக்கு அடிமையானேனோ, அன்றே என் அன்னையையும் அத்தனையும் நீத்து விட்டேன். அம்மட்டோ! அகலிடத்தார் ஆசாரங்கள் அத்தனையும் கைவிட்டு விட்டேனடி. திரு மயிலைக் கபாலியே என் அன்னை. அவனே என் அத்தன். அவனே என் தெய்வம். அவனே என் ஆத்மநாயகன்."

'அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாய். அகன்றாய் அகலிடத்தின் ஆசாரத்தை தேவி! இவ்வளவு வைராக்கியம் உனக்கு எங்கிருந்தம்மா வந்தது? பெற்ற மாதாவையும் பிதாவையும் மறந்து கபாலி ஒருவனையே நினைந்து நினைந்து உருகுகின்றாயே."

"அருமைத் தோழீ! நான் சொல்வதைக் கேள்! என்னையே நான் மறந்து விட்டேனடி. உறக்கம் மறந்தேனடி. உணவும் வெறுத்தேனடி. கறக்கும் பசும் பாலில் காணேனடி சுவையை. சிறக்கும் மயிலை வாழும் செல்வரான கபாலியன்பரை உள்ளம் எண்ணும் போதெல்லாம் நான் என்னையே மறந்து விடுகிறேனடி. பார்க்குமிடமெல்லாம் என் அன்பரையே பார்க்கிறேன். அவர் என் கண்ணில் உள்ளாரடி. என் கருத்தில் உள்ளாரடி. அவருக்காகவே நான் வாழுகின்றேன். அவருக்காகவே நான் அலங்கரிக்கின்றேன். அவரைத்தானடி அலங்கரிக்கின்றேன். நானே அவர், அவரே நான். அதோ என் முன்னிருக்கும் நிலைக் கண்ணாடியைப் பார். அவர் பிரதிபிம்பமே தோற்றுகின்றது. நான் இறந்தேனடி. என் நாமம் கெட்டு விட்டேனடி. நான் கெட்டவாபாடித் தெள்ளேணம் கொட்டிப் பாடாயோ தோழீ. இனி என் நாமம் அவர் நாமம். அவரே நான். நானே அவர். நான் என்னை மறந்து அவராகி விட்டேன். என் நாமம் கெட்டேன். வேறு என்னடி உனக்குச் சொல்ல வேண்டியிருக்கிறது. என் தலைவனாகிய கபாலியின் பாதாரவிந்தங்களே என் வாழ்வு. அவனது கஞ்ச மலர்த் தாள்களே சரணம் என்று தலைப்படுகிறாளடி இந்த நங்கை"

எங்கள் தலைவி, "தன்னை மறந்தாள். தன் நாமம் கெட்டாள். தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே"

"ஆமாம் தோழீ! பாடு, தித்திக்குந் தேன் தமிழில் பாடு. இதோ நான் நாதன் தாளைத்தலைப் படுகின்றேன்."

"தாடலைப் பட்டு விட்டேனென்று பாடு. சீவன் சிவமாயவாறு பாடு."

தோழி பாடுகிறாள்:

"முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சியானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தை
தன்னைமறந்தாள் தன் நாமம் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன்றாளே"



1957-ம் ஆண்டு வடமாகாண ஆசிரிய கலாசாலைகளுக்கிடையே நிகழ்ந்த கரபந் தாட்டப் போட்டியில் முதலிடம்பெற்ற எங்கள் கலாசாலை கரபந்தாட்டக் கோஷ்டியினர்.



1957-ம்ஆண்டு வடமாகாண ஆசிரிய கலாசாலைகளுக்கிடையே நிகழ்ந்த வலைப்பந்தாட் டப் போட்டியில் முதலிடம்பெற்ற எங்கள் கலாசாலை வலைப் பந்தாட்டக் கோஷ்டியினர்.

# அசோகவனத்தில் சீதை.

பஞ்சவடியிலிருந்து வஞ்சகமாகக் கொண்டு வரப்பட்ட சீதை, அசோக வனத்திற் சிறையிடப்பட்டாள். பொன்னையும், பொருளையுங் காட்டி., நயவுரை கூறி, நங்கையை நலிந்து சீதையின் சிந்தையைத் திருப்ப முயற்சித்தான் இராவணன். அவன் கருத்துக்கு அவள் இசையாது விடவே, அவளுக்குச் சிந்திக்க அவகாசமளித்து,'அவளின் மனத்தை மாற்ற இராக்கதப் பெண்களை நியமித்தான் இராவணன். அசோக வனத்திலே வலிய வாளரக்கியர் நடுவே சிறையிடப்பட்டாள் சீதை. இரக்கமற்ற சிந்தையுடைய இராக்கதிகளாற் காக்கப்படும் கற்பரசி, கற்பாறையில் முளைத்து மழைத்துளி பெறாது வளர வழியின்றி வாடுகின்ற சஞ்சீவி மருந்து போல வாடுகிறாள்; துயிலைத்துறந்து இமைகூட இமைத்தலின்றி இருக்கின்றாள்: புலிக் கூட்டத்துட் புகுந்து கொண்ட மான்போல மயங்குகின்றாள்; மானமிழந்து வாழ்வதிலும் மாண்டு போவது நன்றென்று எண்ணுகின்றாள்; உயிர் விடவும் ஊழ்விடாதமை கண்டு கதறுகின்றாள்; இராமன் என்னை சிறை நீக்க வராவிட்டாலும் தன் குலத்துக்கு ஏற்படும் வசையை நீக்க வருவானென்று எண்ணி எத்திசையும் நோக்குகின்றாள்.

நீரிருந்தும் நீராடும் நினைவின்றி, உணவிருந்தும் உண்ணாது, உடுத்தியிருந்த உடையன்றி வேறுடை அணியாது, மாசடைந்த மணியும், வெயிலவன் முன்வைத்த விளக்கும், புகையுண்ட ஓவியமும் போலக் காட்சி தருகின்றாள் சீதை. கடவுளைக் காணக் கடுந்தவம் புரியும் அருந்தவர் போல அசைவின்றி இருந்த இடத்திலேயே இருக்கின்றாள். அவள் இருந்த இடத்திலே கறையான் புற்றெடுக்கின்றது. சிறை இருந்தும் வேறு பெருந் தெய்வந் தொழாப் பத்தினிப் பெண்ணாகிய சீதையின் சிந்தையிலே இராம நாமம் இசைத்துக் கொண்டே இருக்கின்றது. இராச போகத்தைத் துறந்த இராமன், காட்டிலே இலை குழை உண்டு உயிர் வாழ்வான் என்று இரங்குகிறாள் சீதை. அந்தச் சம்பவம் அவளது உடலையும், உள்ளத்தையும் வாட்டுகின்றது. ஏன்? உயிரையுமே வாட்டுகின்றது. 'அடகையும் ஆர் கொடுக்க உண்டு உயிர் வாழ்வான்' என்று இரங்குகின்றாள் சீதை. இராமனுக்கு உணவு கிடைக்குமா என்று எண்ணுகின்ற அதே நேரத்திலேகூட விருந்தினரை உபசரிக்க இராமன் என்னசெய்வான் என்ற எண்ணம் உதிக்கின்றது உத்தமியின் உள்ளத்திலே. வறுமையிலும் செம்மையிலும், இன்பத்திலும் துன்பத்திலும், கடமை செய்வதே பணியெனக் கொண்ட பழந்தமிழர் பண்பாடு செல் விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருக்கும் பண்பாடு. பளிங்கு போற் பிரதிபலிக்கின்றது அவ்வுத்தமியின் தூய சிந்தையிலே. பணி புரிதலே கடனெனக் கொண்ட கற்பரசியின் கருத்தைத்தான்,

"அருந்து மெல்லட காரிட வருந்துமென் றழுங்கும்
விருந்து கண்டபோ தென்னுறுமோ வென்று விம்மும்
மருந்து முண்டுகொல் யான்கொண்ட நோய்க்கென்று மயங்கும்
இருந்த மானிலஞ் செல்லரித் திடவுமாண் டெழாதாள்"

என்ற கவிதை மூலம் காட்டுகின்றார் கம்பர்

ஒருவனது வாழ்விலே நாம் பெறுகின்ற சத்தியம், நீதி, நேர்மை என்பன பிறரை எப்படியோ வசப்படுத்துகின்றன. அப்படியான சம்பவங்கள் பிறரது உள்ளத்தையும், உயிரையும் ஒருங்கே கவருகின்றன. இராமனது வாழ்க்கை நெறிகண்ட அயோத்தி மக்கள், 'உண்ணு நீரினும் உயிரினும் அவனையே உவப்பர்" என்றால் அவனை, அவனது மனைவி கடவுளெனக் கருதுவதில் வியப்பென்ன? இராமனை நினைக்குந் தோறும், நினைக்குந் தோறும் தனது உள்ளத்தைக் கவர்ந்த இராமனது உத்தம குணங்கள் அவள் நினைவுக்கு வருகின்றன,

"இராமா! நீ ஆட்சியை ஏற்றுக் கொள்" என்று தசரதன் கூறிய போது இராமனது முகம் மலர்ந்ததா? "இராமா! நீ நாட்டைத் துறந்து காட்டுக் கேகு" என்று கைகேயி கூறிய போது இராமனது முகம் மலர்ந்ததா? இல்லை. இவ்விரு சந்தர்ப்பங்களிலும் அவனது முகம் ஒரே விதமான பொலிவோடுதான் காட்சி தந்தது.

இன்பத்தையும் துன்பத்தையும் சமமெனப் பாவிக்கும் இணையிலா வீரப் பண்பாடு சீதையின் மனக் கண்முன் காட்சியளிக்கின்றது அந்த அருங் குணத்தை நினைந்து நினைந்து வருந்துகின்றாள் சீதை.

"மெய்த்தி ருப்பத மேவென்ற போதினும்
இத்தி ருத்துறந் தேகென்ற போதினும்
சித்தி ரத்தி லமர்ந்த செந் தாமரை
ஒத்தி ருக்கு முகத்தினை யுன்னுவான்" என்பது கம்பர் கவி.

இராமன் ஒரு வீரன். இருந்தும் அவன் ஏழை எளியவர்களிடமும் அன்பாக நடக்கிறான். ஆண்டவன், அடிமையென்ற பாகுபாடின்றி எல்லோரையும் தனது சகோதரராக மதிக்கிறான். நல்லரசர்களிடமிருக்க வேண்டிய சமதர்மப் பண்பாடு, தன் தலைவனிடம் இருக்கக் கண்டு பெருமைப் படுகிறாள் சீதை. இராமன் குகனோடு நட்புப் பூண்ட போது நடந்த சம்பவத்தை நினைந்து நலிகின்றாள்; எண்ணி ஏங்குகின்றாள்,

"ஆழி நீர்க்கங்கை யம்பி கடாவிய
ஏழை வேடனுக் கெம்பி நின்றம்பி நீர்
தோழன் மங்கை கொழுந்தி யெனச் சொன்ன
வாழி நண்பினை யுன்னி மயங்குவாள்"

இப்படியாகச் சீதை வருந்தும் போது இரவு வருகின்றது. அரக்கியர் பலரும் துயில்கின்றனர். அவர்களுள் ஒருத்தி – அவள் தூய சிந்தைத் தையலாள் அவளுக்குச் சீதை, தான் கண்ட கனவைப் பற்றிக் கூறுகின்றாள். அக் கனவினால் விளைவது நன்மை யென்று கூறிய திரிசடை, தான் கண்ட கனவையும் சீதைக்குக் கூறுகின்றாள். இப்போதுதான் அநுமன் அசோக வனத்தை யடைகின்றான். திடீரென்று அரக்கியர் துயிலுணருகின்றார்கள். ஆயுதமேந்திக் கொண்டு ஆரவாரிக்கின்றார்கள். இதை உற்று நோக்கிய அநுமன் அவர்களிடையே சீதையைக் காணுகின்றான். அவளுடைய தோற்றம் அவள் மென்மையின் திண்மையைக் காத்துக் கொண்டிருந்த பொருளெனக் காட்டுகின்றது.

அது கண்ட அநுமன் 'கற்புங் காவலும் ஏசுண்டதில்லையாலறத்துக் கீறுண்டோ' என்று எண்ணுகிறான் சீதையினது கற்பின் பெருமை அநுமனது உள்ளத்திலே - சிந்தனைச் சுழலிலே எழும்புகின்றது. உயர் குலத்தில் உதித்து இல்லறமாகிய நல்லறப் பண்புடைய பத்தினிப் பெண்களின் மனவுறுதியாகிய தவத்துக்கு, உண்ணுவ பருகுவ நீக்கி நீரினும்—நெருப்பினும் நின்று தவஞ் செய்யும் தவசிகளின் தவந்தானும் ஈடாகுமா என்று எண்ணுகின்றான்.

இச்சந்தர்ப்பத்தில் இராவணன் சீதையின் முன் வருகின்றான். அதனைக் கண்ட சீதை அஞ்சி அலறுகின்றாள். இராவணனோ தன்னை மணந்து கொள்ளுமாறு சீதையைக் கெஞ்சுகிறான். அப்போது 'தற்காத்துத் தற்கொண்டாற் பேணுகின்ற' கற்பின் பெருமை வளர்ந்திருப்பதால் தன் தலைவனின் பெருமையை எடுத்தாள்கின்றாள்: 'அறிவிலாதாய்! மகா மேருமலையைத் தூக்க நினைத்தாய்; பதிலுக்கு உலகத்தையும் அழிக்க நினைத்தாய்; அவ்வளவையும் முடிக்க வல்லது இராமபாணம்; இதைநீ அறிந்திரு; நீசனே! தலை, பத்தையும் இழக்காதே சடாயு என்ற பறவைக்குத் தோற்ற நீ இராமனுக்கு முன் நிற்பாயோ' இந்தச் செல்வத்தை உனக்குத் தந்த ஈசனும் என்றும் தவஞ் செய்து கொண்டே இருக்கின்றான். அவன் தவத்தின் மூலமே ஆனந்தத்தை அனுபவிக்கின்றான். நீ உன் செல்வத்தை இழந்து — இனத்தைத் துறந்து — அழிந்து போவதற்காகவே அறவழி தவறுகின்றாய். வீரர்களத்தில், தருமவழி தவறினவர்களும், உயிர்களுக்கு இரங்காதவர்களும் அழிந்து போவார்கள். பற்றற்று காம வெகுளிமயக்கங்களைத் துறந்தவர்களே பிறவிக் கடலைக் கடப்பார்கள். முனிவர்களுக்

குத் தீங்கு செய்யும் உன்குலத்தவரை அழிப் பதே கடனென, விரதம் பூண்டிருக்கின்றுன் இராமன். அவன் நின் தங்கைக்கு மூக்கு முத லிய உறுப்புக்களை அரிந்ததை அறியாயோ? நச்சுப்பாம்பு மந்திரத்துக்குக் கட்டுப்படும். ஆனுல் நீயோ நினைத்ததை நினைத்தபடி செய்து அழியப்போகிருய். உன்னிடம் "அடுக்கு மீத டாதென் ருன்ற வேதுவோடறிவு காட்டி இடிக்குநரில்லை" என்று கூறுகின்ருள்.

அவளது கூற்றிலே, "இடிப்பாரை இல்லா தவேமரா மன்னன் கெடுப்பாரிலானுங் கெடும்" என்ற வள்ளுவரின் கூற்று ஊடுருவுகின்றது. "அழிந்து போகப் போகிற உனக்கு எதிரியும் வந்து விட்டால்..............." இவ்விதம் சீதை இராவணனுக்கு உபதேசம் செய்கிருள்.

இதைக் கேட்ட இராவணனுக்குக் கோபம் வருகிறது. 'இரண்டு மாசத்துள் எனது கேள்விக்கு நீ இணங்கா விட்டால் நான் உன்னைக் கொன்று விடுவேன்' என்கிருன் இராவணன். சீதையை எப்படியாவது வசப் படுத்தும்படி அரக்கியரிடம் கூறுகின்ருன். அரக்கியர் அவளை வசப்படுத்தத் தெண்டிக்கி ருர்கள். இறுதியிற் சீதை திரிசடையினுல் தேற் றப் படுகின்ருள்.

அரக்கியர் துயில்கிருர்கள். சீதை புலம்பு கிருள். மயிர்நீப்பின் உயிர் வாழாக் கவரிமா னன்ன மானமுள்ள தமிழரின் பண்பாடு, சீதை யின் சிந்தனைக்கு வருகிறது. அவள் உயிர்விடத் துணிகிருள். "என்பழி துடைப்பவரென்னின் யாவரே" என்கிருள். வஞ்சகமற்ற இலக்கு வனை வைததற்காக வருந்துகிருள். இறுதில் உயிர்விடத் துணிந்து குருக்கத்தி மரத்தண்டை செல்கின்ருள். அநுமன் சீதையின் அண்மை யிற் சென்று அவளை இறக்க விடாது தடுக்கி கிருன். இராமன் அடையாளமாகக் கொடுத்த கணையாழியைச் சீதையிடம் கொடுக்கிருன். அதைப் பெற்ற சீதை இராமனை அடைந்தா லொத்த ஆனந்தமடைகின்ருள்.

"இருந்துபசி யாலிட ருழந்தவர்க ளெய்தும்
அருந்துமமு தாகிய தறத்தவரை யண்மும்
விருந்துமென லாகியது வீயுமுயிர் மீளும்
மருந்துமென லாகியது வாழிமணி யாழி"

என்று அதை உணர்த்துகிருன்.

பின்பு சீதை தனது சூளாமணியை இராம னிடம் கொடுக்கும்படி அனுமனிடம் கொடுக் கிருள். அனுமன் தானே சீதையை இராமனி டம் நேராகக் கொண்டுபோய்ச் சேர்ப்பதாகக் கூறுகின்ருன். அதற்குப் பலவிதமாக மறுத்துக் கூறுகின்ற சீதை, அனுமனை நோக்கி, "இரா மன் என்னைச் சிறை மீட்க வேண்டும். என்னை வஞ்சனையாற் கவர்ந்த வாளரக்கனை வதைக்க வேண்டும். நீயே என்னைக் கொண்டு போய் இராமனிடம் சேர்த்துவிட்டால் அதனுல் இரா மனின் வீரத்துக்கு வடு வரும். அதுமட்டுமல்ல. உணவின்றி அலைகின்ற நாய்கள் உணவைக் களவாகக் கவருகின்றன. அந்தத் துணிவற்ற நாய்களைப்போல என்னை வஞ்சனையாற் கவர்ந் தான் இராவணன். அந்த நாய்களுக்கும், இந்த இராவணனுக்கும் என்ன வித்தியாசம்? அநு மனே! அப்படியான ஆண்மையற்ற செயலைச் செய்ய நீ நினைக்கக் கூடாது" என்று கூறுகின் ருள்.

"அன்றியும் பிறிதுள்ள தொன் ருரியன்,
வென்றி வெஞ்சிலை மாசுணும் வேறினி
நன்றி யென்பதம், வஞ்சித்த நாய்களின்
நின்ற வஞ்சனை நீயும் நினைத்தியோ"

என்பது கம்பன் கவிதை.

எதிரியுடன் போராட வேண்டுமானுலும், தானே தன்னைத் தப்புவிக்க வேண்டுமானுலும், அதிலும் பெருமைக்கு இழுக்கு ஏற்படக் கூடாது என்று எண்ணுகின்ருள் சீதை. தன் தலைவனின் வீரத்தை நாடறியச் செய்யவேண் டும், அதேகாலத்தில் தானும் தன்னைப் பாது காத்துக் கொள்ள வேண்டும் என்பது அவ்வீரப் பெண்ணின் அவா. இலங்கையரக்கரை இரா மன் அழித்தாலன்றி, என்குலப் பெருமையை எனது கற்பின் திறமையை எப்படி நாடறியக் காட்டுவேன்? இலங்கையை அழிக்க வேண்டு மானுல் அதற்கு இராமன் வரவேண்டியதில்லை

உனது உதவி தேவையில்லை. இலங்கையை அல்ல அண்ட கோளமனைத்தையும் அழிக்க என்றால் இயலும். ஆனால் அப்படி நான் செய்வது இராமனது வீரத்துக்கு வடு.

"அல்லன் மாக்க ளிலங்கை யதாகுமோ
எல்லை நீத்த வுலகங்க ளியாவுமென்
சொல்லினாற் சுடுவே னது தூயவன்
வில்லி னாற்றற்கு மாசென்று வீசினேன்"
என்கிறாள் சீதை.

சீதையினது கூற்றிலே, அவளது செயலிலே "தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற சொற்காத்துச் சோர்விலாள் பெண்" என்ற வள்ளுவன் குறள் உதயஞ் செய்கிறது. மறக்குடித் தமிழ்ப் பெண்ணின் வீரக்குரல் கேட்கின்றது. கவிஞன்கவிதையில்- அவனது கற்பனைக்காவிலே.

பின்பும் தொடர்ந்து கூறுகிறாள் சீதை. நான் பிறரால் வஞ்சிக்கப்பட்டவள். என்னை ஏற்றுக்கொள்ள இராமன் விரும்பாமல் இருக்கலாம். எனக்காக இராமன் இரங்காமல் இருக்கலாம். ஆனாலும் அவனை இலங்கைக்கு வந்து அரக்கரை அழிக்கும்படி கூறு. இராமன் வீரத்துக்கு வசை வரக்கூடாது.

"ஆரந் தாழ்திரு மார்பற் கமைந்ததோர்
தாரந் தானல ளேனுந் தயாவெனும்
ஈரந் தான்மனத் தில்லையென் றாலுந்தன்
வீரங் காத்தலை வேண் டென்று வேண்டுவாய்"
என்று வேண்டுகிறாள்.

இப்படிக் கூறிப் புலம்புகின்ற சீதையை அநுமன் தேற்றுகின்றான் இராமனிடம் கொடுக்கும்படி சூளாமணியை அநுமனிடம் கொடுத்தனுப்புகின்றாள்.

இன்னும் இலங்கையை நீங்கி, இராமனையடைந்த அநுமன் கூற்றாக அசோக வனத்திற் சிறையிருந்த சீதையைப் பற்றிக் கவி கூறுவதைக் கவனியுங்கள்.

உயர்ந்த குடிப்பிறப்பும், பொறையும் பதிவிரதா தர்மமும் ஒருவுரு வெடுத்துக் களிநடம் புரிகின்ற தோற்றம்–இரக்கத்தின் உருவம்–இராமன் குலத்தை இராமனுக்காக–தன்குலத்தைத் தனதாக்கி–அரக்கர் குலத்தை அழித்து–வானவர் குலத்தை வாழ்வித்து, வானவர் குலத்தை அநுமனுக்கு அளித்த உத்தமி. அவளது கண்ணினும் கருத்தினும் இராமன் இருக்கிறான். அவள் அசோக வனத்தில் கண்ணீர்க் கடலுள் தவமெலாஞ் சேர்ந்து. செய்த தவம் போல இராமனை நோக்கித் தவஞ்செய்த வண்ணமிருக்கின்றாள். அவளது பெண்மையின் திண்மை பெண்குலத்துக்குப் பெருமை தருகின்றது. அவளது கற்பின் பெருமையால் தெய்வப் பெண்களும் ஒருபடி உயர்ச்சியடைகிறார்கள். இனிமேல்,

"பாகத்தாளல்லளீசன் மகுடத்தாள் பதுமத்தாளும்
ஆகத்தாளல்லள் மாயனாபிர மோலியாளால்"
என்கிறான் கம்பன்.

கடைசியாக, கம்பனது கவிதையிலே காணப்படுகின்ற–ஆரிய நாரியாகவல்ல, அருமையான தமிழ்ப் பெண்ணாக, தீண்டாத கற்புடைய செழுந்திருவாக, மறக்குடித் தமிழ்ப் பெண்ணின் வீரச் சின்னமாக, அறிவுக் களஞ்சியமாக, அன்பின் வடிவாக, தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற சொற்காத்துச் சோர்விலாத பெண்ணாக அசோக வனத்திற் காட்சி தந்தாள் என்றே கூறவேண்டும்.

**ஆ. அம்பிகைப்பிள்ளை.**
இரண்டாம் வருடம்.

370.75 CAI A.R

# பாரதி கண்ட தமிழ் மணி முத்து.

"புகழ் கம்பன் பிறந்த தமிழ் நாடு"
"வள்ளுவன் றன்னை யுலகினுக்கே தந்து
வான் புகழ் கொண்ட தமிழ் நாடு''

என்பன சிந்தனைக் கவிஞன் பாரதியின் வாக்குகளாம். பாரதி தன் மனமார, வாயார, வாழ்த்திய தமிழ்ப் புலவர்கள் மூவராவர். அவர்கள் கம்பர், வள்ளுவர், இளங்கோ என்பவர்களாவர்.

"யாம் அறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவன்போல் இளங்கோவைப் போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை
உண்மை வெறும் புகழ்ச்சியில்லை."

என்று இம் மூன்று புலவர்களையும் முழு மனத்தோடும் பாராட்டினுர் பாரதியார். இம் மூவரில் முதலில் நிற்பவன்தான் கம்பன். பாரதி தோற்றத்திற்கு முன்னிருந்த பழந்தமிழ்ப் புலவராலும் கம்பன் பாராட்டப்பட்டான்.

"கம்பநாடன் கவிதையைப்போல்
கற்ருேர்க்கு இதயம் களியாதே''

என்பது ஒரு பழந்தமிழ்ப்புலவன் பாராட்டாகும். கவிச் சக்கரவர்த்தி கம்பன் என்றும், கல்வியிற் பெரியன் கம்பன் என்றும் தமிழுலகம் போற்றும் தலைமை தாங்கியவன் கம்பன்தான். கம்பன் பெற்ற கவிச்சக்கரவர்த்திப் பட்டமே கம்பனின் இணையிலாப் பெருமையை எடுத்துக் காட்டுகின்றது. கற்ருேர் உளத்தையும், மற்ருேர் உளத்தையும் கவரும் வகையில் காவியம் புனைந்த புலவர்களில் தலைசிறந்தவன் கம்பன் தான். கம்பனுக்கு இணையான கவிஞன் அவனுக்கு முன்னுமில்லை; பின்னுமில்லை யென்பதை எவரும் மறுக்கார். இத்தகைய ஒப்பற்ற உயர்ந்த தமிழ்க் கவிஞன்தான் கம்பன். இதனலன்ருே பாரதியாரும், தாம் பாராட்டும் தமிழ்ப் புலவர்கள் மூவரில், கம்பனுக்கு முதலிடம் கொடுத்து, ''கம்பனைப்போல் வள்ளுவன் போல் இளங்கோவைப்போல்'' என்று பாராட்டினுர்.

"வெண்பாவிற் புகழேந்தி விருத்தமென்னும்
ஒண்பாவுக் குயர் கம்பன்"

என்ற பழந்தமிழ்ப் புலவர் பாட்டே கவிச் சக்கரவர்த்தி கம்பனுக்குரிய தனிப் பண்பை எடுத்துக் காட்டுகின்றது. அவன் பெருமை மாத்திரமன்று அவன் புனைந்த காவியத்தின் - செய்யுள்களின் இணையிலாப் பெருமையையும் அல்லவா அது தோற்றுவிக்கின்றது?

தமிழுலகில் தனிப்புகழ் தாங்கினுன் கம்பன். ஆனுல் வையகம் முழுவதும் வாயார வாழ்த்தும் மாபெரும்புலவன் வள்ளுவனன்ருே. உலகமெலாம் ஒப்புக்கொள்ளும் உயர்ந்த நீதியை உரைத்தவனென்றல்லவா அவனைப் போற்றுகின்றது. திரிலோகங்களிலும் அவனுடைய நீதியல்லவா பரிபாலனம் செய்யப்படுகின்றது. வள்ளுவன் மொழியை எம்மதத்தினரும் சம்மதமாய் ஏற்றுவிட்டனரன்ருே. வள்ளுவனுல் தமிழுலகிற்கே ஒரு தனிப் பெருமை உலகில் ஏற்பட்டிருக்கின்றது. வள்ளுவன் தோற்றத்தால் தமிழுலகம் வான்புகழ் பெற்றிருக்கின்றது.

"பாலெல்லாம் நல்லாவின் பாலாமோ – பாரிலுள்ள
நூலெல்லாம் வள்ளுவன் செய் நூலாமோ''

என்று பழந்தமிழ்ப் புலவன் பறைசாற்றுகின்ருன். அவன் நூலுக்கே உலகம் ஒரு தனிப் பெருமையை அளிக்கின்றது.

"வள்ளுவரும் தங்குறள் வெண்பாவடியால் வையத்
உள்ளுவ வெல்லாமளந்தார் ஓர்ந்து." [தார்

என்னும் கூற்றே வள்ளுவர் பெருமையை வையகத்திற்கு வெளியாக்குகின்றது. அவன் நூலே அறத்தின் அணிகலன்; ஒழுக்கத்தின் உறைவிடம்; பொருளின் புகலிடம்; இன்பத்தின் இருப்பிடம்; நீதியின் நிலைக்களன்; அரசியலின் அந்திவாரம்; வீட்டின்பமடைவதற்கான நேர்வழி. எனவே,

"எல்லாப் பொருளும் இதன்பாலுள இதன்பால்
இல்லாத எப்பொருளும் இல்லையால்"

250046

ARCHIVES

என்னும் பண்டைப் புலவரொருவரின் கூற்றே அதன் பெருமையைக் குறிக்கும் தாரக மந்திர மாய் இருக்கின்றது. இக்கூற்றென்றே வள்ளுவன்செய் திருக்குறளுக்கு வளமான சான்றாகும்.

இவ்வாறெல்லாம் உலகம் போற்றும் ஒப்பில்லாப் புலவன் வள்ளுவரிருக்க கம்பனுக்கு முதடலிம் கொடுத்தார் கவிமணி பாரதி ஏன் வள்ளுவனுக்கு முதலிடங் கொடுக்கவில்லை என்பர் ஒரு சாரார். அஃது, அவர் தம் அறியா வினாவெனவே விடையளிக்கலாம். கம்பனுக்கு முதலிடமா? என்பதை நோக்கின் வள்ளுவனுக்கே முதலிடம் கொடுத்தார் வரகவி. பன்னிற மணிகள் அமைத்துப் பொன்னணி இயற்றும் பொற்கொல்லன் ஒருவன், நடு நாயகமாய் முத்தினை அமைத்து அதனை அழகு படுத்துகின்றானல்லவா? இதனால் மணிகளுள்மிளிரும் முத்தினுக்கு முதலிடம் கொடுக்கவில்லை யென்பது அர்த்தமாகுமா? அவ்வாறுதான் அமரகவி பாரதி வள்ளுவனை அமைத்திருக்கின்றான். 'கம்பனைப் போல் வள்ளுவன் போல் இளங்கோவைப் போல்'' என்று நடு நாயகமாக அமைத்து, அவனுக்கே முதலிடங் கொடுத்தான். நடு நாயக மணியாக விளங்கும் வள்ளுவனைப் பின்பற்றியே கம்பனும் இளங்கோவும் நூல்கள் யாத்தனர் என்பதற்கும், அவன் அறத்தையே பின்பற்றி அற வாழ்வு உரைத்தனர் என்பதற்கும் சான்றாக வள்ளுவன் இடைநின்று சிங்க நோக்காக இருவரையும் நோக்குகின்றான்.

"நெஞ்சை யள்ளும் சிலப்பதிகார மென்றோர்
மணியாரம் படைத்த தமிழ் நாடு"

என்ற புதுமைக் கவி பாரதி கூற்றே இளங்கோவின் எல்லையில் புகழை எடுத்தியம்புகின்றது. இவ்வாறு மூவருக்குமே முதலிடங் கொடுத்தான் எம் ஒப்பிலாப் புலவன்.

"வள்ளுவன் மொழியே வையகத்தொரு மொழி
கம்பன் கவியே காசினிக் குறு கவி"

என்றெல்லாம் யாம் பெருமிதமடைய வேண்டியவர்களாகின்றோம்.

**வ. பேரின்பநாயகம்,**
முதலாம் வருடம்.

# நூற்பயன்.

தமிழிலக்கண நூலோர் 'அறம் பொருள் இன்பம் வீடடைதல் நூற்பயனே' என்று விதி அமைத்திருக்கின்றனர். நூற்பயன் இந் நான்காயினும் நூலுட் கூறப்படுவன வீடொழிந்த ஏனை மூன்றுமேயாம். இது பெரியோர் கொள்கை. இக்கொள்கைக்கு வீடென்பது சிந்தையு மொழியுஞ் செல்லா நிலைமைத்தாகலின், துறவறமாகிய காரணவகையாற் கூறப்படுவதல்லது இலக்கணவகையாற் கூறப் படாமையின்' எனக் காரணம் காட்டுவர் பரிமேலழகர். வீடொழிந்த ஏனை மூன்றனையும் 'த்ரிவர்க்கம்' என வழங்குவர் வடமொழியாளர்.

— எஸ். வையாபுரிப்பிள்ளை.



1957-ம் ஆண்டு வடமாகாண ஆசிரிய கலாசாலைகளுக்கிடையில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில், 100 யார் ஓட்டத்தில் ஒரு அரியசாதனையை நிலைநாட்டியதுடன், விளையாட்டு வீரரமணியாகவும் விளங்கிய

**செல்வி நா. பாக்கியம்**

# இலங்கைப் பண்டைத் தமிழர் வரலாறு.

( ஒரு கூறு )

ஆசிரியர், திரு. வை. முத்துக்குமாரசுவாமி.

(அர்ச். சூசையப்பர் கல்லூரி, கொழும்பு.)

"எங்கும் மாமணி விற்பொலியுங் கதிர்
எங்குந் தாமரை யன்னம் படு மலர்
மங்குருத வளந் திகழும் திரு
மாவலி கங்கை நாடெங்கள் நாடே"

கதிரமலைப் பள்ளு.

நாம் வாழும் நாடு ஆராய்ச்சிக்கெட்டிய காலந்தொடக்கம் இலங்கையென வழங்கி வருகின்றது. இப் பெயர் "லங்கா" என்னும் சிங்கள வடமொழிச் சொல்லின் தமிழ்ச் சிதைவு. இப் பெயர்க்கு சோதியென்றும்; இனிமையுடையதென்றும்; தீவு என்றும்; மேலும் தாண்டப்படுவது எனவும்; ஆற்றின் நடுவிலிருக்கும் மேட்டு நிலமெனவும் பல பொருள்களை ஆராய்ச்சியாளர் கூறுவர். முதன் முதல் இங்கு வந்த ஆரியரால், இந்தியாவினின்றும் இராம தூதனுன அனுமானுல் தாண்டப்பட்டது என்னும் கூற்றுலும், இப்பொழுது கடலோடு கலந்துபோன ஒரு ஆற்றின் நடுமேடாய் முன்னொருகாலத்தில் இருந்ததாலும் நம் நாடு "லங்கா" என அழைக்கப்பட்டதென்பர்.

இலங்காதுவீபம் என்னும் பெயர் போதி வம்சம், கதாகோசா என்னும் வடமொழி நூல்களிலும், மணிமேகலை என்னும் தமிழ் நூலிலும் காணப்படுகின்றது. அர்த்த சாஸ்திரத்தில் நம்நாடு தாமிரவருணி எனப்பட்டது. ரொலெமி, மேகாஸ்தினிஸ். டேமண்டோ, ஸ்ருபோ என்னும் கிரேக்க ஆசிரியர்கள் இதனை "தப்புறபாணி" என வழங்கினர். சேர நாட்டார் இதைச் "சேரன் தீவு" என்று வழங்கினர் போலும். ஏனெனில் சேரநாட்டார் வாய்க் கேட்ட அராபியர் இதனை 'செரன்டிப்" எனத் திரித்து வழங்கினர். ஈழம் என்றும் ஈழ தேசம் என்றும் ஈழமண்டலம் என்றும் தொன்று தொட்டு நம்நாட்டைத் தமிழர் வழங்கியுள்ளனர்.

பண்டைக் காலத்தில் இலங்கை தமிழகத்தின் ஒருபகுதியாக இருந்தது. இதனைப் பூகர்ப்ப சரித்திர ஆராய்ச்சியாளரும் வலியுறுத்தியுள்ளார். ஒரு காலத்தில் இந்து மகா சமுத்திரம் பெரும்பாலும் ஒரு நிலப்பரப்பாய் இருந்தது. இது மேற்கே ஆபிரிக்காவின் கீழ்க் கடற்கரையுள்ள மடகாஸ்கர் தொடங்கி, கிழக்கே ஆஸ்திரேலியா வரையும், வடக்கே விந்திய மலை வரையும், தெற்கே கேர்க்கியூலன் தீபம் வரையும் உள்ள நிலப்பரப்பாய் விளங்கிற்று. இந் நிலப்பரப்பு, தென்னிந்தியா, இலங்கை, மலாயா, ஜாவா, சுமாத்திரா, பாலி முதலிய தேசங்கள் எல்லாவற்றையும் உள்ளடக்கியிருந்தது.

[1] "தென் ஆபிரிக்கா, பர்மா, மலாயா. கிழக்கு இந்தியத் தீவுகள், ஆஸ்திரேலியா, வடமேற்கு அமெரிக்கா ஆகிய நிலப்பகுதிகள் இக் கண்டத்துடன் முன்பு ஒட்டிக் கிடந்து பின் பிளவுபட்டுச் சிதறிப் போயின" என்று மண்ணூலார் குறிக்கின்றனர். இம் மாபெரு நிலப் பகுதியைத் தமிழ்மரபு குமரிகண்டம் என்று வழங்குகின்றது. ஆராய்ச்சியாளர் இதனை "இலெமூரியா" என்று குறிக்கின்றனர். உயிரினங்கள் முதன் முதல் இங்கேயே தோன்றின. தென்னுடு நிலஉலக வளர்ச்சி, உயிரின வளர்ச்சி, மனித இன வளர்ச்சி ஆகிய இயற்கையின் பல படிமுறை வளர்ச்சிகளைப் படலம் படலமாகத் தொகுத்து எடுத்துக் காட்டும் ஒரு பெருங் காவிய ஏடாகத் திகழ்கிறது."

குமரி கண்டம், இலமூரியா என்று கூறப்பட்ட நிலப் பரப்பைத் தமிழர்கள் தமிழகம் என்றே வழங்கி வந்தனர். தமிழகத்தின் தொன்குடி மக்கள் திராவிடர்கள்.

1. தென்நாடு—கா. அப்பாத்துரைப்பிள்ளை

சுமார் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இந்தியா முழுவதும் திராவிடர்களுடைய ஆட்சியில் இருந்து வந்தது எனக் கொள்ளலாம். இக் காலத்தில் தென்னிந்திய மக்கள், தமிழ், கன்னடம், மலையாளம், துளு முதலிய திராவிட மொழிகளைப் பயின்று வருகின்றனர். இலங்கையில் தமிழர்கள் பெரும்பாலும் வாழ்ந்து வரும் வடமாகாணமும் கிழக்கு மாகாணமும் தமிழ் நாடு என்றே கருத வேண்டும். இப்பகுதியே ஈழத்தமிழகமாகும்.

### தமிழர்கள் சுமேரியர் வழி வந்தவர்களா?

[2] "கிறிஸ்து நாதர் காலத்திற்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் (ஈராக்) என்று இப்பொழுது வழங்கப்படும் நாட்டிலே, (யூபிறேற்றிஸ்-ரைகிறிஸ் என்னும் நதிகளின் தீரத்தில்) சுமேரியர் என்னும் கூட்டத்தார் வாழ்ந்தனர். அவர்களே மனித நாகரிகத்திற்கு அடிகோலிய மக்கட் குழுவினர் என்று டாக்டர் ஹால் என்னும் அறிஞர் அபிப்பிராயப்படுகிறார். சுமேரியரை தென் இந்தியத் திராவிட மக்களோடு ஒப்பிட்டிருக்கிறார் ஆதலால் பழைய சுமேரிய நாட்டுப் பகுதியில்இருந்து திராவிடர்களின் முன்னோர் வந்திருக்கவேண்டும் என்று பலரும் கருதினர்.

"சிந்து வெளி நிலத்தில் புதைபொருட் சோதனை விளைவாக, சரித்திர காலத்திற்கு முந்திய இந்திய நாகரிகம் சுமேரிய நாகரிகத்தோடு பெரிதும் ஒத்திருப்பது நன்கு வெளியாகிறது. ஆனாலும் சுமேரியாவில் இருந்துதான் அந்த நாகரிகம் வந்தது என்று சொல்ல முடியாது. அப் புதைபொருட் சோதனையிலிருந்து, மிகப் பழைய காலத்திற்கு முன்னரே, இந்திய நாகரிகம் தோன்றியிருந்தது என்றுமட்டும் கொள்ளலாம்.''

இக்காலத் திராவிட மக்கள் வழிபடுவது போல் அவர்கள் முன்னோர்களாகிய பழங்காலத் திராவிடரும் சிவனை வழிபட்டனர். சிவலிங்க வழிபாடு திராவிடர்களுக்கு உயிர் போன்றது. இலிங்க வழிபாடு சிந்து நதிக்கரையோரத்தில் பரவியிருந்தது. சக்தி வழிபாடும், விஷ்ணு வழிபாடும் பண்டைக்காலத் தமிழர்களிடம் நிலவியுள்ளது. இலிங்கங்களும், ஆவுடையாரும் சிந்து நதிவெளியில் கண்டெடுக்கப்பட்டன.

இலங்கையில் திருக்கேதீச்சரம், முன்னேச்சரம், திருக்கோணேசுவரம் முதலியன விஜயன் காலத்துக்கு பன்னெடுங்காலத்துக்கு முன்னர் உள்ள இந்து கோவில்கள். அன்றியும் நகுலேசுவரமும் பழமை வாய்ந்த தலம் என்று யாழ்ப்பாணச் சரித்திரம் கூறுகின்றது.

தமிழ் மக்களின் பூர்விக தெய்வம் ஆகிய கார்த்திகேயன் இலங்கைக்கு, சூரபன்மன் காலத்திலே வந்து கதிர்காமத்திலே தனது பாடி வீட்டை அமைத்தனர்.

[3] 'இலங்கையின் பூர்வ மக்களாகிய இராக்கதர்கள், இயக்கர்கள், நாகர்கள் யாவரும் திராவிடர்களே. இவர்கள் பண்டைக்காலத் தமிழ்மொழியையே பேசினர்."

நிலம், நீர், வான் என்னும் மூன்று இடங்களிலும் கால், கலம் வானவூர்தி ஆகியவற்றின் உதவியால் சஞ்சரித்த பழந்தமிழர் 'இயக்கர்'' என்போர்.

இராக்கதர்களும் இயக்கரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்று வாயு புராணம் குறிப்பிடுகின்றது. அலவக என்னும் இயக்க மாணவன் பௌத்த மதத்தைக் கைக்கொண்ட செய்தி சூத நிப்பத்த என்னும் மிக்க பழைய பௌத்த நூலில் குறிக்கப்பட்டுள்ளது. தமிழரிற் சிலர் ஐந்து தலை நாக பாம்பின் விக்கிரகத்தைத் தங்கள் கோயில்களிலும் வீடுகளிலும் வைத்திருந்தனர். ஐந்து தலைகளும் ஐந்து புலன்களை நினைப்பூட்டியது. இவர்களை நாகர்கள் என்று கூறினர்.

2. திராவிட மக்கள் வரலாறு—ஈ. எல். தம்பிமுத்து

3. Tamil Culture Feb. 1952 Page 29 Ceylon Originally a land of Dravidians by Rev. Fr. Gnanaprakasar.

இராவணன் தமிழ் மன்னனு? அவன் ஆண்டது நம் நாட்டையா?

தேவாரத்தில்,

"மயங்கு மாயம் வல்லராகி வானினேடு நீரும்-
இயங்குவோருக் கிறைவனை இராவணன்"

எனக்குறிக்கப்பட்டிருக்கிறது.

இராவணன் என்னும் அரசன் இலங்கையை ஆண்டான் என்று இராமாயணம் கூறுகின்றது. சிங்கள சரித்திரங்களின்படி இராம — இராவண யுத்தம் கி. மு. 2387ல் நடைபெற்றது. சேர் உவில்லியம் ஜோன்ஸ் இங்கிகழ்ச்சி கி. மு. 1810 ல் எனக்குறிப்பிட்டிருக்கின்ருர். ஆகவே இராவணன் காலம் சுமார் நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே என்பது புலப்படும். கர்ணபரம்பரை வரலாறுகள் சரித்திரத்திற்கு உற்சாகமும் உயிரும் கொடுப்பன; ஆயினும் இவை வரலாருகுமா? நமக்கு எட்டாத இருளாகிய திரைக்கூடாகச் சில கதிர்க் கூற்றுக்களைப் போல, இந்த இராமாயண கர்ண பரம்பரைகளை நினைவூட்டும் இடங்கள் இலங்கையின் பல்வேறு பகுதிகளில் உண்டு.

இவற்றை விபரமாகக் கூருமல், பெயர்களைமட்டிலும் கூறிச் செல்வோம்:- "நுமுனு குலகந்தெ (அனுமான் குல பர்வதம்) சீதா தளவா, சீதா எலிபா. இராவணன் வெட்டு கன்னியாய் இராவணன் எல்லா, திருக்கோவில், திருக்கோணேசுவரம், இலங்காபுரம், அமிர்தகளி முதலியனவாம்."

[4] "இராவணனின் முன்னேர்களில் ஒருவராகிய சயம்பன் திருகோணமலையைத் தலைநகராக்கி இலங்கை முழுவதையும் ஆண்டான். நாகர்களின் அரசுகள் திருக்கோணமலை, மாந்தை, முருகபுரம் (கதிர்காமம்), சிவனொளிபாதம், மணிபுரம் (கந்தரோடை), திருக்கோயில், கல்யாணி முதலிய இடங்களில் நடைபெற்றன." இராவணன் தலைநகரம் இலங்கைமாநகர்; இந்நகரில் முத்தமிழ் வளர்க்கும் மேலோர் விண் தோயும் மணிமாடங்களில் செல்வச் சிறப்புடன் வாழ்ந்தனர் என்று பல அறிஞர் கருதுவர்.

4. அகத்தியர் இலங்கை. பக். 16

இலங்கைச் சரித்திரம் கைமுனு, நம்பிய தீசன் காலத்திலே தொடங்குகிறது என்று வாதிப்பவர்கள் பலர்; இராவணன் என்று ஒருவன் இருந்தானே என்று ஐயப்படுபவர் பலர்: ஒரு பெரிய சரித்திர வீரனையேயொட்டி இலக்கியம் பிறக்கிறபடியால், இராவணன் என்னும் ஒரு தலைவன் இருந்திருக்காவிடில் இலக்கியம் எப்படி எழுதப்பட்டிருக்கலாம்? இராவணன் இருந்த இலங்கை நம்நாடே என்பது வெள்ளிடை மலை.

### கௌதம புத்தர் தரிசித்த நாகதீபம்

நம் ஈழத்தின் வடபாகமும் கீழ்ப்பாகத்தில் ஒரு பகுதியும் (திருக்கோணமலை உட்பட) ஈழ மண்டலம் எனப்பட்டது. இப்பகுதிகளில் நாகர்களும், தென்னிலங்கையில் இயக்கர், இராட்சதர் முதலியோரும் வாழ்ந்து வந்தனர். நாகதீபம், கல்யாணியில் உள்ளதென்று சிலரும், வேறு சிலர் நயினுர்கோவிலில் உள்ளதென்றும், மற்றையோர் அது நாகர்கோவிலில் உள்ளதென்றும் கூறிவந்தனர். ஆயின், நாகதீபம் யாழ்ப்பாணக் குடாநாட்டையே கருதுகின்றதென்னும் உண்மை பின் வருமாறு கண்டு பிடிக்கப்பட்டது.

ஏறக்குறைய இருபது ஆண்டுகளுக்கு முன்னர், வல்லிபுரக் கோவிலின் முன் உள்ள மணற்கும்பி அகற்றப்பட்ட பொழுது ஒரு பொற்றகடு அகப்பட்டது. அது சமஸ்கிருதத்தில் பொறிக்கப்பட்டிருந்தது. அச்சாசனத்தில் குறிக்கப்பட்ட பொருள்:- 'வாசப அரசன் காலத்திலே நாகதீவை ஆட்சிபுரிந்த அமைச்சன் இசிகிரியன் பதகர (வடகரை) அத்தனையில் பியகுகதிச விகாரையைக் கட்டினன்" இதிலிருந்து நாகதீபம் வடஇலங்கையையே கருதும் என்பது புலனுகும்.

[5] "நாக இராணி ஒருவள் மணிகளால் இழைக்கப்பட்ட மணியாசனத்தைத் தன் வழியில் வருவோர்க்கு விட்டு இறந்தாள். அந்த மணியாசனத்தை நாகமன்னர்கள் இருவர், மகோதரனும் அவன் மருமகனுகிய குலோதரனும், தனது தனதென உரித்தாடி கொடும் போர் நிகழ்த்திக் கொண்டிருந்தனர்.

5. மகாவம்சம்

கௌதம புத்தர் ஞானத்தைப் பெற்று விளங்கின ஐந்தாம் ஆண்டின் பின்னர், நாக தீபத்திற்கு இப்போரை விலக்கும்படி ஆகாய மார்க்கமாக வந்தனர். இவர்களைச் சமாதானப் படுத்தி பஞ்சசீலத்தை உபதேசித்தனர்.

நாகமன்னர்கள் இருவரும் கௌதம புத்த ருக்கு மணியாசனத்தைக் காணிக்கையாகக் கொடுத்தனர். எண்பது கோடி நாகப் பிரசை களும் மன்னரும் புத்தரைச் சரண்புகுந்தனர்." இக் கதையை நாம் சிலப்பதிகாரத்திலும் காண லாம். இலங்கை இரத்தினத் தீவு எனப்படு கிறது.

வட இலங்கைக்குக் கௌதம புத்தர் வந் தது உண்மையா? அவர் தரிசித்த நாக தீபம் எனப்படும் இடம் எது? கௌதம புத்தர் தரி சித்த நாகதீபம் — சுன்னுகத்திலிருந்து ஏறக் குறைய ஒருமைல் சமீபத்தில் உள்ள கந்த ரோடையே என்பது அங்கு கண்டெடுக்கப் பட்ட பழைய நாணயங்கள், அழிந்த உருவச் சிலைகள் முதலியவற்ருல் தெளிவாக இருக் கின்றது.

கந்தரோடையில் 1916ம், 1917ம் ஆண்டு களில் பல பௌத்த மதச் சின்னங்கள் கண்டு எடுக்கப்பட்டுள்ளன. மாகியப் பட்டியில் உள்ள மீனுட்சி அம்மன் கோவிற் குளத்தில் ஆறு அடி உயரம் உள்ள புத்தரின் சிலை ஒன்று எடுக்கப்பட்டது. அச்சிலை ஒடிந்திருந்தது. பண்டைக் காலத்தில் உள்ள தமிழ் மக்களுட் சிலர் பௌத்தர்களாக இருந்தனர் என்பதை இச் சிலைகள்மூலம் அறியக் கிடக்கின்றது. நம்பொத்த என்னும் சிங்கள நூலில் இதற்கு கதுறு கொடை என்று பெயர் காணப்படுகின் றது. இது கந்தரோடையையே குறிக்கும்.

ஜம்பு கொல தொடக்கம் கந்தரோடைக் கூடாக அநுரதபுரத்திற்குப் பெரிய தெரு இருந்தது. இங்குள்ள பசினு விகாரையில் மகிந்தன் போதனை செய்தார் என்று மகாவம் சம் கூறுகிறது. கந்தரோடையில் காணப்படும் அழிந்த தாதுகர்ப்பம்—நாகதீபத்தில் கஜபாகு வின் மகன் அமைப்பித்த இராஜயத்தன சேதி யாக இருக்கலாமா?

கந்தரோடையில் காணப்பட்ட நாணயங்கள்.

[6] "பண்டைக் காலத்து உலக மக்கள் வெள்ளி, எலெக்ரம் என்னும் உலோகங்க ளால் செய்யப்பட்ட நாணயங்களை உபயோ கித்தனர். சிலவற்றில் இரு முகங்களும் துளைக் கப்பட்டிருந்தன. இந்து மக்களின் ஏடுகளில் இவை 'புராணுஸ்' என்றே அழைக்கப்பட்டன. இவை சுமார் கி. மு. 4 நூற்றுண்டுகளுக்கு முற்பட்டன. இவை மனு, பாணினி என்ப வர்களால் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இவை புத்த சூத்திரங்களிலும் குறிக்கப்பட்டுள. புத்தபெருமான் காலத்தில் (கி. மு. 6-ம் நூற் ருண்டில்) இவை வழக்கில் இருந்தன கந்த ரோடையில் முப்பத்தைந்து புராணுஸ் எனப் படும் நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டன. இந் நாணயங்கள் வெள்ளியாலும், வெள்ளி தோய்ந்த பித்தளையாலும், சுத்தப் பித்தளையா லும் செய்யப்பட்டவை. " சில பௌத்த நாண யங்களில் ஒரு முகத்தில் மரமொன்றும், மற் றைய முகத்தில் சலாகைப் பலகணி வேலியும் காணப்படுகின்றன. சில நாணயங்களில் ஒரு முகத்தில் மரமொன்றும் மற்றைய முகத்தில் சுவாஸ்திகாவும் காணப்படுகின்றன. மேலும் கொற்கையைத் தலைநகராக வைத்துக்கொண்ட பாண்டிய மன்னரின் நாணயங்கள் சிலவும் கந்த ரோடையில் கண்டெடுக்கப்பட்டன. ஒரு பக் கத்தில் சுவஸ்திகாவும், மற்றைய பக்கத்தில் சதுரத்துக்குள் செதுக்கப்பட்ட யானைகள் உள்ள சில நாணயங்களும் இங்கு கண்டு பிடிக் கப்பட்டன. ஒரு பெண் உருவம் செதுக்கப் பட்ட நாணயங்களும் கண்டெடுக்கப்பட்டன. மேலும் ஒவ்வொரு கையிலும் முந்திரிக்கொடி செதுக்கப்பட்டும் வளையல்களை அணிந்தும், காதுகளில் அணிகளுடனும் இந்த உருவத்தின் தலைக்குமேல் இரு யானைகள், அக்கமும் பக்க மும் தமது தும்பிக்கையை வைத்து மரியாதை செய்துகொண்டு நிற்கின்றன. இந்த நாணயங் கள் இலக்குமி நாணயங்கள் எனப்படும். எழு பத்தைந்து இலக்குமி நாணயங்கள் கந்தரோ டையில் அகழ்ந்தெடுக்கப்பட்டன.

6. Journal of the Royal Asiatic Society Cunningham's (Ceylon) Vol. 28 Coins of Ancient India.

பல்லவர் காலத்துநாணயங்களும், குறும்பர் நாணயங்களும், கொன்ஸ்ரன்ரைன் கி. பி. 306-337, 1-ம் தியோடோசியஸ் (கி. பி. 379-395) ஆர்க்கேடியஸ் (395-408) முதலிய உரோம அரசர்களின் நாணயங்களும் கண்டெடுக்கப்பட்டன. வலென்ரினியன் என்னும் அரசன் தொடக்கம் 2-ம் தியோடோசியஸ் வரையும் உள்ள உரோம நாட்டு நாணயங்கள் கந்தரோடையில் கிடைத்தன.

மேலும் 7-ம் நூற்றுண்டு தொடக்கம் 10-ம் நூற்றுண்டு வரையும் வழங்கிய யானை உருவம் சாணப்பட்ட பாண்டிய நாணயங்களும், மீன் உருவம் ஒரு முகத்திலும், மற்றைய முகத்தில் இடபமும் உள்ள நாணயங்களும் கந்தரோடையில் கண்டு பிடிக்கப்பட்டன. சேது நாணயங்களில் நான்கு வகைகள் உள. இடபம் ஒரு முகத்திலும், பிற் பக்கத்திலே தாமரைக்குள் ''சேது'' என்னும் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டன சில. இவைகளுள் யாழ்ப்பாணத்தரசர்களின் நாணயங்களும் சில உள்ளன.''

கந்தரோடையில் இருந்தும் வல்லிபுரம் என்னும் பழைய தலைநகரில் இருந்தும் — பராக்கிரமவாகு, ஸ்ரீதர்மாசோகதேவா, புவனேகவாகு, ஸ்ரீமத்சாகசமல்லா, ஸ்ரீஇராசலீலாவதி முதலிய இலங்கை மன்னர்களின் நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டன. 'ஸ்ரீ'' என்னும் அடையாளம் பொறிக்கப்பட்ட (கன்னட) நாணயங்களும் கண்டெடுக்கப்பட்டன.

இராச வாகினி, சதர்மாலங்காரா என்னும் சிங்கள நூல்கள் ஸ்ரீபாதத்தையும் கல்யாணியையும் தரிசித்த அறுபது பௌத்த பிக்குகள், நாகதீபத்தில் இராஜயதன (வெள்ளரசு மரம்) கொண்டு வரப்பட்ட இடத்தில் ஒரு தாது கர்ப்பத்தைக் கண்டனர் என்னும் வரலாற்றைக் குறிப்பிட்டுள்ளன. இது கந்தரோடையிலே இருந்தது என்பது ஏற்புடைத்து. இன்னும் கந்தரோடையில் பித்தளை, இரும்பு, ஈயம், தங்கம் முதலியவற்றுல் செய்த பொருட்களும் மட்பாண்டங்களும் கண்டெடுக்கப்பட்டன.



கந்தரோடையே நாகர்களின் தலைநகராக விளங்கியது. அர்ச்சுனன் மணிபுரத்து நாககன்னிகையாகிய சித்திராங்கதையை மணந்தான் என்றும், அவன் தீர்த்தமாட இதற்கு அண்மையில் ஓர் இடத்துக்கு வந்தான் என்றும் மகாபாரதம் கூறுகின்றது. அந்த மணிபுரமே கந்தரோடையாதல் கூடும் என்றும், அவன் நீராடிய தீர்த்தம் நகுலேஸ்வரம் என்றும் முதலியார் இராசநாயகம் அவர்கள் தமது யாழ்ப்பாணச் சரித்திரத்தில் குறிப்பிட்டுள்ளார்.

### நாகர்கள் யார்?

[7]நாகர்கள் என்போர் மலைகளில் வாழ்ந்தோர் ஆவர். நாகர்கள் ஈழத் தமிழகத்தில் வாழ்ந்த தொல்குடியினர். இவர்கள் எயினர், ஒளியர், அருவாளர், பரதவர் ஆகிய பல கிளையினர். இவர்களில் மறவரே மிக வல்லமை வாய்ந்தவராகவும் போர்த் திறம்மிக்கவராகவும் இருந்தனர். நாக மரபினரிடையே முற்றிலும் அடங்காப் பண்புடையவர்கள் எயினர் அல்லது வேடரே. கி. பி. இரண்டாம் நூற்றுண்டின் நடுப்பகுதியில் சோழர் வலிமையும் ஏனைத் தமிழரசர் வலிமையும் தற்காலிகமாகச் சில காலம் தளர்வுற்றிருந்தன. அச்சமயம் அருவாளர் மரபினரின் கிளையினரான ஒவியர் எயிற்பட்டணத்தில் ஆண்டதுடன் மாவிலங்கையின் மன்னர்களாகவும் விளங்கினர். நாகர்கள் பல கலைகளில் திறமையுடையவர்கள். சிறப்பாக நெசவு அவர்கள் தனித் திறமையாய் இருந்தது ''

### மாதோட்டம்

நாகர்களின் வேறெரு தலைநகர் மாதோட்டம். மாதோட்ட நகர் மன்ருருக்கு அணித்தாக இருக்கிறது. இந்த நகரின் ஒரு துறைமுகம் மாந்தை என வழங்கப்பட்டது. மாந்தையினின்று மாகமம் வரையும் முற்காலத்தில் ஒரு பெரிய வீதி இருந்தது என்பதற்குச் சான்றுகள் உள்ளன.

7. "1800 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்திருந்த தமிழ் மக்கள்'' வி. கனகசபைப்பிள்ளை பக். 86

பாண்டிய மன்னனின் மகள் மாதோட்டத்துறையிலே வந்திறங்கியபோது பாலாவித் தீர்த்தமானது கடலோடு கலக்குமிடத்தினை அறிந்து அவ்விடத்துக்கு மகாதீர்த்தமென்னும் பெயரைச் சூட்டியதாக மகாவம்சம் கூறுகிறது.

மாந்தைத் துறைமுகம் இந்தியாவிலிருந்து இலங்கைக்குப் போக்குவரவு செய்ய ஏற்ற துறைமுகமாகவிளங்கிற்று. [8] "மாந்தோட்டைத் துறைமுகம் கிறிஸ்து நாதருக்கு முன்னர் இருபத்தைந்து நூற்றுண்டுகளும், பின்னர் பதினேந்து நூற்றுண்டுகளும் மாபெரும் வியாபாரச் சந்தையாகத் திகழ்ந்தது."

[9] மாதோட்டத்தின் பழைய அரசர்கள் கம்மாளர்களே. மாதோட்டத்திலே மாயக் கோட்டை சேவரணம் இருந்தது. இங்கு நல்லியக்கோடன் என்னும் ஓவியர் கோமகன் அரசு புரிந்தான். மேலும் ஆந்தை, அதநாலிசி, வில்லியாதன் முதலிய குறுசில மன்னர்கள் அரசு புரிந்தனர். 'தெனென்ற்' தாம் இலங்கையைக் குறித்து எழுதிய நூலில்;–"இலங்கை மாந்தையில், நூதனமான கப்பல் கட்டும் தொழில் பண்டு தொண்டு உள்ளதென்றும் அவைகள் பெரும்பாலும் இருப்பாணிகள் இன்றியே கட்டப் பெற்றன என்றும் கூறினுர்."

கி. பி. 7-ம் நூற்றுண்டில் வாழ்ந்த திருஞான சம்பந்தசுவாமிகள் "இருங்கடற் கரையினி லெழில் திகழ் மாதோட்டம்" "மாடெலாமண முரசெனக் கடலின தொலி கவர் மாதோட்டத்து" என்று கூறுகின்றுர். 7-ம் நூற்றுண்டில், அநுரதபுரத்தில் இருந்த குகைக் கல்வெட்டில் இது மகாபுத்து என்றும் இது புனித தலம் என்றும் குறிக்கப்பட்டிருந்தது. கி. பி. 9-ம் நூற்றுண்டில் இருந்தசுந்தரமூர்த்தி சுவாமிகள் "வங்கம் மலிகின்றகடன் மாதோட்ட நன்னகரில் பங்கம் செய்த பிறை சூடினன் பாலாவியின் கரைமேல்" என்று கூறுகின்றுர்.

8 Bennet's Ceylon Page 212

9 Pridham's Ceylon Page 496 Part II

பெருந்தலைச் சாத்தனுர் தமது குறுந்தொகை நூலில், பின் வருமாறு கூறுகின்றுர்;-

"மாந்தையிலே வாழும் மகுடத் தியாகியுமக்
கேந்து தழும்போ விரண்டுண்டு—வேந்தர்
முடித் தழும்புன் காலிலே முத் தமிழோர்க் கீயும்
படித் தழும்பின் கையிலே பார்"

இதனுல் மாந்தை மாநகரில் வாழ்ந்தவர்களது பெருமையையும் அவர்களது தொழிலின் சிறப்பையும் இனிதெடுத்துக் கூறினுர். திருக்கேதீச்சுரம் என்னும் பண்டைச் சிவஸ்தலம் பாலாவி யாற்றங்கரையில் இருக்கின்றது.

மாதோட்டத்தில் உள்ள திருக்கேச்சுரமும், இதற்கு அணித்தான மறிச்சுக் கட்டியில் உள்ள முத்துக்களுமே பிறநாட்டு மக்களை தம் மாட்டு இழுக்கும் காந்தசக்திகளாக இருந்தன.

11-ம் நூற்றுண்டில் இராஜேந்திர சோழன் மாதோட்டத்தை இராஜ இராஜபுரம் எனப் பெயர் கொடுத்து வழங்கினுன். மாதோட்டத்தில் 'இராஜ இராஜ ஈசுவர மகாதேவ' 'திருவீர மீசவரமுடையர் மகாதேவ' எனப்படும் சிவாலயங்கள் இருந்ததாகத் தென்னிந்தியச் சோழரின் கல்வெட்டுகளில் இருந்து அறியக் கிடக்கின்றது.

ஜெயவீரசிங்க ஆரியச் சக்கரவர்த்தி கி. பி. 1380–கி. பி. 1414 ஆட்சி தொடக்கம் சங்கிலி மன்னன் காலம் வரையும் மாதோட்டம் வட இலங்கைத் தமிழ் இராச்சியத்தின் ஒரு பகுதியாக இருந்து வந்தது. [10] மாதோட்டத்திலுள்ள பாலாவியின் மேற்குக் கரையையும், திருக்கேதீச்சுரத்தையும் 1540-ல் கடல்கொண்டழித்தது என்பர்.

கட்டுக்கரைக் குளம் அல்லது பூதங் கட்டிய குளம் எனப்படும் எட்டுச் சதுர மைல் விசாலமுடைய குளம் ஒன்று மாதோட்டப் பகுதியில் உள்ளது. கட்டுக்கரைக் குளம் விஜயன் காலத்துக்கு முன்னர் நாகர்களால் கட்டப்பட்டது என்று கூறுவர்.

10 (விசுவநாத சாத்திரியார் சம்பவக் குறிப்பு)
யாழ்ப்பாணச் சரித்திரம்–ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை

புத்தளத்துக்கு வடக்கேயுள்ள கல்பிட்டி இன்றும் ஓடத்தாற் கடந்து செல்லக்கூடிய சிற்றூர். தமிழ்ச் சிற்றரசர்களின் தலை ஊராக குதிரைமலை ஒருகாலம் விளங்கியது. கிரேக்க நூல்களில் இது ஹிப்புரேஸ் என்று கூறப்படு கின்றது. இக்குதிரை மலையிலே குமணன் என் னும் வள்ளல் இருந்தான். [11] இங்கு தமிழ்க் குறு நில மன்னர் அரசாண்டனர். அல்லி அரசாணி இப்பகுதியை முன்னொருகாலத்தில் ஆண்டன ராம்.

மாதோட்ட நகரம், குதிரைமலை போன்ற இடங்களில் பழைய நாணயங்கள், உலையில் உருகிய தங்கம், வெள்ளி, செம்பு, இரும்புக் கிட்டங்கள், பூர்வகாலக் கட்டடச் சிதைவு கள் முதலியன உள்ளன. இவற்றைப் பற்றித் தொல்பொருட் பகுதி ஆராய்ச்சி செய்து வரு மாயின் ஈழத் தமிழகத்தின் பழைய நகர்களின் வரலாறு, ஈழநாட்டுப் பண்டைத் தமிழர் வர லாறுகளுக்குமட்டிலுமன்றித் தமிழர் வரலாற் றுக்கே உதவும். அண்மையில் மாதோட்டப் பகுதியில் திருக்கேதீச்சுரத்தில் சிவன் கோவில் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

11 Ancient Jaffna - Mudaliyar Rasanayagam

## உலாவிடுவேன்

ஏட்டுப் புலவர்சொலுக் கெட்டா அழகுடனே
நாட்டுப் புறத்துறையும் நஞ்சை வயல்களிலும்
இச்சையுடன் வானுலகை எட்டிப் பிடிக்கமலை
மச்சினிலே கைநீட்டும் மல்லிகைப்பூங் காவினிலும்
சித்தத் தெளிவில்லார் சிந்தனையைப் போல்வீணே
கத்திக் குதிக்கின்ற கடலின் கரைகளிலும்
இன்னல் மறந்துலகம் இன்பத் துயில்புரியும்
கன்னங் கருக்கிருளில் கண்சிமிட்டும் மீனொளியில்
சந்தனமும் பாடகமும் சாந்தியுடன் சேர்ந்தவெளி
தந்துதவ வானுலவும் தண்மதியின் வெண்ணிலவில்
வெய்யில் கதிர்க்கரங்கள் வீசி நடைநடந்து
வையத் திருள்அகற்ற வந்தொளிரும் வெஞ்சுடரில்
பெண்ணுலகில் பேரழகி பிரியா தவளான
எண்ணமெனும் என்னுடைய இல்லாள் தொடர்ந்துவரக்
கள்ளமிலா நெஞ்சுடனே கத்திக் குதித்தாசைப்
பிள்ளைஅவள் கைப்பற்றிப் பின்னே நடந்துவர
வேண்டியபோ துள்ளுணர்ச்சி தூண்டியவா றெல்லாம்என்
நீண்டமதிக் கோலுடனே நித்தம் உலாவிடுவேன்.

— "கலைவாணன்"

# அயல் நாட்டார் கண்ட ஆரியச் சக்கரவர்த்தி.

— முதலியார் குல. சபாநாதன் —

சில ஆண்டுக்கு முன் யாழ்ப்பாணம் பெரியகடையிலுள்ள பஸ் நிலையத்திலிருந்து பருத்தித்துறைக்குப் போகும் பஸ்வண்டியில் ஏறிச் சென்றேன். எனக் கருகில் வெள்ளை வேட்டியும் வெள்ளை மேலங்கியும் மடிப்புக் குலையாத சால்வையும் தரித்த ஒருவர் இருந்தார். இவர் ஓர் ஆசிரியராகத்தான் இருக்கவேண்டு மென ஊகித்தேன். பஸ்வண்டி நல்லூர்க்கந்த சுவாமிகோயிலைத் தாண்டி, முத்திரைச்சந்தை யையும் தாண்டியதும் தெருவோரத்தில் வலது பக்கத்தில் ஒரு பழைய வாயில் காணப்பட்டது. எனதருகில் இருந்தவர் அந்தப்பழைய வாயிற் கட்டடத்தைச் சுட்டிக் காட்டி "இது தான் சங்கிலி இராசனுடைய மாளிகை வாயில்" என்று தன் பக்கத்திலிருந்த மாணவர் சிலருக்கு விளக்கிக் கூறிக்கொண்டிருந்தார். பஸ்வண்டி யிலே பிரயாணம் செய்யும் பொழுது எனது சிந்தனை சங்கிலியரசனுடைய ஆட்சிகாலத்துக் குச் சென்றுவிட்டது. வணங்காமுடியனுகப் போர்த்துககீசரையே அல்லோல கல்லோலப் பட்டு ஓடச் செய்த சங்கிலி மகாராசனுடைய யானைப்படை, குதிரைப்படை, தண்டிகை, பல் லக்குகள் யாவும் கேவலம் இந்தச் சின்னஞ்சிறு வாயில் வழியாக எப்படிப் போய் வந்தன என்ற பிரச்சினை என் மனத்தில் எழுந்தது. நல்லூரிலே செங்குந்தர் (கைக்கோளர் சந்தை) சந்தையடியிலிருந்து கொக்குவிலுக்குப் போகும் தெருவிலுள்ள கத்தோலிக்க தேவாலயத்துக் கருகில் இருந்த சுவாமி ஞானப்பிரகாசர் அவர் களிடம் ஒரு முறை எனது சந்தேகத்தை வெளியிட்டேன். அவர் தமது தாடியைத் தட விக்கொண்டு சிரித்தார். "அது டச்சுக்காரர் கட்டிய கட்டிடத்தின் வாயில். சங்கிலி மன் னன் காலத்துக்கு எத்தனையோ ஆண்டுகளுக் குப் பிற்பட்ட கட்டடத்தைப் பொது மக்கள் சங்கிலியரசனுடைய மாளிகையென்று நம்பு கிறார்கள். யாழ்ப்பாணச் சரித்திர மாறுபாடுக ளின் குசமசக்கான பின்னலை வெட்டிப் பிரித்து உண்மைப் பகுதிகளைத் தெரிந்தெடுப்பது தற் காலச் சரித்திர விஞ்ஞானத்திற்கு எட்டிய கரு மமன்று" என்று கூறினார்கள். ஆம். சுவாமி யவர்கள் கூறியதில் உண்மையிருக்கத்தான் செய்கிறது. யாழ்ப்பாண மக்களின் அடிமை வாழ்வுச் சின்னமாகிய இந்த வாயிலை டச்சுக் காரர் கட்டினர் என்பதை எவ்வளவு விரை வில் மறந்து விட்டோம். அதனைக் கலைச் சின்னமாகவும் பாராட்டத் தொடங்கிவிட் டோம். அங்ஙனமாயின் யாழ்ப்பாணத்தரசர் களைப்பற்றிய வரலாற்றிற் கட்டுக் கதைகள் பல இடம் பெற்றமை வியப்பன்று. அந்தகக் கவிவீரராகவனுக்குப் பரிசிலாக வழங்கப்பட்ட மணற்றிடல்தான் பின்னர் யாழ்ப்பாணமாயிற்று என்ற கட்டுக்கதையினைப் பலர் நம்பிவிட்ட னர். [1] இத்தகைய கதைகள் முற்றுக நீக்கப்பட்டு யாழ்ப்பாண நாட்டின் உண்மை வரலாறு இனிமேலாவது எழுதப்படவேண்டும். இத் துறையில் தொண்டாற்றிய இரு கண் மணிக ளாகிய **முதலியார் செ. இராசநாயகம்** அவர்களையும்; **நல்லூர் சுவாமி ஞானப்பிர காசர்** அவர்களையும் தமிழராகிய யாம் மறந்து விடக்கூடாது. இவர்கள் எழுதிய நூல்கள் தாம் யாழ்ப்பாணச் சரித்திரமாகிய இடியப்பச் சிக்கலை ஒருவாறு நீக்க உதவிபுரிந்துள்ளன.

இனி, வட இலங்கையை ஆண்ட அரசர் களின் வரலாற்றைச் சிறிது நோக்குவாம்:

இலங்கையின் வடபாகம் பண்டைக் காலத்தில் நாகதீவு என்றழைக்கப்பட்டது. இதனை நாகரிகம் வாய்ந்த நாகர் ஆண்டுவந்த னர். இலங்கையின் மேற்றிசையிலும் அதாவது கல்யாணியிலும் (களனி) நாகர் வாழ்ந்தனர் என மகாவம்சம் குறிப்பிடுகின்றது. [2] வட இலங்

---

1 யாழ்ப்பாடி-காலநிர்ணயந் தணந்த ஒருகட்டுக் கதை நல்லூர் வண. சுவாமி ஞானப்பிரகாசர். யூபிலித் தூதன் 1938

2. மகாவம்சம். 1—63.

கையில் நாகவழிபாடும் பரவியிருந்த தென்ப தற்கு நயினுதீவிலுள்ள நாகம்மாள் கோயில் சான்று பகரும். நாகதீவு என்ற பெயர் வட இலங்கை முழுவதற்கும் இட்டு வழங்கப் பெற்றதென்பது மகா வம்சத்திஞல் அறியக் கிடக்கின்றது. கௌதம புத்தர் இலங்கைக்கு இரண்டாந் தடவையாக வந்திறங்கிய இடம் நாகதீவு என இந் நூல் குறிப்பிடுகின்றது. மணிமேகலையெனும் நூல் இந்தச் சம்பவம் மணிபல்லவம் எனும் தீவில் நிகழ்ந்ததாகக் கூறுகின்றது. எனவே, நாகதீபம், மணிபல் லவம் என்பனவே யாழ்ப்பாணக் குடா நாட் டின் பூர்வீகப் பெயர்களாக விளங்கின. நாகர் ஆட்சிக்காலத்தில் கந்தரோடை சிறந்த இராச தானியாக விளங்கியது. பண்டைக்காலத்தில் வட இந்தியாவிலிருந்தும் தென்னிந்தியாவிலிருந் தும் வந்திறங்கியவர்களும், இங்கிருந்து புறப் பட்டுச் சென்றவர்களும் வட இலங்கையி லுள்ள மாதோட்டம், சம்புகோவளம், சிங்க புரம், காங்கேசன் துறை, வல்லுவெட்டித் துறை, பருத்தித் துறை, கொழும்புத் துறை, திருக்கோணமலை முதலிய துறைமுகங்களையே உபயோகித்துள்ளார். தென்னிலங்கைத் துறை முகங்கள் பிரபல்யமடைவதற்கு முன் போர்த் துக்கீசர் காலம்வரை வடஇலங்கைத் துறை முகங்கள் உபயோகிக்கப்பட்டு வந்தன என்று சரித்திரம் பேசுகின்றது.

வட இலங்கையிற் செங்கோல் ஓச்சிய ஆரியச் சக்கரவர்த்திகளைப்பற்றி மகா வம்சம் மௌனம் சாதித்தாலும் அயல்நாட்டுப் பிரயா ணிகள் ஒருபாற் கோடாது உள்ளதை உள்ள வாறே எடுத்தியம்பியுள்ளனர். கி. பி. 1344 ல் இலங்கைக்கு வந்தடைந்த முஸ்லிம் பிரயாணி இபன் பத்தூதா சிலநாள் ஆரியச்சக்கரவர்த்தி யின் நாட்டில் தங்கியிருந்தார். அவர் எழு திய குறிப்புக்களிலிருந்து யாழ்ப்பாண நாடு நீர் வளம், நிலவளம், குடிவளம், கலைவளம் முத லாய பலவகை வளங்களினுலும் சிறப்புற்று விளங்கியது என அறிகின்ருேம். இவன் ஆரியச் சக்கரவர்த்தியினுடைய கடற்படை வலிமை யினை வாயாரப் புகழ்ந்திருக்கின்ருன். இந்தப் பிர யாணி யார் என்பதை முதலில் அறிந்து கொள்ள வேண்டும்.

இபன் பத்தூதா.

இவர் ஆபிரிக்காக் கண்டத்தில் உள்ள தாஞ்சியர் (Tangier)) என்ற இடத்தில் 1300-ம் ஆண்டளவில் பிறந்தார். இஸ்லாமிய மதத்தைச் சேர்ந்தவர். இருபத்திரண்டாம் வய திலே தனது தாய் நாட்டிலிருந்து புறப்பட்டு, அடுத்த முப்பது வருடம் வரை சுற்றுப் பிர யாணங்களில் ஈடுபட்டார். இலங்கையிலுள்ள ஆதம் மலையை (Adam's Peak) வழிபட்டுச் செல்லவே இலங்கைக்கு வந்தார். இவர் 1377ல் பெஸ் (Fez) என்ற இடத்தில் இறந்தார். இவர் தாமாகவே பிரயாண நினைவுகளை நூலாக எழுதவில்லை. ஆனுல் தான் தரிசித்த இடங்களையும் கண்ட அதிசயங்களையும், கேட் டறிந்த சரித்திரங்களையும் வாயாற் சொல்ல வேருெரு எழுதுவினைஞர் எழுதிக்கொண்டார். இவர் எகிப்திலுள்ள கெயிரோ பட்டணத் துக்கு வந்து, அங்கிருந்து செங்கடல் வழியாக ஆபிரிக்காவின் கிழக்குக் கரையைச் சுற்றி மீண்டு கெயிரோ வந்து சேந்தார். இங்கிருந்து பின்னர் ஐரோப்பாவிற் சில நாடுகளைத் தரி சித்து, பின் காபூலுக்கு வந்து இந்துகுஷ் மலை யைக் கடந்து 1333 ம் ஆண்டளவில் சிந்து நதிதீரம் வந்து சேர்ந்தார். பின் தென்னிந்தியா விலுள்ள கள்ளிக் கோட்டை வந்து அங்கி ருந்து சீனுவுக்குச் செல்லும் வழியில், இலங்கை, வங்காளம், பர்மா சுமத்திரா, ஜாவா முதலிய இடங்களில் இறங்கினுர். இவ்வாறு பல இடங்களில் சுற்றுப் பிரயாணம் செய்தார்.

கி. பி. 1344ல் இபன் பத்தூதா இலங்கைக்கு வந்து சேர்ந்தார். இவர் வந்திறங்கிய இடம் புத் தளம் என்று சரித்திரவறிஞர் கருதுகின்றனர் இவர் நம் நாட்டிற்குவந்த காலத்தில் வடஇலங் கையிருந்த நிலைமையையும், நாகரிகத்தையும் இவர்வாயிலாக நாம் அறிந்து கொள்ள முடி கிறது

இபன் பத்தூதா புத்தளத்திற்றுன் வந்திறங்கினுன் என்பதை உறுதிப்படுத்த வேறெரு கதையும் புத்தளத்திற் சொல்லப்படுகின்றது. புத்தளத்திலிருந்த முக்குவருக்கும் கரையாருக்குமிடையே போர் நிகழ்ந்ததென்றும், முக்குவப் படைத்தலைவனுகிய வெடியரசனுக்கு இபன் பத்தூதாவின் மதத்தைச் சேர்ந்த முஸ்லீம்கள் மீரா என்பவனுடைய தலைமையில் உதவி செய்தனர் என்றும், இதனுல் மாணிக்கத்தலைவன் எனும் கரையாரத்தலைவன் கொல்லப்பட்டான் என்றும், அவன் மாண்ட இடம் இப்பொழுதும் மாணிக்கன்புற்று என்றழைக்கப்படுகின்றதென்றும், முஸ்லீம்கள் செய்த நன்றியை மறவாமல் முக்குவர், முஸ்லிம் மதம் தழுவினர் என்றும், இதனுல் புத்தளப் பகுதியிலுள்ள முஸ்லீம் மக்களுக்குத் தமிழ்ப்பெயர் பண்டைக்காலத்தில் இடப்பட்டன என்றும் செவிவழி வந்த கதையுண்டு. இபன் பத்தூதாவின் கப்பலில் வந்த முஸ்லீம் மக்கள் முக்குவருக்கு உதவிபுரிந்தார்கள் எனவுங் கூறுப.[3] வடஇலங்கையை 1344ல் ஆண்ட ஆரியச் சக்கரவர்த்தியைப்பற்றி இபன் பத்தூதா கூறியவற்றைக் கவனிப்போம்.

[4] (இலங்கையை நோக்கிப் பாய்விரித்தோடுகையில்) செறன்டீப்பு (தீவின்) பருவதம் புகைத்தம்பம் போல ஆகாயத்தையளாவி நிற்கக் கண்டோம். தீவைச் சமீபித்தபோது, கப்பற்காரர் சொல்லுவார்கள்; "இந்தத் துறைக்குடையவனுகிய சுலுத்தானுடைய நாடுகளில் வியாபாரிகள் சேமமாய்ப்போக முடியாது இது ஆய்பிரிசகரவுவதி என்னும் சுல்தானுடைய தேசம். இவன் அநியாயமும் கொடுமையுமுள்ளவன். ஆழியிற் கடற்கொள்ளையாடுகின்ற கப்பல்களையுடையவன்" என்ருர்கள். ஆதலால் அவனுடைய துறைமுகத்தில் கரைபிடிக்கப் பயந்துகொண்டிருக்கையில், காற்றுமோதத் தொடங்கினதினுல், அமிழ்ந்திப்போவோமோ என்று அஞ்சவேண்டியிருந்தது. அவ்வேளை நான் கப்பித்தானை நோக்கி, "என்னை இறக்கிவிடும், இந்தச் சுலுத்தானிடம் எங்கள் பயணத்துக்கு அஞ்சாப் பட்டயம் வாங்கித் தருகிறேன்" என்றேன். கப்பித்தான் என் கேள்விக்கிசைந்து என்னைக் கரையிலிறக்கிவிட்டான். விக்கிரகாராதனைக்காரர் எங்களை எதிர்கொண்டு வந்து "நீ யார்?" என்ருர்கள். நான் சோழமண்டலச் சுலுத்தானுக்குப் பெண்கொடுத்த மைத்துனனும் நண்பனுமென்றும், அந்தச் சுலுத்தானைக் காணப் போய்க்கொண்டிருக்கிறேனென்றும், எங்கள் கப்பலிலிருந்த பொருட்களை அவனுக்குப் பரிசிலாகக் கொண்டு போகிறேனென்றும் உத்தரமளித்தேன். அந்தச் சுதேசிகள் போய்த் தங்கள் அரசனுக்கு எனது விடையை அறிவிக்கவே, அவன் என்னை வரவழைத்தான். நான் அவனுடைய இராசதானியாகிய பத்தாள நகரில் அவனைப்போய்ச் சந்தித்தேன். அது மரத்தாலான கொத்தளங்களோடு கூடிய மதிலினுற் சூழப்பட்ட அலங்காரமான ஒரு சிறு இடம். அதற் கணிமையான கடற்கரையெல்லாம் அருவிகள் அள்ளிக்கொண்டு வந்துவிட்ட கறுவா அடி மரங்களால் நிறைந்திருந்தது. இம்மரங்கள் கரையிலடுக்கியிருப்பது சிறு குன்றுகள்போலத் தோன்றியது. இவற்றைச் சோழ மண்டலத்தாரும், மலையாளத்தாரும் சுலுத்தானுக்குப் புடவைகள் முதலிய சந்திப்புகள் மாத்திரங் கொடுத்துப் போட்டு வேறு கிரயம் ஒன்றுஞ் செலுத்தாமலே இனுமாக ஏற்றிக்கொண்டு போவார்கள். சோழமண்டலத்துக்கும் செறன்டீப் புத்தீவுக்குமிடையில் ஒரு பகலுமிரவுங்கொண்ட தூரமுண்டு. இந்தத் தீவில் திரளான சம்பங்கியும் இந்தியத் தாழையுமுண்டு. இத் தாழை "அல்கலக்கி" எனப்படும். ஆயினும் இது "கமாலி"யையாவது "காகவுலி"யையாவது ஒத்ததல்ல. இதனைப் பற்றி மீண்டு பேசுவோம்.

இலங்கையின் சுலுத்தானுக்கு ஆரியச் சக்கரவர்த்தி என்று பெயர். அவன் கடல்மேல் பராக்கிரமம் படைத்த ஓர் அரசன். நான் சோழமண்டலக் கரையிலிருந்தபோது அவனுடைய பெரிதுஞ்சிறிதுமான கப்பல்கள் நூறு, ஒருநாளில் அங்கு வந்து சேரக் கண்டேன். துறைமுகத்திலே அந்த நாட்டின் சுலுத்தானுடைய கப்பல்கள் எட்டு (அராபியாவிலுள்ள) யேமனுக்குப் பயணம் பண்ணவேண்டியவைகளாய் அங்கு நின்றன. அரசன் இவைகளைப் புறப்படத் தயாராகக் கற்பித்து இவைகளைக் காவல் பண்ண ஆட்களையும் நியமித்தான். சிங்களவர் (யாழ்ப்பாணத்தரசனுடைய கப்பற்காரர்) இவைகளைப் பிடிக்கத் தங்களுக்கு சமயம் வாய்க்காதது கண்டு

---

3 சைமன் காசிச்செட்டி எழுதிய 'கசற்றீயர்" எனும் நூலிலும், திரு. எம் டி. இராகவன் எழுதிய "முக்குவர்" எனும் நூலிலும் (கையெழுத்துப் பிரதி இதன் தமிழாக்கம் எம்மால் விரைவில் வெளியிடப்படும்) முக்குவர் வரலாறு விரிவாகக் கூறப்பட்டுள்ளது முக்குவர் பண்டொரு ஞான்று வலிமைமிக்க குழுவினராக விளங்கினர் என்பது மறுக்கொணுத உண்மையாகும்.

4 நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரின் மொழிபெயர்ப்பைத்தழுவியது.

"யேமனுக்குப் போகவேண்டியவைகளாயுள்ள எங்கள் மரக்கலங்களைப் பாதுகாக்கவே நாங்கள் இங்கு வந்தோம்" என்றார்கள்.

விக்கிரக உபாசகச் சுலுத்தானின் சந்நிதியிலே நான் சென்றபோது அவன் எழுந்து, தன் பக்கத்தில் என்னை உட்காரச் செய்து, மிகவும் தாராள குணத்தோடு என்னுடன் சம்பாஷித்தான். "உன்னுடைய கூட்டாளிகள் யாதொரு பயமுமில்லாமல் கரையிலிறங்கட்டும். இங்கிருந்து போகுமட்டும் அவர்கள் எனது விருந்தாளிகளாவார்கள். எனக்கும் சோழமண்டலச் சுலுத்தானுக்குமிடையில் ஓர் ஐக்கியக் கட்டுப்பாடுண்டு" என்று உரைத்ததோடு, எனக்கு ஒரு விடுதியும் அமைப்பித்தான். நான் மூன்று நாள் அவனுடன் தங்கினேன். ஒவ்வொரு நாளும் எனக்கு அதிகமதிகமான மரியாதைகள் நடந்தன. அவன் பார்சிக பாஷை அறிந்திருந்தான். அன்னிய அரசர்களையும் தேசங்களையும் பற்றி நான் எடுத்துச் சொல்லியவையெல்லாம் அவனுக்கு உருசிகரமாயிருந்தது. ஒரு நாள் நான் அவன் சமுகத்திலே பிரவேசித்தபோது அவனது இராச்சியத்திலுள்ள முத்துக்குளிப்புக்களிலிருந்து வந்த முத்துக்கள் தொகையாக அவனுக்கருகில் இருந்தன. அரச ஊழியர்கள் விலையேறப்பெற்ற வைகளையும் விலை குறைந்தவைகளையும் வேருகத் தெரிந்துகொண்டிருந்தார்கள். அரசன் என்னை நோக்கி:-

"நண்பனே! உனது தேசப்பகுதிகளில் முத்துக்குளிப்பு நடக்கக் கண்டிருக்கிருயா?", என்று கேட்டான்

**பத்தூதா:** ஆம். அரசே! ஈபன் அசவுவா மேலிக்குச் சேர்ந்த கயிஸ் தீவிலும், கெச் தீவிலும் பார்த்திருக்கிறேன்.

**அரசன்:** நானும் அவைகளைப்பற்றி கேள்விப் பட்டிருக்கிறேன். (சில முத்துக்களைக் கையில் எடுத்து) இவற்றுக்குச் சமமான முத்துக்களை அந்தத்தீவிற் கண்டிருக்கிருயா?

**பத்தூதா:** அரசே! தங்கள் கேள்வி எனக்கு வியப்பைத் தருகிறது. இத்தனை விசேஷமான முத்துக்களை நான் எங்குமே கண்டதில்லை. ஆனல் இவற்றிலும் குறைவான முத்துக்களையே பார்த்திருக்கிறேன்.

**அரசன்:** (புன்முறுவலுடன்) இந்த முத்துக்கள் உனக்குத்தான். வெட்கப்பட வேண்டாம். உனக்குத் தேவையானது எதுவோ அதைக் கேள். இம்.... தேவையானதைக் கேள்.

**பத்தூதா:** அரசே! ஒன்றும் வேண்டியதில்லை ஆனல்........

**அரசன்:** ஆனல் என்ன! பயப்படாமற் கேள், இபன் பத்தூதா.

**பத்தூதா:** அரசே! இந்தத்தீவில் நான் வந்திறங்கிய பின் கீர்த்திவாய்ந்த ஆதாமின் பாதத்தைப் போய்த் தரிசிப்பதற்கொழிய வேறென்றுக்கும் ஆசை கொள்ளவில்லை.

**அரசன்:** இந்த ஊர்ச்சனங்கள் ஆதி மனுடனை பாபா (பிதா) என்றும், ஏவாளை மாமா (மாதா) என்றும் அழைக்கிறார்கள். பத்தூதா! உனது ஆசையைப் பூர்த்தி செய்வது எனது கடமை. அது பெரிய கஷ்டமான காரியமல்ல.

**பத்தூதா:** இதுதான் எனது விருப்பம், மகாராசா! நான் வந்த மரக்கலம் கோடிக்கரைக்குச் சிந்தாயாத்திரையாய்ப் போகும். நான் ஆதமலை யாத்திரையை முடித்துக் கொண்டு திரும்பி வந்ததும், என்னைத் தங்கள் கப்பல்களில் அனுப்பிவைக்க இயலுமா என அறிய விரும்புகிறேன்.

**அரசன்:** தடையில்லை. கப்பல்கள் ஒன்றல்ல. பலவுள. தாராளமாக அனுப்பிவைப்பேன். அதைப்பற்றிய கவலையே உனக்கு வேண்டியதில்லை.

**பத்தூதா:** வணக்கம் மகாராசா! நான் தங்களிடம் விடைபெற்றுக் கொள்கிறேன்.

**அரசன்:** வாழ்க!

இவ்விஷயத்தை நான் கப்பலின் கப்பித்தானுக்கு அறிவித்தபோது அவன், "நீ மீளும் வரையும் நான் போகமாட்டேன்; உன்னை ஒரு வருஷமட்டும் காத்திருக்க வேணுமானாலும் இருப்பேன்" என்றான். இதை நான் சுலுத்தானுக்குச்சொல்ல அவன் 'நீ மீளும்வரையில் கப்பித்தான் என் விருந்தாளியாயிருக்கட்டும்' என்றான். **பின்பு தன்னுடைய அடிமைகள் என்னைத் தோளிலே சுமந்துகொண்டுபோக ஒரு பல்லக்குத்தந்து, திருப்பாதத்தைத் தரிசிக்க வருஷந்தோறும் போகின்றவர்களான யோகிகளுள் நால்வரையும் எனக்குத்துணையாக அனுப்பினான். இன்னும் மூன்று பிராமணரும், தன் சிநேகிதர்களுள் மேலும் பதின்மரும், உணவுப்பொருட்களைச் சுமந்துகொண்டு போகப் பதினைந்துபேரும் எங்களோடு போகச் செய்தான்.** தண்ணீரைப் பற்றிக் கவனிக்க வேண்டியதாயிருக்கவில்லை. அது வழியில் ஏராளமாயிருந்தது.

நாங்கள் புறப்பட்டதினத்தில் மூங்கிலால் செய்த ஓடத்திலேறி ஒரு ஆற்றைக்கடந்து அதன் சமீபத்தில் விடுதிவிட்டோம். இங்கிருந்து, சுலுத்தானுடைய தேசத்தின் அந்தத்திலுள்ள சிறந்த பட்டணமாகிய மேனார்மெந்தலிக்குச் சென்றோம். அங்குள்ளசனங்கள் எங்களுக்கு முதற்றரமான விருந்தளித்தார்கள். அண்மையான காட்டிலே வேட்டையாடி உயிரோடுபிடித்த எருமைக்கன்றுகளின் மாமிசம் சோறு நெய், மீன், கோழிக்குஞ்சு, பால் இவைகள் பரிமாறப்பட்டன. இந்தப் பட்டணத்திலே நாங்கள் ஒரு மகமதியனையாவது காணவில்லை. கொறாசன் எனுமிடத்தவனாகிய ஒருவன் மட்டும் வியாதியினால் இங்கு தரித்திருந்தவன் எங்களோடு கூடவருவேனென்றான். பின்பு நாங்கள் பெண்டர் செலாவுத் எனும் சிறு பட்டணத்துக்குச் சென்று அப்பால் கரடுமுரடான பிரதேசங்களைக் கடந்துபோனோம். அவ்விடம் அனேகமாய் வெள்ளம் படிந்திருந்தது. ..... அப்பால், தீவின் பிரதான அரசனுடைய வாசஸ்தானமாகிய கொனகார் எனும் பட்டணத்தைச் சேர்ந்தோம். இது ஒரு பெரிய பள்ளத்தாக்குக் கருகில் இரண்டு மலைகளுக்கிடையிலுள்ள கணவாயிற் கட்டப்பட்டிருக்கிறது. சொல்லிய பள்ளத்தாக்கில் மாணிக்கங்கள் அகப்படுகின்றமையால் அதற்கு மாணிக்கப் பள்ளத்தாக்கு என்று பெயர். கொனகாரின் சுலுத்தானுக்குக் கோனார் என்று பெயர்.

5 a, b "உள்ளங்கையளவு பருமனுள்ள இரத்தினக்கற்கள் இழைத்த அழகிய கிண்ணமொன்றினையும் சுல்தான் ஆரியச் சக்கரவர்த்திக்கு அருகாமையிற் கண்டேன். தாழம்பூ அத்தர் இந்தக் கிண்ணத்தில் இருந்தது. இதனைக்கண்டு யான் வியப்புற்றபோது, 'இதைப்போன்ற இரத்தினக் கற்கள் பதித்த பெரிய பொருட்களும் நம்மிடமிருக்கின்றன" என்று சுல்தான் என்னிடம் கூறினான்."

சிங்கள நாடுகளுக்கூடாக எவ்வித தங்கு தடையுமின்றி ஆரியச் சக்கரவர்த்தி அனுப்பிய ஆட்கள் இபன்பத்தூதாவுடன் செல்லக்கூடியதாக இருந்ததை நோக்குமிடத்து அவ்வரசனுடைய செல்வாக்கு நன்கு புலனாகின்றது. அவன் பாரசீக மொழியிற் சரளமாகப் பேசியதால் அவனுடைய கல்வி நன்கு புலப்படுகிறது. பதின்மூன்றும் நூற்றாண்டு தொடக்கம் பதினேழாம் நூற்றாண்டு வரை ஆரியச் சக்கரவர்த்திகள் வலிமை மிக்குடையவர்களாகக் காணப்படுகின்றார்கள். இவர்கள் அனுராதபுரத்தரசர்களைப் போரிற் தோல்வியுறச் செய்தார்கள் என்பதைக் கோட்டகம சாசனம் குறிப்பிடுகின்றது.

---

5 a. Journal of the Ceylon Branch of the Royal Asiatic Society—1882 Extra No. Ibn Batuta in the Maldives and Ceylon: Translated from the French of M. M. Defremery and Sanguinetti by Albert Gray, M. R. A. S, late of the Ceylon Civil Service:- PP 37-44

(b) Foreign Notices of South India — From Megasthenes to Ma Huan–Prof. K. A. Nilakanta Sastri.

ஆனுல் பௌத்த சமய வரலாற்றைக் கூறும் மகாவம்சம் [6] மௌனம் சாதிக்கின்றது. சோழர் படையெடுப்புக்களைக்கூட இந் நூல் கூறுதுவிட்டதைத் தொல்பொருட் கலை அறிஞர் டக்டர், பரணவித்தான அவர்களே ஒரு கட்டுரையில் காட்டியிருக்கின்றுர்கள். [7] ஆரியச் சக்கரவர்த்திகளைப்பற்றி முதன் முதலாக விரிவாக ஆராய்ந்தெழுதியவர் முதலியார் செ. இராசநாயகம் அவர்களே. சரித்திர ஆராய்ச்சியறிஞரும் அடியேனுக்கு யாழ்ப்பாணச் சரித்திரக்குறிப்புக்கள் பலவற்றைத் தந்து அத்துறையில் நாட்டஞ் செலுத்துமாறு தூண்டிவந்த பெருந்தகையாளரும் ஆகிய முதலியார் செ இராசநாயகம் அவர்கள் எழுதியிருப்பதனை ஈண்டெடுத்துக்காட்ட விரும்புகின்றேன். யாழ்ப்பாணத்தைச் செகராசசேகரன், பரராசசேகரன் என்ற சகோதரர் இருவர் ஆண்டனர் என்றும் யாழ்ப்பாணச் சரித்திரம் எழுதினேர் வரைந்து வைத்தனர். இதனை நம்பி ஈழநாட்டுப்புலவர் வரலாறு எழுதப் புகுந்தோரும் செகராசசேகரன், பரராசசேகரன் ஆகிய புலவர் இருவரைப் பற்றியே குறிப்பிட்டுப் பெரும் மயக்கத்தை ஏற்படுத்திவிட்டனர். பதின்மூன்றும் நூற்றுண்டு தொடக்கம் பதினேழாம் நூற்றுண்டு வரை தொடர்ந்து விளங்கிய யாழ்ப்பாண இராச்சியத்தைச் சகோதரர் இருவர் ஆட்சிபுரிந்தனர் என்பது முழுப்பூசினிக்காயைச் சோற்றில் புதைப்பதாகவே முடியும். இனி முதலியார் ஆரியச் சக்கரவர்த்திகளைப்பற்றிக் கூறியிருப்பதை அவதானிப்போம்.

---

6 "The Mahavamsa is essentially a history of Buddhism in ceylon and not a secular history of ceylon.

It deals with those things of Ceylon whose benifactions to Buddhism were the greatest and pass over those with rare exception who were not Buddhists with comparatively short notice"-S. Krishnasamy Ayangar. "Some contribution of South India to Indian culture-"p 90

7 Three chola Invasions of Ceylon not recorded in the Mahavamsa-Paranavithana, S. RASCB Vol. xxi-No32. pp 384-387



**ஆரியவரசர் தோற்றம்:**

கி. பி. எட்டாம் நூற்றுண்டு தொடக்கம் கலிங்க வரசனுகிய உக்கிரசிங்கனும் அவன் வழியினரும் சில காலம் தனியரசினராயும், சிலகாலம் சோழவரசுக்கும் பொலன்னறுவையரசுக்குங் கீழடங்கியும் சிங்கைநகரிலரசு புரிந்து வந்தார்கள் இலங்கையிற் செங்கோலோச்சியமன்னருள், புகழ், வெற்றி, ஆளுகை, குடியோம்பல் முதலிய செங்கோன்மைகளால் ஒப்பாரும் மிக்காருமின்றித் தனியரசு நடாத்திய பராக்கிரமவாகுவும், அவன் பின் பொலன்னறுவையிலரசு செய்தார் சிலரும், சிங்கை நகரரசர் வமிசத்தினரே. இச்சிங்கை நகரரசர்கள் வேற்றரசர்களால் நாற்றிசையிலுந் தாக்கப்பட்டு இடருழந்தாரெனினும், நானூறு ஆண்டுகளுக்குள் ஆண்மையும் வலிமையுஞ் சிறக்க, வசியும் வளனும் பெருக, கடற்படையோடு தரைப்படை வலியுங் கொண்டு இலங்கை முழுவதும் ஒரு குடைகீழ் ஆளும் ஆற்றல்படைத்திருந்தார்கள். அவர்கள் இராமேச்சரத்துப் பிராமணவாச குடியிற் சம்பந்தஞ் செய்த [8] பின், உபவீதம் அணிந்து, ஆரியவாசர் என நாமம் புனைந்து, இராமேச்சுரத்தைத் தந்தேயத்தினுளுகைக்குட்படுத்தி, அதனுல் "சேதுகாவலன்" எனப் புதுப்பெயர் புனைந்து, விடைக்கொடியுஞ் சேதுலாஞ்சனையும் [9] பொறித்து ஒருவர் பின்னெருவராகப் பரராசசேகரன், செகராசசேகரன் எனச் சிங்காசனப் பெயர்கள் பூண்டு உலகம் போற்ற அரசு செலுத்திவந்தார்கள். [10]

---

8. யாழ்ப்பாணக் கலிங்கவரசர் இராமேச்சுரப் பிராமண வம்சத்திற் சம்பந்தஞ் செய்த வரலாற்றைப் பற்றிப் போர்த்துக்கேய நூலாசிரியர் கைரேஸ் என்பவரின் இலங்கை வெற்றியைப்பற்றிய நூல் 1ம் புத்தகம், 7ம் அதிகாரம் பார்க்க. அச்சம்பவத்தைக் கர்னபரம்பரையாகவறிந்து பேட்டொலாச்சியுங் காசிச்செட்டியுமெழுதியிருக்கிறுர்கள்.

9. இச்சுதந்தரங்கள், இராமேச்சுரம் நிருமித்த காலத்தில் இராமபிரானுல் நியமித்த பிராமண வரசர்களுக்கு, அவரால் கொடுபட்டதென்று செகராசசேகரமாலை கூறும்.

"பூசனை செய்மினீரெனக் கருணை புரிந்தவர் தங்களிலிருவர்
காசினி தாங்கும் படி வரங்கொடுத்துக் கமழ் செழுந் துளபமாலிகையு
மாசறு சுருதி யாரிய வேந்தென் றமணிப் பட்டமுங் கொடுத்துத்
தேசுறு குடையு மொற்றையும் வெற்றித் திகழ்விடைத் துவசமு நல்க"

10. யாழ்ப்பாணச் சரித்திரம் பக். 46-47—முதலியார் செ. இராசநாயகம்.

"யாழ்ப்பாணத்தரசர் தென்னுட்டினரே. ஆரியர் தொடர்பைக் கற்பித்துக் கூறுவது ஒரு பெருமையாகக் கருதப்பட்ட காலம் அந் தக்காலம்'' எனக் கூறுவாருமுளர். இது நன்கு ஆராயப்படவேண்டிய தொன்ருகும். இதனை ஈண்டு விரித்துக் கூறல் மற்ருென்று விரித்த லாகுமாதலின் கூருதுவிடுகின்ருேம். இதனைப் பிறிதொரு சந்தர்ப்பத்திற் காலம் வாய்ப்புழி ஆராய்வாம்.

பரராசசேகரன், செகராசசேகரன் என்னும் சிங்காசனப் பெயர்கள் யாழ்ப்பாண அரசர்களுக்கு மாறி மாறி வழங்கப்பெற்றன என்ற உண்மை யினை உணர்ந்துகொள்ள வேண்டும். மார்த்தாண்ட சிங்கையாரியன் பரராசசேகரன் எனும் நாமத் துடன் அரசுகட்டிலேறிய காலத்திற்ருன் இபன் பத்தூதா புத்தளத்தில் ஆரியச் சக்கரவர்த்தி யைச் சந்தித்தான் என முதலியார் இராசநாயகம் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

ஆதம் மலைக்கு யாத்திரை சென்ற இபன் பத்தூதா திரும்பி வரும்பொழுது தென்சமுத் திரக் கரையிலிருக்கும் தேவிநுவரையைத் தரி சித்தான் என்றும்; அங்குள்ள மிகப் பெரிய **இந்து ஆலயத்தில்** ஓர் ஆள் அளவு உயர மான தங்க விக்கிரகமும், ஆயிரம் அந்தணர் களும் யோகிகளும், கோயிற் சந்நிதியில் நாடோறும் நடனமாடும் 500 தேவ தாசிகள்வரை இருந்தார்கள் என்றும் தனது நூலிற் குறிப்பிட் டிருக்கின்ருன். ஆகவே அக்காலத்தில் இந்து சமயம் வட இலங்கையில் மட்டுமன்றி, தென் னிலங்கையிலும் செறிந்திருந்தது என்பது தேற்றம்.

தமிழர் பழம்பெரும் குடியினராக இருந் தும் தங்கள் சரித்திரத்தை எழுதி வைக்கவில்லை. கி. பி. பதினேழாம் நூற்ருண்டுவரை தமிழில் சரித்திர நூல்கள் எழுதப்படவில்லை. தமிழ் நாட்டில் இருந்த அரசர்களைப் பற்றியோ வள் ளல்களைப்பற்றியோ புலவர்களைப் பற்றியோ, முறையாகத் தமிழர் எழுதிவைக்கவில்லை. யாழ்ப் பாணச் சரித்திரத்துக்கு மூல நூல்களாயுள்ள **இராச முறை** எந்த மூலையில் வைத்திய ஏட் டுப் பிரதிகளுடன் ஒளித்துக்கொண்டிருக் கிறதோ தெரியவில்லை. செல்லுக் கிரையாகி மாண்டுவிட்டதோ என்பதும் தெரியவில்லை. இதனைத் தேடியெடுத்து வெளியிட முயல்வது யாழ்ப்பாணத் தமிழரின் தலையாய கடனுகும். இது வெளிவரும்வரை சிறிதளவு விளக்கம் தருவது மாதகல் மயில்வாகனப் புலவர் எழு திய யாழ்ப்பாண வைபவ மாலையே.

## வரலாற்று நூல்கள்

நாட்டுப்பற்றை வளர்க்கும் கருவியாகவரலாற்று நூல்கள் அமைய வேண்டும்; ஆனல், பெருமக்கள் சிலரின் வாழ்க்கை வரலாறுகளின் தொகுப்பாக அவை அமைந்து விடுவதும் உண்டு. பொருமையையும் கருத்து வேறுபாடுகளையும் வளர்க்கவும், சில குறிப்பிட்ட கருத்துக் களைப்பரப்பவும் அரசியலார்கள் விரும்பும்போது, தம் நோக்கத்துக்கு ஏற்றவாறு நூல்களை உருவாக்கச் சிலரை ஏவி விடுவர். எனவே, இவ் வகை நூலை எழுதுவது கடினமான ஒரு செயலாகிவிட்டது.

— சோம. இலக்குமணச் செட்டியார்.

# அரசாங்கமும் மக்களும்.

ஆங்கில மூலம்:
திரு. கே. நேசையா M. A. Dip. in (Ed.)
விரிவுரையாளர், (கல்விப் பகுதி)
இலங்கைப் பல்கலைக்கழகம்.

தமிழாக்கம்:
செல்வி. சு. இராசா B. A.
விரிவுரையாளர்,
சைவாசிரிய கலாசாலை, யாழ்ப்பாணம்.

தற்காலத்தில் அரசு ஓர் முக்கிய இடத்தை வகிக்கின்றது. இது ஒன்றுதான் மக்களின் நல் வாழ்வுக்கு உதவும் வழிவகைகளை ஆக்கிக் கொடுக்கமுடியும். இதுநாட்டின் மூலப்பொருள் களையும், மனித பலத்தையும் நாட்டிற்குப் பயன் அளிக்கக் கூடிய முறையில் உபயோகப் படுத்த உதவிசெய்யலாம். ஓர் சிறந்த அரசு, நாக ரீக வாழ்க்கைக்குரிய வசதிகளையேற்படுத்தி, கலை, விஞ்ஞானம், நற்சிந்தனை ஆகியவைவ வளர்ச்சியுறக்கூடிய சூழ்நிலையை அமைக்க வேண்டும். ஒரு சமுதாயத்தைச் சிறந்த ஜன நாயக சமுதாயமாக்குவதுதான் ஒரு ஜனநாயக அரசின் கடமையாகும். ஜனநாயக சமுதாயத்தை அடிப்படையாகக் கொள்ளாத எந்த அரசும் பூரணஜனநாயக தன்மையுடையதாயிருக்க முடி யாது. எனவே அரசு நன் முறையில் அமைய வேண்டுமாயின் மக்கள் குடியியற் பண்புள்ள வர்களாய்ப் பூரண வளர்ச்சியடைந்தவர்களாய் இருக்க வேண்டும்.

தற்பொழுது சகல விடயங்களிலும் அரசு முக்கிய இடத்தை வகிப்பது உண்மைதான். ஆனல் அரசு தன் அதிகாரத்தை விரித்துச் செல்வதற்கும் ஓர் எல்லையுண்டு. எல்லையைத் தாண்டி மற்றைய கழகங்கள் குழூஉக்கள், ஆகியவற்றின் உரிமைகளில் தலையிடுவதும், தனிமனிதனின் சுதந்திரத்தைப் பாதிப்பதும், அரசின் அதிகார எல்லைக்கு அப்பாற்பட்டவை.

தற்பொழுது அரசின் அதிகாரம் வளர்ந்து கொண்டே செல்வது மனித சுதந்திரத்திற்கு ஒரு பயமுறுத்தல் போன்றுள்ளது. பிரஜை களின் சுதந்திரத்தையும், பாதுகாப்பையும் பேணிக்கொள்வதற்காகத் தோன்றிய அரசே, சுதந்திரத்தைப் பயமுறுத்தும் பயங்கரப் பொரு ளாக வளர்ந்துசெல்வது ஆச்சரியமானதே. தற்போது அரசாங்கத்தால் மேற்கொள்ளப் படும் பல்வேறு விடயங்கள், மகத்தான பொருளாதார ஆக்கத் திட்டங்கள், இன்னும் மக்களுக்குப் பயனளிக்கும் சேவைகள், என் னும் இவைகளே மத்திய அரசாங்கத்தின் அதிகார வளர்ச்சிக்குக் காரணமானவை. முற் காலத்திலுள்ள அதிகாரம் படைத்த அரசர் கள் போன்று அதிகாரப்பற்றுள்ள தற்கால அர சியல் வாதிகளுக்கு, அரசாங்கத்தின் அதிகார வளர்ச்சி அபாயமாகவோ, அன்றிப் பிழையா கவோ தெரியவில்லை. அவர்கள் அதிகார தோரணையில் மக்களிடம் எல்லாவற்றையும், பிரதானமாகக் கல்வி, சமயம் போன்றவற் றைத் திணிக்கப் பார்க்கின்றனர். இதனுற் காலப்போக்கில் தனிப்பட்டவனின் ஆற்றல், தனித் தன்மை, எல்லாம் ஒடுங்கி மாண்டு மடிய. அவன் வெறும் இயந்திரமாய் மாறி விடுவான். இந்த நிலையில் தனிப்பட்ட மனித னுக்கு முக்கியத்துவம் ஏது? ஒருவன் வாக் களிக்கும் நிலையத்திற்கு வண்டியில் ஏற்றிச் செல்லப்படுகின்ருன். அங்கே தன் வாக்கை அளித்துவிட்டு வீடு செல்கின்ருன். அதன் பின் னர் அவன் அரசாங்கத்தின் சட்ட நிரூபணத் தில் பங்கெடுத்துக்கொள்வதில்லை, அவனின் அனுமதி கேட்கப்படுவதுமில்லை. தனது வாக்கையளிப்பதோடு அவன் திருப்திப்பட வேண்டியிருக்கின்றது. இதுதான் அரசியல் சுதந்தரத்தின் அர்த்தம் போலும்.

நாட்டின் நன்மைக்காகவே இயங்கும் அரசியலாயிருப்பினும். அங்கேயுள்ள பிரஜை கள் அரசாங்கத்தோடு சமமாக நின்று சம அதிகாரம் உடைய பங்காளிகள் போன்று செயலாற்ருது, பணம் கொடுக்கும் எஜமான

னிடம் பணம் பெறும் கூலியாட்கள் போன்று இருந்தால், அவ்வரசு தான் தோன்றியதன் நோக்கத்தை மறந்து, வரம்பு கடந்த அதிகாரம் படைத்த பயங்கர சாதனமாய் மாறிவிடும். இந்த நிலையில், அந்த அரசியலில், பொலிஸ் படையினதும், அரசியல் வாதிகளினதும் அதிகாரமே வியாபித்து நிற்கும். அரசாங்கத்தின் ஆயுத பலம் தலையெடுத்து நிற்பின் அடக்கு முறைதான் தாண்டவமாடும்.

இலங்கை போன்ற ஆசிய நாடுகளில் அரசியல் நிலை மோசமாயுள்ளது. நிலைமை திருந்த வேண்டுமேயானால், சிறந்த ஜனநாயக அரசுக்குரிய அம்சங்களை அனைவரும் அறிந்து ஏற்றுக்கொள்ள வேண்டும். அரசியலின் சீர் கேட்டிற்குப் பல காரணங்கள் உண்டு. ஒன்று சாதாரண மனிதனுக்கும், உயர்ந்தவன் என்று கருதப்படுபவனுக்கும் ஒரேவித உரிமையுண்டு என்பதும், அவன் மற்றைய பிரஜைகளுடன் சமமாக நின்று அரசியற் கருமங்களில் பங்கு பற்ற உரிமையுண்டென்பதும், இந்நாட்டவர்க்கு ஓர் புதிய கருத்தாகும். மற்றொன்று அரசு, மனிதனுக்கும் மனிதனுக்கும் உள்ள தொடர்புகள்பற்றிய விடயங்களில் தலையிடலாமேயொழிய, மனிதனுக்கும், கடவுளுக்கும் உள்ள தொடர்புகள்பற்றிய விடயங்களில் தலையிட முடியாதென்பதும், அதனால், ஒரு பிரஜையின் அரச உரிமைகள் அவன் அந்நாட்டுப் பிரஜை என்ற முறையிலே அவனை வந்தடைகின்றனவேயொழிய, அவன் ஒரு தனிப்பட்ட இனத்தையோ அன்றிச் சமயத்தையோ சேர்ந்தவன் என்றதினால் அல்ல என்பதும் இந்நாட்டவருக்குப் புதிய கருத்தாகும். மேற்கூறியதிலிருந்து ஒரு நாட்டின் பிரஜைகள் அத்தனை பேருக்கும் சம உரிமைகள் உண்டென்பதும், ஒரு சிலர் ஏதோ ஓர் இனத்தை அல்லது மதத்தைச் சேர்ந்தவர் என்றதினாலே அவர்களுக்கு விசேட உரிமைகள் உண்டாகக் காரணமில்லை என்பதும் தெளிவாகின்றன.

அரசாங்கம் தனிப்பட்டவன் அபிப்பிராயத்திற்கு மதிப்புக்கொடுக்க வேண்டும் என்பது முன்பு குறிப்பட்டுள்ளது. 250 கோடி மக்களைக் கொண்ட இந்த பரந்த உலகில் தனிப்பட்ட ஒருவனுக்கு எங்கே முக்கியத்துவம் இருக்கப் போகின்றது. சிந்தனையாளர்கள் எவ்வித உண்மையைக் கண்டு பிடித்து நமக்குக் கூறியுள்ளார்கள் என்பதைச் சிறிது ஞாபகஞ் செய்வோம். பலநூறு வருடங்களுக்கு முன்னர் அறிஸ்டோட்டில் என்ற ஞானி என்ன கூறினர்? “சன நெருக்கம் செறிந்த ஒரு நகரம் நல்ல முறையில் ஆளப்படுவது மிகவும் அருமை. நல்லமுறையில் ஆளப்படும் நகரம் மட்டான சனத்தொகையைக் கொண்டதாய் இருக்க வேண்டும்,” என்று கூறியுள்ளார். இன்னும் சகல ஆராய்ச்சியாளர்களும் ஒரு நிலையத்தினது சிறிய அளவிற்கும் அங்குள்ளவர்களினது பூரணத்துவத்திற்கும் தொடர்புண்டு என்று கூறியுள்ளார்கள். லூயிமம்போட் (Luis Mumford) சொல்லுவதைப் பாருங்கள், “ஒவ்வொரு 2000 பேரைக் கொண்ட 25 பகுதியினர் செய்யும் வேலையிலும் பார்க்க, 50000 பேர்கள் ஒருமித்துக்கூடிச் செய்யும் வேலை குறைவாயிருக்கிறன்து” என்றார். Erichfro என்பவர் சொல்லுவது என்ன,? ஜனநாயக வளர்ச்சியின் போக்கில் ஓர் திருப்பம் ஏற்படவேண்டும். தொகையான மக்கள் கூடியிருந்து வாக்களிக்கும் முறையினால் ஒருவித பயனுமில்லை. எல்லோரும் கலந்துரையாடி ஓர் உண்மையான முடிவுந்த வரமுடியாது. முன்பிருந்த நகரக் கூட்டங்கள் அல்லது குழுஉக்கள் போன்ற சிறு தொகுதிகளிலேயே, அதுவும் 500 பேருக்குக் கூடாமல் உள்ள இடங்களிலேயே விடயங்களை நன்கு பரிசிலனை செய்து கொள்ள முடியும். ஒவ்வொருவரும் தமது அபிப்பிராயங்களைத் தெரிவிக்கவும், மற்றவர் அபிப்பிராயங்களுக்குச் செவிசாய்க்கவும் தருணம் உண்டு. இச் சிறு தொகுதிகளில் கூடுபவர்கள் நேர் நேராகச் சந்தித்து, கலந்துரையாடி, செய்து கொண்ட தீர்மானம், நாட்டிற்குப் பொதுவானதும் இறுதித் தீர்மானங்களைச் செய்வதுமான

பாராளுமன்ற நிர்வாகப் பகுதியிடத்து செல்வாக்குடையதாய் இருக்கவேண்டும். இந்த நிலையில் நாட்டின் சிறிய தொகுதிகளிலிருந்து மத்திய அரசாங்கத்திற்கும், மத்திய அரசாங்கத்திலிருந்து சிறிய தொகுதிகளுக்கும் அதிகாரம் சென்று கொண்டிருக்கும்.

மத்திய அரசாங்கத்தின் கடமைகள் சில, சிறு தொகுதிகளை வந்தடையும். அப்போது மத்திய அரசாங்கத்தின் கடமைச் சுமையும், அதிகாரமும் சிறிது தணிக்கப்படுகின்றன. இந்த முறை நிலவ வேண்டுமானால், ஒவ்வொரு பிரஜையும் பொறுப்புணர்ச்சியோடு கூடிய சிந்தனையுடையவராயிருக்க வேண்டும். முன் பொருமுறை மகாத்மா காந்தி கூறியதை நாம் நினைவுறுத்திக் கொள்வது நல்லது. மனிதன் தன் பிரஜா உரிமையைச் சரியான முறையில் பிரயோசனப்படுத்துவதற்கு சிறு கிராமத் தொகுதிகளே இடங்கொடுக்கும்' என்று கூறினார். பண்டைக்காலத்தில் தோன்றிய அரசியல் விற்பன்னரால் ஆக்கப்பட்ட கிராம சமூகங்களை நாம் தற்போது நினைவுறுத்திக்கொண்டால் சரியான பாதையில் செல்லலாம். மத்திய அரசாங்கமும் சகல அதிகாரங்களையும் தனதாக்கிக்கொண்டு பயங்கரமாகக் காட்சியளிக்க இடமேற்படாது. மத்திய அரசாங்கத்திடமுள்ள ஒரு சில அதிகாரம் சிறு, சிறு தொகுதிகளிடஞ் செல்ல, ஒன்றை ஒன்று தழுவி நிற்கும் நிலை ஏற்படும்.

சிறிய தொகுதிகள் அல்லது குழூஉக்கள் அரசியற் கருமங்களை, நன்முறையில் நடத்துவதற்கு மாத்திரம் அல்ல, பொருளாதாரத்தை வளர்ப்பதற்கும் உதவுகின்றன. ஒருவனுடைய தொழில் நுட்பம், தனித்தன்மை, புருடத்துவம் எல்லாம் அவன் ஒரு சிறிய தொகுதியில் இருக்கும்போதுதான் நன்கு வெளியாகின்றன. எனவே பெருந்தொகையில் நடைபெறும் கைத்தொழிலை மாத்திரம் ஆதரிப்போமேயானால், இயந்திர மயமாக்கப்பட்ட, பெரிய கைத்தொழில் நகரங்களை மாத்திரம் சிருஷ்டிக்க முடியுமேயொழிய தனிப்பட்டவர்களின் ஆற்றல்களை விருத்தியாக்க முடியாது. இந்தியா, இரும்பு உருக்குப் போன்றவற்றை உற்பத்தி செய்தற்கு பெருந்தொகைக் கைத்தொழிலையும், துணி, காகிதம், எண்ணெய், பாதரட்சை போன்றவற்றை உற்பத்தி செய்தற்கு குடிசைக் கைத்தொழிலையும் ஆதரிப்பது போன்று நாமும் செய்வது சிறந்த முறையாகும். சில நாடுகளில் கைத்தொழில் இயந்திர மயமாகிக்கொண்டு செல்வதைத் தடுக்க முடியாமல் இருக்கின்றது. அங்கே குடிசைக் கைத்தொழிலும் கலந்து மிளிரச் செய்யவேண்டும். தொழிலாளர் சிறு சிறு தொகுதிகளாகப் பிரிக்கப் படும்போது ஒருவரை ஒருவர் நன்கு அறிந்துகொள்ள முடியும். வேலையின் தரமும் உயரும். 'பேட்றன் றஸல்' என்பவர் கூறுவதைச் சிறிது சிந்தித்துப் பார்க்கலாம்.

"உலகத்தின் எப்பகுதியை இந்த இயந்திர முறைக் கைத்தொழில் முற்றாக விழுங்கி விடவில்லையோ, அப்பகுதியினர், நாம் அனுபவித்த கஷ்டங்களை, அதாவது நம் நாடு முழுதும் கைத்தொழில் மயமாக மாறியதினால், நாம் அனுபவித்த துன்ப அனுபவங்களை, அடையாமல் இருக்கச் செய்வதற்கு இடமுண்டு. எப்படியெனில் அங்கே ஒரு பக்கம் பெருந்தொகைக் கைத்தொழிலும், மறுபக்கம் குடிசைக் கைத்தொழிலுமாகக் கலந்து மிளிரச் செய்ய வேண்டும். இந்தியா பரம்பரைக் கிராமச் சங்களைக் கொண்டுள்ளது. இங்கு இரு முறைக் கைத்தொழில்களுக்கும் ஆதரவு உண்டு. இம்முறை பல தீமைகளுடன் தான் நிலவி வருகின்றது. ஆயினும் இதை உதறித் தள்ளிவிட்டுத் திடீரென, நாடு முழுவதையும் பெருந்தொகைக் கைத்தொழில் மயமாக்கி விட்டால் முன்பு அனுபவித்த கஷ்டங்களைப் பார்க்கிலும் பன்மடங்கான கஷ்டங்களை அனுபவிப்பவர்களாவோம். இதைப் போன்று துன்பம் தரக்கூடிய செயல் வேறில்லை.

[மறு பக்கம் பார்க்க]



250046

# சரித்திரம் என்றால் என்ன?

ஒருவரைப்பற்றிய அல்லது ஒரு குழுவினரைப்பற்றிய செய்திகளைப் பதித்து வைத்திருத்தல் தான் சரித்திரமென நெடுங்காலமாகக் கருதப்பட்டு வந்தது பழைய கால சம்பவங்களைப் பற்றிக் கூறுவது தான் இதிகாசம் என்றும், சரித்திரம் என்றும் கருதப்பட்டது. அதனாற்றான் அதனை இறந்த காலத்தோடு தொடர்பான ஒரு விஷயமென இதுவரை காலமும் எண்ணியிருந்தனர். ஆதலால் நிகழ்காலத்திற்கும், சரித்திரத்திற்கும் தொடர்புண்டு என்ற உண்மையை மக்கள் அறியாது இருந்தனர். ஏதோ பழைய விஷயங்களை அதாவது கடந்த கால நிகழ்ச்சிகளை மனதில் பதித்து வைத்தல் தான் சரித்திரமென நம்பினர்.

பழைய காலந்தொட்டுக் கணிக்கப்பட்ட செய்திகளைக் குறிக்கும் பதிவுகள் தான் சரித்திரம் என்று ஒவ்வொரு தேச இலக்கியமும் கூறுகிறது உதாரணமாக அரேபியரின் சரித்திர வரலாறுகளை, 'பழைய ஏற்பாடு' ஓரளவில் எடுத்துக் காட்டுகிறது. அவ்வண்ணமே இலங்கையை ஆண்ட சிங்கள அரசரைப் பற்றியும், புத்த சமயம் இலங்கைக்கு வந்த வரலாற்றையும் அது பரவிய விதத்தையும் கூறுவது மகாவம்சம் என்னும் சிங்கள இலக்கிய நூலாகும். இந்நூல்கள் வாயிலாக நாம் அறியும் கதைகள் எல்லாம் உண்மையானவையா? பொய்யானவையா? என்று நிலைநாட்டிக் கூறுவதற்கு போதிய சான்றுகள் இல்லையென்றாலும், இந்த நூல்களின் மூலம் 'சரித்திரமென்றால் என்ன?' என்பதையும் ஆதிகாலச் சரித்திரப் போக்கையும் ஓரளவிற்கு அறியக் கூடியதாக இருக்கின்றது. சரித்திரமென்று கருதப்படும் மேற் கூறிய பழைய பதிவுகள், தற்போது சரித்திரம் கற்கும் மாணவனுக்கு ஓரளவிற்குச் சரித்திரம் கற்பதற்கு உதவியளிக்கின்றன. சில கருண பரம்பரைக் கதைகளிலும் பல உண்மைகளை நாமறியக்கூடியதாய் இருக்கிறது. இவைகள் எல்லாவற்றையும் ஒரு மாணவன் அறிந்திருந்தாற்றான், 'சரித்திர மென்றால் என்ன?' என்று விளங்க முடியும்.

கிரேக்கரின் சரித்திரம் அவர்களால் எழுதப்பட்ட பாரிய இலக்கிய நூல்கள் மூலமே அறியக்கிடக்கிறது. அவர்களுடைய வாழ்க்கை முறைகள். இலட்சியங்கள், கொள்கைகளெல்லாம் அவர்களின் இலக்கியங்களில் சிறந்த முறையில் மற்றவர்கள் மெச்சத்தக்க விதமாகவும், விரும்பிப் படிக்கத்தக்க விதமாகவும் எழுதப்பட்டிருக்கின்றன. அவர்களின் சரித்திர வரலாறுகள் சிறந்த காவியங்களாக மிளிர்வதாலேயே, கிரேக்க பாஷையை மற்றைய நாட்டு மக்கள் விரும்பிப் படிக்கின்றனர். இலியட் (Iliad) ஒடிசி (Oddesy) போன்ற காவியங்கள் உண்மையான சரித்திர சம்பவங்களையே குறிக்கின்றன. அந்நூல்கள் எழுதப்பட்டிருக்கும் போக்கு யாவரையும் கவரக் கூடியதாகவும், உண்மை நிறைந்ததாகவும் இருக்கின்றது.

சரித்திரமென்று கூறப்படும் சில நூல்கள் உண்மையானவையென நம்ப முடியாது. அவை வாசிப்போரைத் திருப்தி செய்வதற்காக எழுதப்பட்டவையென்றே சொல்லலாம். மகாவம்சத்தில் கூறப்படும் சில சம்பவங்கள் நம்ப முடியாதவை. ஆனால் அவைகள் வாசிப்போரைத் திருப்திசெய்யவே எழுதப்பட்டன எனக் கூறலாம். உதாரணமாக விஜயனின்

---

(முன்பக்கத் தொடர்ச்சி)

எனவே பொருளாதாரமோ, அன்றி அரசாங்கமோ நன்கு அமைய வேண்டுமாயின் உள்ளூர்களில் தனிப்பட்டமுறையில் நேர்முகமாகச் சந்தித்துப் பேசுதற்கு இடமளிக்கும் சிறிய தொகுதிகளும், நாட்டிற்குப் பொதுவான ஒரு மத்திய தொகுதியும் இருக்க வேண்டும். ஜனநாயக முறையில் அமைந்த அதிகாரம் உடைய தொகுதிகள் இல்லாவிடில் மத்திய அரசாங்கம் நிலையற்றதாகிவிடும். அன்றேல் அரசாங்கம் ஜனநாயகப் பண்புகளை இழந்து உருமாறிப்பயங்கரமானதொரு சாதனமாய் விடும் என்பது திண்ணம்.

✻

பிறப்பு, வளர்ப்பு அவன் இலங்கைக்கு வந்து அரசஞனமை முதலியன கூறப்பட்டிருக்கும் விதம் ஓரளவிற்கு வாசிப்போரைத் திருப்தி செய்யக்கூடியதாக இருக்கின்றது. ஆனுல் சரித்திரக் கண்கொண்டு நோக்கும்போது விஜயன் இந்தியாவிலிருந்துதான் வந்தான் என்பதற்குப் போதிய சான்றுகளில்லை. அத்துடன் இந்திய சரித்திரத்தில் அவனைப்பற்றிய தகவல்கள் ஒன்றும் கிடைக்கவில்லை எனச் சரித்திராசிரியர்கள் கூறுகின்றனர். இதிலிருந்து நாம் அறியக்கூடியது என்னவெனில் வாசிப்போரைத் திருப்திசெய்வதற்காகவே எழுதப்பட்டிருக்கிறது என்பதேயாம். அதுவும் அதனேடு சேர்ந்த சாகியத்தாரைத் திருப்திப்படுத்துவதே முக்கிய நோக்கமாக அமைகிறது. கிறிஸ்தவர்கள்கூடத் தம்மிடமிருந்த சில சமயக் கோட்பாடுகளை அத்தாட்சிப்படுத்துவதற்கு மனித வாழ்க்கையிலே நிகழ்ந்த சில சம்பவங்களை எடுத்துக்காட்டியிருக்கிருர்கள். இப்படியாகவே Grosoius என்பவர் தாம் எழுதிய "Seven Books of History" என்னும் நூலின் மூலமாக கிறிஸ்தசமயக் கொள்கைகள் தப்பானதென்று விவாதிப்போருக்கு விளக்கிக் காட்டியுள்ளனர்.

காலஞ் செல்லச் செல்ல. சரித்திரம் நாட்டின் தேவைக்கேற்ப எழுதப்பட்டு வந்தது. அதாவது நாட்டின் நிலேயோடொத்த உணர்ச்சிகளை எழுப்புவதற்கான சரித்திரம் எழுதப்பட்டது.

நெப்போலியன் தனது ஆட்சியை ஐரோப்பா முழுவதும் பரப்பிக் கொண்டிருந்த போது, ஐரோப்பிய மக்களை அவனுக்கு எதிராகக் கிளப்பி, கிளர்ச்சி உண்டாக்க ஏதுவான நூல்கள் எழுதப்பட்டன. ஜேர்மனியில் ஹீஜில் (Hegel) என்பவர் இம் முயற்சியில் அதிதீவிரமாக ஈடுபட்டிருந்தார். அவர் எழுதிய சரித்திரம் மக்கள் மனதை மாற்றியமைக்கக் கூடியதாக இருந்ததைக் கண்கூடாகக் கண்டார். இப்படியான உணர்ச்சிகளை உண்டாக்கக் கூடிய சரித்திர நூல்கள் கிறீஸ், உரோம் முதலிய நாடுகளிலும் எழுதப்பட்டன. இவைகளைச் சான்ருகக் கொண்டே ஹீஜில் (Hegel) என்பவர், தாம் எழுதிய சரித்திரத்தை அத்தாட்சிப்படுத்தினுர். தமது நாட்டின் தொன்மையை விளக்கினுர். இவை மக்களை மாற்றக் கூடியதாக இருந்தன. நாம் இவ்வுதாரணத்தை நம்நாட்டோடு தொடர்பு படுத்திப் பார்க்கலாம். இப்பொழுது தமிழர், சிங்களவர் என்ற ஜாதி பேதம் தலைதூக்கி நிற்கும் போது மக்களைச் சரித்திர நூல் மூலம் உணர்ச்சி பெறப்பண்ணி பொங்கியெழச் செய்யலாம். தமிழனுடைய பெருமைகளைச் சரித்திர நூல்களாக அமைக்கும் போது தற்போது படிக்கும் மாணவன் அவற்றை வாசித்து உணர்ச்சி வசப்படுவான். அப்படியே சிங்கள மக்களும் சிங்களவரின் தொன்மையை யறிந்து ஆவேசங் கொள்வர். இதனுல் நாட்டில் கலவரங்களும், குழப்பங்களும் உண்டாகின்றன. ஆகவே மேற்கூறியவற்ருல் நாம் அறியக் கூடியது யாதெனில் நாட்டின் நிலைபரத்திற்கேற்பச் சரித்திரத்தையும் உண்டாக்கிக்கொள்ளலாம் என்பதே. இவற்றினின்றும் உண்மையான சரித்திரம் தோன்றும் என்று கொள்ள முடியாது.

19ம் நூற்ருண்டின் மத்திய பகுதியில் தான் சரித்திரம் விஞ்ஞான பாடம் போன்றது எனக் கருதினர். முன்பு சரித்திரம் எழுதுவோர் தமக்குக் கிடைத்த குறிப்புகளையும், பதிவுகளையும் கொண்டு திருப்தியுற்றிருந்தனர். ஆனுல் இக்காலத்தில் அவ்வளவோடு நில்லாமல் விஞ்ஞானத்தைப் போன்று சரித்திரத்தை ஆராயத் தொடங்கினர். தமக்கு முன் கிடைத்த பதிவுகளைக் கொண்டு அதன் உண்மைகளை ஆராயத் தொடங்கினர். அதன் பயனுக அக்கால எல்லைகளையும் வரையறுக்கத் தொடங்கினர். இப்பொழுது சரித்திரம் எழுதுவோர் இலக்கியங்கள் மூலமாகவும், முத்திரைகள், நாணயங்கள் மூலமாகவும் புதை பொருட்கள் மூலமாகவும் சரித்திரத்தில் ஆராய்ச்சி செய்துகொண்டு போகின்றனர். இவற்றின் மூலமாகச் சரித்திரம் உண்மைப்படுத்தப் படுகிறது. உண்மைப் படுத்துவது மாத்திரமன்றி இவ் வுண்மைகளைக்

கொண்டு பற்பல நாடுகட்கிடையே ஏற்பட்ட தொடர்புகள், யுத்தங்கள் அரசாட்சிமுறையில் ஏற்பட்ட மாறுதல்கள், பழக்க வழக்கங்கள் என்பவற்றையும் கண்டறிந்திருக்கிருர்கள். இவற்ருல் மனித இனத்திலேயே பல மாறுதல்கள் உண்டாகி ஒருவரைப்பற்றி மற்றவர் அறியவும், அதற்கேற்ப இசைந்து நடந்து கொள்ளவும் சரித்திரம் கூடிய உதவி அளித்திருக்கிறது என்பது தெள்ளிதிற் புலனுகின்றது.

இப்புதிய சரித்திரம் எவ்வாறு தோன்றியதென ஆராய்வோம். டார்வினுடைய பரிணமக் கொள்கையின்படி பற்பல மாற்றங்கள் நடந்துதான், ஈற்றில் மனிதன் தோன்றினுன் என்று அறிகிருேம். அது போலவே பூமிசாத்திர வல்லுனர்கள் 'பூமி ஒரே முறையில் இப்படியான உருவத்தைப் பெற்றதொன்றல்ல அதுவும் பற்பல மாறுதல்கள் அடைந்து தான் இப்பொழுது இப்படித் தோற்ற மளிக்கிறது' எனக் கண்டு பிடித்தனர். இவை யெல்லாவற்றையும் நோக்கிய சரித்திரக்காரனும் தற்போதைய நிகழ்ச்சிகளைக் கொண்டு ஆராயத் தொடங்கினுன். அப்பொழுதுதான் சரித்திரமும் பற்பல மாறுதல்கள் அடைந்து தோன்றியதென்று கண்டுபிடித்தனர். இதன் பின்பே சரித்திரத்தை விஞ்ஞானரீதியாக ஆராய்ந்து, சரித்திரத் தொடர்புகளை விஞ்ஞானத்தைப் போன்று உண்மைப் படுத்த முயற்சித்தார்கள். இவ்வாராய்ச்சியின் பயனுகச் சரித்திரத்தை இலக்கியம், இதிகாசம் என்பவற்றினின்றும் பிரித்தெடுத்தார்கள்.

ஒரு குழுவினரின் எண்ணங்களும், செயல்களும் அவர்கள், பூமியில் தோன்றிய நாட்தொடக்கம் பற்பல மாறுதலை அடைந்து, இன்றைய நிலையை எவ்வாறு அடைந்தன என்பதை விளக்குவதுதான் 'உண்மையான சரித்திரம்' என இன்றைய ஆராய்ச்சிகளின்மூலம் புலப்படுகின்றது. மனித சமுதாயத்தின் வளர்ச்சியையும், தொடர்பையும் கூறுவது தான் சரித்திரம்.

தனிப்பட்ட நிகழ்ச்சிகளின் தொகுப்பு சரித்திரமாகாது. ஆனல் அந்த நிகழ்ச்சிகளின் உதவியால் இன்றைய சமுதாயம் எப்படி விருத்தியானது என்பதைக் கூறுவதுதான் இப்போது நிலவும் சரித்திரம். இன்று இலங்கையில் வாழும் மக்களின் சரித்திரமே இதற்குச் சான்ருகும். ஆகவே சரித்திரம் என்பது மனித சமுதாயத்தின் வளர்ச்சியின் முன்னேற்றத்தின் கதையாகும். அது நிகழ்காலம் அமைந்திருக்கும் நிலைக்குக் காரணம் கூறுகின்றது. இன்றைய நிலையில் இருந்து எதிர்காலம் எப்படி அமையும் என்று ஊகிக்க உதவுகின்றது. அதற்குத்தக எதிர்காலத்தை மாற்றியமைக்க நிகழ்காலத்திற்குதவுகிறது. அத்துடன் வருங் காலத்தைப் பார்க்க உதவும் ஓர் கண்ணுடியுமாம்.

*பரமேஸ்வரி குமாரசாமி,*
இரண்டாம் வருடம்.



1957-ம் ஆண்டு எங்கள் கலாசாலையில் இல்லங்களுக்கிடையில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் முதலிடம்பெற்ற

கிருஷ்ணபிள்ளை இல்லம்.

# இலங்கையின் பொருளாதாரம்

ஒரு நாடு அரசியல் சுதந்திரம் பெற்றிருந்தும், அந்நாட்டின் பொருளாதார வளம் குன்றியிருந்தால் அந்நாடு பெற்ற சுதந்திரத்தால் என்ன பயன்? அது 'அடிமை நாடே' என்று துணிந்து கூறலாம். ஏன்? அதிகமான பொருட்களுக்கு மற்றைய நாடுகளை நம்பியிருந்தால் அது எப்படிச் சுதந்திர நாடாகும்? இலங்கையும் பொருளாதாரத்தில் இன்று பின் தங்கிய நிலையிலேயே உள்ளது. பழைய காலத்தில் இலங்கை தன் தேவையைத் தானே பூர்த்தி செய்தது என்பது சரித்திரவாயிலாக அறியக்கிடக்கிறது போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் போன்ற மேலைநாட்டினர் இங்கு தமக்குத் தேவையான பொருட்கள் இருப்பதையறிந்து, அதைப்பிடிக்க முயன்று வெற்றியும் கண்டனர். காசுப்பயிர்கள் விருத்தியடைந்தன. உணவுப் பொருட்களை உண்டாக்குவது குறைந்தது. இதனால் நாம் மற்றைய நாடுகளை நம்பியிருக்க வேண்டிய தேவையேற்பட்டது. தேயிலை, றப்பர், தென்னைப்பிரயோசனம் என்னும் முப்பொருள்களும் அந்நிய நாடுகளில் விற்பனையாவதில்தான் இன்று இந்நாட்டின் செல்வவிருத்தி தங்கியுள்ளது. இப்பொருட்கள் விற்பனையாவதில் ஏதும் குறைவு ஏற்பட்டால் நாம் மிகவும் மோசமாகப் பாதிக்கப்படுவோம். வல்லரசுகளுக்கிடையே போட்டி மனப்பான்மை உச்சநிலையை அடைந்திருக்கும் இக்காலத்தில், நாம் பட்டினியால் வாடவேண்டியதுதான். இப்படியான நிலையை நீக்க நம் நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்த வேண்டும். அதற்கான வழிவகைகளை எப்படிச் செய்யலாம் என்பதை ஆராய்வோம்.

எமது முக்கிய உணவான அரிசியைப் பிற நாடுகளில் இருந்தே பெருமளவில் இறக்குமதி செய்ய வேண்டியிருக்கிறது. இங்கு நெல் பயிரிடுவதற்கு வேண்டிய சுவாத்தியம் காணப்படுகிறது. அரசாங்கம் உணவுத் தேவையை இப்போது உணர்ந்து பலதிட்டங்களை உண்டாக்கியுள்ளது. எவ்வளவோ ஏக்கர் நிலம் காடுகளாய்ப் பாழடைந்து கிடக்கிறது. சனங்கள் இங்கு குடியேறி வாழ்வதற்குரிய வசதிகளை அரசாங்கம் செய்து கொடுக்க வேண்டும். அன்றியும் அமெரிக்கா, அவுஸ்திரேலியா, ஜப்பான் போன்ற நாடுகளில் செய்வது போல் முற்போக்கான முறையில் பயிர்ச்செய்கை நடைபெற வேண்டும்.

கரும்பும் இங்கு விளைவிக்கக் கூடியதாய் இருக்கின்றது. அம்பாந்தோட்டை, பொலநறுவைப் பகுதியில் அரசினர், மாதிரித் தோட்டங்களை உண்டாக்கியுள்ளனர். இவ்விடங்கள் இலங்கையின் ஏனைய இடங்களிலும் கரும்புச் செய்கையை விருத்தியாக்க எடுத்துக் காட்டாய் விளங்குகின்றன. கரும்பிலிருந்து சர்க்கரை, சீனி, கற்கண்டு முதலியவற்றை இங்கேயே உற்பத்தியாக்கலாம். பனையிலிருந்து பெறப்படும் கருப்பநீரிலிருந்தும் சீனி செய்யலாம்.

மீன் பிடியையும் இங்கு விருத்தி செய்யலாம். மேல்நாடுகளில் இத்தொழில் விருத்தியடைந்தது போல இங்கு விருத்தியடையவில்லை இங்கு பெரும்பாலும் பழைய முறையிலேயே நடைபெறுகிறது. அங்கு தொழிலாளருக்குப் பல பாதுகாப்புகளும் செய்யப்பட்டிருக்கின்றன. அரசினர் தாமாகவே தொழிலாளரின் நன்மைக்காக நஷ்டோத்தரவாத (இன்ஷூரன்ஸ்) ஒழுங்கு செய்து தொழிலில் ஊக்கமேற்படுத்தியிருக்கிறார்கள். அதேபோல் இங்கும் தொழிலாளருக்குப் போதிய பாதுகாப்புச் செய்து கொடுக்கவேண்டும். மீன்கள் பற்றறுந்து போகாத படியும் செய்யவேண்டும். பிடித்த மீன்களைப் பழுதுபடாத முறையில் விற்பனைசெய்ய வசதியும் செய்து கொடுக்க வேண்டும். இப்படிச் செய்தால் இத்தொழில் விருத்தியடையும் என்பதில் ஐயமில்லை.

நல்ல இனக் கால்நடைகளை விருத்தி செய்யவேண்டும். இதற்கு அவுஸ்திரேலியா போன்ற இடங்களிலிருந்து கால்நடைகளை வருவித்து இனத்தை விருத்தி செய்யலாம். போதிய பாலுணவு கிடைக்காததாலேயே புட்டிப்பால், பால்மா வெண்ணெய்போன்றவற்றை

வெளியிடங்களில் இருந்து இறக்குமதி செய்ய வேண்டியிருக்கிறது. இதனுல் இலங்கையின் பெருந்தொகைப் பணம் வெளியேற்றப்படுகின்றது. எனவே இது தடைசெய்யப்படல் வேண்டும்.

இலங்கை ஒரு கமத்தொழில் நாடாக இருந்தாலும், கைத்தொழிலேயும் விருத்திசெய்யலாம். கரி இரும்புபோன்ற மூலப் பொருட்கள் இல்லாவிட்டாலும் மின்சார வசதியிருப்பதால் இயந்திரங்களை இயக்க வசதியுண்டு. மேனுடுகளின் பெரியபட்டினங்களில் பாரிய தொழிற்சாலைகள் உண்டு. இத்தகைய தொழிற்சாலைகள் இங்கு அதிகம் இல்லை. சுய தேவைப் பூர்த்திக்காக, அரசாங்கம் சில தொழிற்சாலைகளைத் தொடங்கி நடத்துகிறது. இவை திறம்பட நடைபெறவேண்டும். இதோடு குடிசைக் கைத்தொழில்களும் ஓங்கி வளரவேண்டும்.

பருத்தியை உண்டாக்குவதற்கேற்ற சூழ்நிலை இருந்தும் அது திறம்பட நடைபெறப் பல தடைகள் இருக்கின்றன. பஞ்சை நெசவு செய்யப் பல கஷ்டங்கள் இருக்கின்றன. என்றுலும் மின்சார வசதியிருப்பதால் செயற்கை முறையில் நூல் முறுக்குவதற்கேற்ற, சீதோஷ்ணத்தை உண்டாக்கிக்கொள்ளலாம். எமக்கு வேண்டிய உடையையும் பெறலாம். இதனுல் எம் வருமானத்தில் பெரும்பகுதி வீணுக வெளியேறுவதைக் காப்பாற்றலாம்.

என்னென்ன மூலப்பொருட்கள் உண்டோ அதைக்கொண்டு தொழிற்சாலைகளை உண்டாக்க வேண்டும். நாம் றப்பரைப் பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறேம்; ஆனுல் மீண்டும் அங்கிருந்து றப்பரால் செய்யப்பட்ட பொருட்களை அதிக விலைகொடுத்து இறக்குமதி செய்கிறேம். ஏற்றுமதி செய்யும் றப்பரின் வருமானத்திலும், இறக்குமதி செய்யும் றப்பர்ப் பொருட்களால் நம் நாட்டின் பணம் அதிகம் செலவாகிறது. எனவே இங்கேயே தொழிற்சாலைகளை நிறுவி எமக்கு வேண்டிய பொருட்களை உற்பத்தி செய்துகொண்டால், எவ்வளவோ செலவு குறையும். எப்போது நமது நாட்டின் இறக்குமதியிலும் பார்க்க, ஏற்றுமதி கூடுதலாக இருக்கின்றதோ அப்போதுதான் நமது நாட்டின் பொருளாதாரம் சிறக்கும்.

நம் நாட்டில் உப்பு விளைகிறது. அதிலிருந்து சோடா, வெடிமருந்து, இரசாயனப் பொருட்கள் முதலியன செய்யலாம். தேங்காயெண்ணெய் முதலியனவற்றைக் கொண்டு சவர்க்காரம் செய்யலாம். வாழைச் சேனையில் கடதாசித் தொழிற்சாலையொன்றுண்டு. இத்தொழிற்சாலையை அடுத்துள்ள பகுதியில் ‘‘மானு’’ என்று சொல்லப்படும் ஒரு வகைப் புல் ஏராளமாக உண்டு. இது காகிதஞ் செய்யப் பயன்படுகிறது. இது போதாவிட்டால் வைக்கோலிலிருந்தும் காகிதம்செய்யலாம். நெல்அதிகமாகப் பயிரிடுவதால் உணவை மட்டுமின்றி வைக்கோலையும் அதிகம் பெறலாம். ஆகவே இன்னும் சில காகிதத் தொழிற்சாலைகளை நிறுவலாம்.

காங்கேசந்துறையில் சீமேந்துத் தொழிற்சாலை ஒன்றுண்டு இங்கு உற்பத்தியாக்கப்படும் சீமேந்து எமது தேவைக்குப் போதாது. இத்தொழிற்சாலையில் ஒரே ஒரு சூளை மாத்திரமே உண்டு. அரசாங்கத்தால் விரைவில் இன்னெரு சூளை நிறுவப்பட்டால் ஓரளவுக்கு நம்மக்களின் தேவை பூர்த்தியாகும். அத்துடன் இன்று வேலையிலாத்திண்டாட்டத்தினுல் அல்லலுறும் மக்கள் தொகையும் குறையும். வேலையில்லாத்திண்டாட்டம் எந்த நாட்டில் அதிகம் உண்டோ, அங்கு பொருளாதாரம் மிகவும் சீர்கேடான நிலையிலேயே இருக்கும். எனவே யூ. என். பீ. அரசாங்கத்தாரால் போடப்பட்ட ஐந்தாண்டுத் திட்டத்தின்படி காங்கேசந்துறைத் தொழிற்சாலைக்கு இரண்டாவது சூளை போடப்பட்டால் மக்கள் தேவை ஓரளவு பூர்த்தியடையும். இப்பகுதியில் முருகக்கல்லும் ஒருவகைக் களிமண்ணும் ஏராளமாகக் கிடைப்பதால் இத்தொழிலை இன்னும் விருத்தி செய்யலாம்.

ஜப்பானில் குடிசைக்கைத்தொழில் உயர்வடைந்துள்ளது. அங்குள்ள மக்கள் எல்லோரும் ஏதோஒருதொழிலில்ஈடுபட்டுள்ளனர் மக்களால் உற்பத்திசெய்யப்படும் பொருட்களை அரசாங்கம் விற்பனை செய்கிறது. அதேமாதிரி நமது நாட்டிலும் குடிசைக் கைத்தொழில்களை

விருத்திசெய்யவேண்டும். குடிசைக் கைத்தொழில் வளர்ச்சியிலேயே இலங்கை போன்ற நாடுகளின் பொருளாதாரம் தங்கியுளது.

இலங்கையின் கல்வித்திட்டமும் மாற்றியமைக்கப்படவேண்டும். 'தொழிற்கல்வி' இடம் பெற வேண்டும். கைத்தொழிற்பாடசாலைகள் ஸ்தாபிக்கப்படல் வேண்டும். பிள்ளைகளால் செய்யப்படும் பொருட்களுக்கு அரசாங்கம் போதிய ஆதரவு கொடுக்க வேண்டும். தொழில் நுட்பம் உடைய சிறந்த தொழிலாளர் இருந்தால்தான் குறைந்த செலவில், சிறந்த பொருட்களை உற்பத்தி செய்யலாம். இந்தியா இப்பொழுது பல வழிகளிலும் முன்னேறி வருகிறது. முதலாவது ஐந்தாண்டுத்திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றியிருக்கிறது. இப்போது இரண்டாவது ஐந்தாண்டுத்திட்டத்தையும் தொடங்கியிருக்கிறது. அதேமாதிரி இலங்கையும் பலதிட்டங்களைத் தீட்டியிருக்கிறது. அதை வெற்றிகரமாக நடைமுறைக்குக் கொண்டுவந்தாலே பொருளாதாரம் உயரவழியுண்டு.

திட்டங்கள் நிறைவேற மூலதனம் வேண்டும். இதை எப்படிப் பெறுவது? தேசீய சேமிப்பு இயக்கத்தை விருத்தி செய்வதன்மூலம் தேவையான பணத்தின் ஒருபகுதியைப் பெறலாம். மக்களால் சேமிக்கப்பட்டு அரசாங்கத்துக்குக் கொடுக்கப்படும் பணம், தேசீய அபிவிருத்தித் திட்டங்களுக்குச் செலவிடப்படும் என நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இச்சேமிப்பு இயக்கம் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கிறது.

அரசாங்கம், தோட்டங்கள் போன்றவற்றைத் தேசியமயமாக்க திட்டமிடுவதால் சிறிது சிறிதாக இலங்கையில் முதலீடு செய்யப்பட்டுள்ள வெளிநாட்டு மூலதனம் வெளியேறிக் கொண்டிருக்கிறது. இது வெளியேறாமல் பாதுகாக்கப் படவேண்டும். வெளிநாட்டு மூலதனம் நமக்கு வேண்டாம் என்று அறைகூவுகின்றனர் ஒரு சிலர். முற்றாக வெளிநாட்டு மூலதனத்தை அகற்றிவிடுவது மடமைத்தனம் என்பதை பொருளாதார அறிஞர்கள் அறிவர். இலங்கை போன்ற நாட்டுக்குப் பிற நாட்டு மூலதனம் வேண்டும். இஃதின்றேல் கைத்தொழில் வளர்ச்சியுற முடியாது. எனவே இங்கிருக்கும் பணத்தை வெளியே செல்லவிட்டு பின்பு கடன்பட்டு ஆக்கவேலைகளைச் செய்வது கஷ்டமான காரியம்.

உலக வங்கியில் கடன்பெற்றும் திட்டங்களை நிறைவேற்றலாம். அதோடு பொருளாதாரத்தில் பின்னடைந்த நாடுகளுக்குதவவே கொழும்புத்திட்டம் ஆரம்பமானது. தற்போது கனடா போன்ற நாடுகள் பணஉதவியும், நியூஸீலாந்து போன்றநாடுகள் தொழில் நிபுணர்களினது உதவியையும் அளிக்கின்றன. உலக நாடுகள் எல்லாம் பொருளாதாரத்தை வளர்க்க வேண்டும். அப்போது தான் உலக சமாதானத்தை நிறுவுவதும் இலகுவாகும் என்று அறிஞர்கள் கருதுகின்றனர்.

உற்பத்தி செய்யப்படும் பொருள்களுக்கு உத்தரவாத விலை விதிக்கப்படவேண்டும். கட்டுப்பாட்டு அளவும் வேண்டும். தொழிலாளிகட்குச் சுதந்திரம் வேண்டும். இறக்குமதியாகும் பொருட்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது தரத்தில் குறைவுடையதாயிருக்கக் கூடாது. இறக்குமதி குறையவேண்டும். சுதேசிப்பொருட்களையே மக்கள் உபயோகிக்கவேண்டும் என்று பிரச்சாரம் செய்ய வேண்டும். நாம் உற்பத்தியாக்கும் பொருள் விற்பனவுக்குத் திறமான உலகசந்தைகளைத் தெரிந்து கொள்ள வேண்டும். இவையாவும் திறம்பட நடைபெற அரசாங்கம் ஆவன செய்யவேண்டும். இப்படிச் செய்தால் நம்நாட்டின் பொருளாதார வளம் உயரும் என்பது நிச்சயம்.

*சு. தனலட்சுமி*
1-ம் வருடம்.

# தொழிற்சங்கமும் ஆசிரியரும்

ஆசிரியத் தொழில் செய்யும் நாம் நமது தொழில் உன்னதமானது; புனிதமானது; என்றெல்லாம் ஏதேதோ பெருமை பேசிக் கொள்ளுகிறோம். தொழிலின் சிறப்பு—அந்தஸ்து அத்தொழில் செய்யும் ஒவ்வொருவரினதும் பொறுப்புணர்ச்சியில் தங்கியிருக்கிறது. இக்காலத்தில் மக்களின் பொறுப்பு அவரவரின் நோக்கத்திற்கியைய அமைந்து விடுகின்றது. பொறுப்பற்ற ஒருவரின் செயல் சில சமயங்களில் அவர் சேர்ந்த சமூகத்திற்கே இழுக்கைத் தரும். ஆதலால் எத்தொழில் புரிபவரும் தமது தொழிலின் மதிப்பைப் பாதுகாத்து சமூகத்தின் உயர்வுக்கு உழைப்பது அவசியம். தனித்துத் தமது புகழுக்கும் பேருக்கும் உழைப்பதிலும் பலர் ஒன்ருகச் சேர்ந்து சங்கமாகத் தொண்டாற்றினுல் விரைவில் பயனடையலாம்.

ஒவ்வொரு சங்கத்தின் நோக்கமும் அநனதன் அங்கத்தவர்களின் தேவைகளையும் தன்மைகளையும் பொறுத்திருக்கும். ஆனுல் தொழிற் பாதுகாப்பு, தொழில் முன்னேற்றம், தொழிலுக்குரிய வேதனம் ஆகியவற்றிற்கு அபராது உழைத்தல் எந்தத்தொழில் புரியும் சங்கத்திலும் காணக்கூடிய பொது நோக்கங்களாகும். நோக்கங்களை நாம் அறிந்திருத்தல் மாத்திரம் போதியதாகாது. நோக்கத்தை ஆக்கத்தில் கொண்டுவர நாம் செய்யவேண்டியனவற்றைச் சிந்திப்பது நன்று.

தொழிற் பாதுகாப்புக்கு வேண்டிய வரையறுக்கப்பட்ட சட்டம் உதவி நன்கொடை பெறும் பாடசாலை ஆசிரியர்களுக்கு மாத்திரமல்ல, ஆசிரியத்தொழில் புரியும் எவருக்குமே இல்லையெனலாம். ஆசிரியத் தொழிலின் பாதுகாப்பு முகாமைக்காரரின் தயவிலிருக்கிறது. முகாமைக்காரரால் அநீதி விளையும்போது கல்விப்பகுதி எவ்வித நடவடிக்கையும் எடுக்கலாம் எனச் சட்டபூர்வமாக வரையறுத்துச் சொல்ல முடியாது.

சுயபாஷை ஆசிரியருக்குள்ள சுதந்தரத்தின் அளவு ஆங்கிலேயரின் ஆட்சிக்காலத்தில் உள்ளபடியே முன்னேறுமலிருக்கிறது. நமது தொழில் முன்னேற்றமடையவேண்டும், நாம் நவீனமுறையில் விளங்கவேண்டுமென்ற நல்ல மனமிருந்தாலும் ஒத்துழைப்பு இன்மையால் முன்னேறமுடியாமல் இருக்கிறது. ஆசிரியர்களிடையே ஒத்துழைப்பு, ஒத்த நோக்கம் என்பன காணப்படல் வேண்டும். எல்லோரும் ஒருங்கு சேர்ந்தால் முடியாத காரியம் ஒன்றுமில்லை. ஆசிரிய உலகத்தின் ஒன்றுபட்ட தன்மைக்கு முன்னர் முகாமைக்காரரின் அல்லது அரசாங்கத்தின் எதிர்ப்புகள் பலனற்றுப் போகும்.

தற்போது தொழிலாளிகளின் நிலை ஓரளவுக்கு முன்னேறியுள்ளது. ஆனுல் முதலாளி, தொழிலாளி என்ற பாகுபாடு உள்ளமட்டும் உயர்வு தாழ்வு சொல்லாமலே தலை காட்டும். மக்களிடையே நிலவவேண்டிய சிநேகபான்மை நிலவாதொழியும். தொழில் புரியும் பாட்டாளி மக்களின் குடும்பம் முதலாளியின் தயவைப் பெறுவதற்காக இராப் பகல் ஓய்வின்றி உழைத்துக் கொடுக்கும் நிர்ப்பந்தம் ஏற்படும். முதலாளிகளோ, தொழிலாளிகளும் மனிதர்தான் என்னும் உண்மையை மறந்து அவர்களை மிருகங்கள்போல் நடாத்துவார்கள். நேரக்கட்டுப்பாடு மாத்திரமல்ல ஏற்ற வேதனமுமின்றி பயமுறுத்தி வேலை கொள்வர்.

முதலாளி வர்க்கத்தின் அதிகாரத்தால் அல்லற்படும்போது சுதந்திர உணர்ச்சி தோன்றுவது இயற்கை. சுதந்திரதாகம் கொண்டோர் தம்மையொத்த சகோதரத் தொழிலாளிகளின் உதவியோடு ஆங்காங்கு சங்கங்கள் கூட்டுவது இயல்பாகும். வாழ வழியில்லாத தொழிலாளிகள் ஒற்றுமையாகக் கூடினுல் வாழலாம் என்ற நம்பிக்கை அவர்களுக்கு வழிகாட்டிற்று.

உரிமைக்குப் போராடுவது என்ற எண்ணம் இன்று நேற்று ஏற்பட்ட புத்துணர்ச்சி

அல்ல. 18-ம் நூற்றுண்டிலேயே தொழிலாளர்களின் சிந்தனு சக்தியின் பயனுக ஏற்பட்டதுதான் தொழிற்சங்கம்.

1789-ம் ஆண்டு பிரான்சு தேசத்தில் ஒரு பெரிய தொழிற் புரட்சி ஏற்பட்டது. அதை ஏனைய நாட்டு மக்களும் பின்பற்றுவார்களென அக்காலத்தில் ஆட்சியில் இருந்தவர்கள் பயப்பட்டார்கள். அதனுல் அதற்கு ஆதரவளிக்காமல் புரட்சிகரமான எந்த இயக்கத்தையும் சட்டங்களால் நசுக்கியாளத் தீர்மானித்தார்கள்.

1789-ல் நாட்டின் வர்த்தகத்துக்குப் பங்கம் விளைக்கக்கூடிய எவ்வித சங்கமும் நிறுவக்கூடாதென்றும், வேலை நிறுத்தத்தில் எந்த வகையிலாவது பங்கு பற்றும் தொழிலாளிகளுக்கு 3 மாத மறியல் தண்டனை விதிக்கப்படவேண்டுமென்றும் சட்டமியற்றினுர்கள்.

அக்காலத்தில் தொழிற்சங்கங்கள் பகிரங்கமாகக் கூட்டங்கள் நடாத்த அஞ்சின. ஆனுல் திரைமறைவில் நின்று அயராது உழைத்து வந்தன. 1824-ம் ஆண்டு பிரான்சிங் பிளேஸ்' என்பவரின் தளரா முயற்சியினுல் 1799-ம் ஆண்டு ஆக்கம் பெற்ற மேற்கூறிய தடைவிதி திருத்தியமைக்கப்பெற்றது. 1824-ம் ஆண்டு தொடக்கம் 1871 ம் ஆண்டுவரையுள்ள காலத்தைத் தொழிற் சங்கங்களின் கஷ்ட காலம் என்று சொல்லலாம்.

1871-ம் ஆண்டு தொழிற்சங்கச் சட்டம் முதன் முதல் நடைமுறைக்கு வந்தது. தொழிலாளர் வேலை செய்யவேண்டிய நேர அளவு, அதற்குரிய சம்பளம் சம்பந்தமான விடயங்களில் பேச்சு வார்த்தைகள் முதலாளிமாருடன் நடத்தலாம் எனவும் தகுந்த நியாயத்தின் பொருட்டு வேலைநிறுத்தம் செய்யலாம் எனவும் தொழிற்சங்க உரிமைகள் அங்கீகரிக்கப்பட்டன. ஆயினும் வேலை நிறுத்தம் செய்வதால் ஏற்படும் நஷ்டத்துக்கு தொழிற் சங்கம் தான் பொறுப்பாக இருக்கவேண்டுமென்ற ஒரு எண்ணம் முதலாளிகளிடம் இருந்தது. இவ்வெண்ணத்துக்கு முற்றுப்புள்ளி வைத்தது 1902 ம் ஆண்டு நடைபெற்ற ஒரு சம்பவம்.

''ராவ்வேல்'' புகையிரத வீதி கம்பெனியில் வேலைசெய்த தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்தனர். அதனுல் கம்பெனிக்கு பெருத்த நஷ்டம் ஏற்பட்டது. எனவே கம்பெனி தொழிற் சங்கத்தின்மீது நஷ்ட ஈட்டுக்கு வழக்குத் தொடர்ந்தது. அதாவது தொழிற் சங்க அங்கத்தவர் செய்த குற்றத்துக்குத் தொழிற் சங்கந்தான் பொறுப்பாளி என்பதே கம்பெனியின் கருத்து. உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பு கம்பெனியாருக்குச் சாதகமாக அமைந்தது. பின்னர் பிரபுக்கள் சபைக்கு வழக்கு விண்ணப்பம் செய்யப்பட்டது. பிரபுக்கள் சபை, தொழிற் சங்கத்தின் வளர்ச்சிக்கு உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பு தடையாக இருக்கிறதென்பதை உணர்ந்து தொழிற்சங்கத்துக்குச் சாதகமாகத் தீர்ப்பளித்தது. அதாவது தொழிலாளரில் ஒரு பகுதியினர் வேலை நிறுத்தம் செய்வதால் அதற்குத் தொழிலாளர் சங்கம் பொறுப்பாளியல்ல என்பதைப் பிரபுக்கள் சபையின் தீர்ப்பு எடுத்துக் காட்டியது. இதன் பின்னர் தான் வேலை நிறுத்தம் என்னும் ஆயுதத்தை தொழிலாளர் அடிக்கடி பிரயோகிக்கத் தொடங்கினர்.

இதன் பின்பே தொழிற் சங்கங்கள் அரசியல் விஷயங்களில் ஈடுபடத் தொடங்கின. தொழிலாளிகள் தாம் விரும்பும் அரசியற் சலுகைகளைப் பெறுவதற்காகத் தங்களுக்கு அனுதாபமுள்ள கட்சிகளுள் ஒன்றைத் தெரிவு செய்து ஆதரிக்கும் வழக்கம் ஏற்பட்டது.

ஏறக்குறைய 125 வருடங்கள் போராடியதன் பயனுக 1913-ம் ஆண்டு தொழிற் சங்கங்கள் அரசியல் விஷயங்களில் தலையிடுவதைச் சட்டபூர்வமாக முதன் முதல் அரசினர் அங்கீகரித்தனர். முன்னேர் போராடிப் பெற்ற உரிமைகளைத்தான் உலகனைத்திலுமுள்ள தொழிற் சங்கங்கள் இப்போது அனுபவிக்கின்றன. இலங்கையில் இன்று 260 பதிவு செய்யப்பட்ட தொழிற் சங்கங்கள் உண்டு. தொழிற் சங்கங்களிற் சேரத்தக்க பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் இருந்தும் ஒரு பகுதியினர் மாத்திரம் அங்கத்துவம் பூண்டுள்ளனர்.



(மறுபக்கம் பார்க்க.)

# பாலரும் கல்விப் பயிற்சியும்

**பண்டிதை ச. அமிர்தாம்பிகை B. A.**

கொக்குவில் இந்துக்கல்லூரி

கல்வியூட்டல் கலாநிலையங்களின் கடமைதான் என்று நினைப்பது புத்தியல்ல. கைக் குழந்தையாக இருக்கும் போதே, அதுதன்னைப் பற்றியும் சிறப்பாக தன்னுடைய அவயவங்களைப்பற்றியும், சூழ்நிலைகளைப் பற்றியும் படிக்கின்றது. குழந்தையின் சிறந்த குணவிசேடங்கள் இக்காலத்திற்றான் அரும்பத் தொடங்குகின்றன. குழந்தையின் சிறப்பான இயல்புகளை வளர்த்து, ஆகாதனவற்றை சாதூரியமாகத் தடுத்து குழந்தையை உருவாக்குதல் தாயின் கைப்பொறுப்பாகும். ஆகையால் குழந்தை காணும் முதற்குரு தாயாகும்.

குழந்தைக்கு நல்லஉணவைக் கொடுப்பதும், குளிர்பிடியாமல் சட்டைபோடுவதும் அன்பு பாராட்டுவதும் ஆகிய இவைதான் தாய்மார் பொதுவாகக் கவனிக்கும் செய்கைகள். படுத்துறங்கும் குழந்தை உடம்பு புரட்டி தவழ்ந்து நிமிர்ந்து நடக்கும்போது அதனுடைய புத்திக் கூர்மையும் தீட்டப்பெற்று வருகிறது. தன்பாட்டிற்கு யோசிக்கத் தொடங்குகிறது; காணும் விடயங்களை தர்க்க முறையில் பரிசீலனை செய்கிறது; தனக்கென ஒரு மனத்திடமும் அதனைச் சாதிக்க ஒரு விடா முயற்சியும் பிடிவாதமும் அதனுள்ளத்தில் தலையெடுக்கிறது. சுருங்கச் சொன்னால் மனித வியற்கைகளெல்லாம் சூக்குமமாக வளரும் சிறு மனிதன் இக்குழந்தை என்று சொல்லலாம். இந்நிலையிற்றான் குழந்தையின் இயற்கையம்சங்களை தாய் நல்வழிப்படுத்த வேண்டும்.

இரண்டு வயதுக் குழந்தைக்குக் காணுவதெல்லாம் புதியன. அவற்றை ஆராய்ந்து தானேகைகளாலும் பிறவற்றாலும் சோதனை செய்து கற்க விரும்புகிறது. கைக்கு அகப்பட்ட பெட்டியை மூடி வேறாக அடிப் பெட்டி வேறாகப் பிரிக்கிறது. உள்ளே இருக்கும் பொருட்களை ஒவ்வொன்றாகப் பிரித்து சிந்திப் பரீட்சிக்கிறது. இதனைக் கண்ட தாய் "தொடாதே" என்று சத்தமிட்டு அதனைப் பறித்து வைத்தால் குழந்தையின் ஆராய்ச்சியுள்ளம் புண்படுகிறது; தன் மனப்பான்மையை அறியாத தாயிடத்திலும் ஒரு வெறுப்பு உண்டாகிறது. குழந்தையின் பரிசிலனைக்கு வேண்டிய விளையாட்டுப் பொருட்களைக் கொடுக்க வேண்டும். விளையாட்டுப் பொருட்கள் விலையுயர்ந்தனவாக இருக்கவேண்டியதில்லை. ஒரு பழைய பெட்டி, தடி, கரண்டி முதலியவை போதும். செய்கை விளையாட்டுப் பொருட்களும். கம்பியை முறுக்கியோ அல்லது அமுக்கியை அமுக்கியோ செல்லும் விளையாட்டுப் பொருட்களும் அவர்களுடைய அறிவை வளர்க்கமாட்டா. பிரித்துச் சேர்க்கக்கூடிய விளையாட்டுப் பொருட்கள் அவர்களுடைய நிதான அறிவை வளர்க்கும்.

---

*(முன்பக்கத் தொடர்ச்சி)*

ஆசிரியர்களைப் பொறுத்தமட்டில் 48000 ஆசிரியர்களுள் அகில இலங்கை ஆங்கில ஆசிரியர் சங்கம், தமிழாசிரியர் சங்கம், சிங்கள ஆசிரியர் சங்கம், அரசினர் பாடசாலை ஆசிரியர் சங்கம் எனப் பல்வேறுபட்ட பிரிவினராக 56 வீதமான ஆசிரியர் மாத்திரமே அங்கத்துவம் பூண்டுள்ளனர். ஏனையோரும் அங்கத்துவம் பெறுவதுடன் ஒரே சங்கமாக இணைந்து இலங்கை ஆசிரியத் தொழிற்சங்கமாக அமைய வேண்டும். அதோடு நில்லாமல் இலங்கைக்கு வெளியேயுள்ள தொழிற் சங்கங்களுடனும் இணைந்து பயன் பெறலாம் இது உலக சமாதானத்தை நிலைநாட்டுவதற்கும் உலக அரசாங்கத்தை நிறுவுவதற்கும் ஒரு படியாகும். ஆசிரியர் ஒவ்வொருவரும் இவ்வெண்ணத்துடன் உழைப்பார்களேயானால் எமது உரிமைகளை முகாமைக்காரரிடமிருந்தும் அரசாங்கத்திடமிருந்தும் முறைப்படி பெற ஏதுவாகும்.

**இ. பொ. குமாரசாமி,**

முதலாம் வருடம்.

நடமாடும் சிறு குழந்தை எப்போதும் தாயோ தகப்பனே அல்லது வேறு வளர்த்தவர்களோ செய்யும் கருமங்களைப் பின்பற்ற யோசிக்கும். தாய் கத்தியால் உருளைக் கிழங்கை வெட்டினால் தானும் அப்படியே செய்ய முயலும். மொட்டைக் கத்தியொன்றைக் கொடுத்து ஒரு கிழங்கையும் கொடுத்தாலும் சந்தோசப்பட்டு ஏதோ சில விடயங்களைத் தானாகவே கற்க முயல்கிறது. குழந்தையைச் சட்டமிட்டுத் தடுத்தால் தன்னம்பிக்கையும் சொந்த முயற்சியும் முளையிலே கிள்ளி எறியப்படுகின்றன.

குழந்தைக்கு ஆபத்தான காரியங்களில் அது ஈடுபடும்போது அதனைத் தடுக்கத்தான் வேண்டும். ஆனால் அன்பும் அனுதாபமும் பொருந்திய தண்டனைகளாக இருக்கவேண்டும். ''உணவு உண்ண மறுத்தாயானால் பரதேசம் போய்விடுவேன்'' என்று வெருட்டினால் பாலியவுள்ளத்தில் பயம் குடிபுகுகிறது. பயத்தால் தாயின் சீலைத் தலைப்பையே பிடித்துக் கொண்டு திரியும். தாய் போய்விடுவாள் என்ற பயத்தினால் ஒரு கணப்பொழுதும் பிரிந்திருக்க மறுத்துவிடுகிறது. நேரம் ஒரு விதியும் நேரம் ஒரு விலக்கும் இடப்படாது. ஒருகால் விதியாய் இருப்பது இன்னொருகால் விலக்காக மாறப்படாது. ஒருகால் 'தண்ணீரில் விளையாடாதே' என்று மறுத்துவிட்டு குழந்தையின் அட்டகாசம் பொறுக்க முடியாமல் ''விளையாடு'' என்று ஒத்துக்கொடுக்கப்படாது. தாயின் இளகியவுள்ளத்தைப் பயன்படுத்தி நினைத்தவெல்லாவற்றையும் சாதிக்க முயலும். நிதானமான நியாயத்தை ஆறுதலாக அன்பாகக் குழந்தைக்குச் சொன்னால் அது கேட்டுக்கொள்ளும். ''நெருப்புக் குச்சியைத் தட்டாதே'' என்று சொல்லி சடக்கென்று அதன் கையில் நின்றும் பிடுங்குவதிலும் பார்க்க, 'தம்பி! தொட்டால் சுடும் கை வெந்துபோகும்' என்று கூறி ஒரு குச்சியைத் தட்டி குழந்தை விரல்களை சற்றுத் தூரத்தில் சூடுபிடிக்க விட. அதற்கு அதன் விளைவு விளங்கும். மொட்டைக் குச்சிகளைக் கொடுத்தால் அது தட்டிப் பழகும். பயிற்சி வந்தபின்பு குழந்தையையே தட்ட விடலாம். அப்பொழுது அது தானாகவே ஒரு கருமத்தைச் செய்யப் பழகுகிறது. இவையெல்லாம் குழந்தை நடை முறையில் கற்கும் வாழ்க்கைக் கல்வியாகும்.

குழந்தைகளுக்கென நிறுவப்படும் தனிப்பட்ட கல்வி நிலையங்களும் உண்டு. அவைகளின் அவசியத்தைக் கண்ட பெரியார்களின் அனுபவம் விசித்திரமானது. உரோமாபுரியில் வீடமைப்புச் சங்கமொன்று நகர்ப்புறத்தில் பொதுவாகக் காணப்படும் அசுத்தமானகொட்டில்களை திருத்தியமைத்து அந்த ஏழை மக்களுக்கே குறைந்த வாடகைக்குக்கொடுக்க முற்பட்டது. ஆனால் அவர்களின் குழந்தைகள் அக்கட்டிடங்களின் சுவர்களில் வரைதல் கீறி அலங்கோலப்படுத்தினர். அவர்களை நல்ல வழிப்படுத்துவதற்காக, அவர்களுக்கென ஒரு ஆசிரியரை மேற்பார்வையாளராக அமைத்தனர். இச்சூழ்நிலையிற்றான் பாலர் இல்லம் உருவாகியது. குழந்தைகளின் இயற்கையான விளையாட்டுகளைக் கண்காணிப்பதுதான் இவ்வில்லத்தின் குறிக்கோளாகும். பள்ளிப்பருவத்திற்கு முன்பே குழந்தைகள் பலவிதமான நியாயமான அறிவை நடைமுறையில் பெறுகின்றன. அக்கல்வியைக் கட்டுப்படுத்தி நிதானமான வழியில் செலுத்தினால் குழந்தைகள் பெரும்பயனை அடைவார்கள். தங்கள், தங்கள் கருமங்களை — அதாவது உண்ணல், உடுத்தல், குளித்தல் போன்ற சொந்தக் கருமங்களை — பிறருடைய உதவியின்றி தாமாகக் குழந்தைகள் செய்யப் பழகுவதே இக்கல்வியின் அடிப்படை நோக்கமாகும். குழந்தையின் வாழ்க்கைக்கும் அதனுடைய படிப்படியான வளர்ச்சிக்கும் கொடுக்கப்படும் உதவிதான் கல்வி.

விளங்கப்படுத்திய ஒரு பாடத்தைக் குழந்தை மனதில் வாங்கவில்லை என்பதற்காக அப்பாடத்தைத் திரும்பிப் படிப்பிக்கப்படாது. குழந்தை அக்கல்வியைப் பயன்படுத்தவேண்டிய காலம் ஏற்படவில்லை என்று கருதி, குழந்தைக்கு அக்கல்வி தேவைப்படவேண்டிய காலத்தை ஆசிரியன் எதிர்பார்த்திருக்கவேண்டும். குறிப்பிட்ட ஒருகால வரையறையல்ல ஒரு பாடத்தைப் படிப்பிக்கவேண்டிய காலவெல்லை. குறித்த விடயத்தைக் குறித்துக் குழந்

தையின் ஆவல் நிலைக்கும் காலமே, அப்பாடத்தின் அட்டவணையாகும். ஆகையால் இக் கல்விமுறையின்படி ஒரு குழந்தை தொடர்ந்து பல நாட்களாக ஒரு விடயத்தில் ஈடுபட்டிருக்கும். இக்கல்வி குழந்தையின் மனோபாவத்தின் வளர்ச்சியையும் அதனுடைய ஆவலையும் பொறுத்ததேயொழிய ஆசிரியரின் பாட அட்டவணையை பொறுத்ததல்ல.

பரிசில்களைக் காட்டி குழந்தையை ஊக்கப்படுத்துவது இதன் நோக்கமல்ல. அறிவு வளர்ச்சியும் அதனைப் பெறும்போது குழந்தை அனுபவிக்கும் இன்பமுமே வெகுமதிகளாகும். தனது சுயவியல்புகளை வளர்க்கும் சுதந்திரம் குழந்தைக்குண்டு. 40 குழந்தைகள் உள்ள ஒரு வகுப்பறையில் ஒன்று கணக்கு செய்யும்; ஒன்று எழுத்துக்களைக் கவனிக்கும்; மற்றொன்று மரத்துண்டுகளை அடுக்கும், இப்படியே அவை தாம் விரும்பிய கருமங்களில் ஈடுபடுவதால் அவ்வகுப்பில் அமைதியும் அடக்கமும் இயல்பாகவே குடிகொள்கிறது. குழந்தையின் இயற்கைச் சக்திகளும் செய்கைகளும், தன்பாட்டிற்கு இயங்கி உபயோகமாகக்கூடிய வழிவகைகளையும் சூழ்நிலையையும் வகுப்பது இதன் குறிக்கோளாகும். இம்முறையில் வகுப்பமைதி தானாகவே அமைகிறது.

அன்றாட வாழ்க்கைக் கடன்களை செய்யப் பழகுதல், புலன்களை உபயோகிக்கப் பழகுதல், அறிவுரைப் போதனைகள் ஆகிய முப்பெரும் பிரிவுகள் இக்கல்விமுறையில் உள்ளன.

**வாழ்க்கைக் கடன்களைப் பழகுதல்:** சுதந்திரம் என்பது மற்றவர்களுக்கு சட்டமிடும் உரிமையல்ல; தானே தன் கருமங்களைப் பார்ப்பதாகும். ஆனதால் குழந்தை கால் கை முகங்களைச் சுத்திசெய்யவும், உடைகளைப் போடவும் களையவும் பழகுகிறது. பாலர் வகுப்பில் கதிரைகளும் மேசைகளும் சிறியனவாக இருப்பதால் அவற்றை ஒழுங்குபடுத்தப் பழகி தனது நிதான அறிவைப் பெருக்குகிறது.

**புலனறிவு வளர்ச்சி:** பலதரப்பட்ட உருளை வடிவப் பொருள்களை வைத்து அவைகளை உயரப்படி அடுக்குவதில் குழந்தையை ஊக்கப்படுத்தவேண்டும். இது அதனுடைய காட்சியறிவை வளர்க்கும். நிற வித்தியாசங்களை அறியப்படுத்துவதில் மூன்று படிகள் உண்டு. 'இது சிவப்பு' 'இது நீலம்' என்று முதலில் நிறங்களை அறிமுகப்படுத்தவேண்டும். இது முதற்படி. நிறங்களின் பெயர்களைக் கூற அவற்றைச் சுட்டிக்காட்டக்கூடியதாக இருக்கவேண்டும். இது இரண்டாவது படி. பின்பு நிறப்பொருட்களைக்காட்ட அவைகளின் நிறங்களை சொல்லக்கூடியதாகவேண்டும். இவ்வாறே ஏனைய புலன்களின் அறிவும் வளர்க்கப்படவேண்டும்.

குழந்தை வாசிக்கப் பழகமுன்னம் எழுதப் பழகவேண்டும். எழுதும்போதே எழுத்தின் உச்சரிப்பும் சொல்லிக்கொடுக்க வேண்டும். மட்டையில் செய்யப்பட்ட எழுத்துக்களை குழந்தைகளுக்கு கொடுத்து அவ்வெழுத்துக்களின் அமைப்புக் கோடுகளை விரலால் தடவப் பழக்கவேண்டும். பொதுவாக நான்கு வயதில், குழந்தை எழுத ஆரம்பிக்கவேண்டும்.

குழந்தை அறிந்த சில பொருட்களையும் அவற்றின் பெயர் குறித்த அட்டைகளையும் வெவ்வேறாக வைக்கவேண்டும். ஒரு அட்டையை பிள்ளையின் கையிற் கொடுத்து எழுத்துக் கூட்டி வாசிக்கச் செய்யவேண்டும். பின் அப்பெயரட்டையை அதற்குரிய பொருளுக்குப் பக்கத்தில் குழந்தையை வைக்கச் செய்யவேண்டும். இப்படிச் செய்தால் குழந்தை வாசிக்கவும் பொருட்களை விளங்கவும் கற்றுக்கொள்கிறது.

மொன்ரோசூரி அம்மையாரின் போதனுமுறை, வகுப்புமுறைக் கல்வியை நிராகரிக்கிறது. ஒவ்வொரு குழந்தைக்கும் ஏற்ற கல்விமுறையைத்தான் ஆதாரமாகக் கொண்டுள்ளது. ஆனால் இவற்றையெல்லாம் ஒரு ஆசிரியனால் குறிக்கப்பட்ட நேரத்தில் சாதிப்பது சாத்தியமா என்பதுதான் கேள்வி.



1957-ம் ஆண்டு எங்சள் கலாசாலையில் இல்லங்களுக்கிடையே நடைபெற்ற இரசஞானப் போட்டியில் முதலிடம்பெற்ற

இராமநாதன் இல்லம்

# பாலர்களின் முக்கியமான ஊக்கங்களும், அவற்றை ஆசிரியர் பயன்படுத்தலும்.

ஐந்து வயதில் அன்னநடை போட்டுக் கொண்டு, மழலை பகர்ந்துகொண்டு பாடசாலை நோக்கி வருகின்றான் பாலன். அந்தப் பால் மணம் மாறா மிகமிகப் பச்சைப் பாலனின் மழலையில் ஆராய்ச்சி, ஆர்ப்பாட்டம் போடுகின்றது. அந்த ஆராய்ச்சி ஆராய்வூக்கம் என்று பெயர்பெறுகின்றது. இப்படியாகப் பல ஊக்கங்கள் பாலர்களில் பரிணமிக்கின்றன. அவை யாவன ஆராய்வூக்கம், திரட்டூக்கம், பணிவூக்கம், கூட்டூக்கம், முதன்மையூக்கம், போரூக்கம் என்பனவாகும்.

மழலை பகர்ந்த பாலன் மதி நுட்பத்துடன் சற்றுத் திருத்தமாகப் பேசுகின்றான், பிள்ளைப் பருவத்தில் இப் பிள்ளைப் பிராயத்தின் முன்னணியில் ஆராய்வூக்கம் அவனை ஆட்சிப் படுத்துகின்றது. இவ்வூக்கத்தின் தூண்டலினால் அவன் எதைக் கண்டாலும் அது என்ன? இது என்ன? ஏன் அப்படி? இப்படி இருந்தால் என்ன? காகம்கறுப்பாக இருக்கிறதே, கிளி ஏன் பச்சையாக இருக்கவேண்டும்? என்றெல்லாம் விநோத வினாக்களை எழுப்பிப் பெரியதோர் ஆராய்ச்சியில் இறங்கி விடுகின்றான். பெற்றோர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் அலுப்பையும் உண்டாக்கி விடுகின்றான். இவற்றை எல்லாம் சுமுகமாக ஏற்று அவர்களுக்குத் தகுந்த முறையில் விடை அளித்துவிடும் ஆசிரியர்களே உத்தம ஆசிரியர்களாவார்கள். ஒரு நல்லாசிரியன் நாட்டின் வளர்ச்சிக்கும், சமூகத்தின் உயர்ச்சிக்கும், சமயத்தின் தேர்ச்சிக்கும் தகுந்த முறையில் தான் வழி கோலுவான். எனவே அந்த அறிவின் உச்சியில் நின்று ஆட்டம் புரியும் ஆசிரியனுக்கு அப் பாலர்களில் காணப்படும் ஆராய்வூக்கம் அருந்துணையாமன்றோ! ஆராய்ச்சியின் பயனாகவே இன்றைய உலகம் விஞ்ஞான உலகாக விளங்குகின்றது. விஞ்ஞான உலகை வெளிப்படுத்திய விஞ்ஞானி யார்? ஆராய்வூக்கத்தில் ஆழ்ந்திருந்த சிறுவனை ஆசிரியன் உற்சாகப்படுத்தி அவன் ஆராய்ச்சியை வளர்த்து வந்தான். அதன் பயனாக அவ்வூக்கம் வளர்ந்தது. ஈற்றில் அவன் பெரிய பெரிய உண்மைகளைக் கண்டு பிடித்தான். இப்பொழுது விஞ்ஞானி என்னும் பெயரையும் பெற்றுவிட்டான். இப்பெயரைப் பெற்றுக் கொடுத்தது ஆசிரியர் வளர்த்த ஆராய்வூக்கமே. இவ்வூக்கத்தை வளர்க்கும் பொழுது சிறுவர்களுக்குப் பலவற்றிற்கும் சந்தர்ப்பம் கொடுக்கவேண்டிய கடமை உதிக்கின்றது.

ஆராய்வூக்கத்தில் ஆழ்ந்த சிறுவன் இப்பொழுது திரட்டூக்கத்தில் மிதக்கின்றான். இவ்வூக்கத்தின் தூண்டலினால் பல முயற்சிகளையும் செய்கின்றான். ஆனால் அது அவனுக்கு ஆசையின் தூண்டலால் ஏற்பட்ட விளையாட்டாகவே அமைகின்றது. இதுமட்டுமா? இன்னும் எத்தனையோ ஆசிரியருக்கு உதவியான வேலைகளை விளையாட்டாகவே செய்துவிடுகின்றான். திரட்டூக்கத்தின் காரணமாக காசு, படம், சோடாமூடிகள், பூக்கள் முதலியவற்றைத் தேடித் திரட்டுகின்றனர். இவ்வூக்கத்தின் துணைகொண்டு ஆசிரியர் சுலபமாகக் கல்வி கற்பித்து விடலாம். அவர்களின் கற்பனா சக்தியை வளர்க்கச் செய்யலாம். பொருட்களை அறிமுகம் செய்யலாம். உதாரணமாக ஆசிரியர் முதல்நாள் பத்து நெருப்புப் பெட்டிகள் கொண்டு வரும்படி சிறுவர்களிடம் சொல்லிவிட்டால் அவர்கள் அப்படியே அடுத்தநாள் கொண்டு வருகின்றார்கள், எனவே அவர்கள் "10" என்னும் தொகையான இலக்கத்தை அறிகின்றார்கள். தீப் பெட்டிகளின் தன்மையையும் தொகையையும் அறிகின்றார்கள். ஞாபகத்தை வளர்க்கின்றார்கள் உணர்கின்றார்கள். இப்படியாக மாணவர்களின் கல்வி விருத்தி அடைவதற்கு மிகவும் துணையாக இவ்வூக்கம் அமைந்திருக்கின்றது; ஆசிரியர் சுலபமாகத்தன் கடமையைச் செலுத்த உதவி புரிகிறது

திரட்டூக்கத்தில் திளைத்திருந்த மாணவன் இப்பொழுது கட்டத்தொடங்குகின்றான். திரட்

டுக்கத்தின் காரணத்தால் கிடைத்த பொருட்களைக்கொண்டு வீடு, தேர் போன்றவைகளைக் கட்டுகின்ருன். ஆசிரியர்கள் இவ்வூக்கத்தை மிகவும் கூடுதலாக வளர்க்கவேண்டும். எனவே பாடசாலையில் கைவேலை என்ருெரு பாடம் இடம்பெறல் வேண்டும். இந்நேரத்தில் மாணவன் தன் இஷ்டப்படி என்ன வேலையையும் செய்யச் சந்தர்ப்பம் கொடுத்தல்வேண்டும். இப்படி அவர்கள் விருப்பப்படி விடுதலினுல் மாணவன் தன் கற்பனு சக்தியை வளர்க்கின்ருன். மதிவல்லமையை வெளியிடுகின்ருன். எனவே ஆசிரியர் இலகுவில் ஒவ்வொரு மாணவனின் மதிநுட்பத்தையும் அறிந்து அவரவருக்குத் தகுந்த முறையில் கல்விபோதிக்கத் துணையாக முடிகின்றது. இந் நோக்கங்கொண்டே அரசாங்கம் தற்போதைய பாடசாலைகளில் தொழிற் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றது போலும். செய்து கற்றலினுல் (Learning by doing தன்னம்பிக்கை உதிக்கின்றது. எனவே இங்கே ஆசிரியரைக் குறிப்புணரவோ பின்பற்றவோ இடமில்லை. இங்கே ஆசிரியர் உள்ளதை உள்ளபடியே கற்பித்து விடுகின்ருர். இப்படியாக ஆசிரியர் கல்வி கற்பிப்பதினுல் மாணவன் தனது தனி அம்சத்தை வளர்த்து விடுகின்ருன். ஆகவே அவன் உத்தியோகத்தைத் தஞ்சமென்று கருதாது தன் வாழ்க்கைக்கு வழிதேடக்கூடிய வேலைகளைச் செய்து சீவிக்க முடிகின்றது. எனவே அவன் வாழ்வு பூரணமாக நடைபெறுகின்றது. சமூகத்தில் சிறந்த பிரசையாக மதிக்கப்படுகின்ருன்.

இவ்வூக்கங்கள் எல்லாவற்றையும் கொண்ட சிறுவனிடம் முதன்மை ஊக்கம் தாண்டவம் ஆடுகின்றது. எதற்கும் எந்த ஒரு செயலுக்கும் அவன் நான், நான் என்று முன் வருவான். ஆசிரியர் வகுப்பில் வினுக்களை வினவினுல், விடை அளிப்பதற்கு ஒவ்வொரு சிறுவனும் முன் வருகின்ருன். இந்த ஆர்வத்தை ஆசிரியர் வளர்த்தல் வேண்டும். சிறுவன் உள்ளதை உள்ளபடி உரைப்பான். தன்மதிப்பில் தக்க ஆசை உள்ளவன். பெற்ருர் பொருளை வைத்துக்கொண்டு இரப்போர்க்கு இல்லை என்று சொன்னுல் சிறுவனில் தலைகாட்டும் முதன்மை ஊக்கம் அவனைச் சும்மா இருக்கவிடுமா? அவன் இன்முகம் காட்டி இனிது பேசி, 'இருக்கின்றது' என்று எடுத்துக் கொடுப்பான். அப்பொழுது பெற்ருர் அவனைத் தட்டிக் கொடுத்தால் அவன் காலாந்தரத்தில் வாய்மையை வழி நடத்துபவனுகவும், அறத்தை ஆதரவாகக் கொண்டவனுகவும், சமயத்தை ஒட்டி ஒழுகுபவனுகவும் காணப்படுவான். ''ஏன் அப்படிச் செய்தாய்'' என்று அதட்டினுல் அவன் காலகதியில் ஐம்பெரும் பாதகங்களையும் அஞ்சாமல் புரியும் காளையாகக் காணப்படுவான். எனவே பெற்ருேர்களும் ஆசிரியர்களும் சிறுவர்களிற் காணப்படும் இவ்வூக்கத்தைத் தகுந்த வழியில் வளர்க்கவேண்டும்.

சிறுவனைத் தக்க வழியில் செலுத்தலே ஆசிரியரின்கடமை. ஆசிரியரின் சொல்லமுதைத் தித்திக்கும் பாலமுதெனப்பருகும் சிறுவன் இயல்பாகவே பலருக்கும் பணிகின்ருன். தான் சிறியவன் என்ற எண்ணத்தினுல் தன்னிலும் பெரியோரைக் கண்டதும் பணிகின்ருன் போலும். சிறுவனில் காணப்படும் இப்பணிவூக்கம் ஆசிரியனுக்கு நல்ல பழக்க வழக்கத்தைப் பழக்குவதற்குத் துணைபுரிகின்றது. ''தொட்டிலில் பூண்டகுணம் சுடுகாடு மட்டும்'' என்பர். எனவே இவ்வூக்கம் தொழிற்படும் பாலப்பருவத்தில் ஆசிரியர் பல நற்பழக்க வழக்கங்களைப் பசுமரத்தாணிபோல் அவர்கள் உள்ளத்தில் ஊன்றச் செய்தல் வேண்டும். எனவே சிறுவன் வளர்ச்சியுற்றதும் நற்பண்புகள் நிறைந்த நற்பிரசையாகத் தோன்றுவான்.

சிறுவன் வகுப்பில் சேர்ந்து படிக்கும்பொழுது அவன் தன்னுடன் ஒத்த சமூகத்துடன் சேர்ந்து வாழ்கின்ருன். அங்கே ஒரே உணர்ச்சியே தோன்றுகின்றது. தன் உணர்வுக்கு ஏற்காத செயல் நடந்தால் அது அவனுக்கு மனவெறுப்பை உண்டுபண்ணுகின்றது. எனவே அவனுக்கு வேற்றுமை தோன்றுகின்றது. இதுவே ஈற்றில் போருக்கமாக மாறுகின்றது. இப்போருக்கம் வளர்க்கப்படுவதினுல் எத்

(மறு பக்கம் பார்க்க)

# பாடசாலைகளில் முயற்சிக் கல்வி

**கல்வி** உலகிலே பல நவீன முறைகளைப் பற்றிப் பேசியும் எழுதியும் வருகிருர்கள். விசேடமாக முயற்சிமூலம் கற்பிக்கவேண்டும். "அதுவே சிறந்த முறை" என்னும் கொள்கை வலுவடைகிறது. அடுத்த வருடத்தில் செய்கை முறைப் பாடங்கள், பாடசாலைகளில் இடம்பெறவேண்டும் என்று வித்தியாதிபதி பாடசாலைகளுக்கு அறிவித்துள்ளார். ஆசிரிய கலாசாலைகள் கூட முயற்சிப்பாடத் திட்டங்களைத் தயாரிக்கவேண்டும் என்றும் முயற்சி முறைகளை, கற்பித்தலிற் கையாளவேண்டுமென்றும் விண்ணப்பிக்கப்பட்டிருக்கின்றன. இதற்கான காரணங்களை ஆராய்வாம். கல்வி, ஆசிரியர் மாணவர் ஆகிய இருபாலார்க்குமிடையே நடைபெறும் முயற்சியாகும். ஆசிரியர் மாணவரைப்பற்றி அறிதல் மிக அவசியம். ஏனெனில் கற்பது மாணவரேயன்றி ஆசிரியரல்லர். சிறுவர் எத்தகைய தன்மை உடையவரென்பதை அறிதல் இன்றியமையாததாகின்றது. மாணவர் ஆரம்பத்தில் பொறிகள் வாயிலாகவே அறிவைப் பெறுகின்றனர். அவற்றிலும் கண், காது ஆகிய இரண்டும் முக்கியபங்கெடுத்துக் கொள்கின்றன. மேலும், குழந்தைகள் சுறுசுறுப்பும் நூதனப்பிரியமும் உடையவர்கள். இதற்குக் காரணம் உண்டு. சிறுவர்களின் உடல் வளர்ச்சிக்கு ஏற்ற முறையில் அவர்களிடமுள்ள இயற்கைச் சுபாவங்கள் அவர்களை முயற்சி செய்யுமாறு தூண்டிக் கொண்டிருக்கின்றன. இது இயற்கையின் கொடையாய் அமைந்துள்ளது. இத்தகைய பாலர்களைப் பாடசாலைகளில் பொம்மைகள் போல அமரச்செய்து ஆசிரியர், போதனையோ வேறு உபந்நியாசமோ செய்வதாயின் அது சாத்தியமாகாத ஒரு செயல் என்பதை எவரும் ஏற்றுக்கொள்வர். எனினும் இத்தகைய கல்வி முறைகள் பலகாலமாக அநுட்டிக்கப்பட்டு வந்துள்ளன. பல பிரச்சினைகளும் இவற்ருல் எழுந்தன. இவைகாரணமாக பல புதிய ஆராய்ச்சிகள் நிகழ்த்தப்பட்டு, புதிய கல்வி முறைகளும் ஏற்பட்டன.

இயற்கையோடு ஒட்டியே காரியங்களைச் சாதிப்பது சுலபம். வலிந்து செயற்கை முறையாய்ச் செய்யப்படும் காரியங்கள் அவ்வளவு பயனளிப்பதில்லை. இக் கொள்கைகள் சம்பந்தமான ஆராய்ச்சிகளைப் பல உளநூல் வல்லுனர் நடத்தினர். இவர்களில் "யோன்டிவே", "டெக்ரேலி" என்போர் முக்கியமானவர்கள். இவர்கள் சிறுவர்களின் உளத்தை அறிந்து அவர்களின் தேவைகளை இயற்கைத் தன்மைக்கேற்ப முயற்சிகள் மூலம் கற்பிக்கவேண்டுமென்னும் கொள்கையை வெளியிட்டனர். இம்முறையே சுயகருமமுறை (Project method) எனப்படும். இதைப் பின்பற்றியே நம் நாட்டிலும் சுயகருமமுறை பயன்படுத்தப்படவேண்டுமென்கின்றனர். மகாத்மா காந்தியும் இந்தியாவுக்குப் பொருத்தமான வார்தாக் கல்வித் திட்டத்தை வகுத்தார். இதுவும் ஒரு முயற்சிமுறையேயாகும்.

(முன்பக்கத் தொடர்ச்சி)

தனையோ மாணவர்கள் வீரகர்ச்சனைசெய்யும் வீரர்களாக விளங்குகின்றனர்.

பாலர்களில் காணப்படும் பலபடியான ஊக்கங்களை எல்லாம் ஆசிரியர்களே வளர்த்து வரல் வேண்டும். ஊக்கத்தின் விரிவே கல்வி. எனவே ஊக்கங்களை வளர்த்து வந்தால் கல்வி தானகவே வளரும். ஆசிரியர் தகுந்த முறையில் வளர்த்து வந்தால் மாணவ உலகம் சீரிய முறையில் சிறந்து விளங்கும். நாட்டிற்கு நல்லனபுரியவும், நல்குரவில் நலிந்தோரை நன்மைப்படுத்தவும், நாட்டை நாகரீகத்தில் நாட்டி வைக்கவும், விஞ்ஞான உலகை விளங்கவைக்கவும், இன்னும் எத்தனையோ சிருஷ்டிகளை ஆக்கவும் பாலர்களில் காணப்படும் இவ்வூக்கங்கள் ஆசிரியர்களுக்கு அநந்துணையாமன்ரே. ஆகவே பாலர்களில் பரிணமிக்கும் ஊக்கங்களை, ஆசிரியர்கள் தூண்டலாக இருந்து துலங்க வைத்தல் கடமையாகும்.

(பிரபல உளநூலாசிரியர் ஒருவரின் கட்டுரையைத் தழுவி எழுதப்பட்டது.)

**பா. சரஸ்வதி,**
முதலாம் வருடம்.

இலங்கையில் நடைமுறையிலுள்ள கல்வி முறைக்கும் சுயகரும முறைக்கும் வேற்றுமை உண்டு. இலங்கை அந்நியர் பிடியிலிருந்து விலகிய புதிய நாடு. அதனுற் குடியேற்ற நாட்டாட்சிக் கல்விமுறை இன்னும் நீங்கவில்லை. ஆகவே புதிய கல்வி முறையை நாம் பின்பற்றுவதாயின் தற்போதுள்ள பாடக்கிரமம் மாற்றியமைக்கப் படுதல் வேண்டும். திடீரென முற்முக மாற்றியமைத்தல் கடினமேயாயினும் ஓரளவு மாற்றமாவது செய்து படிப்படியாகப் புதிய நிலைக்கு வரவேண்டும். ஆசிரியர்கட்கு அதற்கேற்ற முறையில் பயிற்சி யளித்தல் வேண்டும். வித்தியாதரிசிமார், மேலதிகாரிகள், தாமும் புதிய முறையில் ஆர்வம் காட்டி முன்வந்து உழைத்தலவசியம். இவைகள் யாவற்றிற்கும் முன்னர் நம் நாட்டுப் பொதுமக்களின் மனம் மாறவேண்டும். கல்வி கற்பது அறிவைப் பெறுதற்கேயெனவும், கல்வி பாடசாலையில் மாத்திரமன்றி பாடசாலைக்கு வெளியிலும் அளிக்கப்படுகிறதெனவும் பெற்ருேர் உணர்தல் அவசியம். ''பாடசாலையில் உபாத்தியாயர் என்ன படிப்பித்தார்? விளையாடவும் வேலை செய்யவுமா பாடசாலைக்குப் போகவேண்டும்?'' எனக் கூறப்படும் நிலை மாறுதல் வேண்டும். இம்மாற்றம் ஏற்படாவிடில் புதிய முறையினுற் பயனில்லையாகும். அரசாங்கமும் ஆசிரியர்களும் செயலளவில் இறங்க வேண்டும். பாடசாலைகளில் முயற்சிகள் மூலம் கல்வியளிக்ககூடிய வகையில் போதிய உபகரணங்கள் தொழிற்சாலைகள் ஆதியவற்றை அரசாங்கம் அமைத்துக் கொடுக்க வேண்டும். இவைகளில்லாது இம்முறையை நன்முறையிற் கைக்கொள்ளுதல் கடினம். எனினும் ஆர்வமுள்ள சிறந்த ஆசிரியர்கள் தமக்கு இயன்ற வரையில் சிறிது சிறிதாக முயற்சிக் கல்வியளிக்க ஆரம்பிக்கலாம்.

இம்முறையில் கல்வியளிக்கும் போது பல புதிய சிக்கல்கள் தோன்ருமலிரா. உதாரணமாகப் பிள்ளைகளின் தேவைக்கேற்ப ஒரு முயற்சியை ஆக்கினுல் தற்போது பாடசாலைகள் இருக்கும் நிலையில் பூமிசாத்திர அம்சம், சரித்திர அம்சம், கணித அம்சம் என்பன அதில் வரக்கூடும். ஆதலால் அவ்வவ் அம்சங்களைக் கற்பிக்க அவைகட்குரிய ஆசிரியர் வரவேண்டியிருக்கும். ஆதலால் முயற்சியைப் பாடங்கட்கு ஏற்றவாறு பாகுபடுத்திப் பிரிக்க வேண்டியேற்படும். இதனுல் அம்முயற்சி பொலிவிழந்து போம். இக்குறையை நீக்க ஒரே ஆசிரியர் பல பாட அம்சங்களைப் போதிக்கக் கூடியவராயமைதல் அவசியமாகிறது. கீழ்வகுப்புகளில் ஆசிரியர் ஓரளவு சமப்படுத்திக் கருமமாற்றலாம்.

இன்னும் முயற்சிக்கல்வியைப் பாடசாலைகளில் எந்த வகுப்புகளிற் கற்பிக்கலாமென ஆராய்தல் நன்று. அதற்கு ஆரம்பபாடசாலை மாணவர், மேல் வகுப்பு மாணவர் ஆதியோர் எத்தகைய உளப்பாங்குடையவர் என்பதை அறிதலவசியம். நம்வாழ்க்கையோ மிகப்பெரியது. முயற்சி மயமான வாழ்க்கையானுலும் மேல்வகுப்புகளில் இவ்விதம் கற்பிக்க மிக அதிககாலம் செல்லும். சில காரியங்கட்கு விதிகள் நுணுக்கங்களை அறிய வேண்டியிருக்கும். இவைகளைத் திட்டமாகத் தொடர்பு படுத்திக் கோத்து முயற்சி மூலங்கற்றல் இயலாது. அன்றியும் சில அறிவாளிகள் உயர்ந்த கொள்கைகளை நமக்கு அளித்துச் சென்றுள்ளார்கள். அவைகளை முதல் புத்தக மூலமோ போதனை மூலமோ அறிந்து தான் பின் முயற்சியாகக் கடைப்பிடிக்கலாம். ஆகையால் மேல் வகுப்புகளில் முயற்சிக் கல்வியளிப்பது அதிகம் பொருந்தாது.

ஆரம்ப வகுப்புகளில் எப்படியென ஆராய்வாம். ஆரம்ப வகுப்புகளில் பதினெரு வயதுக் குட்பட்டவர்களே உளர். இவர்கள் பொறிகள் வாயிலாக புறநிலைப் பொருட்கள்மூலம் அறிவைப் பெறக்கூடியவர்கள். சொற்கள் மூலமும், கருத்துக்கள் மூலமும் பெரியவர்களைப்போல் விஷயங்களை இலகுவில் கிரகித்துக்கொள்ளும் சக்தி குறைந்தவர்களாகக் காணப்படுவர். அது காரணமாகத்தான் பல பொருட்களைப்பற்றியறியவும் தாம் நேரே கண்டு அறியவும் முயல்கிருர்கள். அவர்களின் உடலோ வளர்ச்சியடைய வேண்டிய தேவையுடையது. அவ்வித வளர்ச்சிக்கு அசைவாட்

# கவர்ச்சி கவனம்.

கவர்ச்சியென்பது உளத்தின் அமைப்பை முக்கியமாகக் குறிக்கின்றதென்று யேம்ஸ் எஸ். றொஸ் (James S. Ross) என்பவர் கூறுகின்றார். இயற்கையின் எழில் மிகு காட்சிகளைக் கண்ட கவிஞனுடைய மனம் அக்காட்சிகளாற் கவரப்படுகின்றது - ஆகர்ஷிக்கப்படுகின்றது—கொள்ளை கொள்ளப்படுகின்றது. இதனாற் பொருளுக்கேற்ற கவர்ச்சியை முன்னதாகவே பெற்றுள்ள மனம் பொருளைக் கண்டவுடன் கவனிக்கின்றது என்ற உண்மை புலனாகின்றது.

கவர்ச்சியோடு பொருளையேனும், விஷயத்தையேனும் இணைத்து விட்டாற் கவனம் ஏற்படுகின்றது. குறிப்பிட்ட பொருளிலாவது, விஷயத்திலாவது மனம் ஒடுங்கியேனும், ஊன்றியேனும் நிற்கும் நிலைக்குக் கவனம் என்றும் அவதானம் என்றும் பெயர். ஒரு உயிரியின் நனவு வட்டத்துள் பொருள் வந்தவுடன் கவர்ச்சி கவனத்தை உண்டாக்குகின்றது.

நனவு வட்டத்திலுள்ள பொருள்களையெல்லாம் உயிரி கவனித்தாலும், மையத்திலுள்ள பொருள் பெறுகின்ற அளவு அதிக கவனம் மற்றைப் பொருள்களுக்குக் கிடைப்பதில்லை. வேண்டுமென்றால் உயிரி நனவுவட்டத்திலுள்ள ஏனைய பொருள்களையும் பிரயத்தன மூலம் மையத்திற்குக் கொண்டு வந்து நன்குகவனிக்கலாம். [மின் சூளின் (டோர்ச்லைட்) ஒளி வட்டத்திலுள்ள பொருள்களில் ஒன்றை நன்கு பார்க்க வேண்டுமானால் ஒளியை அப்பொருளின்மேற் குவியச் செய்து பார்ப்பதை போல] நனவு வட்டத்தின் விளிம்பில் உள்ள பொருள்கள் மிக அற்ப கவனத்தைப் பெறுகின்றன. கனவு வட்டத்திற்கு வெளியிலுள்ள பொருள்கள் கவனிக்கப் படுவதில்லை; கவனிக்க முடிவதும் இல்லை.

கவர்ச்சியில்லாவிடிற் கற்பித்தல் நடைபெறமாட்டாது. தேவைகள், சுபாவங்கள், ஊக்கங்கள், பற்றுக்கள் எல்லாம் கவர்ச்சியின் ஊற்றுக்களே. கற்பிக்கப்படும் விஷயங்களை மாணவரின் வாழ்க்கைத் தேவைகள், சுபாவங்கள், இயல்பூக்கங்கள், பற்றுக்கள் என்பனவற்றோடு பொருந்துமாறு இணைத்தவுடன் அப்பாட விஷயங்கள் கவர்ச்சியுடையனவாகின்றன. கவர்ச்சி தொழிற்படக் கவனமுண்டாகிப் பாடங்களையும், முயற்சிகளையும் கவனிக்கின்றனர். அப்பாடம் எவ்வளவுக்கு மாணவர்களின் கவனத்தைப் பெற்றதோ அவ்வளவுக்குப் பிரயோசனம் உள்ளதாகவிருக்கும். எனவே பயிற்றலைப் பயனுள்ள

---

(முன்பக்கத் தொடர்ச்சி)

டங்கள் முயற்சிகள் அவசியமாகின்றன. இத்தேவைகளை உத்தேசித்தே அவர்கட்கு இயற்கை சில சுபாவங்களை அளித்துள்ளது.

1. ஆராய்வூக்கம் கூட்டுக்கம் திரட்டுக்கம் முதலியன அவர்களிடம் இயல்பாயமைந்திருக்கின்றன. இவைகள் அவர்களை முயற்சிக்கத் தூண்டுகின்றன.

2. முயற்சிகள்மூலம் இவர்களுக்குக் கல்வியளித்தால் சிந்திக்கவும் தடைகள் எதிர்த்துப் போராடவும் முயல்வர். இதனாற் சிறந்த பிரஜைகளாக வரமுடியும்.

3. முயற்சிகள் மூலம் கற்றால் நேர் அனுபவங்களைத் தாமே பெறுவர். இதனாற் திட்டமான அறிவு ஏற்படும்.

4. கூடிமுயற்சிகள் செய்வதால் ஒற்றுமை, தலைமை தாங்கல், கீழ்ப்படிதல், முதலான சிறந்த சமூகப் பழக்கங்கள் அவர்களிடம் வளரும்.

இத்தகைய காரணங்களால் ஆரம்பவகுப்பு மாணவர்கட்கு முயற்சிக் கல்வி மிகப் பொருத்தமுடையதென்பது புலனாகிறது.

**த. சுவாமிநாதன்,**
இரண்டாம் வருடம்.

தாக்க விரும்பும் ஆசிரியர் மாணவர்களின் கவனத்தைப் பெறும் பொருட்டாகக் கவர்ச்சியான உபகரணங்களையும், கற்பித்தல் முறைகளையும் திறம்படக் கையாண்டு பாடத்தைக் கவர்ச்சியுடையதாக்குவர். கவர்ச்சியை ஆங்கிலத்தில் (Interest) 'இன்ரறெஸ்ற்' என்று குறிக்கின்றார்கள். இதன் பொருள் (Inter-est) இடையில் வருவது என்பதாகும். மாணவனுக்கும் குறிக்கோளுக்கும் இடையில் உள்ளதென்றாலும் குறிக்கோளை அடையக் கையாளும் வழியென்றாலும், கவர்ச்சியென்றாலும் ஒன்றுதான். இக்கருத்தை "Thus to be between the pupil and his goal, to be the means for acheving that goal to be of interest are allways of saying the same thing" என வரும் உளவியலறிஞர் கூற்று வலியுறுத்தும்.

கவர்ச்சி ஈடுபடுவது, ஈடுபடுத்தப்படுவது என இருவகைப்படும். ஈடுபடுவன இயல்புக் கவர்ச்சிகளாகும். அவை தேவைகள், சுபாவங்கள், ஊக்கங்கள், பற்றுக்கள், உளச்சார்புகள் என்பனபோல்வன. ஈடுபடுத்தப்படுவன செயற்கைக் கவர்ச்சிகளாகும். அவை பரிசில், தண்டனை, பரீட்சைகள், தராதரப்பத்திரங்கள், சுயமதிப்பு, எதிர்காலம், என்பனபோல்வன. கவர்ச்சி இருவகைத்தாதல் போலக் கவனமும் முயற்சியிலாக் கவனம் முயற்சிக் கவனம் என இருவகைப்படும். இயற்கைக் கவர்ச்சியினால் முயற்சியிலாக் கவனமும் செயற்கைக் கவர்ச்சியினால் முயற்சிக் கவனமும் ஏற்படுகின்றன. கவனம் ஒடுங்கி நிற்கும் நிலையிற் கவர்ச்சியென்றும், கவர்ச்சி தொழிற்படும் நிலையிற் கவனமென்றும் பெயர்கள் பெறுகின்றன. இதனால் இவ்விரண்டும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்களைப் போலவும், ஒரு காந்தச் சலாகையின் இரண்டு அந்தங்களைப்போலவும் மிகநெருங்கிய தொடர்புடையவைகளாய் இருக்கின்றன.

கவர்ச்சிப் பொருள்கள் பெரும்பாலும் உயிரிகளின் உளத்தின் இயல்பைப் பொறுத்ததாய், பல்வேறு வகைத்தாயிருக்கின்றன. விட்டில் போன்ற பூச்சிகள் விளக்கின் சுடராற் கவரப்பட்டு, அதிலேயே வீழ்ந்து மடிகின்றன. தீங்கு தரும் பொருளில் அவைகளின் கவர்ச்சி சென்றதனாற் பிழையான கவர்ச்சியே அவைகளின் அழிவுக்குக் காரணமாகியது. நாயன்மார்களும், சிறந்த சிவனடியார்களுமாகிய விட்டிற் பூச்சிகள் 'சோதியும் சுடரும் சூளொளி விளக்கும்' ஆகிய இறைவனது "ஓவற விமைக்கும் சேண் விளங்கவிரொளி" யைத் தமது கவர்ச்சிப் பொருளாகக் கொண்டமையினால், அந் நன்மைதரும் கவர்ச்சியே அவர்களின் பேரானந்தப் பெருவாழ்வுக்கு வழிகாட்டியது. எனவே உயிரிகளின் வாழ்வு தாழ்வுகளெல்லாம் அவை தேர்ந்தெடுக்கும் கவர்ச்சிப் பொருள்களில் தங்கியுள்ளனவென்பதும் கவர்ச்சிப் பொருள்கள் யாவும் அவைகளின் உள இயல்புகளிற்றங்கியுள்ளன வென்பதும் புலனாகின்றன.

விட்டிற் பூச்சியைப் போன்று சில மாணவர்கள் பாடநேரங்களிற் பிழையான கவர்ச்சிப் பொருள்களினாற் கவரப்பட்டு விடுதலும் உண்டு அந்நேரம் அவர்களின் மனதில் முதனாளிரவு பார்த்த படக்காட்சி வரும். அன்றிரவு நடைபெறும் திருவிழாவும். மேளக்கச்சேரியும் வரும். அடுத்த மாதத்து விடுதலையை அரட்டையடித்துக் களிக்கும் திட்டம் வரும். இப்படியாக எண்ணற்ற எண்ண அலைகள் வரும். இவற்றுள் எதிலே அவர்களுடைய மனம் மிகுந்த பற்றுள்ளதாக விருக்கின்றதோ அதிலே அவர்களுடைய கவனஞ் செல்லும். கற்பித்தலினாலே அவர்கள் சிறிதும் பயன்பெறமாட்டார்கள். இப்படியாக ஏற்படுவதற்குரிய காரணங்கள்: மாணவரில் இயற்கையாயமைந்துள்ள மனப்பாங்கும் கெட்ட மாணவர்களின் கூட்டுறவும், ஆசிரியரின் திறமைக் குறைவும், பொருத்தமற்ற கற்பித்தல் முறைகளும். கவர்ச்சியற்ற உபகரணங்களும், இன்னோரன்ன பிறவுமாம். இவற்றுள் ஒன்றோ பலவோ சேர்ந்து பிழையான கவர்ச்சிப் பொருள்களை மாணவன் மனத்தில் உண்டாக்கலாம். இவ்வகை மாணவர்களுக்குக் கற்பிக்கும் பொழுது கவர்ச்சியான உபகரணங்களையும், திறமான கற்பித்தல் முறைகளையும் கையாண்டு, கல்வியை இலகுவாக்கிக் கவர்ச்சியுடைய

# கல்வி.

கல்வி என்றால் என்ன என்பதை அறியாதார் கல்வி என்றால் வெறும் புத்தகப் படிப்பு என்றும் அது பாடசாலையில் மாத்திரம் பெறப்படுவதென்றும் எண்ணி விடுகிறார்கள். கல்வி என்றால் என்ன? அதன் பரப்பென்ன? அதன் பண்புகள் யாவை? இவ்வினாக்களுக்கு விடை காணுதல் சுலபமான காரியமல்ல. பாடசாலைப் படிப்புமாத்திரம்கல்வியாயிருக்கத்தேவையில்லை, கல்வி என்பது வாழ்க்கையோடு நெருங்கிய தொடர்புடையது; வாழ்க்கையினின்றும் பிரிக்க முடியாதது. சீரான வாழ்க்கைக்குரிய நல்ல அனுபவங்களைப் பெறுதலே கல்வியாகும். (Experience which promotes the development of personality is Education)

ஒரு குழந்தை பிறந்த நாள் தொட்டு இறக்கும் வரை கற்கிறது. பிறந்ததும் அது பிரபஞ்சத்துடன் பழக ஆரம்பிக்கிறது. முதலில் தனது தாயைத்தானும் அறிகிறதா? இல்லை. குழந்தை பொறிகள் மூலம் மூளையில் பல பதிவுகளைப் பெறுகின்றது. இப்பதிவுகளே அறிவுக்கு ஆதாரமாகின்றன. குழந்தை தான் பெறும் அனுபவங்கள் மூலம், தாயை மற்றவர்களிடமிருந்து பிரித்தறிகின்றது. அது இதுவரை கண்ட உலகத்தை விட ஒரு பெரிய உலகம் இருக்கிறதென்பதை அறிகின்றது. இப்படியே படிப்படியாக குழந்தை வளர்ந்து பெரிதாகி இப்பிரபஞ்சத்தையே அளந்து விடுகிறது. ஒன்றும் அறியாத குழந்தை இப்போது பலவற்றை அறிந்து விடுகிறது. மக்கள் பெறும் அனுபவங்களில், நல்வாழ்வுக்கேற்ற சிறந்த அனுபவங்களே கல்வியாகும். இவ்வனுபவங்களே அவனுடைய வளர்ச்சியைத் தூண்டுவனவாகும். எனவே நல்வாழ்க்கையைப் பாதிக்கும் தீய அனுபவங்கள் கல்வியாகா. இவை தவிர்க்கப்படவேண்டியவை. நல்ல அனுபவமாவது தனிப்பட்ட ஒருவனுக்கு மாத்திரமல்ல தனிப்பட்டவனுக்கும், சமூகத்திற்கும் நன்மை பயப்பதாக இருத்தல் வேண்டும்.

ஒரு சிறந்த பண்பட்ட நல்வாழ்வை மேற்கொள்வதற்கு ஒருவன் சமூகத்திலே சேர்ந்து, கடமைகளைச் சரிவரச் செய்து தன்னைப்போல மற்றவனும் வாழவேண்டும் என்னும் உயர் நோக்கம் உடையவனாக இருத்தல் வேண்டும். அவனே தனது உரிமைகளையும் உணர்ந்தவனுவான். சமூகத்திறமை கல்வியின் தலையாய ஒரு பண்பாகும். எந்தப்பெரிய படித்தவனாக இருந்தாலுஞ் சரி, பணம் படைத்த பிரபுவாக இருந்தாலும் சரி. அவன் தனித்து வாழ முடியாது. சமூகத்துடன் சேர்ந்தே வாழவேண்டும். சமூகம் இல்லையாயின் வாழ்க்கையுமில்லை. இதனை 'அலடினும் விசித்திர விளக்கும்' என்னும் ஆங்கிலக் கதை தெளிவாக விளக்குகிறது. 'அலடின்' பாதாளத்தில் நிறையப் பொருள் பெற்றும் அது பயன்படவில்லை. காரணம் அங்கு சமூகம் இல்லை. ஒருவன் சமூகத்துடன் சேர்ந்து வாழாவிடின் அவன் பிறர்க்கு மாத்திரமன்றி தனக்கும் பயன்படாதவனாவான். எனவே கல்வி கற்பிக்கும் ஆசிரியர் சமூகத்திலே சேர்ந்து வாழ்வதற்கேற்ற பக்குவமடையாத சிறுவர்களைச் சமூகத்திலே சேர்ந்து வாழச் செய்தல்வேண்டும். பிற்காலத்தில் அவர்கள் சிறந்த பிரசைகளாக மிளிர்வதற்கேற்ற அத்திவாரக் கல்விக்கு வித்திடல் வேண்டும்.

---

(முன்பக்கத் தொடர்ச்சி)

தாகச் செய்யவேண்டும். எதிர்கால வாழ்க்கைக்காகவும் சுயமரியாதைக்காகவும் கல்வியிலே அவர்களுக்குப்பற்றை ஏற்படுத்த வேண்டும். கல்வியிலே பற்றை ஏற்படுத்தப் பாடத்திற் கவனம் ஏற்படும். சிவனடியாரைப் போன்று பல மாணவர்கள் வாழ்க்கைக்கு வேண்டிய அநுபவங்களாகிய நல்ல கவர்ச்சிப் பொருள்களினாற் கவரப்பட்டுப் பாடத்தைக் கவனித்து, கற்பவைகளைக் கசடு அறக் கற்று, அதன்பின் அதற்குத் தக நின்று, கற்றதனாலாய பயனெய்தி வாழ்கின்றார்கள்.

**வை. இராமகிருஷ்ணஐயர்,**
இரண்டாம் வருடம்.

நல்ல முயற்சிகள் வாழ்க்கைக்கேற்ற சிறந்த கல்வி என்பதை அறியாத பெற்ரூேரும் ஆசிரியரும் பிள்ளைகளைப் புத்தகத்தை எடுத்துப் படிக்கும்படி வற்புறுத்துகிருர்கள். பாடசாலைப் படிப்பு மாத்திரம் பூரண கல்வியாக மாட்டாது. நடைமுறை வாழ்க்கையிற் பெற்ற நல்ல அனுபவங்களையே கல்வியாகக் கண்டு கற்கவேண்டும். சில பெரியோர்க்கும் அறிவாளிகளுக்கும் பாடசாலைக் கல்வி தடையாக இருந்ததை நாம் அறிகிருேம். "எட்வேட் உவில்சன்" தனது பாடசாலை வாழ்க்கையே தனது கல்வியைப் பாதித்ததென்கின்ருர். (My Schooling has interupted my Education) இன்னும் பாரதியார், பெர்ஞட்ஷோ இவர்களுக்குக்கூட பாடசாலைக் கல்வி பெருந் தடையாக இருந்தது. வெறும் அறிவுவிருத்திக்கேற்ற பாடங்கள் மாத்திரம் பாடசாலைகளில் இடம் பெற்று வந்தமையே இதற்குக் காரணமாகும். ஒரு சிறந்த பாடசாலை மாணவனின் அறிவு சுவை சமூக உணர்ச்சி உடல் எல்லாவற்றையும் சந்தமுடன் விருத்தி செய்ய வேண்டும். புத்தகப் படிப்பின்றியும் ஒருவன் சிறந்த கல்வியைப் பெறமுடியும். சாதாரணமாகப் பிரயாணஞ் செய்யும்போது, நல்ல அனுபவங்கள், தீய அனுபவங்கள் இரண்டையும் நேரிற் கண்டு அனுபவித்து நல்லனவற்றை ஏற்று, தீயவற்றைத் தவிர்த்த வாழமுடியும். இப்படியே விளையாட்டிடத்திலும், பாடசாலை அல்லாத வேறுஇடங்களிலும், கல்விகற்கமுடியும். இதனுல் பாடசாலைக் கல்வி பயனற்றதென்பதல்ல. பாடசாலையில் பண்பட்ட அனுபவம் வாய்ந்த ஆசிரியர் மூலம் சிறந்த அறிவைக் குறுகிய காலத்திற் பெறலாம். வீட்டு வாழ்க்கையைப் பூரணப்படுத்துவது பாடசாலை வாழ்க்கையே. எனவே கல்வி கற்பிக்கும் ஆசிரியர் கல்வி சம்பந்தமான சுற்றுப் பிரயாணங்கள், விழாக்கள், கொண்டாட்டங்கள். நல்ல முயற்சிகள் இவற்றில் மாணவர்களைப் பங்கு பெறச் செய்து சிறந்த வாழ்க்கைக்குரிய கல்வியைப் பெற வழிகாட்டவேண்டும். வெறும் விஷயங்களைத் திணிப்பதல்ல, சிறந்த சூழலை அமைத்து நல்ல அனுபவங்களையும் மேலான அறிவையும் பெறச்செய்வதே ஆசிரியரது கடனுகும். இக்கருத்தினையே இன்றைய புதிய கல்வி முறைகள் போதிக்கின்றன.

அறிவைப் பெறுவதென்ருல் பலதையும் கற்று மூளையிற்பதித்து வைப்பதல்ல. ஏதோ ஒரு சிறிதைக் கற்ருலும், கற்கும் விஷயத்தைத் தெளிவாகத் திட்டமாகக் கற்றல்வேண்டும். கல்வியைக் கற்ருல் மாத்திரம் போதுமா? கற்றதன்படி நடந்தொழுக வேண்டுமன்ருே? "படிப்பது திருவாசகம் இடிப்பது சிவன் கோயிலா"க இருத்தலாகாது.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

எத்தனையோ பட்டம்பெற்றவர்கள் வாழவகையின்றித் தவிக்கின்றனர். அவர்களுடைய கல்வி வெறும் ஏட்டுக் கல்வியாக இருந்ததலே இதற்குக் காரணமாகும். பட்டம் பதவிக்குக் கற்பது உண்மைக் கல்வியாகாது. ஒரு சிறந்த பண்பட்ட வாழ்க்கையை உருவாக்குவதே கல்வி. நல்வாழ்வே கல்வி.

நல்லொழுக்கம், நற்சிந்தனை நற்செய்கை, நல்ல பண்பாடு இவைகளே வாழ்க்கையை வளம்படுத்துவனவாகும். இத்தகைய ஒரு சீரிய பண்பட்ட வாழ்க்கையை மேற்கொள்வதற்கு மக்களின் சிந்தனையில், உணர்ச்சியில், செயலில், தெய்வமணங் கமழவேண்டும்.

"கற்றதனுல் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்ருள் தொழாஅர் எனின்"

என்ற வள்ளுவர் வாக்கில் அமையப்பெற்ற கல்வி, வாலறிவன் நற்ருள் தொழும் மேலறிவுக் கல்வியாய சமயக் கல்வியாகும். மனித வாழ்வின் இறுதி இலக்கிற்கு அழைத்துச் செல்லும் இச்சிறந்த கல்வி பாடசாலைகளில் முக்கிய இடம் பெறுதல்வேண்டும். சமயக்கல்வி வெறும் போதனையாக இராது. அனுட்டானத்தையும் துணையாகக்கொள்ளவேண்டும். பண்பட்ட மக்களை-சீரிய உள்ளம்படைத்த உத்த

மர்களை—அமைக்கும் கல்வியாக இருத்தல் வேண்டும். ஆத்மீகத்துறையில் ஊறினுற்ருன் மக்கள் வாழ்க்கை சிறக்கும். சமூகம் மேன்மை யடையும். சுருங்கக்கூறின், சமயமின்றி வாழ்க்கை இல்லை எனலாம்.

கல்வி என்பது மக்கள் உயிருள்ளவரை காட்சி, கருதல், கேள்வி, பயிற்சி என்பவற்றின் வாயிலாகப் பெறப்படுவது. இக் கல்வி பிறவிதொட்டு மக்களிடம் உறைந்து நிற்கும் தன்மைகளை – தத்துவங்களை வெளியிழுக்கும் ஒரு முயற்சியாகும். அதாவது அவற்றை வளர்த்து வளம்படுத்தி வன்மைதந்து, ஒப்பு நோக்கி, உருவாக்கி, சீர்ப்படுத்தி, மெருகிட்டு, அழகுசெய்து, ஒழுங்கான முறையில் அமைக்கும் அருஞ்செயலாகும். இத்தகைய அருஞ் சக்தியின் உண்மைப்பொருளை அறியாத காரணத்தாலே மக்கள் வாழ்க்கையை மிகப் பிழையான வழியில் செலுத்துகின்றனர். நல் வாழ்க்கையை வாழ்பவன்தான் கல்விமான்; அவனே அறிவு மிக்கவன்.

மாணவர் தமது ஆற்றல்களைச் செம்மையாக்கி, நல்வாழ்வுக்கேற்ற நற் பண்புகளை விருத்தியாக்கி, உடல், உள உறுதியைப் பேணி நற்பிரசைகளாய், புருடத்துவம் படைத்த (படித்த) குணசீலர்களாய் வாழ வகைசெய்வதே கல்வியாகும்.

**வே. மனேன்மணி**
இரண்டாம் வருடம்.

## வாழும் வழி

இயற்கையோடு ஒத்து வாழ் என்கிருர்களே; அது தேக்கத்துக்கு வழி; சாவுக்கு வழி. ஒரு வீட்டை மனிதன் எப்படிக் கட்டுகிருன்? இயற்கையோடு ஒத்து வாழ்ந்தா? அல்ல; இயற்கையை எதிர்த்துப் போர் புரிந்தே. இயற்கையோடு புரியும் ஓயாத போரே, மனித முன்னேற்றத்துக்கு மார்க்கம்; அதோடு ஒத்து வாழ்வதன்று.

— சுவாமி விவேகானந்தர்

# கதிரியக்கம்

திரு. அ. க. சர்மா, பி, எஸ்ஸி. (லண்டன்)
விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம்.

இயற்கையின் அதிசயங்களை அறியத் தான் இன்று இடைவிடாத ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன. பொருளியற்றுறையிலே தான் இன்று எத்தனையோ புதுமைகள் எத்தனையோ ஆராய்ச்சிகள். பொருளியலறிஞரின் பொறுமையும், நீண்டநாள் ஆராய்ச்சிகளும் இன்று பல புதுமைகளை எமக்களித்திருக்கின்றன. விஞ்ஞானம் படைத்த வெண்ணிலாவை வானவீதியிலே மிதக்கவிட்டு மனித பிரயத்தனத்தின் மகத்தான வெற்றியைக் கண்டோம். அணுவைப் பிளந்து ஆற்றலை வெளிப்படுத்தி இயற்கைச் சக்திகளை அடக்கியாண்டு இறும்பூதெய்தினோம். இப்படி எத்தனை எத்தனையோ ஆற்றல்களையும், சாதனைகளையும் மனிதனது ஆய்வுத்திறன் நமக்களித்திருக்கிறது. பொருளியற்றுறையிலே புரட்சியையுண்டுபண்ணிய அணுப்பிளவின் பொழுது கண்டுபிடிக்கப்பட்ட கதிரியக்கத்தைப் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

சென்ற நூற்றாண்டின் இறுதியிலே கண்டுபிடிக்கப்பட்ட கதிரியக்கத்தைப் பற்றி அறியுமுன் அணுவின் அமைப்பைப் பற்றி நாம் சிறிது அறிந்து கொள்ளவேண்டும். பொருளொன்றை நாம் இரு பிரிவினுள் அடக்கலாம். ஒரு பிரிவு தனிமம் அல்லது மூலகம் எனவும், மறுபிரிவு கூட்டுப் பொருள் அல்லது சேர்வை எனவும் பெயர் பெறும். ஒரு பொருளை அதனினும் மாறுபட்ட பிறிதொரு பொருளாகப் பிரிக்க முடியாவிடில் அது தனிமமெனப்படும். இரும்பு, செம்பு, நீரகம், தீயகம் முதலியன தனிமங்களே. ஒரு தனிமத்தை நாம் பிரித்துக் கொண்டே சென்றால் இறுதியாகப் பிரிக்கமுடியாத ஒரு இம்மி பெறப்படும். இது அணுவென அழைக்கப்படும். 19-ம் நூற்றாண்டு வரை அணு பிளக்கப்பட முடியாத இறுதியான இம்மியெனவே கருதப்பட்டது. 19ம் நூற்றாண்டின் இறுதியில் ஆங்கிலப் பௌதிக மேதை சேர். ஜே. ஜே. தொம்ஸன் என்பவர் அணுக்கள் சில சூழ்நிலை மாற்றத்தினால் மின்னேற்றமுடைய இம்மிகளை வெளிவிடுகின்றனவென அறிந்தார். இம்மின்னேற்றத் துகள்கள் 'எலெக்ரான்கள்' அல்லது மின்னணுக்கள் எனவழைக்கப்படும். எல்லா மின்னணுக்களும் ஒரே தன்மையனவென்பதும், மிக மிக இலேசானவை யென்பதும் ஆராய்ச்சிகளின் விளைவினால் அறியப்பட்டன. அணு மின் நடுநிலையுள்ளது என எவரும் அறிவர். எனவே எதிர் மின்னேற்ற 'எலெக்ரான்கள்' அணுவிலிருந்தால் நேர் மின்னேற்றமுள்ள துகள்களும் இருக்க வேண்டும் என்பது தெளிவு. இக்கருத்து 1910-ம் ஆண்டு 'ருதர் போட்' பிரபுவால் வெளியிடப்பட்டது. அணு பிளக்கப்பட முடியாத இறுதியான இம்மியென்ற கருத்தைத் தகர்க்க இவர் கூறிய கருத்துக்கள் வருமாறு:- "அணு சூரிய மண்டலத்தையொத்த அமைப்புடையது. அணுவின் மையத்திலே உட்கருவென்ற பகுதியும், அதைச் சுற்றிலும் மின்னணுவென்ற துகள்களும் உள்ளன. மின்னணு எதிர் மின்னேற்றமுடைய மிக இலேசான துகள். எனவே அணுவின் மையத்திலேயுள்ள உட்கருவிலேதான் நேர்மின்னேற்றத் துகள்கள் உள்ளன. அணுவின் குறையும் அங்குதான் பொதிந்து இருக்கிறது. அணுவின் நேர்மின்னேற்றதுகள் 'புரோட்டான்' எனப்படும். இப்புரோட்டான்கள் எண்ணிக்கையில் எலெக்ரான்களுக்குச் சமமானதாயிருக்கும். மேலும் 'எலெக்ரான்கள்' 'புரோட்டான்களுடன்' ஒன்றுபடாது. தமக்கென இயல்பான பாதைகளில் புரோட்டானைச் சுற்றி அதிவேகமாக எவ்வாறு சூரியனைச் சுற்றி பிற கிரகங்கள் இயங்கிக் கொண்டு இருக்கின்றனவோ அவ்வண்ணமே இயங்கிக் கொண்டிருக்கிறன. பிரபஞ்சத்தின் அமைப்பு சிருஷ்டியின் இறுதியான அணுவுள் பிரதிபலிப்பது விந்தையிலும் விந்தையே."

மிக இலேசான தனிமான நீரகத்தை எடுத்துக்கொண்டு அணுவின் அமைப்பை விளக்குவோம். இதன் உட்கருவின் ஏற்றம் (1) எனவும், நிறை 1 எனவும் குறிக்கப்படுகின்றன. அதாவது ( +1 ) மின்னேற்றமுள்ள புரோட்டான் ( −1 ) மின்னேற்றமுள்ள எலெக்ரான் சூழ்ந்திருக்கிறது. மேலும் ஓர் எடுத்துக்காட்டு. 'உறீலியம்' எனப்படும் பரிதிய அணுவின் நிறை நீரக அணுவின் நிறையைப் போல் நான்கு மடங்குள்ளது. பரிதியம் தனிமங்களின் ஆவர்த்த அமைப்பில் இரண்டாவது தனிமம். எனவே இதன் அணுவில் 2 எலெக்ரான்கள் இருக்க வேண்டும். உட்கருவில் 2 புரோட்டான்கள் இருக்கவேண்டும். இரண்டு புரோட்டான்களின் நிறை இரண்டு அலகுகள். ஆனால் பரிதிய அணுவின் நிறை நான்கு அலகுகள். எனவே மிகுதியான 2 அலகு நிறைக்கு நாம் விளக்கங் காணவேண்டும். இதன் பயனுக மின்னேற்றமற்ற துகளும் அணுவில் இருக்க வேண்டும் என்று கொள்ளப்பட்டது. இம் மின்னேற்றமற்ற துகள் 'நியூட்ரான்' என அழைக்கப்பட்டது. இந்த நியூட்ரான் நிறையில் ஒரு புரோட்டானை நிகர்க்கும். நாம் பரிதிய அணுவைப்பற்றிக் கண்ட கருத்துக்களைத் தொகுத்துக் கூறுவோம். பரிதிய அணுவின் உட்கருவில் 2 புரோட்டானும் 2 நியூட்ரானும் இவற்றைச் சூழ்ந்து 2 எலெக்ரானும் இருக்கின்றன. பிறிதொரு எடுத்துக்காட்டு. யூரேனியம் 92 வது தனிமம். அதன் உட்கருவில் 92 புரோட்டான்கள் இருக்கின்றன. அதன் அணு நிறை 238. எனவே (238 −92) நியூட்ரான்களிருக்க வேண்டும். இப்படியே ஒவ்வொரு தனிமத்தின் அமைப்பையும் காணலாம்.

பெக்கரல், கியூரி தம்பதிகள் ஆகிய அறிஞர்கள் கண்ட ரேடியம் (கதிரியம்) என்ற தனிமமும் ஆக்டினியம், போலோனியம், தோரியம், யூரேனியம் போன்ற தனிமங்களும் இடைவிடாது ஒளி, வெப்பம், மின்சாரம் ஆகிய இந்தச் சக்திகளின், ரூபங்களை வெளியிட்டுக் கொண்டு சிதைவுறுகின்றன. இயங்கையிலே நடைபெறும் இந்த அசாதாரண நிகழ்ச்சி "கதிரியக்கம்" (Radio activity) எனப்படும்.

அணுவின் நிறை அதிகமாக, அதிகமாக அதிலுள்ள புரோட்டான்கள், நியூட்ரான்கள் ஆகியவற்றின் எண்ணிக்கையதிகமாகி அதன் அமைப்புச் சிக்கலானதாகும். புரோட்டான்கள் நேர்மின்னேற்றமுடையவை. எனவே இயல்பாகவே அவை ஒன்றையொன்று விலக்க முயலும். இத்தகைய புரோட்டான்கள் ஓர் உட்கருவில் அதிகமாயிருந்தால் விலக்கம் அதிகமாகி, உட்கரு நிலையற்றதாகும். இது ஆவர்த்த அமைப்பில் 84 தனிமமான 'யோலோனியத்தின்' பின்வரும் தனிமங்களிலே காணப்படும் ஒரு சிறப்பியல்பாகும். அத்தகைய தனிமங்களின் உட்கருக்களில் புரோட்டான்கள் அதிகமாதலால் அவை தாமாகவே சிதையத்தொடங்குகின்றன. அதுபோல உட்கருவில் ஒரு பகுதி பிரிந்து வெளியேறும். இவ்வாறு வெளிவரும் பகுதி, புரோட்டானே, நியூட்ரானே அல்லாமல் இரு புரோட்டான்களையும், இரு நியூட்ரான்களையும் கொண்ட பரிதிய உட்கருவாக இருக்கிறது. இதை "ஆல்பாத்துகள்" (alpha particle) எனவழைப்பர். இச்சேர்க்கை தனிப் புரோட்டான்களையும், நியூட்ரான்களையும் விட நிலையுள்ளதாகையால், கருவின் ஒருபகுதி இப்படிப் பிரிகிறது. சில சமயங்களில், பிறிதோர் விளைவும் நடப்பதுண்டு. ஒரு நியூட்ரான், புரோட்டானுகவும் எலெக்ரானுகவும் மாறுகிறது. புரோட்டான் உள்ளிருக்க எலெக்ரான் மாத்திரம் வெளிவருகின்றது. அதை 'பீட்டாத் துகள்' (Beta Particle) என்பர். சில சமயங்களில் ஊடுருவிச்செல்லும் இயல்புள்ள 'காமாக் கதிர்களும்' (Gamma rays) வெளிவருவதுண்டு. ஓர் அல்பாத்துகள் வெளியேறினல் அணு 4 அலகு நிறையையும், 2 அலகு நேர் மின்னேற்றத்தையும் இழந்து தனது தன்மையில் மாறி வேறொரு தனிமத்தின் அணுவாகிறது. இவ்விதமாகக் கனமுள்ள கரு சிதைந்து வேறொரு கருவாக மாறுவதே கதிரியக்கம் எனப்படும். இயற்கைச் சிதைவிற்குட்பட்ட யூரேனியம், அயோனியம் என்ற தனிமமாக மாறி மறுபடியும் முறையே சிதைந்து ரேடியமாக மாறி இறுதியில் ஈயமாக மாறுகின்றது. இத்தகைய கதிரியக்கத்தில் சிதையும் கருவின்

நிறை சிறிதளவு மறைந்து சக்தியாகப் பரிண மித்து ஒருபகுதி, வெளியேறும் துகள்களுக்கு வேகத்தையளித்தும் மற்றொரு பகுதி எக்ஸ் கதிர்களைப் (X'rays) போன்ற கதிர்களாக மாறியும் வெளிப்படுகின்றது. கனமான உட் கருக்கள் நிலைபெற்றுச் சிதைவதாலேயே இயற் கையில் 92 தனிமத்திற்கு மேலில்லை.

இயற்கைச் சிதைவின்பொழுது ஒரு கரு பிறிதொரு கருவாக மாறுவது நன்கு வரைய றுக்கப்பட்ட வேகத்தில்தான் நிகழ்கிறது. இதை எவராலும் மாற்றமுடியாது. இவ் வேகத்தைப் பொறுத்தே, கதிரியக்கப் பொரு ளின் ஆயுட்காலம் அமைகிறது. ஒரு குறிப் பிட்ட அளவு ரேடியத்தில் அரைப்பாகம் சிதை வதற்கு 1590 ஆண்டுகள்வரை செல்லும். இது போலவே பிற கதிரியக்கப் பொருள்களின் சிதைவு வேகத்தை நாம் கணக்கிடலாம். இக் கணக்குகள் மலைத்தொடர்கள், பாறைகள் தோன்றிய காலம், பூமியின் வயது முதலிய வற்றை உறுதிப்படுத்த ''பூநூல்'' விஞ்ஞானி களுக்குப் பெரிதும் பயன்படுகின்றது.

நாம் மேலே கூறிய இயற்கைக்கதிரியக் கம் தானாகவே நிகழ்வது, நமது சக்திக்குட் பட்டதன்று. ஆனால் நமது முயற்சியாலும் அணுமாற்றங்களை உண்டாக்கலாமென 'ருதர் போர்ட்' பிரபு பின்னர் செய்த சில சோதனை களினால் தெளிவாயிற்று. அவர் ஆல்பாத்துகளை ஒரு தனிமத்துட் செலுத்தி அதன் அணுக்களை நேரடியாகத் தாக்கி அதைச் சிதைத்தார். அணு வின் உட்கரு ஆல்பாத்துகள் இரண்டும் நேர் மின்னேற்றங்கொண்டவை. ஆகவே அவை யொன்றையொன்று விலக்க முயலும். எனவே ஆல்பாத்துக்களை வேகமாகச் செலுத்தி விலக் கத்தை மீறி அவை உட்கருவையடையுமாறு செய்யவேண்டும். இத்தகைய செயற்கைக் கதிரியக்கத்தின் அடிப்படையிலே அணுவில் பொதிந்திருக்கும் சக்தியை வெளிப்படுத்தப் பல சோதனைகள் நடைபெற்று அணுக்குண்டு செய்வதற்குரிய முறைகள் உருவாயின.

கதிரியக்கக்கதிர்கள் அணுக் கருக்களைத் தாக்கிச் சிதைக்கும் இயல்புடையவை. 'கான் சர்' எனப்படும் புற்று நோயைக் கட்டுப்படுத் திக் குணப்படுத்த ரேடியம் உபயோகிக்கப்படு கின்றது. கவனத்துடன் செலுத்தப்படும் ரேடி யத்திலிருந்து வெளிவரும் கதிர்கள், புற்று நோயால் தாக்கப்பட்ட தசைகளையழித்து, நல் வாழ்வளிக்கும் சீரிய பணியைச் சிறப்புடன்புரி கின்றன.

விஞ்ஞானத்தின் அறிவாலே விண்ணிலே வெண்ணிலாவை மிதக்கவிட்டும், அணுவைப் பிளந்து ஆற்றலை வெளிப்படுத்தியும் மனிதன் அறிவின் சிகரத்திலே நிற்கிறான். அறிவை அட க்கி ஆளும் பண்பு அவனிடமிருந்தால் தான் மனிதகுலம் வாழ வழியுண்டு.

## ஆள்வினை உடைமை.

**''ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்**
**தாழாது உஞற்று பவர்''**

— குறள்.

[மனம் இளைக்காது தம் தொழிலைச் சோர்வின்றிச் செய்பவர், (பயனைக் கெடுக்கவல்ல) ஊழையும் தோல் வியடையச் செய்வர்]



எங்கள் கலாசாலை விளையாட்டு வீரரும் வீர ரமணிகளும் 1957

# நான்கு கணித விதிகள்.

திரு. வ. பொன்னையா B. A. (Hons.) Ph. D.
கொக்குவில்.

மூன்றாம் நூற்றாண்டிலிருந்த ஆக்கிமிடீசு, ஊக்கினிட்டு, அப்பலோனியசு என்னுங் கணிதவறிஞருள் ஒருவரும் எண்கணிதக்கணக் கீட்டு முறைகளில் ஈடுபடவில்லை. கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் என்னும் நான்கு செய்கைகளையே அடிப்படைச் செய்கைகளாகக் கொள்ளும் புதியமுறைஎண் கணிதம் முன்னர் இந்தியாவிலும் பின்னர் அரேபியாவிலுங் கையாளப்பட்டது.

ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த பிரமகுத்தன் என்னும் இந்தியக் கணக்காயன் எண் கணிதத்தில் இருபது வேறு வேறு அடிப்படைச் செய்கைகளைக் கண்டனன். ஐந்நூறு ஆண்டுகட்குப்பின் அந்தேயத்துப் பாசுக்கரன் என்பவன் அவற்றை எட்டுச் செய்கைகளாகச் சுருக்கினன். ஒன்பதாம் நூற்றாண்டில் அரேபியா தேயத்து அல்குவாரிசிமி என்பவன் சில செய்கைகளைத் தவிர்த்து இரட்டித்தல், இருசமக்கூறிடல் என்றும் இரு செய்கைகளைக் கூட்டினன். இன்று இரட்டித்தல் என்பது இரண்டாற் பெருக்குதலாகும்; இருசமக் கூறிடல் என்பது இரண்டால் வகுத்தலாகும். எண்ணுதல் குறியிடுதல் ஆகிய இவற்றையும் எண்கணிதச் செய்கைகளென ஒருகாலம் மக்கள் கொண்டனர். வருக்கங்காணல், கனங்காணல், வருக்க மூலங்காணல் முதலியனவற்றையும் எண்கணிதச் செய்கைகளென்றனர். இவை எல்லாங் கற்கப்படுமாயினும் எண் கணிதச் செய்கைகளாகா. எண்கணிதத்திற்குரிய செய்கைகள் கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் என நான்குவகைப்படும். இவைகள் எண்களை ஒருங்குசேர்க்குஞ் செய்கைகள். இவற்றுட் கூட்டலும் பெருக்கலுங் கூடுதலையும், கழித்தலும் வகுத்தலுங் குறைத்தலையுங் குறிக்குமென்று கொள்ளல் தகாது. ஆயின், இவ்வடிப்படைச் செய்கைகள் ஒவ்வொன்றையுந் தனித்தனி ஆராய்வோம்.

**கூட்டலாவது:** ஒரு கூட்டத்தின் ஒவ்வோர் உறுப்பிலுமுள்ள பொருள்களினது தொகைபற்றி அக்கூட்டம் முழுவதிலுமுள்ள பொருள்களினது தொகையைக் காணலாகும். உதாரணமாக, எட்டும் ஏழும் பதினைந்து எனப்படும். இதன்கண் ஒரு வேறுபாடு உண்டு. பொருள்களினது தொகையில் வித்தியாசம் யாதுமில்லை. கூட்டும்போது எட்டுப் பொருள் எட்டாயும் ஏழு பொருள் ஏழாயும் இருக்கும். ஏழு பொருள் பதினைந்தாகாது; எட்டுப் பொருளும் பதினைந்தாகாது. எட்டொடு ஏழைக் கூட்டும்போது எட்டன் கூட்டத்தையும் ஏழன் கூட்டத்தையும் ஒருபுதிய கூட்டமாக்குகின்றோம். தற்காலக் கூட்டங்களாகிய எட்டன் கூட்டத்தையும் ஏழன் கூட்டத்தையும் பத்தும் ஐந்துமாகிய ஒரு நியம ஒழுங்காக்குகின்றோம். நியம ஒழுங்கானது நியமப்பருமனைக் கொண்டுள்ளதாகையால் தற்காலக் கூட்டங்களிலும் எளிதில் விளங்கக் கூடியது.

கூட்டற் செய்கையே முதன்முதற் கற்க வேண்டிய செய்கை. அது பற்றி அது சிறந்ததெனலாம். ஏனைச் செய்கைகள் யாவும் அதன் வழித் தோன்றியவையாகும். கழித்தலை எதிர்முறைக் கூட்டலென்றும் பெருக்கலைச் சம வெண்களுடைய தொடர்பான கூட்டலென்றும், வகுத்தலைப் பெருக்கல் கழித்தல்களூடாகக் கூட்டலொடு தொடர்புள்ளதென்றுங் கொள்ளலாம்.

**கழித்தல்** என்பது குறைத்தல் என்னுங் கருத்துக்கொண்டதன்று. 15 – 8 = 7 என்றுசொல்லுதற்கண்ணே நாம் நியம ஒழுங்கிலிருந்து தொடங்குகின்றோம். தந்த கூட்டத்தில் எட்டன் கூட்டத்தை விலக்க ஏழன் கூட்டத்தைப் பெறுகின்றோம். தந்த பொருள்களையே பற்றிச் செய்கை முழுவதுஞ் செய்கின்றோம். பத்தும் ஐந்துமாகிய நியம ஒழுங்கிலுள்ளன

வற்றைக் கழித்தற் செய்கைக்குட் படுத்தத் தற்காலக் கூட்டமாகிய ஏழன் கூட்டத்தைப் பெறுகின்றோம்.

**பெருக்கல்** என்பது கூடுதல் என்னுங் கருத்துக் கொண்டதன்று. மூன்று நாலுகள் பன்னிரண்டாகும். நாங்கள் நாலின் கூட்டம் மூன்றோடு தொடங்குகின்றோம். நியம ஒழுங்கு பத்தும் இரண்டும் ஆகும். இவ்வொழுங்கிலுள்ள விசேடம் ஒரு தற்கால ஒழுங்கிலுள்ள ஒரு தொகைப் பொருள்களை நியம ஒழுங்கில் வைத்தமையாம். ஒரு பத்தும் இரண்டும் ஆக அக்கூட்டத்தை நியமப்படுத்தியதும் ஒரு விசேடம். இன்னும் ஒப்புக்கு இடம் கொடுத்ததும் இதிலுள்ள வேறொரு விசேடம். ஆறு ஏழின் கூட்டத்திற்கும் ஐந்து எட்டின் கூட்டத்திற்கும் உள்ள ஒப்பைக் காண்டற்கு இத்தற்காலக் கூட்டங்கள் பயனளிக்கா. ஆனால் நியம ஒழுங்குகளாகிய நாலு பத்தொடு இரண்டு, நாலு பத்து என்பன ஒப்புப்பார்க்கத் துணை புரியும்.

**வகுத்தல்** என்பது குறைத்தல் என்னுங் கருத்துக்கொண்டதன்று. $48 \div 6 = 8$ என்னும் போது ஒரு தொகைப் பொருள்களுடைய நியம ஒழுங்கைச் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப ஒரு தற்கால ஒழுங்காக மாற்றுகின்றோம். நாற்பத்தெட்டில் ஆறன் கூட்டம் எத்தனை உண்டு என்பதே கேள்வி.

இனி $10 \div \frac{1}{2} = 20$. வகுத்தற்செய்கை புரட்டிப் பார்க்க இடந்தராது. இங்கு பத்தானது இருபதாகக்கூடவில்லை, பத்தில் எத்தனை அரை உண்டு என்பதே கேள்வி. விடை இருபது அரை என்பதே.

இவ் வடிப்படைச் செய்கைகள் நான்கையும் இளம் பிள்ளைகளுக்குக் கற்பிக்கும் முறைகளிற் கணித ஆசிரியர் இருவேறு கருத்தினர். அவருள் ஒருசாரார், "எம் முன்னோர் பொருள்களின் ஒழுங்குகளைச் சிந்தித்த வழிகொண்டே இளஞ்சிறாரையுஞ் சிந்திக்கச் செய்தல்வேண்டும்" என்கின்றனர். ஒருசாரார், 'எம் முன்னோரை மயங்கவைத்த விளைவுகள் யாதும் இப்பொழுதில்லையாகலான் அவற்றைச் செயற்கையாய் வருவித்தல் ஆகாது" என்கின்றனர் இக்கொள்கைகளை ஆராய்வோம்.

ஆசிரியர் சிலர் கூட்டற் செய்கை முதலியனவற்றை இளம் மாணுக்கருக்குக் கற்பிக்க வேண்டின் அச்செய்கைகள் செய்தற்குரிய நிலைமைகளில் அவர்களை நிறுத்திவிட்டே கற்பித்தல்வேண்டும் என்கின்றனர். ஒரு மாணுக்கனுக்குக் கூட்டல் கற்பிக்கவேண்டுமாயின் முதல் அவனை ஒரு கல்லூரிப் பண்டசாலைப் பொறுப்பாளியாக்கவேண்டும். அல்லது கிறிக்கெற்று முதலிய விளையாட்டில் அவனைப் பங்குபற்ற விடவேண்டும். அதனாலே அவனுக்குக் கூட்டற் கணக்கிற் பயிற்சிபெற ஆவல் தோன்றும். அது தோன்ற அவனுக்குக் கூட்டற் கணக்குக் கற்பிப்பது எளிதாகுமாம் இம்முறையில் நான்கு பிரமைகள் உள.

முதலாவது **காலப்பிரமை;** இம்முறை எம் முன்னோர் கூட்டலைக் கண்டுபிடித்த முறையாகும். ஒருமாணுக்கனின் பாடசாலை வாழ்க்கை மிகக் குறுகியது. எங்கள் முன்னோர் எண்முறையிலே தேர்ச்சியடைய மிகக் காலத்தைச் செலவழித்தனர். அதனை இன்னும் ஒருமுறை பிரதிசெய்தல் வீண் முயற்சி ஆகும்.

இரண்டாவது **பார்வைப் பிரமை:** பண்டசாலை, விளையாட்டு முதலியவற்றை இளம் மாணுக்கர்களும் முதிர்ந்த மாணுக்கர்களும் ஒரேமாதிரிப் பார்ப்பார் என்பது இப்பிரமை ஆகும். முதிர்ந்த மாணுக்கருக்குப் பண்டசாலைப் பொறுப்பும் விளையாட்டுங் கூட்டற் செய்கைத் தேர்ச்சியிலே தங்கியுள்ளது என்பது நன்கு புலனாகும். கூட்டல் என்பது இன்னது என்று உணராத இளம் மாணுக்கருக்கு முதிர்ந்த மாணுக்கரது சிறந்த முன்னறிவு இராது.

மூன்றாவது **நிலைமை ஒப்புப் பிரமை:** இது இளம் மாணுக்கரின் கற்கும் நிலைமை பண்டை மக்களின் நிலைமையை ஒக்கும் என்னுங் கருத்தால் ஆகும். ஓர் அளவுக்கு ஓர் இளம் மாணுக்கன் பண்டை மகனை ஒப்பான்

எனினும் பண்டைச் சமூகத்தில் அவன் வாழவில்லை. எங்கள் கழகங்களுக்குப் பண்டை வாழ்க்கைச் சீர்களைத் திரும்பத் தோற்றுவித்தல் முடியாத காரியம். எங்கள் சமூகத்தின் முதிர்ந்த அனுபவங்களை மறுத்துப் பண்டை நிலைகளூடாகக் கல்வி ஊட்டல் இளம் மாணுக்கரை ஒரு பாழிலே தள்ளுதற்கு ஒக்கும்.

நான்காவது **ஒவ்வாமைப் பிரமை**: பண்டசாலை முதலியவற்றின் பொறுப்பைக் கூட்டற் செய்கைத் தீர்வினுலேதான் செவ்விதாக ஆற்றலாம் என்ற நிலையை இளம் மாணுக்கர் உணர்வார்கள் என்பதே இப்பிரமை. இளம் மாணுக்கருக்கு அவ்வுணர்ச்சி ஒவ்வாது. முதிர்ந்த மாணுக்கரே அவ்வுணர்ச்சிக்குரியர். ஒருகால் இளம் மாணுக்கருக்குக் கூட்டற் செய்கையைக் கற்பித்தாலும் அதனைப் பயன்படுத்தும் முறையில் அவர் வழி தவறுவர். அவர்களின் முன்னறிவு ஒவ்வாமையே வழி தவறுதலுக்கு ஏதுவாகும்.

இனிக் கணிதம் கற்பித்தலின் நோக்கம் கிருத்தியங்களையுண்டாக்கி அவற்றைத் தீர்க்கும் முறைகளிலே தங்கவில்லை. அது மக்கட் சாதிக்குந் தனித்தனி ஒவ்வொரு மகனுக்கும் வாழ்க்கையின் அளவு நிலைகளைத் தாக்கும் முறையைத் தந்து உதவுகின்றது; அந்நிலையில் எங்களுக்கு ஏற்படும் ஐயந்திரிவுகளை அகற்றுகின்றது; சிக்கலான வேலைகளில் நாம் ஈடுபட்டாலும், பயன்பெறுமாறு எம் உள்ளத்தின் ஆற்றலைப் பாதுகாக்கின்றது; ஆயின், இளம் மாணுக்கருக்குக் கணக்குக்களைத் தீர்த்தற்கரிய நொடிகளாக்கி அவற்றைத் தீர்க்கும் முறைகளைக் கற்பிப்பதில் யாதொரு பயனும் இல்லை. கணிதங் கற்பிக்கும்பொழுது ஆசிரியர் கணக்குக்களை நொடிகளாக்காது உள்ளுமுறைகளையும் எண்டொடர்புக் கருத்துக்களையுஞ் சேர்மானவரிசைகளுக்குரிய பொது விதிகளையுங் கற்பித்து அதனுலே இளம் மாணுக்கர் வாழ்க்கையளவு நிலைகளை ஐயந்திரிபின்றிப் புத்தி பூர்வமாகக் கையாளுமாறு செய்வதாகும். எனினும், உள்ளுமுறைகளைக் கற்பிக்கும் ஆசிரியர் கூட்டல் கழித்தல்களை ஒருசேரவும் பெருக்கல் வகுத்தல்களை ஒருசேரவுங் கற்பித்தாற் பயனளிக்கும். எட்டொடு ஐந்தைக் கூட்டுமுற் பதின்மூன்று வரும் என்னும் மாணுக்கனைப் பதின்மூன்றிலிருந்து ஐந்தைக் கழித்தால் என்ன வரும் என்றும், பதின்மூன்றில் இருந்து எட்டைக் கழித்தால் என்ன வரும் என்றும் வினுவவேண்டும். பன்னிரண்டை மூன்றுல் வகுத்தால் நாலு வரும் என்னும் மாணுக்கனை மூன்றை நாலாற் பெருக்கினுல் என்ன ஆகும் என்றும் நாலை மூன்றுற் பெருக்கினுல் என்ன ஆகும் என்றும் வினுவவேண்டும். $12 \div 3$ என்பதை $3 \div 12$ என்று வாசித்தல் தவறு என்பதை மாணுக்கர் உள்ளத்திற் புகுத்தல்வேண்டும். இவற்றுலே நான்கு அடிப்படைச் செய்கைகளும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டு இளம் மாணுக்கர் உள்ளத்தில் நிலைபெறும். இன்னும், சினைகண்டு வகுத்தலிலும் நெடுமுறை வகுத்தல் கூடிய விளக்கத்தைத் தரும் என்பது நல்லாசிரியர் துணிபு. மீதியையே எழுதிக்கொண்டுபோகும் இத்தாலிய நெடுமுறை வகுத்தலைத் தொடக்கத்தில் ஆளுதல் நற்பயனைத்தராது. பொ. சி. பெ., பொ. ம. சி. என்பவற்றை விசேட விதிகளாகக் கற்பித்தல் தகாது. பொ. சி. பெ. காண்பதற்கு மாறி மாறி வகுத்தலாகிய வழி முதற் கண் கொடுத்தல் ஆகாது. இவ்வாறு ஏனைய முறைகளையும் மாணுக்கர் உளம் நோகாதவாறு கற்பித்தல் ஆசிரியர் கடன்.

# பாலர் வகுப்புகளில் உடற் பயிற்சிக் கல்வி

திரு. வ. சண்முகராசா.
(உடற் பயிற்சி ஆசிரியர், நடேஸ்வராக்கல்லூரி.)

ஆரோக்கிய வளர்ச்சி, பலம்வாய்ந்த சுறுசுறுப்பான அப்பியாசங்களில் தங்கியிருக்கின்றது. ஆயினும் நாகரீகம்வாய்ந்த பட்டினங்களில் வசிக்கும் பிள்ளைகளும் இவ்விஷயத்தில் குறைவுடையவர்களாகவே காணப்படுகின்றனர். அவர்கள் பாடசாலைகளிலும் வீடுகளிலும் தீவிரமாகவும், சுறுசுறுப்பாகவும் அப்பியாசங்களைச் செய்யத் தூண்டும் சக்தியை ஊக்கும் வெளிச் சூழல்களையும், சுறுசுறுப்பை வளர்க்கக்கூடிய சந்தர்ப்பத்தையளிக்கும் சூழ்நிலைகளையும் இழந்தவர்களாகின்றனர்.

குழந்தையிடத்தில் சுகம், வளர்ச்சி, சுறுசுறுப்பு என்பன ஒன்றையொன்று விட்டுப் பிரிக்கமுடியாதபடி பின்னிப் பிணைந்து இணைந்திருக்கின்றன. தசைநார்களுக்குக் கொடுக்கும் அப்பியாசங்களினால் நாளுக்கு நாள் அவை முறுக்கேறுகின்றன. அதனால், உடல் அனைத்திலுமுள்ள உறுப்புக்கள் யாவும் பலமுள்ளவையாயும் சுறுசுறுப்பு நிறைந்த ஒழுங்கான அமைப்புள்ளனவாயும், முறையாகக் கடமையாற்றுவனவாயும் அமைகின்றன. இவற்றால், பலத்தை நல்கும் அப்பியாசங்களின் பயன் நன்கு உணரப்படுகின்றது.

உடற் பயிற்சிக் காலங்களில் சுவாசப்பைக்கும் இரத்தாசயத்துக்கும் அளிக்கப்படும் அப்பியாசங்களினால் அவை பலம்வாய்ந்தனவாயும், செயலாற்றுந் திறன்மிக்கனவாயும் வளர்கின்றன. போஷாக்குள்ள உணவின் சீரணக்கிரமமும் சுறுசுறுப்படைகின்றது. இங்ஙனமாக உடற்பலமும் வளர்ச்சியும் விருத்தியடைகின்றன. எலும்புக்கூட்டின் உரன்வாய்ந்த பாங்கினாலும் இவை நிரூபிக்கப்படுகின்றன. சுகமும் ஆரோக்கியமான நிலையும் எலும்புக்கூட்டின் வன்மையிலும் ஒழுங்குக் கிரமத்திலும் தங்கியிருக்கின்றன.

**ஆசிரியரின் நோக்கம்:**

உடற்பயிற்சியளிக்கும் பொறுப்புவாய்ந்த ஆசிரியர்கள், தம் கீழ் உள்ள பிள்ளைகளுக்குத் திறந்த வெளியில் சுறு சுறுப்பைத்தரும் அப்பியாசங்களைச் செய்வதற்கான சந்தர்ப்பங்கள் அளிப்பதையே முதற்கடமையாகக் கொள்ளல் வேண்டும். தினந்தோறுஞ் செய்யப்படுகின்ற அப்பியாசங்கள் நிரந்தரமான பயன்களை அளிக்கக்கூடியவையாக இருத்தல் வேண்டும். அப்பயன்களைப் பின் வருமாறு நிரைப்படுத்தல் உத்தமமானதாகும்.

1. பலமும் சுறு சுறுப்பும்.
2. இலகித்துவம்.
3. இடப்பட்ட பொறுப்பில் ஆழ்ந்த கவனமும் அதை முடிப்பதில் விரைவும்.
4. மேற்பார்வை செய்யுந் திறனும், சாமர்த்தியமும்.
5. மற்றவர்களோடு ஒன்று பட்டுக் கடமையாற்றல்.
6. சந்தோஷமாகவும், தமாஷாகவும் இருத்தல்.

**1 பலமும் சுறு சுறுப்பும்:**

பொதுவாக, அப்பியாசங்களினால் உடற்பலங் கூடுவதை நாம் காண்கின்றோம். சுறுசுறுப்பானது பலம், இலகித்துவம் திறமை, தீர்மானம் என்பவற்றில் தங்கியுள்ளது. தடைகளை வெற்றிகரமாகத் தாண்டிச் செல்லும் செயல்களில் இலகித்துவம் காணப்படுகின்றது இவ்விலகித்துவம் பின்னும் தன்முன் வருந்தடைகளை வெற்றிகரமாக மேற் கொள்ளுவதினால் விருத்தியடைகின்றது.

**2. இலகித்துவம்:**

உடல் வளர்ச்சியில் இலகித்துவம் முக்கிய ஸ்தானத்தைப் பெறுகின்றது. நாம் எச்செயலை ஆற்றும் போதும் இலகித்துவத்தின் பூரண வளர்ச்சியில் கண்ணுங் கருத்துமாக இருத்தல் வேண்டும். இது பூரண சுகமுள்ள ஒருபிள்ளையில் சாதாரணமாகக் காணப்படுகின்றது. உடலின்கண் உள்ள பொருத்துக்களில் ஒழுங்குபடுத்தப்பட்ட தொடர்பான இயக்கங்களினுலேயே இவ்விலகித்துவத்தைப் பேணலாம். இலகுவான பொருத்து என்பதன் கருத்துப் பின்வருமாறு.

(அ) பொருத்துகளுக்கு முறையான இயக்கத்தைக் கொடுப்பதற்குரிய பலம் வாய்ந்ததும் நல்லமுறையில் வளர்க்கப்பட்டதுமான தசை நார்கள்.

(ஆ) தனக்கென நியமிக்கப்பட்ட பாரத்தையும் கஷ்டத்தையும் பொறுக்கக்கூடிய தசை நார்கள்.

(இ) இயங்கும்பொழுது முறையற்ற எதிர்ப்பில்லாததும், இலகுவாக இயங்கக்கூடியதுமான தசை நார்கள்.

பொருத்துக்களின் இறுக்கமான தன்மை, அவற்றைச் சுற்றியுள்ள தசை நார்களில் பலமற்ற தன்மையையும் திறனற்ற தன்மையையுங் காட்டும்.

இணக்கமுள்ள பொருத்துக்கள்:- முதுகெலும்பு, இடுப்பெலும்பு என்பவற்றின் இயக்கத்திலும் செலுத்தவேண்டும். கடினமான சப்பாத்து முதலியவற்றைக் காலில் அணிவதால் உண்டாகும் இணக்கமின்மையால் வருகின்ற பயன் யாங்கணும் காணப்படுகின்ற பாதங்களில் வரும் நோயால் நன்கு அறியக் கிடக்கின்றது. இது பாதங்களுக்கு அளிக்கப்படும் அப்பியாசக் குறைவினுல் வருவதொன்ருகும். இக்குறை தசைநார்களைப் பெலம் குன்றச் செய்கின்றது.

**3. கவனமும் விரைவும்:**

இது மனத்தின் இயல்பைப் பொறுத்தது. எவ்வளவுக்குப் பயனை எதிர் பார்க்கின்ருேமோ அவ்வளவுக்கு இவையும் வளரும். சோம்பல் நிறைந்ததும், புத்தி நுட்பமற்றதுமான பழைய தேகாப்பியாச பாடங்களுக்குப் புறம்பானது. பயனை எதிர்பார்க்காதவரிடத்தில் இவைகளைக் காணமுடியாது. பிழைகளைச் செய்கின்ருேமோ என்ற எண்ணமே இவைகளில் கருத்தைச் செலுத்துவதற்கு ஊக்கும் கருவியாகும்.

**4. மேற்பார்வையும் சாமர்த்தியமும்:**

இவை எவ்வகையான அப்பியாசங்களினுலும் வளருகின்றன. அப்பியாசத்தினுல் தேவைக்கு அதீதமானதும் அளவுகடந்ததுமான இயக்கங்கள் தடைப்படுகின்றன. நரம்புகளினதும் தசைநார்களினதும். சம நிறையான இயக்கம் வளர்க்கப்படுகின்றது. புதுமுறையான அப்பியாசங்களைப் புகுத்துவதினுல் சாமர்த்தியத்தின் அளவும் மேற்பார்வையிடும் சக்தியும் கூடுகின்றது.

**5. மற்றையோர்களுடன் ஒன்றுபடல்:**

விளையாட்டுக்களும், குழூஉ முறையான செயல்களும் இயல்பாகவும், இலகுவாகவும், இதனை வளர்க்கின்றன. அத்துடன் ஒன்றுபடலின் முக்கியத்தையும் இவையூட்டுகின்றன.

**6. சந்தோஷமாகவும், தமாஷாகவும் இருத்தல்:**

பயனளிக்கும் சுதந்திரமான அப்பியாசங்கள், உற்சாகமூட்டும் சுத்த பவனம் நிறைந்த திறந்தவெளி, மற்றையோர்களுடன் ஒன்றுபட்டுக் கடமையாற்றல் என்பன சந்தோஷத்தையும், தமாஷையும் அளிக்கக்கூடியன.

**பாடத்திட்டம் அமைத்தல்:**

பிள்ளைகளுக்கான பலவகை ஒழுங்கு நிறைந்த ஒவ்வொரு இயக்கத்திற்கும் அப்பியாசங்களைத் தெரிதல் வேண்டும். இவை முன் சொல்லிய நோக்கங்களை வளர்ப்பதில் பயன்படும். பலத்தையளிக்கும் அப்பியாசங்களுக்கூடாக உடலின் உறுதி வாய்ந்த ஒழுங்குக்கிரமத்தை ஊக்கப்படுத்தலையும், உணர்வூட்டுதலையுமே முதல் நோக்கமாகக் கொள்ளவேண்

டும். இவ்வகையான அப்பியாசங்களின் அடிப்படை இயக்கம் ஓட்டமாகும். தாவிக் குதித்தல் பாய்தல், தாவுதல் என்பவற்றை உள்ளடக்கிய அப்பியாசங்கள் பொது அப்பியாசங்கள் என்று சொல்லப்படும். இவை உடல் முழுவதற்கும் அப்பியாசத்தைக் கொடுக்கின்றன.

ஓரிடத்திற்குரியதும் விசேடமாக நோக்கங்களைக் கொண்டதுமான அப்பியாசங்களும் விளையாட்டுக்களும் இரண்டாம் பிரிவிலடங்கும். ஆகவே இவற்றை விசேஷ பயனைத் தரும் அப்பியாசங்களெனலாம். இதை மூன்று உப பிரிவாகப் பிரிக்கலாம்.

1. இடுப்பு அப்பியாசங்கள்.
2. கை அப்பியாசங்கள்.
3. சமநிலை அப்பியாசங்கள்.

மேலே கூறப்பட்ட இருவகை அப்பியாசங்களும் நாளாந்தப் பாடத்திட்டத்தில் இடம் பெறவேண்டும்.

இவ்விரு வகையான அப்பியாசங்களின் மாற்றம் பாடத்திட்டத்தின் அடிப்படையாகும். நாளாந்தப் பாடத்திட்டம் பின்வருமாறு அமைதல்வேண்டும்.

1. ஆரம்ப அப்பியாசம்.
2. இடுப்பு அப்பியாசம்.
3. கை அப்பியாசம்.
4. சமநிலை அப்பியாசம்.
5. பொது அப்பியாசம்.
   (அ) பாய்தல்
   (ஆ) விளையாட்டு.

**ஆரம்ப அப்பியாசங்கள்:**

பாடத் தொடக்கத்தில் இலகுவான பொது அப்பியாசங்கள் இடம்பெறவேண்டும். இதில் ஆசிரியர் பிள்ளைகளைப் பின்பற்றிச் செய்தல் சுகமான பிள்ளைகளைப் பொறுத்தமட்டில் நல்ல பயனை அளிக்கக்கூடியது. வீடுகளில் அடைக்கப்பட்டிருந்த பிள்ளை தனது உடலுறுப்புக்களை வேண்டியபடி நீட்டவும் தனது சுவாசப்பையைப் பூரணமாக வேலை செய்யச் செய்யவும் இரத்தோட்டத்தை விரைவாக்கவும் புதிதாக நற்காற்றோட்டம் நிறைந்த இரத்தத்தினால் தசையை வளர்க்கவும் விரும்புகின்றான். ஆகவே, இவற்றை அளிக்கக் கூடிய இயக்கங்கள் இப்பாடத்திலிடம்பெற வேண்டும். பிள்ளைகள் ஒவ்வொருவரும் இவற்றிலெல்லாம் பங்குபற்றவேண்டும். இதற்கு விரிவானவகுப்பொழுங்கு தேவையில்லை. பொருத்தமான அப்பியாசங்கள் பின்வருமாறு :-

1. ஆசிரியரைப் பின் தொடர்தல்.
2. நின்ற இடத்திற் கையடித்தல்.
3. பொம்மையைப் பார்த்துச் செய்தல்.

முண்டத்திற்கும் கைகளுக்கும் அப்பியாசங்கள் கொடுக்கப்பட்ட பின் அவ்வகுப்பு நிலையிற் சில மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டும். அம் மாற்றம் நேரத்தை அதிகமாகச் செலவழிக்கக்கூடிய விளக்கத்தையுடையதாயிராமல் மிக இலகுவானதாய் இருத்தல்வேண்டும். ஏதாவதொரு விளையாட்டுத் தேர்ந்தெடுக்கப்பட்டால் அது உண்மையிற் பிள்ளையின் ஆரோக்கியத்தை நாடுவதாக இருத்தல் வேண்டும். மேலும் பாய்ச்சல்போன்ற விளையாட்டுக்கள் பிள்ளைகளின் ஆகக்கூடிய முயற்சியை நாடுவதாயிருக்கவேண்டும். இதன்பின் பிள்ளைகள் களைப்பு நீங்கிய உடலுடனும் புத்துணர்ச்சி பெற்ற மனத்துடனும் வகுப்புக்குத் திரும்புகின்றார்கள்.

**பாடம் நடாத்துதல்:**

பிள்ளைகளுக்குத் தேவையான அப்பியாசங்கள் கற்பிக்கப்படவேண்டும். வகுப்பு, ஒரு குழுவினரென்ற முறையில் ஒரு தலைவரையும் ஒரு அமைப்பாளரையும் வேண்டி நிற்கின்றது. ஆசிரியருடைய இயக்கங்களைப் பின்பற்றுவதனால் மாணவர்கள் சுகமாகக் கற்றுக் கொள்கின்றனர். ஆகையினால் அவ்வாசிரியர் விசேஷமாக முதற் பராயத்திலும் புது இயக்கங்களைப் போதிக்கும் பொழுதும் பிள்ளைகளுடன் கலந்து பயிலல்வேண்டும். அந்த நேரத்தில் அப்பிள்ளைகளுக்குச் சுலபமான வழிகளைக் காட்டிக் கொடுத்தும் தேவையான முயற்சியை எடுத்தற்கான உற்சாகமளித்தும் வழி காட்டவேண்டும்.

**அப்பியாசமளிக்கும் முறை:**

1. பிள்ளைகள் வரிசையில் விசாலமாக நிற்றல்வேண்டும். அவர்கள் எல்லோரும் பார்க்கக் கூடிய இடத்தில் ஆசிரியர் நிற்றல் வேண்டும்.

2. "இரு" என்ற இலகுவான கட்டளையை இடுக. அதைத் தொடர்ந்து பிள்ளைகள் தாமே தொடங்கக்கூடிய விதத்தில் இலகுவான இயக்கங்களை உண்டாக்கும் அப்பியாசங்களைக் கொடுக்குக.

3. பிள்ளைகள் இருக்கும்பொழுது ஆசிரியர் அவர்களை ஒழுங்காக இருக்கச் செய்தல் வேண்டும். இவ்விடத்தில் குதிகள் ஒன்று சேர்ந்தும் முழங்கால்கள் அகன்றுமிருத்தல் வேண்டும்.

4. நில், நிமிர்ந்து நில், எனக் கட்டளையிடுக. பிள்ளைகள் அங்ஙனம் செய்வர். அப்பியாசங்கள் கொடுக்கும்போதும் நில், இரு என்ற கட்டளைகளை இடும்பொழுதும் ஆசிரியர் படிப்பித்தலை இலகுவாக்கத்தக்க அளவுக்கு நிபுணத்துவம் வாய்ந்தவராக இருக்க வேண்டும் அத்தன்மை, ஆசிரியர் காட்டும் வழியில் மாணவர், நேராகப் பயனைத் தரக் கூடியவர்களாக இருக்கச் செய்யும். இவையெல்லாம் பாடங்களை ஆர்வமுள்ளனவாக நடாத்துவதிலும் பிள்ளைகளுக்கிடையிலுள்ள இடைவெளிகளைப் பாதுகாத்தலிலும் தங்கியுள்ளது.

**குழூஉ வேலையிற் கட்டளைகள்:**

முக்கியமாகக் குழூஉ வேலையும் கட்டளைகளை நாடி நிற்கின்றது. பிள்ளையின் காத்திருக்குந் தன்மையையும், சுயமாக இயங்குந் தன்மையையும் தடைப்படுத்தாது பயிற்றி விடல் வேண்டும். இந்த வழிகளில் ஆசிரியர், பிள்ளைகள் எவ்வளவிற்கு ஆசிரியரது மேற்பார்வையை வேண்டி நிற்கின்றார்கள் என மதிப்பிடக்கூடியவராக இருத்தல் வேண்டும். கட்டளையிடலும், புதிய முறைகளைக் காட்டலும், ஆசிரியரது படிப்பித்தல் முறையில் இடம் பெறுகின்றன. வகுப்பு ஆசிரியர் காட்டும், "இங்கே வா!" "வட்டத்தின்மேல் நில்!" என்பனபோன்ற வழிகளில் விருப்பத்துடன் இயங்கக்கூடியதாக இருக்கவேண்டும்.

**ஊது குழல்:**

இது வெளியிடத்தில் அப்பியாசம் செய்யும் பொழுது முக்கியமாக உதவுகிறது. இது சாதாரணமாக, "நில்!" என்ற கட்டளையைக் காட்டும் குழற் சத்தத்துக்கு நிற்பாட்ட வேண்டாத —சில வழி வகைகள் — முன் கொடுக்கப்பட்ட இடந் தவிர்ந்து - குழல் ஊதியவுடன் அக் குழலோசைக்குப் பதிலளிக்குமுகமாக மாணவர்கள் விளையாட்டை உடன் நிற்பாட்டவேண்டும். ஏதாவதொரு விளையாட்டில் குழலினால் சில மாற்றங்களைக் கருதினால் நிற்பாட்டும் பொழுது ஒரு நீண்ட சத்தமுண்டாக்கப்பட வேண்டும்.

## சமூகமும், தனி மனிதனும்.

*எந்த ஜன சமூகம் தன் பாதுகாப்புக்காகத் தனிப்பட்டவர்களின் உரிமைகளைப் பறிக்கிறதோ, தன் அமைதிக்காக அவர்களின் கலாசாரத்தைச் சிதைக்கிறதோ, அந்த ஜன சமூகம் தன் குழந்தைகளையே விழுங்கும் அரக்கியைப் போன்றது தனிப்பட்ட எந்த ஒரு மனிதன் தன் சுயநலத்துக்காகச் சமூக ஒழுங்குகளை நாசம் செய்கிறானே அந்த மனிதன், தான் பிறந்த வீட்டுக்கே கொள்ளி வைக்கும் குழந்தையைப் போன்றவன்.*

— ஆகஸ்டி ஸபாடீர்.

# கண்டிப் பிரயாணத்திலே.................

கண்டியிலே கடையொன்றில் அண்ணர் நின்றூர்
கடிதமொன்று போட்டிருந்தார் வாவென்றங்கே
கண்டவுடன் போகவென்று எண்ணங் கொண்டேன்
'கார்' ஒன்றை அதற்கென்றே ஒழுங்குசெய்தேன்
பண்டுதொட்டு எழில்மிக்க நகர மென்று
படித்ததினுல் பார்க்கமிக ஆசை கொண்டேன்
கொண்டல்மிகு காலமதால் குறும்பு மிக்க
குழந்தைகளைக் கொண்டுசெல விரும்பவில்லை.

* * *

காலையிலே செல்வதென்றால் கஷ்ட மென்று
கதிரவனும் குடபாலில் மறையும் நேரம்
சாலையிலே நின்ற தந்தை சோதரர்க்கும்
தனயர்க்கும் எனதன்பு வணக்கம் கூறி,
சீலமிக்க சாரதியும் ஏறு முன்பே
சீக்கிரமாய் உட்கார்ந்தேன் முன்பக்கத்தில்
கோலமிக்க மோட்டாரும் தனது வேலை
'கும்' எனவே தொடங்கியது புகைவேகத்தில்

* * *

'கார்'தனிலே சென்றாலும் கண்ட காட்சி
கண்முன்னே நிற்கிறது எப்போதுந் தான்
பார்தனிலே மக்கள்தனில் பெரும்பா லோர்கள்
பண்டையிலே வாழ்ந்த நினை வுண்டாயிற்று
கார் முகிலில் திங்களொளி பிரகாசிக்கக்
காட்டினிலே வசிக்குமந்தக் கவியினங்கள்
'கூர்' 'குர்'என் றோலமிட்டுக் கிளைகள் தாவிக்
குதித்திடுதல் கண்டு மிக மகிழ்வுகொண்டேன்.

* * *

ஆவினங்கள் மேதிகுழா மோடு சேர்ந்து
அவ்வழியில் தாம் மிகவும் உறக்கம்செய்ய
தீவிரமாய் ஓடுமெங்கள் வாக னத்தில்
திகழுமொளி அவை கண்கள் மீதுபாயத்,
தேசுநிறை தீபநிரை வைத்தாற் போன்று
சிறப்பாக அதன் கண்கள் மிளிரும்காட்சி
மாசுணத்தின் மணிதானே! என்று எண்ணி
மறித்திடுவோம் மோட்டாரை என நினைந்தேன்.

சேனைகளை அழித்துவிடும் யானை யொன்று
தீ மூட்டிக் காட்டினிலே எரிக்கும் மக்கள்,
பூனைதனைக் காண்டலுமே புலிதானென்று
புதரருகில் ஒளித்து மிகப் பதுங்கிக்கொள்ள,
மானினமும் புல்மேய்ந்து அருகில் போக
மனம்பொறு நெஞ்சினராய் மக்கள் நின்று,
கானிடையே மானினமும் புலியும் சேருங்
காட்சிதனை தூரநின்று கண்டு நின்றார்.

* * *

கதிரவனும் குண திசையில் உதயமாக,
கமலங்கள் மொட்டவிழ்ந்து மலர்தல் செய்ய,
குதிகொண்டு வரால் மீன்கள் மேலேவந்து
குளத்திலுள்ள கமலத்தின் மீது பாயக்,
கெதியாகப் பாய்ந்த கொக்கு மீனைக்கொத்திக்
கொண்டுசெலக் கண்டேனான், வியப்படைந்தேன்;
கதியேது மற்றதங்கள் குழவி கட்கு
கணப்பொழுதும் பசியெடுக்கா நோக்கம் வைத்தோ!

**நா. செ. சுப்பிரமணியம்,**
இரண்டாம் வருடம்.

## சாத்வீகம்

சாத்வீகம் என்பது, செயலில் பிறரிழைக்கும் தீங்குகளை மனமாரத் தாங்கிக் கொள்வதாகும். தீங்கிழைப்பவனின் உறுதிக்கு அடிபணிவது சாத்வீகமன்று; அவனைத் தன் ஆன்மீக வலிமையால் எதிர்த்து நிற்பதே சாத்வீகமாகும். இந்த ஒழுங்கை ஏற்றுக் கொண்டு நடந்தால், தனியொருவன் கூடக் கொடுங்கோலாட்சி புரியும் மாபெரும் அரசையே எதிர்த்து நின்று போராடித் தன்மானத்தையும் சமயத்தையும் ஆன்மாவையும் காப்பாற்றுவதன்றி, அப்பேரரசின் வீழ்ச்சிக்கோ அல்லது சீரமைப்புக்கோ அடிகோல முடியும்.

— நேரு.

# ஒற்றுமையே பலம்

அறுசீர் ஆசிரிய விருத்தம்.

பார்புகழ் ஈழநாட்டின் பழம்பதியாழ்ப் பாணத்தில்
சீர்பெறு நல்லூரின்கண் திகழ்ந்திடும் செல்வன்வேலு
ஊரினர் போற்றிக் கூறஉவந்து நல்வாழ்வு வாழ்ந்து
பேருடன் புகழுமீட்டி வதிந்தனன் பெருமையாக. 1

அன்னவன் தனதுஅன்புக் கிழத்தியாம் வள்ளி என்பாள்
சொன்னசொற் தவறாள் நல்ல தூய்மையாம் மனமுங்கொண்டாள்
கன்னல் சேர் மொழியாள்என்று கணவனும் போற்றிநிற்பான்
மன்னிய பதியில் அந்த இருவரும் வாழும் நாளில். 2

இறைவனின் கருணையாலே ஈரிரண்டாண் மகாரை
முறை முறையாக ஈண்டு முதுபெரும் மகிழ்ச்சி கூர்ந்து
துறைபல கலைகள் ஊட்டப் பள்ளிக்கு ஈட்டிச்சென்று
நிறைவுடன் பயிற்றுவித்தார் நேரிய தந்தையாரும். 3

ஒற்றுமையின்றி வாழ்ந்து ஒருவரோடொருவர் மோதிச்
சற்றுமே அன்புமின்றி நால்வரும் தனிமையாகச்
செற்றமே பூண்டு தீய வினையினால் விளங்கினார்கள்
பெற்றவர் கண்டு சிந்தை செய்துமே முடிவு கொண்டார். 4


அன்றொரு நாளில் நாலு பேரையும் அழைத்து ஆங்கே
நின்றுமே தனித்தனியாய் ஒருகட்டுத் தடியைக் காட்டி
சென்றுமே முறிக்குமாறு செப்பினர் தந்தையாரும்
கன்றிய மனத்தினாரும் ஆற்றாது கவிழ்ந்து நின்றார். 5

அப்பொழுததனைப் பார்த்து அன்புடைத் தந்தையாரும்
இப்பொழுதெந்தன் மக்காள் எல்லீரும் சேர்ந்தொன்றாக
தப்பிடவிடாமற் சென்று முறியுங்கள் பார்ப்போமென்றார்
செப்பிடு முன்னே ஒன்றாய் முறித்தனர் திரண்டொன்றாக. 6

பரிவுடைத் தந்தையாரும் பாலரை நோக்கி நீவிர்
திரிபின்றி ஒற்றுமையாய்த் திகழ்ந்திடல் பயனே யென்றார்
முரிவுடை மனத்தினாரும் முன்னுள மனத்தை மாற்றி
அரியதோர் அன்பு பூண்டு வாழ்ந்தனர் அவனி மீதில். 7

அ. கனகம்மா,
முதலாம் வருடம்.





யாழ்ப்பாண நகர மண்டபத்தில் இலங்கை வானொலி நிலயத்தார் நடாத்திய "கலை விழா"வில்
எங்கள் கலாசாலை மாணவிகள் நிகழ்த்திய கோலாட்ட, குறவஞ்சி நடனங்களில் சில காட்சிகள்.





# நாவலர் துதி.

இராகம்: ஷண்முகப்ரியா. தாளம்: ஆதி.

ஆ: ஸரிகமபதநிஸ்.

அ: ஸ்நிதபமகரிஸ.

பல்லவி.

பாவாற் பாடுவமே — எம்
பரமஞானியாம் நாவலரை நிதம் — பாவாற்.

அ. பல்லவி.

சைவ மோங்கத் தமிழ் மறை துலங்க
வையக மீதினில் இயற்றமிழ் ஆக்கியோன் — பாவாற்

சரணம்.

நல்லூரிற் றோன்றி நலம்பெறு ஞானமூட்டி
அல்லலுற்ற தமிழ் அவனியிற் றழைத்திட
பல்லிடங் களிலும் பாடசாலை தந்த
நல்ல தமிழ்க் குருவை நாவாற் றுதித்து — பாவாற்.

**சு கனகசபாபதி,**
இரண்டாம் வருடம்.

## எழுத்தாளர்

எழுதும் சக்தி கடவுளின் சக்தியைப் போன்றது. இந்த மாதிரி சொல்வது தவறு என்று சிலர் எண்ணலாம். இயற்கையில் இருப்பது எழுத்துக் கலையிலும் உள்ளது. பூமியில் ஓடும் ஒரு கங்கையைத்தான் நாம் பார்க்கிறோம். ஆனால் எழுத்தாளருக்கு ஆகாயத்திலும் பூமியிலும் பாதாளத்திலும் ஓடும் மூன்று கங்கைகள் தென்படுகின்றன. ஆதலால் ஏராளமான சக்தியைத் தேக்கிக் கொண்டவர்கள் எழுத்தாளர்கள்.

— விநோபா.

# புயல் அடங்கியது.

அன்று இரவு பன்னிரண்டு மணி இருக்கும். ஆகாயம் களங்கமற்றிருந்தது. பூரண வெண்ணிலவு பொலிவுடன் பிரகாசித்துக் கொண்டிருந்தது நில வொளியால் தம் ஒளி மங்கிய நட்சத்திரங்கள் அங் கொன்றும் இங்கொன்றுமாக மினுங்கிக் கொண் டிருந்தன. எங்கும் ஒரே அமைதி. மெல்லிய தென் றல் கூட அம்மரத்தடியின் அமைதியைக் குழப்ப வில்லை. அவ்வளவு அமைதி விளங்கிய அம் மரத் தடியிலே இரண்டு இளம் உள்ளங்கள் மாத்திரம் ஏனோ எரிமலையெனக் குமுறிக்கொண்டிருந்தன. வழக்கமாகச் சந்தித்து வம்பளந்துகொண்டிருக்கும் இவர்கள், ஏனோ இன்று இந்த அவல நிலைக்கு உள்ளானார்கள்.

இது தெரியாத காரணத்தால்தானோ என் னவோ, அந்த மரங் கூடத் தன் இலை தழைகளை ஆட்டி, சிரிப்பொலி காட்டாது ஸ்தம்பித்து நின் றது. அம்மரக் கிளையொன்றில் அமர்ந்திருந்த சோடிப் புறவுகளும் விஷயந் தெரியாது மேலும் கீழும் விழித்துப் பார்த்துக்கொண்டிருந்தன. "நாமும் இவர்களைப்போற் காதலர்கள்தானே? நமக் கேற்படாத கஷ்டம் இவர்கட்கு என்ன ஏற்பட்டு விட்டது?" என்ற எண்ணம்போலும் அவைகட்கு! இவர்கள் வேதனை இன்னதென்று சரியாக விளங் கிக்கொண்ட வெண்ணிலவு சோகங்கொண்டது போல அருகிருந்த மேகத் திரையுட் புகுந்துகொண் டது.

இயற்கையின் இத்தனை விசித்திரங்கட் கும் காரணம் வேறுயாரும் அல்ல; இரகுவும் சுசி யும்தான். இருவரும் எதிரெதிராய் அமர்ந்திருந் தனர். சுசியின் கண்களில் கண்ணீர் தாரை தாரை யாக வழிந்தோடியது அவள் துன்பம் எல்லையை மீறிவிட்டது; விசித்து, விசித்து விம்மியழுதாள்.

"சுசீ, ஏன் இந்த வீண் கவலையும் கலக்கமும்? அதோ பார், பொலிவுடன் விளங்கும் அந்த முழு மதியை இன்று அதன் தோற்றமும், பிரகாசமும் முழுவளர்ச்சியுடன் காணப்படுகிறது. ஆனால் நாளை தொடங்கி அதன் வளர்ச்சியும் பிரகாசமும் குறைந்து கொண்டே போகும். ஈற்றில் அமாவாசையன்று அதனுருவம் அறவே தெரியாது. இது போன்றது தானே மனித வாழ்வு? நாம் மாத்திரம் என்ன இதற்கு விதிவிலக்கா?"

"ஆம் ரகு. நான் சாகத் துணிந்துவிட்டேன்; வாருங்கள் போவோம், அந்த முதலைக் குளத்துக்கு."

"சுசீ! இது எவ்வளவு கோழைத்தனமான எண்ணம்! உன்போன்ற படித்த பெண் பேசும் பேச்சா இது; கோழைகள் அல்லவா இப்படிப் பேசு வது."

"நானு கோழை?...... ."

"ஏன் அப்படிக் கேட்கிறுய் சுசீ?"

"பின் என்ன? நான் நேற்றே சொன்னேன் இன்னொருமுறை நாம் இருவருமாகச் சேர்ந்து அப்பாவிடம் போவது—எங்கள் திருமண முடிவைத் தெரிவிப்பது. அவர் அதற்கு ஒருமனப்பட்டால் சரி, அல்லது மறுகணமே இந்த ஊரையே விட்டுப் போய்விடுவோம் என்று........"

"சுசீ சிறிதுமே சிந்தனையின்றிப் பொறுப்பற்ற முறையில் பேசுகிறுய். தாயற்ற உன்னை உன் அப்பா எவ்வளவோ கஷ்டப்பட்டுச் செல்லமாக வளர்த்தார்; படிக்க வைத்தார்; இப்போது உன் எதிர்கால இன்ப வாழ்க்கையைப் பற்றி என்னென்ன வெல்லாமோ இன்பக் கனவுகள் கண்டுகொண் டிருக்கிறர். அதற்காகத்தானே இந்த ஊருக்கே பணக்காரனுன — வெங்கடாசலம்பிள்ளை மகன் வேதாசலத்துக்கே உன்னை விவாகஞ் செய்து கொடுக்க நிச்சயித்திருக்கிறர் . ......"

"இப்படியெல்லாஞ் சொல்லி, ஏன் ரகு என் னைச் சித்திரவதை செய்கிறீர்கள்; உன்னை நான் விரும்பவில்லை' என்று ஒரே வசனத்தில் சொல்லி விடுங்கள்; என் முடிவை நானே தேடிக்கொள் கிறேன்."

"இல்லை சுசி, நீ நினைப்பதுபோல் நான் அவ் வளவு கயவன் அல்ல. நான் எஸ். எஸ். ஸி.யில் படிக்கும்போதே என் தாயையும் இழந்த அனுதையா னேன் என்பது உனக்குத் தெரியும். அப்போது உன் அப்பா எனக்குச் செய்த பேருதவியினுலேயே இந்த "இன்ரர்மீடியற்" வகுப்புவரையாவது படிப் பதற்கு அரசாங்க உதவிப் பணம் கிடைத்தது. இப் போது ஏதோ நாலு வீடுகள் ஏறி இறங்கி நாலு பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்தாவது உயிர்வாழ முடியுமென்ற நம்பிக்கை உண்டு. எனினும் உன் தந்தை, நான் ஓர் ஏழை, அனுதை என்ற முறையில் என்னை வெறுக்கிறர் என்பது நாம் இருவரும் அறிந்ததே. இத்தகைய குணம் அவர் உள்ளத்தில் இடையிலேதான் வந்து சேர்ந் தது. இந்நிலையில் உன் முடிவுக்கு நானும் உடந்தை யானுல், நமது இச்செய்கையே தள்ளாத பருவத்

தினரான உன் தந்தையின் உயிரைக் கவரும் இயமனுகவும் மாறிவிடும். எனவே செய்ந்நன்றிமறந்த பாதகனுகிறேன் நான்."

"எந்நன்றி கொன்ருர்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு" என்ற குறளுண்மையையும் நீ அறிவாய். மறுபுறம், எப்படியாவது உன்னை என் மனைவியாக்கிக்கொண்டு உன் மூலம் சுகபோகவாழ்க்கை ஒன்றைமாத்திரமே அடைய வேண்டும் என்ற கீழ்த்தரமான எண்ணமும் எனக்கில்லை. ஆனுல் சுசீ, உண்மையாகவே உன்னை நான் நேசிக்கிறேன். முதலாவதாக நான் வழிபடும் தெய்வம். இரண்டாவதாக, நான் கண்கண்ட தெய்வங்களான, இறந்துபோன என் தந்தை தாயர், அதற்கடுத்தபடியில் நீ. இது சத்தியம்.

"இவ்வளவு தத்துவங்களையும் எனக்குப் போதிக்கிறீர்களே, நான் முன்பின் அறியாத—என் மனமொப்பாத ஒருவருக்கு என் வாழ்க்கை பலிபாகப் போவதைபிட்டு என்ன சொல்கிறீர்கள் ரகு"?

"உன்னைப் பலியாக்குவதற்கல்ல சுசீ, பாக்கியசாலியாக்குவதற்கே உன் அப்பா திட்டம்போட்டிருக்கிருர். பலியாக்கப்பட்டது என் வாழ்க்கைதான். சுசீ! இதோபார், நாம் இருவரும் காணும் பூரண சந்திரன் சாட்சியாகச் சொல்லுகிறேன்; இவ்வுலகில் எனக்கு இனிப் பிறிதோர் இல்வாழ்க்கை கிடையாது. அதை இன்றே தியாகம் செய்துவிட்டேன். ஒண்டியாகப் பிறந்தேன்; ஒண்டியாகவே வாழ்ந்து மடிவேன்............"

"அப்படியானுல் ரகு, நானும் ஏன் என் இல்வாழ்க்கையைத் துறந்துவிடமுடியாது"?

"சுசீ, முதலாவதாக உன் அன்புத்தந்தையின் இன்பக்கனவைக் கலைக்காதே. அடுத்தபடியாக ஒரு பெண்ணுல் அப்படி வாழ்வது கடினம் என்பதை அறிந்துகொள். அப்படியே ஒரு பெண் இல்வாழ்க்கையைத் துறந்து, பரிசுத்தவதியாக வாழ்ந்தாலும் இந்தப் பொல்லாத உலகம் அவளுக்குப் பாவக்கேடான பட்டங்களையே சூட்டும். இதனுல் குடும்ப கௌரவம் பங்கப்படும்........."

"ரகு, அப்படியானுல் உங்கள் வாழ்வு என்னுவது!"

"என்னைப்பற்றி நீ எள்ளளவும் கவலைப்படாதே சுசீ, இயற்கை மரணம் என்னைத் தழுவும்வரை நிச்சயமாக உயிருடன் வாழ்வேன். சென்ற வாரம் நான் அனுப்பிய விண்ணப்பப்பத்திரம் வெற்றிகரமான முடிவையே கொண்டுவந்திருக்கிறது. திருவனந்தபுரத்தில் இராமக்கிருஷ்ண மடத்தாரால் நடத்தப்படும் பாடசாலை ஒன்று உண்டு. அதில் உதவி ஆசிரியனுகக் கடமை ஏற்க விருப்பங்கேட்டு வந்தது. விருப்பந் தெரிவித்தேன். முதலாந் திகதியோடு கடமையேற்க வரும்படி எழுதி இருந்தனர். நாளை இரவே புறப்படத் தீர்மானித்துவிட்டேன்......"

"ஐயோ என் ரகு...... என் முகத்திலும் இனி விழித்துக்கொண்டிருக்கக் கூடாதென்று சொந்த ஊரையும்விட்டு அதுவும் முந்நூறு மைல்கட்கு அப்பாற் செல்லத்தீர்மானித்துவிட்டீர்களா......?"

"என்போன்ற அனுதைகட்குச் சொந்த ஊர் என்றும் ஒன்று உண்டா சுசீ. இங்கு எனக்கு என்ன இராச்சியம் இருந்தது? அங்கு எனக்கு என்ன இராச்சியம் இல்லாமற் போகப்போகிறது? இங்கு இவ்வளவு காலமும் இருந்தது ஒரே ஒரு மனுேராச்சியத்துக்காக. அதுதான் உன் அன்புராச்சியம். அதுவும் நாளைதொடங்கி இன்னெருவனுக்காக ....." என்று சொல்லும்போதே அவன் குரல் கம்மியது. கண்கலங்கிற்று. இக்காட்சியைக் கண்ட சுசி, வாய்விட்டுக் கதறியேவிட்டாள்.

இந்த அவலக்காட்சியைக் காணச் சகியாது கவலை கொண்டதுபோல மரத்திலிருந்த சோடிப் புறவுகளும் பறந்துவிட்டன. பூரண முழுமதி இவர்கள் துபரை ஊரெங்கும் பரப்பிவிட்டதனுல்தானே என்னவோ, அவ்வூரிலுள்ள சேவற் கோழிகள்கூட தங்கள் வயிற்றிலடித்துக்கொண்டு கூவினபோலும்.

ரகு விசித்து விசித்து விம்மியழுதுகொண்டிருந்த சுசியை நோக்கி, "சந்தர்ப்பந்தான் சுசி, மனிதனை நல்லவனுக்குவதும் கெட்டவனுக்குவதும். நான் இங்கு இருந்தால் உன் நல்வாழ்வுக்கும், குடும்ப வாழ்வுக்கும் இடையூறுதான் ஏற்படும். சந்தர்ப்பம் நம்மைச் சதிசெய்யப்பார்க்கும்—கடவுள் உன்னைக் காப்பாற்றுவார். நாழியாயிற்று; சென்றுவா; போகிறேன்... .." என்று கூறிக்கொண்டு நீண்ட பெருமூச்சுடன் எழும்பினுன். சுசியும் எப்படியோ எழும்பினுள். உடலைவிட்டு உயிர்பிரிவதுபோலப் பிரிந்தனர் அந்த இலட்சியக் காதலர்கள்.

வடக்குத் தெற்காய் இருந்த ஒற்றையடிப் பாதையில் ரகு வடக்கு நோக்கிச் சென்ருன். திரும்பிக்கூடப் பார்க்காமல் நடந்தான்—எனினும் அவன் தேம்பியழுதுகொண்டு சென்ற அழுகையொலி மாத்திரம் சுசிக்கு கேட்கத் தவறவில்லை. சுசியும் அழுதுகொண்டே அன்றிலைப் பிரிந்த பேடுபோலத் தன் இல்லம் அடைந்தாள்.

* * *

அன்று எப்படியோ விடிந்துவிட்டது. சுசியின் தந்தை இரங்கநாத முதலியார் வீடு ஒரே கோலாகலமாய் இருந்தது. இரங்கநாத முதலியார் அவசர

அவசரமாக அலுவல்களைக் கவனித்துக்கொண்டிருந் தார். ஆம், அன்றுதான் சுசியின் விவாக நிச்சய தார்த்தத்துக்கு மாப்பிள்ளை வீட்டார் வருவதாக இருந்தது அவ்வமயம் தபாற்காரன் "தபால்" என்று கூவிக்கொண்டு முதலியார் வீட்டு விருந் தைக்கு ஏறுவதற்கும், சுசி அடுக்களையில் இருந்து முதலியாருக்குத் தேநீர்க் கோப்பையுடன் வருவ தற்கும் சரியாக இருந்தது. முதலியார் இடதுகை யால் தேநீரையும், வலது கையால் தபால் அட்டை யையும் வாங்கினர்.

"சுசீலா! இந்தக் கடிதத்தை வாசித்துச் சொல் லம்மா. மூக்குக் கண்ணுடியை எங்கோ விட்டுட் டேன்" என்று பரபரப்புடன் சொன்னர் ஏனெனில் அன்று நிச்சயதார்த்தத்துக்கு வரவிருந்தோர் திக தியை ஒத்திப்போட்டுவிட்டார்களோ என்ற கலக் கம்போலும் அவருக்கு.

சுசி வாசித்தாள்.........

அன்புள்ள ஐயா,

தங்கள் உதவிக்கு என் ஆயுள் பூராவும் நன்றி உள்ளவனுக இருக்கிறேன் திருவனந்த புரத்தில் ஓர் ஆசிரியத் தொழில் கிடைத்திருக்கிறது. போகின் றேன். நேரில் வந்து தங்களிடம் விடைபெற்றுச் செல்ல முடியாமற் போனதற்கு வருந்துகிறேன்.

தங்கள் நன்றி மறவாத,
இரகுநாதன்.

"இரகுநாதன்" என்ற பெயரை வாசிக்கும்போது அவள் நாத்தழுதழுத்ததையும், கண்களில் மல்கிய நீரையும் பணப்பைத்தியமும், அகம்பாவமும்கொண்ட அந்தக் கிழவர் எங்கே கவனித்திருக்கப் போகிருர். ... ம் ......அவனு?" என்ற ஓர் அலட்சியக் குர லொலி மாத்திரமே அவர் வாயினின்றும் வெளியே றியது.

நாட்கள் உருண்டோடின. ரகு சுசியின் காதல் மண்டபம் மண்ணோடு மண்ணுயிற்று. அந்தச் சமா தியிலே சுசியின் விருப்பத்திற்கெதிராக வேதாசலத் துக்குக் கட்டாயத் திருமணம் நடந்தது

வேதாசலமோ பசுத்தோலைப் போர்த்திருந்த புலி என்பதை சுசி மாத்திரம் அன்றி இரங்கநாத முதலியாரும் உணர்ந்துகொண்டார். குடிப் பழக்கமும் சூதாட்டமும் அவன் பிறவிக் குணங்கள். வேறு பல துர் நடத்தைகட்கும் நிலைக்களன். தந்தையும் மக ளும் அவனைத் திருத்திவிடலாம் என்றெண்ணினர். ஆனுல் 'பிறவிக் குணத்துக்கு மட்டைவைத்துக்கட்ட முடியாது' என்னும் உண்மையை உணர்ந்தனர். எனவே அவர்கள் முயற்சி வெறும் பகற்கனவா யிற்று. வேதாசலத்தின் டாமபீகப் போக்கினுலும், துஷ்டர் சகவாசத்தினுலும் பொருள் பண்டங்கள் கரைந்தன.

இப்போது சுசி ஒரு மகனுக்கும் தாயாகி விட் டாள். மகன் பிறந்த உடனே ஏனே அவனுக்கு 'ரகுநாதன்' என்று நாமகரணமிட்டாள்; தன்னைத் தன் பள்ளித் தோழன் ரகு பிரிந்து வருடங்கள் இரண்டானுலும் தான் இன்னும் அவனை ஒரு சகோ தரனைப்போல் மறக்கவில்லை என்பதற்கு அடையாள மாகப் போலும்.

நாட்கள் பல கடந்தன. வேதாசலம் குஷ்ட ரோகத்தினுல் தொற்று நோய் வைத்தியசாலையில் உயிர் நீத்தான். சுசி கைம்பெண் ஆனுள் வேதா சலம் பட்ட கடனுக்குக் குடியிருந்த வீடும் கடன் காரரால் 'பறிமுதல்' செய்யப்பட்டது. ஈற்றில் துன் பம் ஒன்றையே சுசிக்கும் அவள் தந்தைக்கும் உடைமை ஆக்கிவிட்டுச் சென்றுன் வேதாசலம். தந்தையும் மகளும் குடியிருக்க ஒரு வீடுகூட இன் றித் தவித்தனர். எனவே அங்கிருந்து நூற்றைம் பது மைல்கட்கு அப்பாலுள்ள காஞ்சீபுரத்துக்குப் போயினர். அங்கு இரங்கநாத முதலியாருக்கு அவர் தந்தையின் மூலம் சேரவேண்டிய அரைப் பரப்பு நிலம் இருந்தது. அதில் ஒரு கொட்டில்வீடு கட்டி, தந்தையும் மகளும் குடியிருந்தனர். ஒருகாலத்தில் அவர்களோடு இணைந்திருந்த வளமான பெரு வாழ்வு இப்போது அவர்களைப் பார்த்து எள்ளி நகையாடிவிட்டுத் துள்ளிப் பறந்து சென்றது.

இப்போதுதான் திருவாளர் இரங்நாத முதலி யார் "குடைநிழலிருந்து குஞ்சரம் ஊர்ந்தோர் நடைமெலிந்தோரூர் நண்ணினும் நண்ணுவர்" என்னும் உண்மையை உணர்ந்தார். என்றுலும் பிரயோசனம் இல்லை. அவர்தான் இப்போது மரணத்தோடு போராடிக்கொண்டிருக்கிருரே.

சுசிக்கோ இவ்வுலகமே நரகமாகத் தோற்றியது. அடிக்கடி தன் அன்புத் தோழன் ரகுவை நினைந்து வருந்துவாள். பணத்தால் ஏழையாக இருந்தாலும் குணத்தால் குபேரனுகவன்றே இருந்தான் என் றெண்ணிக் கழிவிரக்கப்படாத நாளே கிடையாது.

அன்று இரங்கநாத முதலியார் மரணப்படுக் கையிலிருந்தார். சுசி மருந்துக் கிண்ணத்தோடு அருகிற் சென்று அவர் தலையணை அருகே அமர்ந் தாள். "அப்பா இதைக் குடியுங்கள் எல்லாம் குண மாகிவிடும்" என்றுள். இப்படிக் கூறும்போதே அவள் கண்களில் கண்ணீர் தாரை தாரையாக வழிந்தது.

"மகளே இனி எந்த மருந்தாலும் நான் உயிர் பிழைக்கமாட்டேன். உன் வாழ்க்கையைப் பாழாக்கிய என் குற்றத்தை மன்னித்தேன் என்று சொல்லம்மா. என் மரணத்திலாவது நிம்மதிபெறுவேன்'' என்று கூறியபடி சுசியின் முகத்தை வருடினுர்.

"அப்பா அப்படிச் சொல்லாதீர்கள்......'' என்று அவர் கழுத்தைக் கட்டிக்கொண்டு சிறு குழந்தை போல் 'ஓ' வென்று அலறினுள். மருந்துக் கிண்ணம் குப்புற விழுந்தது. இரங்கநாத முதலியார் உயிரும் அவர் உடலேவிட்டுப் பிரிந்தது.

* * *

சுசி இப்போது தந்தையையும் இழந்த் அனுதை ஆனுள். "பட்ட காலிலே படும் கெட்ட குடியே கெடும்'' என்னும் கூற்று சுசியின் வாழ்வைப் பொறுத்தமட்டில் பொருத்தமாய் அமைந்தது. உலகமே அவளுக்கு வெறும் சூனியமாகத் தோன்றியது. "மரணமே, நீ என்னையும் அரவணைத்துக் கொள்ளமாட்டாயா''? என்று முணுமுணுப்பாள். என்ருலும் தன் ஐந்துவயதுப் பாலகனை எண்ணும் போது, தான் இன்னும் சிலகாலத்துக்கு உயிர் வாழத்தான்வேண்டும் என்றெண்ணுவாள்.

சீவனத்தின் பொருட்டுத் தையற்ருெழிலே மேற்கொண்டாள். அந்தக் கிராமத்திலுள்ள சிறுமியருக்குத் தையற்கலேயைக் கற்றுக்கொடுத்தாள். அதனுல் கிடைக்கும் சொற்ப வருமானத்தால் தாயும் சேயும் உயிர் வாழ்ந்தனர்.

அவ்வூரிலே மிகவும் சிறந்தது என்று பெயர் பெற்றது கமலாலயக் கல்லூரி. அதில் தன் மகனைச் சேர்த்துக் கற்பித்தாள். காலதேவனும் தன் கடமையைச் செய்தான் அவள் மகன் ரகுவும் தனது பதினுலாவது பராயத்தை எட்டிப்பிடித்துக்கொண்டிருந்தான். அதோடு அவ்வருடக் கடைசியில் நிகழவிருந்த எஸ். எஸ் ஸி. பரீட்சைக்கும் தோற்றவிருந்தான் "பையன் பாடசாலைக்குக் கிரமமாக வராவிட்டாலும் பாடங்களில் கெட்டிக்காரன்'' என்று ஆசிரியர்களாற் புகழப்படும் திறமைசாலி அவன்.

அன்று கமலாலயக் கல்லூரிக்குப் புதிதாக ஓர் ஆசிரியர் நியமிக்கப்பட்டார் அவர் எங்கோ தூர இடத்தில் இருந்துவந்தவர். ஒரு பீ. ஏ. பட்டதாரி. கடமையில் கண்ணுங்கருத்துமானவர், சமுக சேவையே தன் இலட்சியமாகக்கொண்டவர். இவ்வளவுந்தான் மாணவர்கட்கு அவரைப்பற்றித் தெரிந்த விபரங்கள்.

அவர்தான் எஸ். எஸ். ஸி. வகுப்பாசிரியர். ஒரு நாள் மாணவன் ரகு அவரிடம் சென்று, "ஐயா எனக்கு இரண்டு தினங்கள் விடுதலே வேண்டும்'' என்று பணிவுடன் கேட்டான்.

அப்போது ஆசிரியர், "தம்பி, சென்ற தவணை எண்பத்து நான்கு நாள்கள் பாடசாலே நடந்திருக்கிறது. ஆனுல் நீங்கள் நாற்பத்தைந்து நாள்களே பாடசாலேக்குச் சமுகமளித்துள்ளீர்கள். இப்படி உங்கள் வரவு பாதிக்கப்பட்டால் அரசாங்கப் பொதுப் பரீட்சைக்கு உங்களே அநுமதிக்க முடியாத நிலே ஏற்படலாம்'' என்ருர்.

அதற்கு மாணவன் ரகு, "ஐயா நானுே பரம ஏழை. எனக்கு இவ்வுலகில் உள்ளதே என் அம்மா மட்டுந்தான். அவரும் கடந்த பல வருடகாலமாக அடிக்கடி நோய்வாய்ப்படுகின்ருர். அவர் நோயுற்ற வேளேயில் என் உதவியைத்தவிர அவருக்கு வேறு கதியில்லே. என் அம்மாவும் இறந்துவிட்டால் நான் ஆருமற்ற அனுதையாகிவிடுவேன்'' என்னும்போது அவன் கண்களில் நீர் துளும்பிற்று.

"என்ன செய்யலாந்தம்பி! 'பாடின்றிப் பட்ட மில்லே' கடவுள் எல்லோரையும் ஒரு நிலேயிலா வைத்திருக்கிருர்? ஏதோ முயற்சி செய்யுங்கள்; கடவுள் அருள்புரிவார். சரி, நீங்கள் கேட்டபடி இரு தினங்கள் விடுதலே தரலாம்; போய்வாருங்கள்'' என்ருர்.

பாடசாலே நேரம் முடிந்தது. ஆசிரியர் தனது விடுதியை அடைந்தார். அவர் மனமோ அன்று ஒரு நிலேயில் இல்லே. 'நாம் ஏன் அப்பையனைக் கேட்டோம்' என்று அவர் மனம் அங்கலாய்த்தது. "துரதிர்ஷ்டமும் துன்பமும் நிறைந்த என் இளமைப்பருவத்தையல்லவா அவனுடைய வாழ்க்கையும் பிரதிபலிக்கிறது எவ்வளவு ஒற்றுமை. அவன் பெயரும் ரகு; என் பெயரும் ரகு. பெயரிலும் ஒற்றுமை வாழ்க்கையிலும் ஒற்றுமை. இந்தச் சதிகார உலகம் என்னை, அன்றே, என் அருமைச் சுசியை அடைய விட்டிருந்தால் இப்போது எனக்கும் அவனைப்போல் ஒரு மகன் இருப்பான்தானே'' மறுகணம் "சீ! இதென்ன வீண் எண்ணம். வாழ்க்கை என்பது ஒரு சூதாட்டக் களரி இங்களரியிலே பணம், பட்டம், பதவி, பாடாடோபம் என்னப்பட்ட துரும்புச் சீட்டுக்கள் யார் கையில் சிக்குகின்றனவோ அவனே வாழ்க்கையில் வெற்றிபெறுகிருன் ஆனுல் என்கையில் கிடைத்ததோ வறுமை எனப்பட்ட துரதிர்ஷ்டச் சீட்டு எனவே நான் வாழ்க்கையில் தோற்றுவிட்டேன்......'' என்று எண்ணியவண்ணம் நீண்ட பெருமூச்சுடன் வெளிக்கிளம்பினுர். 'வெளியிற் சென்ருவது சிறிது காற்று வாங்கி வருவோம்' என்று புறப்பட்டார்.

சிறிது நேரத்தால் பட்டினக்கரையைக் கடந்து கிராமப்புற எல்லேயை அடைந்தார். மாலேக் கதிரவன் மேலேத்திசையில் சரிந்துகொண்டிருந்தான். அவன் தன் அன்புக் கிழத்தியைக்காண அஸ்தமன

கிரியை அண்மிக்கொண்டிருந்தான்போலும். மஞ்சள் வெயில் எங்கும் பரவியிருந்தது. மந்த மாருதம் வீசிக்கொண்டிருந்தது. இயற்கை அன்னை எழிலுடன் விளங்கினுள். இச் சிருங்காரக்காட்சிகளையெல்லாம் கண்டு ரசித்தவண்ணம் ஆசிரியர் நடந்துகொண்டேயிருந்தார்.

அவ்வமயம் அவருடைய மோன நிலை கலைந்தது. அவருடைய அபிமான மாணவன் ரகு ஓட்டமும் நடையுமாய் வந்துகொண்டிருந்தான். ஆசிரியரைக் கண்டதும் 'ஓ' வென்று அலறினுன்.

"ஏன் ரகு? என்ன நடந்தது? எங்கே ஓடுகிருய்?" என்று பரபரப்புடன் கேள்விக்கு மேல் கேள்விகளை அடுக்கிக்கொண்டு போனுர் ஆசிரியர்.

"ஐயா, என் அம்மா இறந்துவிடுவார் போல் இருக்கிறது. தயவுசெய்து எங்கள் வீடடுக்கு உடனே வந்து என் அம்மாவுக்கு நான் என்ன செய்யலாம் என்று பார்த்துச் சொல்லுவீர்களா?" என்று மன்ருட்டமாய்க் கேட்டான். ஆசிரியர் பெரிதும் சிந்தனையுடன், "ஆம் தம்பி வருகிறேன் ஆனுல் நான் வந்து என்ன செய்யலாம்—வைத்தியசாலைக்கேனும் கொண்டு செல்வதானுல் அதற்குரிய உதவிகளைச் செய்யலாம். அவ்வளவுதானே என்னுல் ஆகக்கூடியது?" இவ்வாறு கூறியவண்ணம் மாணவன் முன்னும் ஆசிரியர் பின்னுமாக நடந்தனர்.

இப்படிச் செல்லும்போது ஆசிரியர், "இப்போது எவ்வளவுகாலமாகத் தம்பி உன் அம்மாவுக்கு இந்தச் சுகவீனம்" என்ருர்.

"ஐயா நான் அறிந்தகாலந் தொடங்கி இதே நிலைதான். நாலுநாள்கள் நல்ல சுகமாய் இருந்தால் மூன்று நாள் சுகவீனப்படுவார். சில சமயங்களில் ஏதோ சிந்தித்தபடியிருப்பார். மயங்கி விழுவார். ரகு. ரகு என்று அரற்றுவார் இதோ நான் இருக்கிறேனம்மா என்ருல் உன்னை அல்ல மகனே என்பார். சில வைத்தியர்கள் பரிசோதித்தபோது அம்மாவுக்கு உடலில் எவ்வகையான வியாதியும் தென்படவில்லை என்றும், ஏதோ கடந்துபோன ஒன்றைப்பற்றிச் சதா சிந்தித்துக் கழிவிரக்கப்படுவதால் உடல் பெலவீனமுற்றிருக்கிறதென்றும் கூறினர்" என்று சொன்னுன். இப்படி ரகு தன் ஆசிரியருக்குச் சொல்லிமுடிப்பதற்கும் அதைத் தொடர்ந்து 'இதுதான் ஐயா எங்கள் வீடு" என்று ஒரு சிறு மண்வீட்டு வாசலில் அடிவைப்பதற்கும் சரியாக இருந்தது.

ஓலையால் வேயப்பட்ட சிறிய வீடு அது. இரண்டு அறைகளைக்கொண்டது. கூட்டிப் பெருக்கிச் சுத்தமாய்க்காணப்பட்டது. ஓர் அறைக்குள் இருபுறமும் இரண்டு சாக்குக் கட்டில்கள்; நடுவில் ஒரு மேசை, அதற்கு எதிர்ப்புறம் இரண்டு கதிரைகள். மேசை நிறையப் பல புத்தகங்கள்; அவற்றுள் பகவத்கீதை. திருக்குறள், நாலடியார் கந்தப்புராணம் முதலியனவும் இருந்தன.

மாணவன் ரகு, தன் ஆசிரியரை ஒரு கதிரையில் இருக்கச்சொல்லிவிட்டு. எதிர்ப்புறத்தில் நன்ருக முக்காடிட்டுப் படுத்துக்கிடந்த தன் அன்னையிடம் போனுன்.

"அம்மா ..... அம்மா ......" என்று இருமுறை கூப்பிட்டான்.

"ஏன் ம...க ..னே......" என்று ஹீனஸ்வரத்தில் கேட்டாள் அவன் அன்னை.

"இதோ பாருங்கள் அம்மா எங்கள் பள்ளிக்கூடத்திலிருந்து எங்கள் 'சர்'கூட உங்களைப்பார்க்க வந்திருக்கிறர். சிறிது கண்ணைத் திறவுங்கள் அம்மா......" என்ருன்.

"ஏன்... .. மகனே .. ஊரிலுள்ள .. மனிதருக்குக்கூட .. தொல்லை கொடுக்கிருய்" என்று முனகியவண்ணம் இலேசாக எழும்பி மறுபுறம் திரும்புவதற்குர, ஆசிரியர் ஏதோ கேட்பதற்கென்று எதிர்ப்புறம் செல்வதற்கும் சரியாக இருந்தது.

'எங்கே .. .. மகனே ..... சர் .." என்று சொல்லிக்கொண்டு ஏறிட்டாள் சுசி. அவள் கண்கள் சிறுது சிறிதாக அகன்றன. வாய்திறபட்டது. நாத்தழுதழுத்தது; ஆனுல் வார்த்தைகள் வெளிவரவில்லை. கண்களில் கண்ணீர் நிறைந்தது. விழிகள் சுழன்றன. தான் காண்பது கனவா? நனவா? என்பதுபோல் கண்ணிமைகள் மூடிமூடித் திறந்தன.

இதே பிரமிப்பான நிலைதான் ஆசிரியருக்கும். அவருடைய உதடுகள் நெளிந்தன. எனினும் சிலகணப்பொழுது ஓசை வெளிப்படவில்லை. ஒரே பிரமிப்பு வாழ்க்கையில் என்றுமே எதிர்பாராத வியப்பு

தன் அன்னையின் முகத்தையே இமைகொட்டாமல், அவர் என்ன சொல்லப்போகிருரோ என்ற ஏக்கத்துடன் பார்த்துக்கொண்டிருந்தான் ரகு.

இதற்கிடையில் ஆசிரியர் ரகுவின் உள்ளத்தி லும், சுசியின் புண்ணுன நெஞ்சத்திலும் இன்றைக் குப் பதினைந்து வருடங்களாக வீசிய புயல் சலனப் படம்போல் காட்சியளித்தது.

''சுசி உனக்கா இந்த அவல நிலை! உன்னையா ஆண்டவன் இப்படிச் சோதிக்கிறுன். உன் மகனு இந்த ரகு! இந்நிலையிலா உன்னைக்காண நான் கொடுத்து வைத்தேன். இறைவா, ஏனிந்தச் சோதனை?" என்று தன் இரு கரங்களாலும் தலையிலடித்துக் கொண்டு கதறிய ரகுவைப் பார்த்தாள் சுசி. இவ்வமயம் சுசி யின் நிலையை என்னென்று வருணிப்பது! துன்பமும் இன்பமும் கலந்த ஒரு மயக்க நிலை. ஆனந்தக் கண் ணீரும் துன்பக் கண்ணீரும் அவள் முந்தானையை நனைத்தன.

''சுசி கலங்காதே. அவனின்றி அணுவும் அசை யாது என் உயிர் உடலினின்று நீங்கும்வரை உங் கள் இருவருக்குமாக என்ன தியாகமும் செய்வேன். இனிப் புயல் அடங்கியது. கவலைப்படாதே என்று விரக்திகொண்டவராய்க் கூறினுர்'ஆசிரியர் ரகு.

(யாவும் கற்பனை)

**சி. இராமலிங்கம்,**
முதலாம் வருடம்.

## சந்தேகம்

வீண் சந்தேகத்தைப் போலக் கொடுமையானது எதுவுமில்லை. சந்தேகித்தவன் சந்தேகிக்கப்பட்டவன் ஆகிய இருவரையுமே அது நாசமாக்கிவிடவல்லது. எவனெருவன் பிறனெருவனை வீணுகச் சந்தே கிக்கின்ருனே அவனும் சந்தேகத்துக் குரியவனுகிருன். கண் ணுற் கண்டதும் பொய் காதாற் கேட்டதும் பொய் தீரவிசாரித்தறிந் ததே மெய் என்பதே பெரியோர் கொள்கை. வெளித்தோற்றத்தைக் கொண்டு நிர்ணயிக்கும் எந்த முடிபும் எப்போதும் சீரிய முடிபாக இராது. வெளுத்ததெல்லாம் பாலாகவோ, மின்னுவதெல்லாம் பொன் ளுகவோ கொள்ளுதல் கூடாது.

— ஓர் அறிஞர்.

# விடுகை வகுப்பு மாணவர் அட்டவணை

திருவாளர்கள்:

மு. பாலசுப்பிரமணியம்
ஏழாலை தெற்கு, சுன்னாகம்.

கா. க. கிருஷ்ணபிள்ளை
அல்வாய் வடக்கு, அல்வாய்.

இ. நவரத்தினம்
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.

க. கந்தசாமி
கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.

வே. கந்தப்பு
கரவெட்டி மேற்கு, கரவெட்டி.

சு. கனகசபாபதி
கைதடி தெற்கு, கைதடி.

பூ. கதிரவேலு
நீர்வேலி மத்தி, நீர்வேலி.

க. கிருஷ்ணபிள்ளை
கரவெட்டி மேற்கு, கரவெட்டி.

ஆ. குமரகுரு
அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.

த. மயில்வாகனம்
நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

ம. முத்துத்தம்பி
சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம்.

பொ. நாகரத்தினம்
கொல்லன்கலட்டி, தெல்லிப்பழை.

அ. நாகரத்தினம்
புன்னாலைக்கட்டுவன் தெற்கு, சுன்னாகம்.

சி. நடராசா
தாவடி, கொக்குவில்.

சு. பசுபதிப்பிள்ளை
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.

பொ. இராசையா
முள்ளானை, இளவாலை.

வை. இராமகிருஷ்ணஐயர்
புளியங்கூடல், ஊர்காவற்றுறை.

த. சுவாமிநாதன்
கல்வயல், சாவகச்சேரி.

நா. செ. சுப்பிரமணியம்
நாவற்குழி, கைதடி.

சி. செ. சுப்பிரமணியம்
ஈஞ்சடி, சுதுமலை வடக்கு, மானிப்பாய்.

ஆ. சுப்பையா
மூளாய் தெற்கு, சுழிபுரம்.

ஆ. சிவசிதம்பரம்
மஞ்சத்தடி, இணுவில்.

க. தாமோதரம்பிள்ளை
உசன், மிருசுவில்

க. திருநாவுக்கரசு
புத்தூர் கிழக்கு, புத்தூர்.

கா. வேலும் மயிலும்
வட்டு மேற்கு, வட்டுக்கோட்டை.

ம. வெங்கடாசலம்பிள்ளை
சிவகுரு வித்தியாசாலை, வல்வெட்டித்துறை

செல்விகள்:

ஆ. அம்பிகைப்பிள்ளை
மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.

க. அரியமலர்
மாரீசன்கூடல், இளவாலை.

வ. ஞானேஸ்வரி
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.

ஆ. யசோதாதேவி
முள்ளானை, இளவாலை.

வி. கனகமலர்
தண்ணீரூற்று, முள்ளியவளை.

ந. காமாட்சி
அம்பவத்தை, பல்லக்கெலை, கண்டி.

சு. லீலாவதி
மணற்சேனை, கொச்சிக்கடை.

ச. இலட்சுமிப்பிள்ளை
180-1 கண்டி வீதி யாழ்ப்பாணம்.

ந. மகேஸ்வரி
உடுவில் மேற்கு, உடுவில்.

வே. மனோன்மணி
கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை.

செ. பாக்கியம்
ஏழாலை வடக்கு, யாழ்ப்பாணம்.

நா. பாக்கியம்
சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம்.

கு. பரமேஸ்வரி
சந்தை ஒழுங்கை, உடுப்பிட்டி.

து. பரமேஸ்வரியம்மா
அராலி தெற்கு அராலி.

க. பராசக்தி
இணுவில் மேற்கு, இணுவில்.

க. புவனேஸ்வரி
உசன், மிருசுவில்.

ப. புவனேஸ்வரி
59, கண்டி வீதி, கம்பளை.

வி. பொன்னம்மா
உசன், மிருசுவில்.

பொ. பரமேஸ்வரி
அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி.

செ. சரஸ்வதி
அருளம்பலம்பலம் ஒழுங்கை, அரியாலை, யாழ்ப்பாணம்

ஆ. சிவயோகம்
நீலிபந்தனை, காரை நகர்,

நா. சிவபாக்கியம்
அளவெட்டி தெற்கு, அளவெட்டி.

சி. தங்கமணி
உடுப்பிட்டி.

ஆ. திலகவதி
நாரந்தனை வடக்கு, ஊர்காவற்றுறை.

# முதலாம் வருட மாணவர் அட்டவணை.

திருவாளர்கள்;

சு. பாலசுப்பிரமணியம்
கைதடி கிழக்கு, கைதடி.

இ. பொ. குமாரசுவாமி
அம்மன் கோவிலடி. கொக்குவில்.

பொ. கனகசபாபதி
முள்ளானை, இளவாலை.

சீ. கனகசபை
தெல்லிப்பழை மேற்கு, தெல்லிப்பழை.

சு. குமாரவேலு
நெடுந்தீவு மேற்கு, நெடுந்தீவு.

க. நடராசா
இமையாணன், வல்வெட்டித்துறை.

செ. நடராசா
அராலி வடக்கு, வட்டுக்கோட்டை.

த நடராசா
அளவெட்டி தெற்கு, அளவெட்டி.

சு. நல்லதம்பி
சுழிபுரம் மேற்கு, சுழிபுரம்.

சி. நல்லையா
சங்கானை மேற்கு, பண்டத்தரிப்பு.

க. பேரம்பலம்
முகமாலை, எழுதுமட்டுவாள்.

வ. பேரின்பநாயகம்
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

க. குணரத்தினம்
கற்கோவளம், பருத்தித்துறை.

த இராசரத்தினம்
திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்.

சி. இராமலிங்கத்தேவர்
மாறஸ்ஸன, கண்டி.

அ. சிவசுப்பிரமணியம்
மூளாய் ரோட், வட்டுக்கோட்டை.

வ. சின்னத்துரை
நவாலி, மானிப்பாய்.

செ சின்னத்துரை
புலோலி மேற்கு, பருத்தித்துறை.

சி. செல்வத்துரை
நீர்வேலி தெற்கு, நீர்வேலி.

சு. துரைச்சாமி
கோட்டைப்புலம், களபூமி, காரைநகர்.

வீ. வல்லிபுரம்
கரவெட்டி மேற்கு, கரவெட்டி.

கா. விநாயகமூர்த்தி
வட்டு மேற்கு வட்டுக்கோட்டை.

சு. சங்கரப்பிள்ளை
ஏழாலை வடக்கு. சுன்னாகம்.

க. செல்லராசா
பட்டினத்தெரு, திரிகோணமலை.

செல்விகள்:

சி. யோகம்மா
2, கச்சேரி கிழக்கொழுங்கை, யாழ்ப்பாணம்.

மு. கமலாதேவி
சந்திரவில்லா, துன்னாலை தெ. கரவெட்டி.

அ. கனகம்மா
குளமங்கால், மல்லாகம்.

ம. கனகமணி
புளியங்கூடல், ஊர்காவற்றுறை.

ஆ. கண்ணகை
இடைக்காடு அச்சுவேலி.

த. மரகதம்
சேகண்டி, வல்வெட்டி, வல்வெட்டித்துறை.

வே. நாமகள்
131, நில்வீதி, கொழும்பு.

சி. நவமணி
சங்கானை மேற்கு. பண்டத்தரிப்பு.

கு. பரமேஸ்வரி
22. அத்தியடி, யாழ்ப்பாணம்.

சீ. பராசக்தி
நீதிமன்றப்பக்கம். மல்லாகம்.

பொ. இராசேஸ்வரி
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

தெ. இராசேஸ்வரி
கண்ணகைஅம்பாள் கோவில், கெருடாவில்

பா. சரஸ்வதி
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

வி. சரஸ்வதி
புது ரோட்டு, காரைநகர்.

சி. செந்தாமரைச்செல்வி
சூராவத்தை, சுன்னாகம்.

சி. சிவகாமி
ஈஸ்வரி அகம், துன்னாலை தெ. கரவெட்டி.

சு. சிவரத்தினம்
பண்ணாகம் தெற்கு, சுழிபுரம்.

சு. தனலட்சுமி
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

செ. தர்மசரோஜினி
2ம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை.

அ. தெய்வநாயகி
வரணி, வடக்கு, வரணி.

ஆ. தெய்வானைப்பிள்ளை
கரணவாய் வடக்கு, வல்வெட்டித்துறை.

சி. தெய்வானைப்பிள்ளை
உசன், மிருசுவில்.

வ. தெய்வானைப்பிள்ளை
சோடக்கன், இளவாலை.

ந தங்கலட்சுமி
நீதிமன்றத்தெரு, மல்லாகம்.

த. உரோகினி அம்மாள்
பன்னாலை, தெல்லிப்பளை.

கு. சிவயோகநாயகி அம்மா
வீச்சுக்காரத்தெரு, திரிகோணமலை.

**சைவாசிரிய கலாசாலை, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.**

# மாணவர் சங்க அறிக்கை.

**போஷகர்**

திரு க. கந்தையா B. A. (Lond.) அதிபர்

**தலைவர்கள்:**

1ம் தவணை திரு. க. கந்தசாமி
செல்வி செ. பாக்கியம்

2ம் தவணை திரு. இ. நவரத்தினம்
செல்வி ந. காமாட்சி

3ம் தவணை திரு. இ நவரத்தினம்
செல்வி மு. கமலாதேவி

**காரியதரிசிகள்:**

1ம் தவணை திரு. த. சுவாமிநாதன்
செல்வி ந. காமாட்சி

2ம் தவணை திரு. சு. கனகசபாபதி
செல்வி ச. இலட்சுமிப்பிள்ளை

3ம் தவணை திரு, சு. குமாரவேலு
செல்வி ம. கனகமணி

**தனாதிகாரிகள்:**

திரு. க. தாமோதரம்பிள்ளை
செல்வி வி. கனகமலர்

நாவலனுக்கு எங்கள் சங்கத்தின் 28 வது வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பிப்பதில் மிக மகிழ்ச்சியடைகின்றோம். இவ்வருடம் இச்சங்கம் 100 அங்கத்தவர்களைக் கொண்டுள்ளது.

"நன்மை கடைப்பிடி நாடொப்பன செய்"
என்பதற்கொப்பவும்,

'எவ்வ துறைவது உலகம் உலகத்தோடு
அவ்வ துறைவது அறிவு".

என்ற வள்ளுவர் வாய்மொழிக்கிணங்கவும் ஆசிரிய மாணவர்கள் தம் கருத்தை வெளிப்படுத்தவும், ஏனையோர்களுடைய கருத்துக்களை அறியவும் வழிவகுப்பதே எங்கள் சங்கத்தின் நோக்கமாகும். அதிபர், விரிவுரையாளர்களின் நன்மதிப்புடனும், பேருதவியுடனும் ஆசிரிய மாணவர்களின் சலியா உழைப்புடனும் ஒற்றுமையுடனும் சங்க நிகழ்ச்சிகள் யாவும் வெற்றிகரமாக நடந்தேறின.

விசேட பொதுக்கூட்டங்களில் பல அறிஞர்களை வரவழைத்துச் சொற்பொழிவுகள் ஆற்றுவித்துப் பயன்பெற்றோம். எமது அழைப்பிற்குச் செவிசாய்த்து வந்து சொற்பெருக்காற்றியோர்களினதும், விடயங்களினதும் விபரம் பின்வருமாறு:

திரு. A. கர்ணலிங்கசர்மா B. Sc. அவர்கள்
'அணுவுக்குள் ஓர் அதிசயம்"

,, ம. சத்தியமூர்த்தி B. A. அவர்கள்
"இலங்கையும் பிறநாட்டு மூலதனமும்"

,, S. மகேசன் B. A. (Ceylon) அவர்கள்
"சமஷ்டி அரசியல் முறையும் எதிர்காலமும்"

" K. S. நடராசா B. A. (Hons) அவர்கள்
"வானொலியும் வளர் தமிழும்"

,, சி. கந்தசாமி B. Sc. (Lond) அவர்கள்
"நடத்தை ஏவல்கள்"

,, செ. இராசதுரை M. P. அவர்கள்
"தமிழும் தமிழரும்"

,, அ. பரநிருபசிங்கம் B. Sc. அவர்கள்
"இலை"

,, அ. சே. சுந்தரராஜன் B. A. அவர்கள்
"திருவாய் மொழி"

,, I. N. இராமநாதன், குருடர் செவிடர் பாடசாலை அதிபர் அவர்கள்
'குருடர் செவிடர் கல்வி"

,, M. இராமநாதன் B. A. அவர்கள்
"சமயமும் சமூகமும்"

**தாயகத்தார் வரவு**

இவ்வருடம் எங்கள் கலாசாலைக்குப் பாரத நாட்டிலிருந்து குன்றக்குடி அடிகள் அவர்களும், யோகி சச்சிதானந்த யோகீஸ்வரர் அவர்களும் விஜயஞ்செய்து, எம்மை மகிழ்வித்ததுடன் சிறந்த நற்போதனைகளும் நிகழ்த்தியுள்ளார்கள்.

**சமயத்துறை:**

ஆன்ம ஈடேற்றத்திற்கும், அறவழிச்சிந்தனைக்கும், நன்நெறி வாழ்க்கைக்கும் இன்றியமையாதது சமயம். எங்கள் கலாசாலையில் சமய சம்பந்தமான விழாக்கள் இனிது கொண்டாடப்பட்டன. நம் கலாசாலை தினந்தோறும்தேவார பாராயணத்துடன் ஆரம்பமாகின்றது. தேவாரத்தின் பின்பு ஆசிரிய மாணவர்களால் சமய சம்பந்தமான ஒரு சிறு சொற்பொழிவு ஐந்து நிமிடங்களுக்கு நடைபெறும். வெள்ளிக்கிழமைகள் தோறும் கூட்டுப்பிரார்த்தனையும் ஆராதனையும் நடைபெறும்.

திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் குருபூசை இராமநாதன் இல்லத்தாரால் மிகவுந் திறம்பட நடாத்தப்பட்டது. அன்று திரு. சி. முருகவேள் B. A. (Hons) அவர்கள் சொற்பொழிவும், திரு S அரியரத்தினம் அவர்களின் வேணுகானமும், செல்வி P. இராசா அவர்களின் இன்னிசை விருந்தும் இடம்பெற்றன.

மாணிக்கவாச சுவாமிகள் குருபூசை கிருஷ்ணபிள்ளை இல்லத்தாரால் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அவ்வமயம் திருவாதவூரடிகள் புராணத்தின் ஒரு பகுதிக்குப் பண்டிதமணி சி கணபதிப்பிள்ளை அவர்களால் பயன் சொல்லப்பட்டமை அன்றைய முக்கிய நிகழ்ச்சியாகக் கொள்ளப்பட்டது. திரு. குகானந்தவாரி அவர்களாலும், வித்துவான் பொன் முத்துக்குமாரு அவர்களாலும் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன. திருமதி சரஸ்வதி பாக்கியராசா அவர்களினதும், நாதஸ்வர வித்துவான் அ கோவிந்தராசன் அவர்களினதும் இன்னிசைக் கச்சேரிகளைக் கேட்டு ஆனந்தமடைந்தோம்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூசை நாவலன் இல்லத்தாரால் வெகு கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. வடமாகாண வித்தியாதிகாரி திரு. S. U சோமசேகரம் M. A. Dip in (Ed.) அவர்கள் தலைமை தாங்கினார்கள். திரு. S. சண்முகம் கோஷ்டியினரின் நாதஸ்வரக்கச்சேரியுடன் மேற்படி வைபவம் ஆரம்பமாயது. பண்டிதை அமிர்தாம்பிகை சதாசிவம் B. A. அவர்களால் 'சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்'' என்னும் விடயம் பற்றிச் சொற்பெருக்காற்றப்பட்டது. பின்பு திரு. ராம் குமாரசாமி B. A. (Dip. in Music) அவர்களால் இன்னிசை விருந்து அளிக்கப்பட்டது. அந்த இன்னிசை விருந்தில் அனைவரும் ஊன்றித் திளைத்தனர்.



நவராத்திரி பூசை வழக்கம்போல் இம்முறையும் சிறப்பாக நடந்தேறியது. சரஸ்வதி பூசை தினத்தன்று வித்துவான் க. வேந்தனர் அவர்களினதும், பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களினதும் சொற்பொழிவுகள் இடம்பெற்றன. செல்வி ந. மகேஸ்வரி அவர்களால் இன்னிசை விருந்து அளிக்கப்பட்டது.

**இரசஞானப்போட்டி**

வாழ்க்கையே கல்வி. எனவே ஒருவனின் வல்லபங்களைச் சகல துறைகளிலும் விருத்தி செய்தலே அதன் நோக்கமாய் இருக்கவேண்டும். இதற்கியைய எங்கள் கலாசாலையில் வழக்கம்போல் இவ்வாண்டும் இரசஞானப்போட்டி இல்லங்களுக்கிடையே சிறந்த முறையில் நடைபெற்றது. மூன்று தினங்களாக நடைபெற்ற இப்போட்டி ஏழு அங்கங்களைக் கொண்டதாக இருந்தது. அவையாவன:- கட்டுரை ஆக்கம், கதை ஆக்கம், கவிதை ஆக்கம், அபிநயப் பாட்டு, கதை சொல்லல், சங்கீதம், சமயோசிதப்பேச்சு என்பனவாம். இதற்கு மத்தியஸ்தர்களாகப் பிற இடங்களில் இருந்து அழைக்கப்பட்ட, அவ்வத்துறைகளிற் பாண்டித்தியம் பெற்ற அறிஞர்களால் தரம் கணிக்கப்பட்டு முதல் மூன்று இடங்களையும் பெற்றவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன. இப்போட்டி முதலாம், இரண்டாம் வருடத்தினர்க்கு வெவ்வேறாக நடாத்தப்பட்டது. இதில் முதலாம் இடத்தை இராமநாதன் இல்லம் பெற்றது. இப்போட்டியில் அதிக புள்ளிகளை ஈட்டிய செல்வி செ. பாக்கியம் அவர்களுக்கும், திரு. சி. இராமலிங்கம் அவர்களுக்கும் வெள்ளிக்கிண்ணங்கள் பரிசளிக்கப்பட்டன. இவர்கள் இருவரும் இராமநாதன் இல்லத்தவர்களே என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

**விளையாட்டுப் போட்டி:**

இல்லங்களுக்கிடையில் நடைபெறும் விளையாட்டுப்போட்டி இவ்வருடமும் சிறந்த முறையில் நடைபெற்றது. இப்போட்டிக்கு மத்தியஸ்தர்களாக எங்கள் அழைப்புங்கிணங்கிச் சாதன பாடசாலைகளில் இருந்து ஆசிரியர்கள் சமூகமளித்தனர். இப்போட்டியில் கிருஷ்ணபிள்ளை இல்லம் முதலிடம் பெற்றது. இதில் வெற்றி வீரனான திரு வே. கந்தப்பு அவர்களுக்கும், வீரரமணியான செல்வி நா. பாக்கியம் அவர்களுக்கும் வெற்றிக்கிண்ணங்கள் பரிசளிக்கப்பட்டன. இவர்கள் இருவரும் கிருஷ்ணபிள்ளை இல்லத்தவர்களே என்பது குறிப்பிடத்தக்கது.

சாதன பாடசாலைகளுக்கும் இதில் பங்குபற்றச் சந்தர்ப்பங்கொடுத்துப் பரிசில்கள் வழங்கிக் கௌரவித்துள்ளோம். எங்கள் கலாசாலை அதிபர் திரு. க. கந்தையா B. A. (Lond) அவர்கள் மேற்படி வைபவத்திற்குத் தலைமை தாங்கிப் பரிசில்கள் வழங்கினார்கள்.

**கரபந்தாட்டப்போட்டி:**

வழக்கம்போல் இம்முறையும் வடமாகாண ஆசிரிய கலாசாலைகளுக்கான கரபந்தாட்டப்போட்டி நடைபெற்றது. அதில் எங்கள் கலாசாலைக்கோஷ்டியினர் பலாலி அரசினர் ஆசிரிய கலாசாலைக் கோஷ்டியினருடனும் கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலைக்கோஷ்டியினருடனும் விளையாடி வெற்றியீட்டினர். இவ்விதமே நல்லூர் ஆசிரிய கலாசாலைக்கோஷ்டியினரும் மேற்படி இரு கலாசாலையினரையும் வென்றனர். ஈற்றில் நல்லூர் ஆசிரியகலாசாலையினரும் எங்கள் கலாசாலையினரும் விளையாடும் இறுதியாட்டம் எப்போது வரும் என்று எல்லா ஆசிரிய கலாசாலையினரும் ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர். இதையொட்டிப் பிரபல தினசரிப்பத்திரிகையொன்று, மேற்படி கரபந்தாட்டப்போட்டி எப்போது நடைபெறும் என்று கரபந்தாட்ட ரசிகர்களிடையே ஒரு பரபரப்பையும், ஆவலையும் உண்டாக்கியுள்ளதென்றும், இந்த இறுதிப்போட்டி மிகவும் சிறந்த முறையில் நடைபெறும் என்றும், ஆனால் நல்லூர்க் கோஷ்டியினரே ஜெயிப்பார்களென்றும் குறிப்பிட்டிருந்ததை நேயர்கள் அறிவர். இந்நிலையில் போட்டியும் ஆரம்பமாயது. இப்போட்டிக்கு, அரசினர் உடற்பயிற்சிவித்தியாதிபதி திரு. H. S. R. குணவர்த்தனவும், வடமாகாண வித்தியாதிகாரி திரு. S. U. சோமசேகரம் அவர்களும், வடமாகாண உடற்பயிற்சிப்பரிசோதகர் திரு. S. இராஜேந்திரா அவர்களும் இன்னும் பல பிரமுகர்களும் பிரசன்னமாயிருந்தனர். போட்டி ஆரம்பமான நேரந்தொட்டு முடியும் வரையும் எங்கள் கலாசாலைக்கோஷ்டியினர் சலியா நெஞ்சுடன் திறமையாக எதிர்க்கோஷ்டியினரை எதிர்த்து நின்ற காட்சி குழுமியிருந்த சனசமுத்திரத்தின் இதயங்களைக் கொள்ளை கொண்டது. இரசிகர்களின் ஆரவாரமும், கரகோஷங்களும் வானைப்பிளந்தன. ஏற்கனவே வெளியான பத்திரிகையின் ஊகத்தை முறியடிக்கவேண்டுமென்ற ஒரே குறிக்கோளுடன் விளையாடிய எங்கள் கோஷ்டியினர் ஈற்றில் நல்லூர்க் கோஷ்டியினரை வென்று, வாகைசூடி வீறுகொண்ட மதயானைகள்போல் விளையாட்டு மைதானத்தை விட்டு வெளியேறிய காட்சி என்றென்றும் மறக்கமுடியாதது.

வடமாகாண ஆசிரிய கலாசாலைகளின் மேற்படி போட்டியில் வெற்றியீட்டி முதலிடம்பெற்ற எங்கள் கலாசாலைக் கோஷ்டியினருக்கு திரு. H. S. R குணவர்த்தன அவர்களால் வெற்றிக்கிண்ணம் பரிசளிக்கப்பட்டது.

எங்களுடன் கரபந்தாட்டப்போட்டியில் பங்குபற்றிய பலாலி அரசினர் கலாசாலையினருக்கும், கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலையினருக்கும், நல்லூர் ஆசிரிய கலாசாலையினருக்கும் எங்கள் நன்றி உரித்தாகுக.

**வலைப்பந்தாட்டப்போட்டி:**

சுருங்கக்கூறின், சென்றவருடம்போலவே இவ்வருடமும், எங்கள் கலாசாலை வலைப்பந்தாட்டக்கோஷ்டியினரே, வடமாகாண ஆசிரிய கலாசாலைகளுக்கிடையே நடைபெற்ற வலைப்பந்தாட்டப்போட்டியில் மகத்தான வெற்றி

யிட்டி, ஓர் அரிய சாதனையை நிலைநாட்டி திரு. H. S. R. குணவர்த்தன அவர்களிடமிருந்து வெள்ளிக்கிண்ணத்தை நல்லூர் மைதானத்தில் தமதாக்கிக்கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. இப்போட்டியில் பங்குபற்றிய ஏனைய ஆசிரிய கலாசாலையினருக்கு எங்கள் பாராட்டுக்கள்.

**வடமாகாண ஆசிரியகலாசாலைகளின் விளையாட்டுப் போட்டி**

மேற்படி. போட்டி பலாலி அரசினர் ஆசிரிய கலாசாலை மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் பங்குபற்றிய எங்கள் கலாசாலைப் பெண்கள் கோஷ்டியினர் ஏனைய கலாசாலைப் பெண்கள் கோஷ்டியினர் பெற்ற புள்ளிகளிலும் பார்க்கக் கூடிய புள்ளிகளைப்பெற்று முதலாம் இடத்தைப்பெற்று வெற்றிக்கேடயத்தைப் பெற்றனர். செல்வி நா. பாக்கியம் அவர்கள் 1956ம் ஆண்டு நடைபெற்ற இப்போட்டியில் 100 யார் பந்தய ஓட்டத்தில் நிலைநாட்டிய சாதனையை அவரே இம்முறை முறியடித்து ஓர் அரிய சாதனையை நிலைநாட்டியதற்காக, வெற்றிக்கிண்ணத்தைச் சுவீகரித்து எங்கள் கலாசாலையின் புகழை மேன்மையுறச் செய்ததுடன், இவ்வருட 'வெற்றி வீரரமணி' என்ற பெயரையும் ஈட்டியுள்ளார். எங்கள் ஆண்கள் கோஷ்டியினர் மூன்றும் இடத்தைப்பெற்றுள்ளனர். முதலாம் இடத்தைப் பெற்றுள்ள கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலையினருக்கு எங்கள் பாராட்டுக்கள் உரித்தாகுக.

**பொது**

முதலாம் வருட ஆசிரிய மாணவர்கள் கலாசாலையில் பிரவேசித்தபோது, இரண்டாம் வருட ஆசிரிய மாணவர்களால் சிறந்த முறையில் வரவேற்புபசாரம்அளிக்கப்பெற்றது. மகாத்மாகாந்தி அடிகளின் நினைவு தினம், வள்ளுவர் தினம், நாவலர் நினைவு தினம் ஆகியனவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டன. மகாத்மா காந்தி அடிகளின் நினைவு தினத்தன்று பண்டிதை அமிர்தாம்பிகை சதாசிவம் B. A. அவர்களும், வள்ளுவர் தினத்தன்று வித்துவான் க. வேலன் B. A. அவர்களும் சொற்பெருக்காற்றினார்கள். இவ்வாண்டு எம்மை விட்டு இளைப்பாறும்பொருட்டுப்பிரிந்து செல்லும் உப அதிபர் திரு பொ. கைலாசபதி B. Sc (Lond.) அவர்களுக்கு ஒரு பிரிவுபசாரக்கூட்டம் திரு க. கந்தையா B. A. (Lond) அதிபர் அவர்கள் தலைமையின்கீழ் நடாத்தப்பட்டது. அதிபர் விரிவுரையாளர்கள், ஆசிரியமாணவர்கள் சார்பில் ஒரு பிரிவுபசாரப் பத்திரம் வாசித்தளிக்கப்பட்டதுடன் பொற்காசும் வழங்கப்பட்டது. ஆண்டின் இறுதியில் பயிற்சியை முடித்துச்செல்லும் விடுகை வகுப்பு மாணவர்களுக்குச் சிறந்த முறையில் முதலாம் வருட ஆசிரிய மாணவர்கள் ஒரு பிரியாவிடைக் கூட்டம் நடாத்தினர்.

ஈற்றில் இவ்வாண்டு முயற்சிகளை வெற்றிகரமாக நடாத்தி முடிக்கப் புத்திமதியும், ஒத்துழைப்பும் தந்த அதிபர், விரிவுரையாளர்கள், ஆசிரிய மாணவர்கள் யாவருக்கும் சங்கத்தின் சார்பாக நன்றியறிதலைத் தெரிவிப்பதுடன், எங்கள் வேண்டுகோளுக்கிணங்கித் தங்கள் சிரமத்தையும் பொருட்படுத்தாது வந்து சொற்பெருக்காற்றிய அறிஞர்கள் யாவருக்கும், இசைவிருந்தளித்த கலைஞர்களுக்கும், அவரகளது கோஷ்டியினருக்கும், இரசஞானப்போட்டிக்கு மத்தியஸ்தம் வகித்த பெரியார்களுக்கும், விளையாட்டுப் போட்டிக்கு மத்தியஸ்தம் வகித்த சாதன பாடசாலை ஆசிரியர்களுக்கும் எங்கள்சங்கத்தின் சார்பாக மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

**சு. குமாரவேலு**
**ம. கனகமணி**
*இணைக்காரியதரிசிகள்.*

# இதழாசிரியர் குறிப்பு

வழக்கம்போல் இம்முறையும் வருட ஆரம்பத்திலேயே எங்கள் 'நாவல'னை வெளியிட முயற்சித்தோம். ஆனால் நாம் ஒன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைத்துவிட்டது. எதிர்பாராதனவும், தடுக்கமுடியாதனவுமான சில வசதியீனங்கள் குறுக்கிட்டன. எனவே 'நாவலன்' வெளிவருவதில் இவ்வளவு தாமதம் ஏற்பட்டுவிட்டது. இதை நாவலன் அபிமானிகளுக்குத் துக்கத்துடன் தெரிவிக்கிறோம். தெரிவிப்பது மாத்திரமன்றி அவர்கள் **மன்னிப்பையும் வேண்டுகிறோம்**.

இத்தகைய பிரச்சினைகள் பல குறுக்கிட்ட போதும் இவ்வளவிலாவது நாவலன்' அச்சுவாகனமேற அருள்புரிந்த இறைவனுக்கே துதி செலுத்துகிறோம்.

எங்கள் 'நாவல'னை மனப்பூர்வமாக ஏற்று நல்லாசி கூறி, நல்லுரை பகர்ந்து, வாழ்த்தி வழியனுப்பிய வடமாகாண வித்தியாதிகாரி கனம் சி. உ. சோமசேகரம் அவர்கட்கும், சைவவித்தியாவிருத்திச்சங்க முகாமைக்காரர் கனம் ச. சுப்பிரமணியம் அவர்கட்கும் எங்கள் அதிபர் கனம் க கந்தையா அவர்கட்கும் எங்கள் மனமார்ந்த நன்றி உரித்தாகுக.

எங்கள் வேண்டுகோளுக்கிணங்க வெளியிடங்களில் இருந்து தங்கள் பழுத்த அநுபவங்களையும், ஆழ்ந்த ஆராய்ச்சிகளையும் எழுத்தோவியங்களாக வாரி வழங்கி 'நாவல'னைச் சிறப்பித்த சான்றோர்களான, முதலியார் குல சபாநாதன், ஸ்ரீமான் அ. கர்ணலிங்க சர்மா B. Sc, (Hons), ஸ்ரீமான் வை. முத்துக்குமாரசுவாமி, கலாநிதி வ. பொன்னையா, ஸ்ரீமான் கே. நேசையா M. A. (Ed), பண்டிதை ச. அமிர்தாம்பிகை B. A., ஸ்ரீமான் மு. சண்முகராசா முதலிய அறிஞர்கட்கு எங்கள் இதயங்கனிந்த நன்றியும் கடப்பாடும் உடையவர்களாய் இருக்கின்றோம்.

'நாவல'னை உருவாக்கும் விஷயத்தில் எங்கட்கு ஆலோசனை கூறி ஆக்கமும் ஊக்கமுந் தந்த எங்கள் அதிபர், விரிவுரையாளர்கட்கு எங்கள் உளங்கனிந்த நன்றி உரித்தாகுக.

ஏராளமான அரிய பல விஷயங்களைத் தாராளமாகத் தந்துதவிய எங்கள் சங்கத்தின் கௌரவ அங்கத்தவர்கட்கு நன்றி கூறுகிறோம். இடவசதியின்மைபற்றி அவர்களால் தரப்பட்ட சில விஷயங்கள் தவிர்க்கப்படவேண்டியேற்பட்டதையிட்டு வருந்துகிறோம்.

விளம்பரங்கள் தந்துதவிய வியாபார நேயர்கட்கு எங்கள் நன்றி.

அலுவல்கள் பல இருந்தும், சிறந்தமுறையில் எங்கள் 'நாவல'னை அச்சுவாகனமேற்றிய ஆனந்தா அச்சகத்தாருக்கு நன்றி கூறுகிறோம்.

எங்கட்கு ஆண்டுமலர்கள் அனுப்பிய ஏனைய கலாசாலையினருக்கு நன்றி உடையவர்களாக இருக்கின்றோம்.

கடமையுணர்ச்சியோடு செயலாற்றிய பத்திரிகைக்குழு அங்கத்தவர்களைப் பாராட்டுகிறோம்.

வணக்கம்.

—இதழாசிரியன்.

# Gnanam's Studio

**17, Stanley Road** **JAFFNA**

சிறந்த படங்கள்!
சுந்தரத் தோற்றம்!

அழகிய வேலைப்பாடு!!
மனதுக்குத் திருப்தி!!

◎

## ஞானம்ஸ் படங்கள் என்றாலே
## அவை அலாதி ரகம்!

ஆசிரிய ஆசிரியைகள் தங்கள் தராதரப் பத்திரத்துக்கு வேண்டிய படத்தை எங்களிடம் எடுப்பதன் இரகசியம் இதுதான். எங்கள் படங்கள் வாழ்நாள் முழுவதும் கெடாது நிலைத்து நிற்கும்.

**போட்டோ கலை சம்பந்தமான பொருட்கள் யாவும் எங்களிடம் கிடைக்கும்.**

◎ ◎

# ஞானம்ஸ் ஸ்ரூடியோ

17, ஸ்ரான்லி வீதி, : : யாழ்ப்பாணம்

Phone 697

Call on us :

# For Your Building Materials

- ★ Cement
- ★ Round Iron All Sizes
- ★ H. Iron ,,
- ★ B R C. Fabric
- ★ Exp. Metal
- ★ Galvanized Sheets
- ★ Wire & Nails
- ★ Ready mixed Paints
- ★ Varnishes
- ★ Distemper
- ★ French Polish
- ★ Floor Polish
- ★ Colour Washing Powders

& etc etc

**At Competitive Rates**

# SHANMUGAM STORES

222, Hospital Road, : : : : JAFFNA.

Phone : 261

# THIRUCHELVAM & CO.

General Merchants & Electrical Contractors.

Sole Agent

*For*

# ALCON

**2" High Speed**

**SELF PRIMING PUMP**

**WITH J. A. P. ENGINE.**

Hospital Road, : : JAFFNA

## ‘சிங்ககிரி’

### பேக்கறியும் போசன சாலையும்

சிறந்த பாண். கேக், பட்டர் பாண்ஸ் பலரகமான விஸ்கோத்துகள் முதலியன எங்களிடமுண்டு. எந்தவகையான களியாட்ட விழாக்களுக்கும் நாங்கள் சிறந்த சிற்றுண்டி வகைகளைத் தயாராக வைத்திருக்கிறோம்.

ஒருமுறை பரீட்சித்துப் பாருங்கள் !

**சிங்ககிரி பேக்கறி,**

304, ஆஸ்பத்திரி றேட், : : யாழ்ப்பாணம்.

# SINGHA GIRI BAKERY & HOTEL

*Prop*: D. MARTIN VITHARANA

**The Most Up-to Date Hotel & Bakery**

Run on Every Hygienic Lines


Please Order for Bread, Cake, Butter Buns, Butter Bread, Biscuits etc.

**SINGHA GIRI BAKERY & HOTEL**

304, Hospital Road, : : : : JAFFNA.

---

# மில்க்வைற் சோப்




**துணிகளின் பாதுகாப்பிற்கும்**
**சிக்கன செலவிற்கும்**
**தூய வெண்மைக்கும் சிறந்தது.**

# மில்க் வைற் நீல சோப்

எல்லாவித துணிகளுக்கும் ஏற்றது. அதன் நீல வர்ண நுரை துணிகளின் நூலிடைகளிடை ஊடுருவிப் பாய்ந்து அழுக்கை அகற்றி, வெள்ளைத் துணிகளை மேலும் வெண்மையாகவும் வர்ண ஆடைகளை மேலும் பிரகாசமாகவும் சலவை செய்கிறது

தயாரிப்பவர்கள் :

**மில்க் வைற் சோப் தொழிற்சாலை,**

**யாழ்ப்பாணம்.**

# S. SAVERIMUTTU

No. 73, K. K. S. ROAD

Grand Bazaar. : : : : JAFFNA.

**எங்களிடம்**

பாடசாலைக்குரிய உபகரணங்கள், சாய்ப்புச் சாமான்கள், கண்ணுடி, கால் மேசு, சப்பாத்து, தொப்பி, குடை, சூட்கேஸ், பெண்களின் கூந்தல் முடிகள் முதலியன

**எப்பொழுதுங் கிடைக்கும்**

## எஸ். சவிரிமுத்து

73, கே. கே. எஸ். ரேட், : : யாழ்ப்பாணம்.

---

**For :**

Modernity Variety & Economy

# SHOP AT FANCY HOUSE

பாடசாலைக்குரிய சகல உபகரணங்கள், தையல் வேலைப்பாட்டுக்குரிய உபகரணங்கள், சரிகை வகைகள். சீகுயின்ஸ், பப்றிக் பெயன்றஸ் இன்னும் கூந்தல் முடிகள், ரேல்கோட் நகைகள், கைக் கடிகாரங்கள், திருமண வைபவத்திற்குரிய சகல சாய்ப்புச் சாமான்களும் எமமிடம் சகாயமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

## பான்ஸி ஹவுஸ்,

63, பெரியகடை, : : யாழ்ப்பாணம்

# ஸ்ரீ குமரன் ஸ்ரேரோர்ஸ்

**பலாலி வீதி, : : : : கோண்டாவில்.**

**நங்கையர் ஆடவர் யாவரும் விரும்பும்:**
பட்டுப் பருத்திநூற் புடைவைகள், பலவிதமான துணி வகைகள், சுத்தமான கதர் வகைகள், குழந்தைகளுக்கென்றே தயாரிக்கப்பட்ட ''றெடிமேட்'' உடுப்புவகைகள் இன்னும் சகல விதமான சாய்ப்புச் சாமான்களும் ஸ்ரேஷனறி, பால் உணவு வகைகள் ஆகியவைகளும் சைக்கிள் சாமான்கள். பெயின்ற் வகைகள், ஆணி வகைகள், வைபர் அன் லெதர் சூட்கேஸ், ஸ்ரீல் றங்கு என்பனவும் மொத்தமாகவும் சில்லறையாகவும் சகாய விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

## கிளை: ஸ்ரீ குமரன் மில்ஸ்

**இருபாலை வீதி** **கோண்டாவில்**

இங்கு நெல், அரிசி, தவிடு, துப்புரவு செய்து அரைக்கப்பட்ட குரக்கன் மா, மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள லாம். நெல், மிளகாய், தானியவகை குத்தியும் அரைத்தும் கொடுக்கப்படும்.

**ஸ்ரீ குமரன் ஸ்ரோர்ஸுக்கும்—ஸ்ரீ குமரன் மில்லுக்கும் விஜயம் செய்யுங்கள்.**

---

# நியாயமான விலையில்! நேர்த்தியான சைக்கிள்!

# ஈக்கிள் (EAGLE) சைக்கிள்

◎ பெறுமதிக்கும் ◎ தரத்துக்கும்

◎ சேவைக்கும் சிறந்தது!

**ஆடவர் சைக்கிள் ரூபா 140-00 பெண்கள் சைக்கிள் ரூபா 145-00**

வடமாகாண ஏக விற்பனையாளர் :

# துரைராஜா ஸ்ரேரோர்ஸ்

**பலாலி றோட், : : கோண்டாவில்.**

# "மலாயா கபே"

★ பலவித சிற்றுண்டி பலகார வகைகளுக்கும்,
★ சிறந்த தேனீர், காப்பி, பசும் பால்,
★ சுத்த சைவ போசனம்,
★ சர்பத், குளிர்பான வகைகளுக்கும்

மற்றும்,

நறுமணங் கமழும் இந்தியா பரிமள பீடாவுக்கும்
சிறந்த இடம்
'மலாயா கபே' ஒன்றுதான்.
இன்றே விஜயம்செய்து பாருங்கள்.

## 'MALAYA CAFE'

36. 38, GRAND BAZAAR, .... .... JAFFNA.

---

## வீட்டுக்கு அலங்காரமான படங்கள்

**சுவாமி படங்கள் — சீனறிப் படங்கள்**

அனேக விதங்களில் கிடைக்கும்!

★ ★

ஜெஸிமா பட மாளிகை

சிறந்த வேலை

சகலவித
கண்ணாடி
படம்
வேலைகளும்
செய்துகொடுக்கப்படும்


நியாமான விலை

★ ★

232, K.K.S. ரோடு,
யாழ்ப்பாணம்.

படங்களுக்குப் பிறேம்போடும் புகழ்வாய்ந்த இடம்.

மலிவு!  மலிவு!  மலிவு!  மலிவுப் பதிப்பு!




**288 பக்கங்கள் : : 65 சதம்**

மொத்த விற்பனையாளர்:

ஆனந்தா அச்சகம் (புத்தகசாலை)

226, காங்கேசன்துறை வீதி, : : யாழ்ப்பாணம், இலங்கை

# K. N. M. MEERAN SAHIB

52, 54, KANNATHIDDY,
JAFFNA.

# கே. என். எம். மீரான் சாகிப்

52, 54, கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.

தற்காலத்துக்கேற்ற நவீனமுறையில்
நகைகள்
எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம்.
ஓடர் நகைகள் குறித்த தவணையில்
உத்தரவாதத்துடன் செய்து
கொடுக்குமிடம்.

# நோத் சிலோன் ரேடிங் கம்பனி லிமிடெட்;

ஸ்ரான்லிரேட், ... ... யாழ்ப்பாணம்.

விநியோகஸ்தர்கள்:

போட்கார், வான், டிறக்,
'கைம்சன்' தண்ணீர்ப்பம்புகள்,
"சிகி" மின்சாரப்பம்புகள்,
மோட்டார் உப உறுப்புகள்,
மேர்பி, நோட்மென்டே றேடியோக்கள்,
இரும்பு, கட்டிடச் சாமான்கள்.

மலிந்த மாளிகை!
போன்: 587.

சிறந்தசேவை!
தந்தி: "யாழ்ரேட்ஸ்"

ARCHIVES

# VASANS STUDIO

**17, 19, MANIPAY ROAD, JAFFNA.**

புகைப்பட ரசிகர்களே!

நீங்கள் உங்கள் அழகை நேரில் கண்டு களிக்க விரும்பினால்

**ஒரு முறை வாசன்ஸ் ஸ்ருடியோவுக்கு விஜயஞ் செய்யுங்கள்!**

நீங்கள் விரும்பிய விதத்தில் அவர்கள் உங்களைப் படம் பிடித்துக் குறித்த காலத்தில் உங்கள் கையில் சேர்ப்பார்கள்.

எந்த வைபவங்களுக்கு நீங்கள் அழைத்தாலும் குறித்த நேரத்தில் விஜயஞ் செய்து குறித்த காலத்தில் உங்கள் தேவையைப் பூர்த்தி செய்து தருவார்கள்.

## வாசன்ஸ் ஸ்ருடியோ

**17, 19, மானிப்பாய் ரோட், யாழ்ப்பாணம்.**

---

## வ. பொன்னையா B. A. (Hons.) Ph. D.

அவர்களாக்கிய

**மாணுக்கர் கேத்திர கணிதம்** ரூபா 5—50
(7-ம் வகுப்பு — க. பொ. த. ப. வகுப்பு)

**மாணுக்கர் செய்முறைக் கேத்திர கணிதம்** ரூபா 1—00
(6-ம் வகுப்பு)

**தமிழிலக்கணமும் உரையமைப்பும்** ரூபா 3—50
(6-ம் வகுப்பு — க. பொ. த. ப. வகுப்பு)

ஆதிய புத்தகங்களின் ஏக விநியோகஸ்தர்களும் கொழும்பு அப்போதிக்கரிசு ஸ்தாபனத்தாரால் வெளியிடப்பட்ட நூல்களின் வட, கிழ் மாகாண விநியோகஸ்தர்களும்.

**விவேகானந்தா அச்சகம்—புத்தகசாலை, யாழ்ப்பாணம்.**

போன்: 517 தந்தி: பிறின்ரேஸ்

# ஸ்ரீ லங்கா புத்தகசாலையாரின்
# சிறந்த வெளியீடுகள்.

| | | |
|---|---|---|
| தாவரவியல் உயர்தர வகுப்புக்குரியது 500 விளக்கப் படங்கள் | கிளேஸ் விலை ரூபா | 15—00 |
| | சாதாரணம் | 10—00 |
| ஒலிபரப்புக்கலை சோ. சிவபாதசுந்தரம். ராஜாஜி முன்னுரையுடன் | | 6—00 |
| இரசாயனம் உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு (வெளிவருகிறது) | | 5—00 |
| இலக்கிய வரலாறு வி. செல்வநாயகம் | | 4—25 |
| உரைநடை வரலாறு ,, உயர்தர வகுப்புக்கு | | 2—50 |
| இலங்கைச் சரித்திரமும் உலக சரித்திரமும் மு. இளையதம்பி | 1500 வரை | 1—75 |
| | 1500—1796 | 1—75 |
| | 1796—1948 | 2—00 |
| உலக சரித்திரம் 1500—1948 S. S. C. வகுப்புக்குரியது | | 4—50 |
| மாணவர் சரித்திரக் காட்சி வித்துவான் அ. சந்தியாப்பிள்ளை | 1-ம் பாகம் | 2—00 |
| | 2-ம் பாகம் | 2—25 |
| சுகாதார தீபம் (சொர்ணம்) | ... ... | 2—50 |
| பூகோளப் படப்பயிற்சி S. பரமானந்தம் | 6 ம் வகுப்பு | 65 |
| | 7-ம் வகுப்பு | 75 |
| எண்பயிற்சி (நாயகம்) | 5-ம் வகுப்புக்குரியது | 65 |
| பொது அறிவுப் பயிற்சி சி. குலரத்தினம் | ... ... | 60 |
| பொது அறிவுக் களஞ்சியம் ,, | ... ... | 90 |
| செந்தமிழ்ப் பயிற்சிமாலை சந்தன நங்கை | 4-ம் வகுப்பு | 1—25 |
| செந்தமிழ்ப் பயிற்சி ,, | 5-ம் வகுப்பு | 1—25 |
| பயிலுந் தமிழ் | 5-ம் வகுப்பு 6-ம் வகுப்பு | 1—25 |
| ,, ,, | 7-ம் வகுப்பு | 1—50 |
| ,, ,, | 1-ம் பாகம் J. S. C. | 2—00 |
| ,, ,, | 2-ம் பாகம் S. S. C. | 2—50 |
| மணிபல்லவம் (Treasure Island மொழி பெயர்ப்பு) | | 1—50 |

கிடைக்குமிடம்:

250046

# ஸ்ரீ லங்கா புத்தகசாலை
## 234, K.K.S. றோட், யாழ்ப்பாணம்.

ARCHIVES

Dial: 281. Cables: "JEWELLERS"

# L. K. S. JEWELLERS

(The Biggest Manufacturing Jewellers In Ceylon.)

## JAFFNA.



FOR
GUARANTEED BRILLIANTS
AND

## FASHIONABLE JEWELS.

★ ★ ★

நிகரற்ற அழகுற்ற

பவுண், வைர ஆபரணங்களுக்கு

# தங்க மாளிகை

30 வருட நற்சேவையால் அமோக ஆதரவைப் பெற்ற,
நம்பிக்கை, நாணயமுள்ள இலங்கையின் மிகப் பெரிய நகை வியாபாரிகள்.


## எல். கே. எஸ். ஜுவல்லர்ஸ்

### யாழ்ப்பாணம்.


கிளைகள்: கொழும்பு, திருச்சி, சென்னை, காயல்பட்டணம்.

போன்: 5658. 49. 2321. 3.

‘இறைக்கும் யந்திரங்கள்’
தோட்டக்காரரின்
கஷ்டமான பெரும் பிரச்சினையைத்
தீர்த்து ஒரு மகத்தான
சாதனையை நிலை நாட்டி விட்டன.
அவற்றிலும்
எவ்வித தொந்தரவும்
கொடுக்காதபடி, திறமையான
தொழில் நுட்பக் கலைஞர்
களினால் தயாரிக்கப்பட்ட



பழைய மொடல் “வூல்ஸிலி”




வூல்ஸிலி யூனியர்

# ‘வூல்ஸிலி’
# பம்புகள்

## தோட்டக்காரரால்

மனமாரப் பாராட்டப்படுகின்றன.

உங்களுக்குத் தண்ணீர் இறைக்கும் யந்திரம் ஒன்று தேவைப்படும் பொழுது “வூல்ஸிலி” பம்பையே நம்புங்கள்!

☞ எல்லா உப பாகங்களும் எப்பொழுதும் கிடைக்கும்.

ஏக விநியோகஸ்தர்கள்:

# ஓட்டோஸ் லிமிடெட்.

ஆஸ்பத்திரி வீதி, : : யாழ்ப்பாணம்.

# AUTOS LTD. JAFFNA.

PHONE: 496 GRAMS: AUTOS, JAFFNA.



...லி, சைவாசிரிய கலாசாலை ஆசிரிய மாணவர் சங்க “நாவலன்” இதழாசிரியர் திரு. சி. இராமலிங்கம்...
...பாணம் ஆனந்தா அச்சகத்திற் பதிப்பித்து வெளியிடப்பட்டது.

University of Jaffna
250046
Library